

சக்திப் பாதுகாப்பை நோக்கி

ஆண்டறிக்கை 2021
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



Scan the QR Code with your smart device
to view this report online

சக்திப் பாதுகாப்பை நோக்கி

நாட்டின் பெற்றோலியக் கைத்தொழிற் துறையில் சந்தை முன்னோடிகளாகிய நாம் தேசத்துக்கு அதன் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்கட்டளைகளுக்காக தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலைப் பூர்த்தி செய்வதை குழப்பமான சூழலிலும் தொடர்ந்தோம். அகழ்ந்து எடுக்கக் கூடிய பெற்றோலிய உற்பத்திகள் இல்லாத நாடொன்றாக இலங்கை இருந்த போதிலும், பெற்றோலிய உற்பத்திகளானவை மக்களின் வாழ்க்கை முறையோடு தொடர்புபட்டிருப்பதனால் சமூகத்தின் எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கடந்த ஆறு தசாப்தங்களாக தொடர்ச்சியாக நாம் கடினமாக உழைத்துள்ளோம். சக்திப் பாதுகாப்பானது பொருளாதாரத்திற்கான திறவுகோல் ஒன்றாக இருப்பதனால், காலத்துக்குக் காலம் சவால்களை முகங்கொள்ளக் கூடியதாக இருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது எப்பொழுதும் தேசத்துக்கு அதன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அடைந்தகொள்வதற்காக சக்திப் பாதுகாப்புக்கு பொறுப்புடையதாக இருந்தது.

உள்ளடக்கம்

எம்மைப் பற்றி | 02

எம்மைப் பற்றி | 02

எமது பயணம் | 05

எமது அறிக்கை பற்றி | 07

சிறப்புக் கூற்றுக்கள் | 09

நிதியியல் சிறப்புக் கூற்றுக்கள் | 09

செயற்பாட்டு சிறப்புக் கூற்றுக்கள் | 11

செய்திகள் | 13

தலைவரின் செய்தி | 13

முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு | 16

தலைமைத்துவம் | 19

பணிப்பாளர் சபை | 19

கூட்டுத்தாபன முகாமைத்துவம் | 23

சிரேஷ்ட முகாமைத்துவம் | 27

ஒழுங்கமைப்பு வரைபடம் | 29

மீளாய்வு அறிக்கைகள் | 31

முகாமைத்துவ மீளாய்வு | 31

செயற்பாட்டு மீளாய்வு | 35

எமது செயல்நுணுக்கம் | 45

பெறுமான உருவாக்கம் | 47

பெறுமான உருவாக்கம் மாதிரி | 47

நிதியியல் மூலதனம் | 49

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம் | 54

புலமைசார் மூலதனம் | 59

மனித மூலதனம| 62

சமூகமற்றும் உறவுமுறை மூலதனம் | 68

இயற்கை மூலதனம் | 73

பங்குதாரர் ஒப்பந்தம் | 76

நிலைபேறான இலக்குகளுக்கான | 79

இடர் முகாமைத்துவம் | 81

இடர் முகாமைத்துவ அறிக்கை | 81

ஆளுகை | 87

கூட்டுத்தாபன ஆளுகை | 87

கணக்காய்வுக் குழு அறிக்கை | 93

பணிப்பாளரின் அறிக்கை | 95

பணிப்பாளரின் அறிக்கை | 100

நிதியியல் | 101

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் றிக்கை | 102

விரிவான வருமானக் கூற்றுக்கள் | 135

நிதியியல் நிலைக் கூற்றுக்கள் | 136

சொத்துரிமை மாற்றம் பற்றிய கூற்றுக்கள் | 137

பணப்பாய்ச்சல் பற்றிய கூற்றுக்கள் | 138

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 139

மேலதிகத் தகவல் | 179

பத்து வருடங்களுக்கான சாராம்சம் | 179

கூட்டுத்தாபன தகவல் | 180

எம்மைப் பற்றி

கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் துணை நிறுவனம் வணிக ஒழுங்குகள்

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், மற்றும் விற்பனை செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கூட்டமைக்கப்பட்ட ஒரு பொது நிறுவனமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) நிறுவப்பட்டது. நாடளாவிய ரீதியிலான பெற்றோலிய உற்பத்திகளின் இலகுவான அணுகளுக்காக மக்களை வசதிப்படுத்தக் கூடிய வகையில் நாடு பூராகவும் எமது விநியோக கிளைகள் விரிவாகப் பரவிக் காணப்படுகின்றன.



80 சதவீதத்திற்கு மேலதிகமான சந்தைப் பங்குகளை வைத்திருக்கும் சந்தைத் தலைவர் என்ற வகையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சக்தி பாதுகாப்பின் முக்கியத்துவத்தை விளக்கிக்கொண்டிருக்கின்ற 1343 இற்கும் மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சக்திப் பாதுகாப்பினை உறுதிப் படுத்துகின்றது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான கூட்டுத்தாபனம் என்ற வகையில் பொருளாதார நலன்களை சமூகத்திற்குப் பரிமாற்றம் செய்வதன் மூலம் சிறந்த வாய்ப்பான உள்நாட்டு வலுசக்தி விலைகளை உறுதிப்படுத்த நாம் உறுதிபூண்டுள்ளோம்.

50 வருடங்களுக்கு மேலான செயற்பாட்டுடன் தேசத்திற்கு பெறுமானத்தை உருவாக்குவதன் மூலம் எமது பிரதான செயல்நுணுக்கச் சொத்தான சுத்திகரிப்பு நிலையமானது முக்கிய வகிபங்கினை வகிக்கின்றது. நாம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 30 சதவீத விற்பனைகளை சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக சுத்திகரித்துப் பூர்த்தி செய்வதோடு எஞ்சியவை சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதிகளின் ஊடாகப் பூர்த்தி செய்யப்படுகின்றது.

எமது துணை நிறுவனமான 2/3 இற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்டுள்ள சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிட்டானது(CPSTL) எமது செயற்பாட்டில் முக்கிய வகிபங்கினை வகிக்கின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிட்டானது பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் விநியோகம் மற்றும் தகவல் தொழிநுட்ப சேவை வழங்கல் ஆகிய நோக்கங்களுக்காக நிறுவப்பட்டுள்ளது.

எமது வணிக ஒழுங்குகளானவை எரிபொருள் மற்றும் விவசாய இரசாயன உற்பத்திகள் என நாம் விநியோகிக்கும் பல துறைகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வருவாயானது ரூபா 594 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்டது. (2020 இல் ரூபா 531 பில்லியன் டொலர்கள்)

வணிக ஒழுங்குகள்

- எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக ஒட்டோ எரிபொருள் வழங்கல்
- மின் உற்பத்திக்கான எரிபொருள்
- விமானத்துறைக்கான எரிபொருள் வழங்கல்
- கைத்தொழில்களுக்கான எரிபொருள்
- விவசாய இரசாயன வணிகம்
- ஏற்றுமதி
- கப்பல் எரிபொருள் வணிகம்



தொலைநோக்கு

பெற்றோலியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில் துறையில் நிலைபேறான நிறுவனமாக இருப்பதோடு புதிய வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பங்குதாரர்களுக்கு பெறுமானங்களை வழங்குதல்.



செயற்பணி

போட்டித் தன்மை - போட்டித் தன்மையான விலையில் பெற்றோலியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை கொள்முதல் செய்தல் மற்றும் வழங்கல் ஊடாக சந்தைத் தலைவராக இருக்க முயற்சித்தல்.

நிலைபேறான தன்மை - நீண்டகால பெறுபேறுகளில் கவனம் செலுத்துகின்ற நிதியியல் சமூக மற்றும் சூழலியல் ரீதியில் நிலையான வணிகமாக இருத்தல்.

தொடர்ச்சியான முன்னேற்றம் - மக்கள் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்ற செயன்முறையின் ஊடாக வளர்ச்சியினை ஏற்படுத்தல்.

நம்பகத்தன்மை - எல்லா சந்தர்ப்பங்களின் போதும் கூட்டுத்தாபனத்தின் சிறந்த நலனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் நம்பகத்தன்மையுடன் செயற்படுதல்.

பொது நோக்கம் - நாட்டின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்தைக் கொண்டிருத்தல்.

பெறுமானங்கள்

போட்டித்தன்மை

நிலைபேறான தன்மை

தொடர்ச்சியான முன்னேற்றம்

ஒருங்கிணைப்பு

பொது நோக்கம்



எமது பயணம்

1961

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அரசுக்குச் சொந்தமான ஒரு தொழில் முயற்சியாக ஸ்தாபிக்கப்பட்ட து.

1962

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அந்த சமயத்தில் நாட்டில் செயற்பட்டுக்கொண்டிருந்த ஏனைய எண்ணெய் நி- றுவனங்களுடன் போட்டியாக வணிகத்தை ஆரம்பித்தது.

1964

பெற்றோலிய உற்பத்திகளை நாட்டில் இறக்குமதி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் விநியோ- கிப்பதற்குமான ஒரே ஒரு வணிகமாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இருந்துவந்தது.

1968

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாளொன்றுக்கு 38000 பீப்பாய்கள் எண்ணெய் சுத்திகரிப்பு வசதியை நிர்மாணித்தது.

1969

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு செயற்பாடுகளை ஆரம்பித்தது. கொலன்னாவை நிலையத்தில் ஓர் உராய்வு நீக்கி எண்ணெய்க் கலவை இயந்திரத்தைஇலங்க ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொருத்தியது. விவசாய இரசாயனத் து- றையிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பிரவேசித்தது.

1971

இலங்கை பெற்றோலியகக் கூட்டுத்தாபன சட்டத்திற்கு திருத்தங்கள் மூலமாக கூட்டுத்தாபனத்தின் செயற்பரப்பு எல்லைக்கு கப்பல் எரிபொருள் விநியோகக் செற்பாடு மற்றும் விமான எரிபொருள் விநியோக நடவடிக்கைகளும் சேர்க்கப்பட்டன.

1978

துணி, டயர்கள் மற்றும் மீன்பிடிக் கைத்தொழில் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் “நைலோன் 6” நூல் உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிர்மாணித்தது.

1979

1979 ஆம் ஆண்டு கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு செயற்திறனை அதிகரித்ததன் மூலம் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்திறன் நாள் ஒன்றுக்கு 50,000 பீப்பாய்களாக அதி- கரிக்கப்பட்டது.

1987

கொழும்புத் துறைமுகத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் நங்கூரமிடும் அமை- டயாளத்தனியிடமொன்று நிறுவப்பட்டு அதனுடன் இணைந்த வகையில் ஒருகொடவத்தை எனும் இடத்தில் இடைநிலை கச்சா எண்ணெய் களஞ்சியத் தாங்கிப் பண்ணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

1992

சுத்திகரிப்பு செய்முறை தெகிழ்ச்சி மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு அலகை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சீரமைத்தது.

1994

கரைப்பான்கள் மற்றும் உராய்வு நீக்கிகள் என்பவற்றின் இறக்குமதி மற்றும் விநியோகத்தைக் கட்டுப்பாடற்றதாக்குதல்.

1995

பயங்கரவாதிகளின் தாக்குதல் காரணமாக சேதமடைந்த கொலன்னாவை மற்றும் ஒருகொடவத்தை எண்ணைத் தாங்கிகளின் புனர்நிர்மாணம்.

1999

சப்புகஸ்கந்தையில் ஒரு புதிய விநியோக முனையத்துடன் தீயினால் சேதமடைந்த களஞ்சிய வசதிகள் மீள்நிர்மாணம் செய்யப்பட்டன. காரீயமற்ற பெற்றோல் உற்பத்தி செய்யும் ஆற்றலை அதிகரிப்பதற்காக பெற்றோலியத்திற்கான கலவைக் கையிருப்பை உற்பத்தி செய்யும் பிளாட்போமர் (platformer) அலகின் செயற் திறனை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேம்படுத்தியது.

2002

ஒட்டோ டீசலில் உள்ள சல்பர் மட்டத்தைக் குறைப்பதற்கான மாற்றம் செய்யப்பட்டது. இருக்கும் டீசல் ஹைட்ரோடிரீட்டரை (அலகு 4) அல்லது சீரமைத்தல் மற்றும் கெரசின் ஹைட்ரோடிரீட்டரை (அலகு 7) ஒரு டீசல் ஹைட்ரோடிரீட்டராக மாற்றுதல்.

2003

களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள் புதிதாக உருவாக்கப்பட்ட CPSTL இடம் கையளிக்கப்பட்டது. புதிய நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை அரசாங்கம் மற்றும் லங்கா இந்தியன் ஓயில் கம்பனி என்பவற்றால் சமவிகிதத்தில் உரிமை கொள்ளப்பட்டிருக்கும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நவீன விமான மீள் எரிபொருளிடும் வசதியை மற்றும் எரிபொருள் குழாய் முனை முறைமையை ஆரம்பித்தது. (Fuel Hydrant System)

2010

107 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் ஊீளுவுடு இன் ஒதுக்கி வைக்கப்பட்ட 1/3 பங்குகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றாவது போட்டியாளருக்கு ஒதுக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சந்தைக்கு சுப்பர் டீசலை (10 ppm) ம் செய்தது.

2011

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கொழும்பு 09 இல் அமைந்துள்ள ஒரு புதிய கட்டடத்திற்கு இடம்பெயர்ந்தது.

2012

கொழும்புத் துறைமுக விரிவாக்க செயற் திட்டத்தின் ஒரு பகுதியாக, கொழும்புத் துறைமுகத்தில் நீர்மூழ்கிக் கச்சா எண்ணெய்க் குழாய் மற்றும் பல்குழாய் இணைப்பு முனை (PLEM) ஆகியவற்றை மாற்றி அமைக்கும் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டது. ஹம்பாந்தோட்டையில் மத்தளை அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்தில் கட்டம் 2 இன் கீழ் விமானத்துறை முனையக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

2013

90 ரக ஒக்டேன் பெற்றோல் 92 ரக ஒக்டேன் பெற்றோலாகத் தரமுயர்த்தப்பட்டது.

2014

ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள மத்தளை சர்வதேச விமான நிலையத்தில் விமான எரிபொருள் மீள்நிரப்புதல் முனையம் மற்றும் எரிபொருள் குழாய் முனைய முறைமை என்பன சேவையிலிடப்பட்டன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விமான செயற்பாட்டுக் கூட்டுப் பரிசோதனைப் குழுவின் (JIG) இன் வருடாந்த கணக்காய்வுகளில் "நன்று" (சராசரிக்கும் மேலான நிலை) எனும் நிலையை பெற முடியுமாக இருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இறக்குமதிக ளுக்காக 500 ppm எரிபொருள் தேவைப்பாட்டை அறிமுகப்படுத்தியது.

2016

ஒரு BOT அடிப்படையில் இலங்கையில் ஒரு கலவைத் தொழிற்சாலையை இயக்குவதற்கு (Hyrax) உடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஓர் உடன்படிக்கைக்கு வந்தது. உச்ச இலாபத்தைப் பதிவு செய்தது.

2018

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி செயற்திட்டம் நிலை II, கட்டம் II உடன் சமனான வகையில் புதிய ஏற்றிடம் - E இல் விமான எரிபொருள் முனையம் மற்றும் இருக்கும் எரிபொருள் குழாய் முனை முறைமைஇ மற்றும் ஒரு புதிய எரிபொருள் குழாய் முனை முறைமை என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலின் ஆரம்பம். எரிபொருள் எண்ணெயை காற்றின் மூலம் திரவத் தார் உற்பத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீள் பிரவேசித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கர் சுப்பர் டீசல், யூரோ 4 மற்றும் 95 ரகப் பெற்றோல் என்பவற்றை அறிமுகப்படுத்தியது. உச்ச வருமான உருவாக்கம்.

2019

சுத்திகரிப்பு நிலையத்தின் 50 வருடப் பூர்த்திக் கொண்டாட்டம். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது வரலாற்றில் அதிக வருமானத்தைப் பதிவு செய்தது.

2020

எல்.என்.ஜி பிரிவின் ஆரம்பம். ரூ. 2.37 பில்லியன் வருமானத்தைப் பதிவு செய்தது.

2021

பங்கரிங் வணிகத்தில் மீண்டும் நுழையுங்கள்.

எமது அறிக்கை பற்றி

இது எமது நான்காவது ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கை ஆகும். கூட்டுத்தாபனத்தின் செயல் நுணுக்கம், செயலாற்றுகை, ஆளுகை, இடரேந்து மற்றும் பெறுமதி உருவாக்கம் தொடர்பில் அதிக வெளிப்படைத் தன்மையைக் கொண்டிருப்பதன் மூலம் எமது நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடுவதில் ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையை நாங்கள் கடைபிடித்திருக்கின்றோம்.

அறிக்கையிடும் நோக்கம் மற்றும் எல்லை

2021 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வணிக மாதிரி, இயங்கு சூழ்நிலை, பொருளாதார இடரேந்து நிலைகள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான தகவல்களை இவ்வறிக்கை வழங்குகிறது. குறித்த வருடத்தின் போதான எமது செயல் நுணுக்க வணிக அலகுக-ளின் செயலாற்றுகையை இவ்வறிக்கை உள்ளடக்குகிறது.

அறிக்கையிடும் கட்டமைப்பு

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/ LKAS)
- சிறந்த நிர்வாக ஆளுகைக்கான பொதுத் தொழில் முயற்சிகளின் வழிகாட்டல்கள்,
- 1971 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச்சட்டம்
- 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டம்
- சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கைச் சபையால் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கைகள் கட்டமைப்பு,
- நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோல்கள்,
- இலங்கைப் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை ஆளுகை தொடர்பான சிறந்த நடத்தைக் கோவை,

விடயம்சார் தன்மைக்கான எங்களது அணுகுமுறை

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலங்களுக்கு பெறுமதியை உருவாக்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆற்றல் தொடர்பான ஓர் அறிவார்ந்த மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு விரும்பும் தற்போதைய மற்றும் வருங்கால வாய்ப்புக் கொண்ட பங்குதாரர்களுக்கு தேவையான விடயம் சார்ந்த நலன்களை இவ் அறிக்கை வழங்கும் என நம்புகின்றோம். இவ் அறிக்கையிலுள்ள அனைத்து தகவல்களும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெறுமதி உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்களுடன் தொடர்புபட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் முயன்றுள்ளோம்.

இதற்கு மேலதிகமாக நாம் கணக்காய்வு அறிக்கையுடன் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதியியல் கூற்றுக்களையும் முன்வைத்திருக்கின்றோம். ஒழுங்குவிதித் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிதியியல் தகவல் முன்வைக்கப்படவதோடு அறிக்கையில் குறிப்பிடப்படும் நிதி அல்லாத தகவல்கள், வெளிப்படையாகக் கூறப்படாவிட்டால், அவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மட்டுமே தொடர்புடைய தகவலைக் குறிக்கிறது. மற்றும் மொத்த இயக்க வருமானம், மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமான கணக்குகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இருப்பதால் துணை நிறுவனத்தை விலக்கப்படுகின்றது.

எங்களின் அனைத்து அறிக்கைகளுக்கான அறிக்கையிடும் கட்டமைப்பானது, அதில் உள்ள கொள்கைகள் மற்றும் தேவைப்பாடுகள் மற்றும் வெளிப்புற சூழல் மற்றும் மூ லதனங்களுடனான தொடர்புகள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால மதிப்பை உருவாக்கும் திறனை எவ்வாறு பாதிக்கின்றது ஆகியவற்றின் அடிப்படையில் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

எமது வணிகத்தைப் பற்றி விளங்கிக் கொள்ளுதல் (பக்கங்கள் 2-12), எமது வணிக மாதிரி (பக்கங்கள் 47 - 48) மற்றும் எமது நடவடிக்கைகளும் பெறுமதிச் சங்கிலி மீதான எமது தாக்கங்கள் (பக்கங்கள் 49-75) ஆகியவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எவ்வாறு பெறுமதியை உருவாக்குகின்றது என்பதைக் கண்டறிதல் மற்றும் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளை இணங் காண்பதற்கான அடிப்படையை உருவாக்குகின்றன. பெறுமதியை உருவாக்குவதற்கான எமது திறனானது எமது இயக்க சூழ்நிலை (பக்கங்கள் 31-34) மற்றும் ஏற்படும் இடர்கள், வாய்ப்புக்களுக்கான (பக்கங்கள் 81-86) எங்களது பதில் ஆகியவற்றினால் தீர்மானிக்கப்படுகின்றது.

அவ் அறிக்கையில் மெது செயலாற்றுகை (பக்கங்கள் 35-44) எமது தலைமைத்துவ அணி (பக்கங்கள் 19-28) மற்றும் எமது ஆளுகை நடவடிக்கைகளும் (பக்கங்கள் 87-100) சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பங்குதாரர்களுக்கு நலன் அளிப்பவையாக இருக்கக் கூடிய மேலதிக தகவல்களும் எமது வருடாந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

எமது கணக்காய்வுக் குழுவானது இணைந்த உறுதித் திட்டத்தின் நிறைவேற்றுகை தொடர்பான உள்ளக உத்தரவாதத்தை பணிப்பாளர் சபைக்கு வழங்குகின்றது. கணக்காய்வுக்குழு அறிக்கையானது 93-94 ஆம் பக்கங்களில் உள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி எமது வருடாந்த நிதியியல் கூற்றுக்களை உறுதிப்படுத்தியுள்ளார்.(பக்கங்கள் 102 - 134)

நிதி மற்றும் நிதி அல்லாத இரு தகவலையும் கொண்ட இவ் இரு செயன்முறைகளும் 2021 ஒருங்கிணைந்த அறிக்கையைக் குறிப்பிடுகின்றது.

எமது அறிக்கைக்கான அணுகல்

மூலதனங்கள்		பங்காளர்கள்		செயல்நுணுக்கங்கள்	
நிதி மூலதனம்		பங்குதாரர்கள		இலாபகரமான வளர்ச்சி	
உற்பத்தி மூலதனம		நுகர்வோர்		நிலைபேறான தன்மை	
மனித மூலதனம்		கட்டுப்படுத்து பவர்கள		செயற்பாட்டு மேம்பாடு	
சமூக மற்றும் உறவு மூலதனம்		ஊழியர்கள்		தொழிநுட்ப முன்னேற்றம்	
அறிவுசார் மூலதனம்		சமூகம்		மனித மூலதனத்திலான முதலீடு	
இயற்கை மூலதனம்		வழங்குநர்கள			

பின்னூட்டல்கள்

எமது அறிக்கையின் தெளிவு மற்றும் இணக்கப்பாடு ஆகியவற்றை விருத்தி செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கை தொடர்பான உங்களது கருத்துக்கள், விசாரணைகள் மற்றும் பின்னூட்டல்களை நாம் வரவேற்கின்றோம். தயவு செய்து உங்களது பின்னூட்டல்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

பிரதிப் பொது முகாமையாளர்(நிதி)
இல. 609, டாக்டர் டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09.

finadminsec@ceypetco.gov.lk
0094115455147


நிதியில் சிறப்புக் கூற்றுக்கள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021	2020 மீள்குறிப்பிட்டது	2021	2020 மீள்குறிப்பிட்டது
	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி
செயற்பாட்டு விளைவு				
வருமானம்- மொத்தம்	593,833.049	531,272.752	594,097.875	531,494.925
மொத்த (நட்டம்/இலாபம்)	(4,068.172)	67,652.692	(11,779.404)	60,735.767
தொழிற்பாட்டு (நட்டம்/இலாபம்)	(41,731.876)	33,920.573	(40,272.450)	35,503.005
நிதி வருமானம்	18,369.081	11,187.890	18,570.652	11,497.173
வருடத்திற்கான இலாபம்	(82,225.782)	2,356.377	(81,116.261)	4,091.331
மொத்த முழு வருமானம்	(82,313.506)	20,547.545	(80,878.244)	22,167.748
நிதியியல் நிலை				
மொத்த சொத்துக்கள்	419,799.131	325,449.478	441,165.215	347,054.473
கையிருப்பு	41,915.633	52,507.840	42,636.842	53,206.909
பணம் மற்றும் பணத்துக்கு சமமான சொத்துக்கள்	141,607.205	64,563.572	143,772.001	68,005.593
நிகர சொத்துக்கள்	**(357,536.669)**	**(275,223.164)**	**(333,852.630)**	**(252,974.387)**
நடைமுறையில்லாப் பொறுப்புகள்	9,627.771	8,973.494	12,846.906	12,585.686
கடன்களும் கடன்பெறல்களும்	5,893.394	5,066.323	5,893.394	5,066.323
குறுகிய காலக் கடன்பெறல்கள்	510,268.933	390,750.148	510,268.933	390,750.148
மொத்த கடன்கள்	516,162.327	395,816.471	516,162.327	395,816.471


பிரதான விகிதங்கள் – இ.பெ.கூ	**2021**	**2020**	**2019**	**2018**
மொத்த இலாப விகிதம்	-0.70%	12.95%	0.68%	-0.72%
செயற்பாட்டு இலாப விகிதம்	-7.14%	6.49%	-3.02%	-4.21%
நிகர இலாப விகிதம்	-13.85%	0.44%	-1.88%	-18.45%
மொத்த சொத்துக்கள் மீதான வருமானம்	-9.94%	10.42%	-5.81%	-7.28%
கையிருப்பு புரள்வு விகிதம்	14.05	8.66	9.53	9.51
சொத்துக்கள் புரள்வு விகிதம்	1.39	1.57	1.93	1.73
நடப்புச் சொத்து விகிதம்	0.47	0.45	0.47	0.44
விரைவு விகிதம்	0.42	0.36	0.36	0.34
வட்டிக் காப்பு	-1.63	1.62	(1.30)	(2.01)

நிலையான சொத்துக்களு மீதான முதலீடு	அரசாங்கப் பங்களிப்பு	வருமானம்- மொத்தம
2,525 (ரூ.மிலி)	105,198 (ரூ.மிலி)	593,833 (ரூ.மிலி)
நிதி வருமானம்	**மொத்த சொத்துகள்**	
18,369 (ரூ.மிலி)	419,799 (ரூ.மிலி)	


வருமானம்- மொத்தம்




வருவாய்க் கலவை



மொத்த (நட்டம்/இலாபம்)



நிகர இலாபம்



செயலாற்றுகைச் சிறப்புக் கூற்றுக்கள்

	மெட்ரிக்	2021	2020
விற்பனைகள்	மி.லீ	5,130	5,029
வருட இருதியிலான கையிருப்பு	மி.லீ	278.113	410.251
மொத்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள்	இல.	1,343	1,322
புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள்	இல.	21	25
தொழிலாளர்கள்	இல.	2,377	2,508
ஆளணிச் செலவு	ரூபா.மி	6,891	5,719
பயிற்சிச் செலவு	ரூபா.மி	4.08	4.47
மொத்த சேவைக் காலம்	வருடங்கள்	38,270	38,350
செயற்பாட்டு நேர வினைத்திறன் - Crude Distiller	மூ	85.54	99.03
செயற்பாட்டு நேர வினைத்திறன் - Bitumen Blower	மூ	22.02	30.44
எதிர்பார்க்கப்பட்ட நட்டம்	மெ.தொ	7,519	4,325
குறித்த சக்தி நுகர்வு	ஆஆமு ஊயட.்.	.5106	.493
நீர் நுகர்வு	மெ.தொ	566,838	843,590
சுத்திகரிப்பு நிலையத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு			
நேர இழப்பு விபத்துகள்	இல்லை	-	-
முதலுதவி விபத்துகள்	இல்லை	2	-
ஆறிக்கையிடப்பட்ட சிறு தீ விபத்துகள்	இல்லை	-	-
இழக்கப்பட்ட நாட்கள்	இல்லை	-	-

சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகள	கச்சா எண்ணெய் உள்ளெடுப்பு MT	வருடத்துக்கான நாட்கள	நாட்காட்டி நாள் ஒன்றுக்கான ன்கள்
2021	1,269,938	314	4452
2020	1,685,441	362	4,605
2019	1,864,817	357	5109
2018	1,675,245	327	5141
2017	1,646,041	351	4510
2016	1,746,180	362	4771

விற்பனைகள்

5,130

(மி.லீ)

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை

1,343

தொழிலாளர்கள்

2,304

ஆளணிச் செலவு


6,891

(ரூ.மிலி)

கச்சா எண்ணெய் உள்ளெடுப்பு

1,270


(000' MT)



1941 **363**

நிரந்தர பணியாளர்கள்


சுத்திகரிப்பு உற்பத்தி



விற்பனைகள்



கச்சா எண்ணெய் உள்ளெடுப்பு



தலைவரின் செய்தி



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மீளாய்வாண்டின் போது பாரிய சவால்கள் இருந்த போதிலும் தடையற்ற எரிபொருள் வழங்கலைப் பேணுவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சகல முயற்சிகளையும் மேற்கொண்டது என்பதை நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

உலகளாவிய சூழல்

சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதாரக் தோற்றப்பாட்டின் (WEO)படி, உலகப் பொருளாதார வளர்ச்சியானது 2020 இல் பதிவான 3.3 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது, 2021 இல் உலகப் பொருளாதாரமானது 6.1 சதவீதமாக விரிவடைந்தது. விசேட நிதி மற்றும் நாணய ஊக்கம் அதே போன்று கொவிட் - 19 பெருந்தொற்று காரணமாக விதிக்கப்பட்டி நடமாட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக நலிவடைந்திருந்த பெரும்பாலான பொருளாதாரங்களின் மீட்சி ஆகியவற்றினால் ஒத்துழைக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டில் உலகளாவியப் பொருளாதார வளர்ச்சியானது குறிப்பிடத்தக்க அளவு மீண்டதனால் எழுச்சி பெறும் சந்தை மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் தொடர்பாக 6.8 சதவீத வளர்ச்சி மதிப்பிடப்பட்டதோடு 2021ஆம் ஆண்டின் போது, மேம்பட்ட பொருளாதாரங்களானவை 5.2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்தன என மதிப்பிடப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் எதிர்பார்த்ததை விட மீட்சியுடன் எண்ணெய்க்கான உலகளாவிய கேள்வி அதி-கரித்தமையினால் வழங்கல் மட்டுப்பாடுகள் காரணமாக எண்ணெய் விலை அதிகரிக்க வழிவகுத்தது.

2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்பட்ட(முர்பன்) சராசரி கச்சா எண்ணெய் விலையானது பீப்பாய் ஒன்றுக்கு 69.91 அமெரிக்க டொலர்களாக இருந்ததோடு 2021 ஆம் ஆண்டில் 64.69 சதவீத அதிகரிப்பைப் பிரதிபளிக்கும் வகையில் இது 2020 ஆம் ஆண்டில் பதிவான 42.45 அமெரிக்க டொலர்களிலிருந்தான அதிகரிப்பாகும் மற்றும் உலகளாவிய பெற்றோலிய விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பானது கூட்டுத்தாபனத்தின் பலவீனமான செயலாற்றுகை நோக்கி பெரும்பாலும் பாதித்தது.

உள்நாட்டுச் சூழல்

இலங்கை மத்திய வங்கியின் படி கொவிட் - 19 இலிருந்து மீட்சி பெறல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி ஆகியவற்றினால் உந்தப்பட்டு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3.6 சதவீதமாக நலிவடைந்து இருந்த இலங்கையின் பொருளாதாரமானது 3.7 சதவீத வளர்ச்சியுடன் மீண்டது. விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் எனப்படும் துறைக-ளானவை முறையே 2.0, 5.3 மற்றும் 3.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.

2021 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு எதிராக பரிமாற்றமானது 7.0 சதவீதத்தினால் தேய்மானமடைந்தமையானது நிதியியல் செயலாற்றுகை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிலைப்பாட்டில் அழுத்தத்தை ஏற்படுத்தியது. திறைசேரி செயற்பாடுகளளை வலுப்படுத்துவதன் மூலம் நாணயமாற்று விகிதத்தின் தாக்கத்தை மட்டுப்படுத்த நாம் எல்லா முயற்சியினையும் மேற்கொள்கின்றோம்.

கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு வாய்ந்த குடிமகன் எனும் வகையில் அரசாங்கத்திற்கு வரி மற்றும் தீர்வைகளாக ரூபா 105 பில்லியனைப் பங்களிப்புச் செய்வதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தேசிய பொருளாதாரத்திற்கான பிரதான பங்குதாரர்களில் ஒருவராக இருப்பதைத் தொடர்ந்தது. இந் நிதிகளானவை உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பொது மக்களுக்கு பொருளாதார நிவாரணம் வழங்கல் ஆகியவற்றுக்காக அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

செயலாற்றுகை

குறித்த வருடத்தில் எமது பிரதான செயல்நுணுக்கச் சொத்தான சுத்திகரிப்பு நிலையமானது 1,269,938 மெ.தொ கச்சா எண்ணெய்யைச் சுத்திகரித்ததோடு சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளுக்கான இடைவெளியானது சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதிகளின் ஊடாகப் பூர்த்தி செய்யப்பட்டது. கொவிட் - 19 காரணமாக ஏற்பட்ட சவால்கள் இருந்த போதும், அதன் மூல பணிபுரியத்தக்க நிலையை ஒத்துழைப்பதற்காக சுத்திகரிப்பு நிலையத்தின் பாரிய மூடுகையானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. தேசிய பொருளாதாரத்திற்கு எரிபொருளின் பாரிய முக்கியத்துவத்தை அறிந்து சுத்திகரிப்பு நிலையமானது தற்காலிக மூடுகைக் காலத்தில் இருந்த போதிலும் எரி-பொருளுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்ய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சகல முயற்சிகளையும் மேற்கொண்டது.

தேசிய பொருளாதாரத்தின் மீட்சியுடன் போக்குவரத்துத் துறையின் மற்றும் விமானத்துறை வணிகம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவு நகர்வை பிரதிபலிக்கக் கூடிய வகையில் தேசிய பொருளாதாரத்தின் மீட்சியுடன் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்தக் கேள்வியானது ஆண்டுக்கு ஆண்டு 2 சதவீதத்தினால் சற்று அதிகரித்தது. அதிகரித்த விற்பனை விலையினால் உந்தப்பட்டு 2020 ஆம் ஆண்டுக்குள் எதிராக 18.78 சதவீத அதிகரிப்புடன் மொத்த வருவாயானது 593 பில்லியனாக அதிகரித்தது.

சந்தைத் தலைவர் எனும் வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பொது மக்களுக்கான மற்றும் பொருளாதார செயற்பாடுகளுக்கான தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை உறுதி செய்வதற்காக சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. எவ்வாறு இருப்பினும், மீளாய்வாண்டின் போது இலங்கை ரூபாவின் தேய்மானம் மற்றும் உயர் நிதிச் செலவுடன் இணைந்த சர்வதேச எண்ணெய் விலைகளின் அதி-கரிப்பானது ரூபா 82.2 பில்லியன் நட்டம் ஏற்பட வழிவகுத்தது.

நிலைபேறான செயற்பாடுகள்

நிலைபேறான கொள்கைகள் எமது செயல்நுணுக்கத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு நிலையான வணிக செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நிலைபேறான நுகர்வு மற்றும் சூழல் பராமரிப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சூழல் நேய எரிபொருள்களான யூரோ 4 பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை ஊக்குவிக்கின்றது. நிலைபேறான தன்மையுடன் இணங்கவும் அதனைப் பேணவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சுகாதார சூழ்நிலைகளிலும் விவசாய இரசாயன செயற்பாட்டிலும் சர்வதேச தரநியமங்களைப் பேணுகின்றது.

மேலும், எமது வெளிப்படையான பெறுகை நடவடிக்கைகள் எல்லா உற்பத்திகளினதும் அதிகரித்த நிலையான தன்மைக்கு ஒத்துழைக்கின்றன.

எதிர்கால நோக்கு

எப்பொழுதும் நாட்டின் சக்தித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதுடன் அத்தியாவசியமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற தரம் வாய்ந்த பெற்றோலிய உற்பத்திகளின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் பொறுப்பாக உள்ளோம். இலங்கை பெற்றோலியத் துறையின் தலைவர் எனும் வகையில் இலங்கை பெற்றோலியத் துறையின் உட்கட்டமைப்பு வசதியினை விருத்தி செய்வதற்காக நாம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதோடு குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 2.5 பில்லியனை முதலீடு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். தர நியமங்களைப் பூர்த்தி செய்வதற்காக நடைமுறையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வலையமைப்பிற்கு புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சேர்த்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் அவற்றின் வினைத்திறனை அதிகரித்து எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வலையமைப்புக்கு நாம் பெறுமானத்தைச் சேர்ப்பதைத் தொடர்ந்தோம்.

கூட்டுத்தாபனமானது நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் இருப்புக்கு பங்களிப்புச் செய்வதற்காக பல குறுகிய மற்றும் நீண்டகால செயல்நுணுக்கத் திட்டங்களில் முதலீடு செய்வதைத் தொடர்ந்தது. இது எமது நலனுரித்தாளர்களுக்குப் பெறுமானத்தைச் சேர்க்கும். கொவிட் - 19 பல சவால்களை ஏற்படுத்தினாலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் (BIA), மதுராஜவெலயிலிருந்து BIA வரையான Jet A-1 குழாய்த்திட்டம் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தல் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்ட விரிவாக்கத் திட்டத்தை நாங்கள் துரிதப்படுத்தினோம்.எதிர்கால அபிவிருத்திக்கான எமது கடமைப் பொறுப்பானது நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வினையூக்கத்தை அளிக்கும் என நம்புகின்றோம்.

அங்கீகாரம்

வல்லமை, அனுபவம் மற்றும் அதிக திறன் வாய்ந்த எனது சக சபை உறுப்பினர்களுக்கு அவர்களது நிர்வாகச் செயற்பாடுகளுக்காக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கோவிட் -19 பெருந்தொற்று மற்றும் தொடர்ச்சியாக ஏற்பட்ட விளைவுகள் காரணமாக உள்ளக மற்றும் வெளியக சூழலினால் ஏற்பட்ட அழுத்தங்கள் இருந்த போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கட்டமைக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக முகாமைத்துவப் பணிப்பாளரினால் வழிப்படுத்தப்பட்டு அயராது உழைத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன குழுவின் முயற்சிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நன்றியுடன் உள்ளது.

வலு சக்தி மற்றும் எரிசக்தித் துறை அமைச்சின் கௌரவ அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமக்கு ஆலோசனை, வழிகாட்டல் மற்றும் பணிப்புரையுடன் எமக்கு உதவி செய்தனர் மற்றும் அவர்களது பாரிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பிற்காக கூட்டுத்தாபனம் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை வெற்றி கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினை இலாபகரமான மற்றும் நிலைபேறான நிறுவனமாக மாற்றுவதற்கு எமது அர்ப்பணிப்பு மிக்க தொழில்சார் மனித மூலதனம் ஒத்துழைக்கும் என நாம் நம்புகின்றோம்



தலைவர்

2022.11.28

முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வு



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

2021 ஆம் ஆண்டில் வணிகச் சூழலில் இதற்கு முன்னர் நிகழ்ந்திராத நிலையற்ற தன்மை காரணமாக ஏற்பட்ட சவால்கள் இருந்த போதிலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்தான சுகாதார சவால் நிலைமைகளின் கீழும் நாட்டின் சக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அதன் ஆணைக்கட்டளைகளை நடைமுறைப்படுத்தியது. தேசத்திற்கு தடையற்ற எரிபொருள் வழங்கலை உறுதி செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சகல முயற்சிகளையும் மேற்கொண்டது.

செயற்பாட்டுச் சூழல்

மேம்பட்ட பொருளாதாரங்கள் மற்றும் வளர்ந்து வரும் மற்றும் வளரும் பொருளாதாரங்களின் சிறிதளவு மீட்சிக்கு பதிலளிக்கும் விதமாக, தேவை விநியோகத்தை விட அதிகமாக உள்ளது மற்றும் அமெரிக்க கச்சா எண்ணெய் (WTI) விலைகள் 2021 இல் தொடர்ச்சியான அதிகரிப்பை பதிவு செய்தன. கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்து மீளுவதைக் கவனத்திற் கொண்டு கேள்வி பக்கமானது அதிகரித்ததோடு ஜீநுஊ இன் படி 2020 இல் பதிவான 90.4 mb/d இல் இருந்து 2021 ஆம் ஆண்டில் சராசரியாக 95 mb/d ஆக உலகளாவிய எண்ணெய்க்கான கேள்வி விருத்தி அடைந்தது. அதிகரித்த தேவையுடன் வரையறுக்கப்பட்ட விநியோகம் 2021 ஆம் ஆண்டில் சர்வதேச விலைகளை படிப்படியாக உயர்த்த முனைகிறது.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சராசரியாக அமெரிக்க கச்சா எண்ணெய் (WTI) விலைகளானவை 2020ல் பதிவான ஒரு பீப்பாய்க்கு 39.22 அமெரிக்க டொலர்களில் இருந்து 67.99 அமெரிக்க டொலர்களாக கடுமையாக அதிகரித்தது. உலகளாவிய பெற்றோலிய விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பானது கூட்டுத்தாபனத்தின் பலவீனமான நிதிச் செயலாற்றுகையை கடுமையாகப் பாதித்தது.

கொவிட் - 19 இலிருந்து மீட்சி பெறல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி ஆகியவற்றினால் உந்தப்பட்டு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3.6 சதவீதமாக நலிவடைந்து இருந்த இலங்கையின் பொருளாதாரமானது 3.7 சதவீத வளர்ச்சியுடன் மீண்டது. முந்தைய வருடத்துடன் ஒப்பிடும் போதும் வணிகப் பொருட்களின் ஏற்றுமதியானது அதிகரித்து இருந்தபோதிலும், வணிகப் பொருட்களின் அதி கூடிய இறக்குமதி மற்றும் அதன் விளைவாக வருட இறுதியின் போது நாணய மாற்று விகிதத்தில் அதிகூடிய அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் வெளிநாட்டுக் கையிருப்புக்களின் தேய்மானத்திற்கு வழிவகுத்தது.


இறுதிக் காலாண்டின் போது அரசாங்கமானது நிலையான நாணய மாற்று விகிதத்தைப் பேணியதோடு 2021 ஆம் ஆண்டில் இலங்கை ரூபாவானது 7.0 சதவீதத்தினால் தேய்மானம் அடைந்தது. பாரிய வெளிநாட்டு நாணயக் கடன்கள் மற்றும் உண்டியல்கள் காரணமாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானமானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிலைப்பாட்டில் அழுத்தத்தை ஏற்படுத்தின.

நாணயமாற்று விகித வேறுபாட்டின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டதோடு குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 33.2 பில்லியன் நாணய மாற்று விகித நட்டத்திற்கு உள்ளாகியது.

உள்நாட்டு விலையிடும் பொறிமுறை

உலகளாவிய பெற்றோலிய விலைகளின் கடுமையான அதிகரிப்பினைக் கவனத்திற்கொண்டு அரசாங்கமானது பெற்றோலிய உற்பத்தி வழங்களில் ஏற்பட்ட இழப்பைக் குறைப்பதற்கு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் இரு முறை உள்நாட்டு விற்பனை விலைகளை அதிகரித்திருந்தது. 2020 ஆம் ஆண்டில் பொதுவான பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை விலைகளானவை மாறாமல் இருந்தன.

உள்நாட்டுவிற்பனை விலைகள்



எமது செயற்பாடு

தேசிய பொருளாதார செயற்பாடுகளின் மீட்சியானது தேசிய பொருளாதாரத்தை மேல் நோக்கி நகர்த்தியதோடு அதற்கு இணையாக எமது செயற்பாடுகளிலிருந்து உருவாகிய வருவாயானது ரூபா 594 பில்லியன் டொலராகப் பதிவு செய்யப்பட்டது, இது 11.78 சதவீதம் வருடாந்த அதிகரிப்பு ஒன்றாகும்.

2021 ஆம் ஆண்டின் போது சுத்திகரிப்பு நிலையமானது 1,269,938 மெ.தொ முர்பன் கச்சா எண்ணெய்யை சுத்திகரித்ததோடு 1,216,085 மெ.தொ சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை உற்பத்தி செய்தது. கொவிட் - 19 சூழ்நிலைகளின் கீழும்கூட காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட பாரிய புனரமைப்புக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சுத்திகரிப்பு நிலையத்தின் பாரிய மூடுகையினை சுத்திகரிப்பு நிலையமானது வெற்றிகரமாக மேற்கொண்டமையானது பாராட்டத்தக்கவிடயமாகும்.

கொவிட் - 19 இன் பின்னரான தேசிய பொருளாதாரத்தின் மீட்சியுடன் சமாந்தரமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊடாக பெற்றோல் மற்றும் டீசலின் அளவானது 10.36 சதவீதத்தினால் அதிகரித்தது. ரூபா 455 பில்லியன் வருவாய் அதிகரிப்புக்குக் காரணமான அமைந்த மேல் நோக்கிய விலைத் திருத்தங்களுடன் இவ் அளவானது அதிகரித்ததோடு வருவாய் உருவாக்கத்திற்காக நடைமுறையில் உள்ள நடைமுறையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வலையமைப்பிற்கு புதிதாக 21 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சேர்க்கப்பட்டதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

மின் உற்பத்தித் துறையிலிருந்தான எரிபொருளுக்கான குறைந்த கேள்வி காரணமாக மின் உற்பத்தித் துறையிலிருந்து உருவாகிய வருவாயானது குறைவடைந்த போதிலும், கொவிட் - 19 இன் பின்னரான விமான நிலையங்களின் வழமையான செயற்பாடுகளின் மீள்ஆரம்பத்துடன் விமான எரிபொருள் துறையிலிருந்தான வருவாயானது 57.98 சதவீதமாக அதிகரித்தது.

மேலதிகமாக, கொவிட் - 19 ஐக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தளர்வானது, தொழிற் துறையை 42.12 சதவீதத்தினால் தீவிரமாக மேம்படுத்தியது. 2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது மீண்டும் கப்பல் எரி-பொருள் வணிகத் துறையில் பிரவேசித்தமையைக் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாக இருப்பதோடு மீளாய்வாண்டின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 6.6 பில்லியன் வருவாயை உருவாக்கியது. இது ஓர் இலாபகரமான துறையாக இருப்பதனால் செயல்நுணுக்க முக்கியத்துவமானது எமது வள ஒதுக்கீட்டுக்கு வழங்கப்பட்டது.

குறித்த வருடத்தில் உள்நாட்டு விற்பனை விலைகளானவை இரண்டு தடவைகள் அதிகரித்த போதிலும், சர்வதேச பெற்றோலிய விலைகளின் அதிகரிப்புடனான இலங்கை ரூபாவின் தேய்மானம், பாரிய வட்டிச் செலவு மற்றும் குறித்த வருத்தில் அறிக்கையிடப்பட்ட நாணயமாற்று விகித வேறுபாடு காரணமாக 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 82, 226 மில்லியன் நிகர நட்டத்திற்குக் காரணமாக அமைந்த கிரயத்தை மீட்பதற்கு அவை போதுமானதாக இருக்கவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் முகங்கொடுக்கப்பட்ட அதிகூடிய திரவத்தன்மை இடர்களின் கீழும் சமூக இலாபமாக சமூகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 45, 158 மில்லியன் பெறுமதியான நிவாரணக் கூறினையும் இந் நட்டம் உள்ளடக்குகின்றது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கடந்த தசாப்தத்தின் போது திரண்ட நட்டங்களை அரச வங்கிகளிடமிருந்தான குறுகிய கால வெளிநாட்டு நாணயக் கடன்பெறுகைகள் மூலம் நிதியளித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது குறுகிய கால கடன்களை நிவர்த்தி செய்வதற்காக ரூபா 25, 643 மில்லியன் மற்றும் அதேவேளை குறித்த வருடத்தில் சமூக இலாபத்தை சமூகத்திற்கு பெற்றோலிய உற்பத்திகளை நிவாரண விலை ஒன்றில் வழங்குவதன் ஊடாக நகர்த்துவதை சேர்ப்பதன் மூலம் ரூபா 33, 220 மில்லியன் நாணயமாற்று வேறுபாடு காரணமாகவும் நிதிக் கிரயத்திற்கு உள்ளாகியது. அதன்படி, குறித்த வருடத்திற்கான சாராம்சம் செய்யப்பட்ட பயனுறு இலாபத்தன்மையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

	ரூபா.பி
அறிக்கையிடப்பட்ட நட்டம்	(82.2)
மேல.நிவாரணக் கூறு	45.2
முன்னைய நிவாரணத்தின் மீதான நிகர வட்டி	7.2
நாணயமாற்று விகித இழப்பு	33.2
பயனுறு இலாபம்	**3.4**

சமூக இலாபங்களுக்கு மேலதிகமாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது குறித்த காலப் பகுதியில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுங்காகப் பயன்படுத்தப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகளாகவும் தேசிய பொருளாதாரத்திற்கான நிவாரண வழங்களாகவும் ரூபா 105 பில்லியனுக்கும் அதிகமாகப் பங்களிப்புச் செய்துள்ளது.

முதலீடுகள்

தொழிற் துறையின் சந்தைத் தலைவர் எனும் வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது எமது உட்கட்டமைப்புக

உட்கட்டமைப்பு வசதியினை விருத்தி செய்வதற்காக நாம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதோடு குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 2.5 பில்லியனை முதலீடு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். கொவிட் - 19 சவால்களின் கீழும்கூட நவீன தொழிநுட்பத்துடன் கூடிய எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விமானத்துறை வசதி மற்றும் ஹைட்ரன்ட் முறைமை ஆகியவற்றின் பாரிய அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டத்தை நாம் துரிதப்படுத்தினோம்.

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு இணங்க சுமுகமான செயற்பாட்டுக்கு அத்தியாவசியமான சுத்திகரிப்பு நிலைய கருத்திட்டங்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது தொடர்ந்தது. நிலையான செயற்பாட்டை நோக்கிய எமது முயற்சியை விரிவுபடுத்த செயல்நுணுக்கத் திட்டங்களுக்கு நாம் நிலைபேறான தன்மையை உள்ளடக்கியுள்ளோம்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நேர்மை மற்றும் மதிப்பு அதே போன்று ஒழுங்குவிதி இணக்கப்பாடுகளை மிக முக்கியமான விடயங்களாகக் கருதுவதைத் தொடர்ந்தது. தேசத்தின் அபிவிருத்தி ஆணைக் கட்டளைகளுக்குப் பங்களிப்புச் செய்யும் அதே வேளை தரநியமங்களுக்கு இணங்கவும் அவற்றைப் பூர்த்தி செய்யவும் தொழில்முறை உறவுகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தரநியமங்கள் முறையாகப் பேணப்பட்டன.

பாராட்டுக்கள்

என்றுமில்லாதவாறு மாறும் உள்ளக மற்றும் வெளியகச் சூழல் மற்றும் விஷேடமாக கொவிட்-19 காரணமாக உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதார தோற்றப்பாடு ஆகியவற்றினால் ஏற்பட்ட அழுத்தத்தின் போதும் அயராது பங்களிப்புச் செய்த அப்போதைய தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் தற்போதைய தலைவர் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் எமது சக்தி வாய்ந்த ஊழியப் படையின் மூலம் சிறந்த நன்மையைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒழுங்கமைப்புக்கு இடையிலான உறவு முறைகளை கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்காக ஒத்துழைத்த எனது கூட்டுத்தாபன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவின் கடின உழைப்பிற்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், எமது பயணத்தை நோக்கி எம்மை வழிப்படுத்திய வலு சக்தி மற்றும் எரிசக்தித் துறை அமைச்சின் கௌரவ அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மிக்க நன்றியைத் தெரிவிக்க இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றேன். நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, வங்கியாளர்கள், கணக்காய்வாளர்கள், எமது வாடிக்கையாளர்கள் மற்றும் வழங்குநர்கள் மற்றும் எமது ஏனைய எல்லா நலனுரித்தாளர்களுக்கும் அவர்களது ஒத்துழைப்பிற்காக பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



சுசந்த சில்வா
முகாமைத்துவப் பணிப்பாளர்
2022.11.28

பணிப்பாளர் சபை



திரு. மொஹமட் உவைஸ் மொஹமட்
தலைவர்

திரு. மொஹமட் அவர்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராக 2022.06.06 அன்று நியமிக்கப்பட்டார்.

திரு. மொஹமட் அவர்கள் தனது சேவைக் காலத்தின் போது தலைமைத்துவத்தில் இரு தசாப்த கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். தற்பொழுது அவர் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமான சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டெர்மினல் லிமிடட் தலைவராகத் தொழிற்படுகின்றார். மேலும் அவர் பிரான்டல் லங்கா பிரைவட் லிமிடட் இன் செயல்நுணுக்க வணிக அபிவிருதத்திப் பணிப்பாளராக உள்ளார்.

திரு. மொஹமட் அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுநிலைப் பட்டம் ஒன்றையும் ஐக்கிய இராச்சியத்தின் மெட்ரோ பொலிட்டன் லண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து வணிகக் கணக்கீட்டுத் துறையில் சிறப்புப் பட்டம் ஒன்றையும் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகப் பட்டம் ஒன்றையும் MBCS, பட்டயக் கணக்காளர் முகாமைத்துவ நிறுவனத்தின் இறுதி மட்டத்திலும் சர்வதேச டோஸ்மாஸ்டரில் ACB யும் கொண்டுள்ளார்.

திரு. மொஹமட் அவர்கள் வணிக அபிவிருத்தி, நிதிச் செயலாற்றுகை, செயல்நுணுக்கத் திட்டம் சந்தைப்படுத்தல் மற்றும் பலதரப்பட்ட அலகு செயற்பாட்டு முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல வருட கால அனுபவத்தைக் கொண்ட தூர நோக்குடன் கூடிய அதி உயர்தர தொழில் ரீதியான திறன்களைக் கொண்டவராவார். பல தரப்பட்ட தொழற் துறைகளில் பாரிய அனுபவம் மற்றும் உயர் நன்மதிப்பைக் கொண்டவராவார். தொடர்ச்சியான அபிவிருத்தியின் ஊடாக ஒழுங்கமைப்புக்களை வெற்றிகரமாக வழிப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக பரிமாற்றத்தக்க திறன்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தக் கூடிய வலுவான திறனைக் கொண்டுள்ளார்.

அவரது சிறந்த பதவிக் காலத்தின் போது 2019 – 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டெர்மினல் லிமிடட் இன் தலைவராகவும் முகாமைத்துப் பணிப்பாளராகவும் தொழிற்பட்டுள்ளார். திரு. மொஹமட் அவர்கள் 2015 – 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபர்டீன் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட் இன் ஈ.ஆர்.பி மற்றும் பீ.ஐ பிரிவின் தலைவராகவும் 2006 – 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பி.எல்.சி இல் ஈ.ஆர்.பி மற்றும் நிதிப் பிரிவின் தலைவராகவும் இருந்துள்ளார். 2003 – 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் வணிகக் கல்லூரியில் பொது முகாமையாளராக இருந்துள்ளார். மேலும் அவர் தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் தொழிற் பியற்சி அதிகார சபையின் தலைவராக இருந்துள்ளதோடு இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் ஸ்தாபக ஆலோசகருமாவார்.



திரு. சுசந்த சில்வா
முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு. சுசந்த சில்வா அவர்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக 23.07.2022 அன்று நியமிக்கப்பட்டார்.

திரு. சில்வா அவர்கள் முன்னணி நிறுவனங்களில் தலைமைத்துவப் பதவிகளை வகித்திருப்பதில் 38 வருட கால அனுபவத்தைக் கொண்டுள்ளார். தற்பொழுது திரு. சில்வா அவர்கள் பிரஸ்டிஜ் குழுமத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக உள்ளார். இதற்கு மேலதிகமாக, வங்கியில் பணிப்பாளர்/கணக்காய்வுக் குழுத் தலைவராகவும் களனிப் பல்கலைக்கழகம் மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் பாலி மற்றும பௌத்த பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தின் ஆளுகைக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

மலேசியா திறந்த பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாகத்தில் முதுநிலைப் பட்டம் ஒன்றையும் களனிப் பல்கலைக்கழகத்தின் கணனித் தொழிநுட்பம் மற்றும் வணிகத் துறையில்(சிறப்பு) பட்டப்பின் டிப்ளோமாவையும் கொண்டுள்ளார். மேலும், திரு. சில்வா அவர்கள் ICASL இன் (FCA) இல் மற்றும் இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (FCMA) ஆகியவற்றின் சக உறுப்பினராக இருப்பதனால் பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்சார் தகமைகளைக் கொண்டுள்ளார். அவுஸ்ரேலியாவின் CPA, PNG இன் சங்க உறுப்பினராகவும் APFASL இன் சங்க உறுப்பினராகவும்மற்றும் FCPM இன் சங்க உறுப்பினராகவும் MSLICM இன் சக உறுப்பினராகவும் இலங்கை சந்தைப்படுத்தல் முகாமைத்துவ நிறுவகத்தின் (SLIM) சந்தைப்படுத்தலில் முகாமைத்துவ சான்றிதழையும் கொண்டுள்ளார்.

அவர் 2012 – 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டெர்மினல் லிமிடட் இன் பணிப்பாளர்/கணக்காய்வுக் குழுத் தலைவராகவும் உள்ளார். லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட்டில் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் லிட்ரோ கேஸ் லங்கா டெர்மினல் பிரைவட் லிமிடட்டின் பணிப்பாளராகவும் விமானத்துறை சேவைகள் லிமிடட்டில் பணிப்பாளர்/கணக்காய்வுக் குழுத் தலைவராகவும் பபுவா நியூகினியா பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும்/உப வேந்தராகவும் ஏனைய புகழ்பெற்ற நிறுவனங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணிப்பாளராகவும் இருந்துள்ளதோடு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பல குழுக்களிலும் பதவி வகித்துள்ளார்.

நட்டத்தை ஏற்படுத்தும் வணிகத்தை இலாபகரமான வணிக முயற்சிகளாக மாற்றுவதில் துடிப்பான நிலைப்பாட்டைக் கொண்டவராக திரு. சில்வா அவர்கள் உள்ளார். அவரது சிறந்த பதவிக் காலத்தின் போது தனது நிபுணத்துவத்தை வெளிக்காட்டக் கூடிய வகையில் புகழ்பெற்ற 9 இற்கும் அதிகமான ஒழுங்கமைப்புக்களில் பிரதம நிறைவேற்று அதிகாரிப் பதவிகளை வகித்துள்ளார். அவர் தகவல் தொழிநுட்பத் துறையோடு நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளார். உலகளாவிய ரீதியில் பபுவா நியூகினியா உள்ளிட்ட நாடுகளின் கணனிச் சங்கத்தில் தலைவர் பதவி உள்ளிட்ட பல தகவல் தொழிநுட்ப அமைப்புக்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார். திரு. சில்வா அவர்கள் மனித மூலதன அபிவிருத்திப் பயிற்சியாளரும் ஆவார். பல அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் அவர் ஆளுமைப் பயிற்சியாளராகவும் விரிவுரையாளராகவும் தொழில்சார் சேவைகளை வழங்கியுள்ளார்.



திரு. சுமித் விஜேசிங்ஹ
பணிப்பாளர்

விஜேசிங்க அவர்கள் 10.06.2022 அன்று கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் 03.01.2020 முதல் 05.06.2022 வரை கழகத்தின் தலைவராக இருந்தார்.

அவர் ஒரு வழக்கறிஞராவதோடு சட்டமாணிப்பட்டத்தையும் கொண்டுள்ளார்.

நாட்டின் சக்திப் பாதுகாப்பினை நோக்காகக் கொண்ட வலுசக்தித் துறை அமைச்சின் கீழ் இயங்கும் அரசுக்கு சொந்தமான பிரதான ஒரு செயல்நுணுக்க நி-றுவனத்தினை திரு.சுமித் விஜேசிங்ஹ அவர்கள் வழிநடத்துகின்றார். மேலும் இது, இலங்கையில் உள்ள பெற்றோலியக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் உட்கட்டமைப்புகளின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது. பொது மக்கள் மற்றும் கைத்தொழிற்துறைகளுக்கு தரமான உற்பத்திகளை உறுதிப்படுத்துகின்ற அதே வேளை நிறுவனத்தினை இலாபகரமான நிறுவனமாக மாற்றுகின்ற வெற்றிகரமான ஒரு தலைவர் ஆவார்.

அவரது சிறப்பான பதவிக் காலத்தின் போது 2007 முதல் 2015 ஜூலை வரை பாராளுமன்ற சபைத் தலைவருக்கான செயலாளராகத் தொழிற்பட்டுள்ளார். மேலும் அவர், ஸ்ரீலங்கா டெலிகொம்(PLC) (2007-2010), ஏற்றுமதி அபிவிருத்தி சபை(2011-2012), தேசிய சேமிப்பு வங்கி (2012-2014), மொபிடெல் பிரைவட் லிமிடட் (2007-2010), நஷனல் டிவலப்மென்ட டிரஸ்ட் பன்ட(Gar) லிமிடட் (2007 -2010), நஷனல் டிவலப்மென்ட டிரஸ்ட் பன்ட கம்பனி (2007-2010), தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, எஸ்.எல்.ரி யெலொவ் பேஜஸ் கம்பனி பிரைவட் லிமிடட் மற்றும் எஸ்.எல்.ரி மேன் பவர் கம்பனி பிரைவட் லிமிடட் ஆகியவற்றின் பணிப்பாளராகவும் இருந்துள்ளார்.



திருமதி/செல்வி ரத்னாயக்க
பணிப்பாளர்

அவர்கள் 2020.01.13 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக பதவிறயேற்றார். தற்போது அவர் திறமை-சரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமை புரிகின்றார். திருமதி/செல்வி ரத்நாயக்க அவர்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றுள்ளார் (வணிக நிர்வாகம்). மேலும் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் அபிவிருத்திப் பிரிவில் முதுமாணிப் பட்டத்தையும் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தினது பொதுக் கொள்கை தொடர்பான முதுமாணிப் பட்டத்தையும் கொண்டுள்ளார்.

அவரது சிறந்த பதவிக் காலத்தின்போது, பொது நிதித் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராகவும் பொது நி-றுவனங்கள் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராகவும் திறைசேரி செயல்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் மக்கள் வங்கி, வயம்ப அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளராகவும் விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதிகள் சபையின் தலைவராகவும் என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனி லிமிடட்டின் பணிப்பாளர் போன்ற பிரதான பதவிகளையும் வகித்துள்ளார்.



கலாநிதி பிரபாத் சமரசிங்ஹ
பணிப்பாளர்

கலாநிதி பிரபாத் சமரசிங்ஹ அவர்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக 2021.04.09 அன்று நியமிக்கப்பட்டார்.

திரு.சமரசிங்ஹ அவர்கள் தற்பொழுது நெக்சஸ் பிசினஸ் சொலுஷன்ஸ் பிரைவட் லிமிடட்டில் தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் நெக்சஸ் மோல்திவ்ஸ் பிரைவட் லிமிடட்டில் தலைவராகவும் தொழில் அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின்(NIOSH) சிரேஷ்ட ஆலோசகராகவும் உள்ளார். ஐக்கிய அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் செயன்முறை அபிவிருத்தி மற்றும் மூலதனப் பயன்பாட்டில் கலாநிதிப் பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாகத்தில் முதுநிலைப்பட்டத்தையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் மற்றும் விஞ்ஞானமானி பட்டதாரிகள் நிறுவகத்தின் இரசாயனவியல் சிறப்புப் பட்டத்தையும் கொண்டுள்ளார்.

கலாநிதி பிரபாத் அவர்கள் ISO 22000/HACCP இன் மீதான பாதுகாப்பான உணவுத் தரநியமங்கள் மற்றும் ISO 14001 இன் சூழல் முகாமைத்துவ தரநியமங்களில் தலைமைக் கணக்காளர் மற்றும் பயிற்றுவிப்பாளர், ISO 45001:2018(OHSAS 18001), ISO 9001 : 2008 மற்றும் ISO 9001 :2015 இன் தலைமைக் கணக்காளர், C-TPAT அடிப்படையிலான அமெரிக்க சுங்க ஒழுங்குவிதிகள் ஆலோசகர் மற்றும் தர முகாமைத்துவ டிப்ளோமா ஆகிய தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளார்.

அவரது சிறந்த பதவிக் காலத்தின் போது, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை மட்டத்தில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் 300 இற்கும் மேற்பட்ட கம்பனிகளுக்கு ஆலோசனை சேவையினை வழங்கியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் UNAIDS நிறுவனத்தின் ஆலோசகராகவும் இலங்கை மற்றும் மாலைதீவுகளில் பல முன்னணி நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகளுக்கு ஆலோசகராகவும் இருந்துள்ளார். மேலும், தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின்(NIOSH) ஆலோசகராகவும் இலங்கையில் உள்ள பல முன்னணி

கூட்டுத்தாபன முகாமைத்துவம்



திரு.ஈ.ஏ.எஸ் எதிரிசிங்ஹ
(சுத்திகரிப்பு முகாமையாளர்)

திரு.எதிரிசிங்ஹ இரசாயன பொறியியல் துறையில் ஓர் இளமாணிப் பட்டத்தைக் கொண்டிருப்பதுடன் பட்டயம் பெற்ற ஓர் இரசாயனப் பொறியியலாளர் ஆவார். மேலும் அவர் இலங்கைப் பொறியியலாளர் நிறுவகம் மற்றும் இலங்கை சக்திவள முகாமையாளர்கள் சங்கம் என்பவற்றின் உறுப்பினருமாவார்.

ஆவர் 1988 ஆம் அண்டு இ.பெ.கூ உடன் இணைந்த நான்கு வருடங்களின் பின்னர் இரண்டு வருட காலப் பகுதிக்கு சவூதி அரேபியாவிலுள்ள யான்பு, அராம்கோ நிறுவனங்களில் ஒரு விசேட கலவைப் பொறியியலாளராக இணைந்தார். 1996 இல் இ.பெ.கூ இல் அவர் முன்னர் வகித்த அதே பதவியில் இணைந்து கொண்டு 2002 இல் பிரதி பொது முகாமையாளர் தொழிநுட்ப சேவையில் (செய்முறை) பதவி உயர்வு பெற்றார். அதன் பின்னர் அவர் 2005 இல் பிரதி முகாமையாளர் தொழிநுட்ப சேவைப் (செயல்திட்டங்கள்) பதவியிலும் 2009 முகாமையாளர் (உற்பத்தி மற்றும் செயற்பாடு) பதவி நிலைக்கும் உயர்த்தப்பட்டார். துற்பொழுது அவர் இ.பெ.கூ இன் பதில் முகாமையாளர் ஆவார்.



திரு. எம்.கே.கருசிங்ஹ
பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம் மற்றும் வழங்கல் சங்கிலி)

திரு. கருசிங்ஹ கொழும்பு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தையும் பின் சுவீடன், மல்மோ , உலக கடல்சார் பல்கலைக்கழகத்தில் கடல்சார் விவகாரங்களில் ஒரு முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக முதுமாணிப் பட்டம் ஒன்றையும் பெற்றுள்ளார். அவர் ஐக்கிய இராச்சியத்தின் கப்பல்தரகர்கள் பட்டய நிறுவகத்தின் ஓர் உறுப்பினர் என்பதோடு (MICS UK) இலங்கை வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவ நிறுவகத்தின் (MISMM) ஒரு கூட்டாண்மை உறுப்பினரும் ஆவார்.

தற்பொழுது அவர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகம் மற்றும் வழங்கல் சங்கிலிப் பகுதியின் பிரதிப் பொதுமுகாமையாளர் ஆவார்.



திரு.டபிள்யு.எம்.கே.ஆர்.பி. விக்கிரமசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)

திரு. விக்கிரமசிங்க பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டத்தையும், UOC இல் MBA பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் இலங்கையின் இரசாயனவியல் நிறுவகத்தின் உறுப்பினராகவும், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் சான்றளிக்கப்பட்ட உறுப்பினராகவும் உள்ளார். கூடுதலாக, அவர் புகழ்பெற்ற உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மூலம் தொழில்முறை பயிற்சி பெற்றுள்ளார். அவர் 1999-2008 வரை கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்டின் மூத்த தயாரிப்பு மேலாளராக பணியாற்றினார். சமச்சீர் மதிப்பெண் அட்டை செயல்படுத்தல், கண்காணிப்பு, குழம்பு ஆலைகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அம்சங்களில் ஆழ்ந்த நடைமுறை அனுபவமும் அவருக்கு உள்ளது.

CPC இல் DGM-மார்க்கெட்டிங் என்ற அவரது தற்போதைய நிலையில், உள்நாட்டு எரிபொருள் சந்தைகள், வேளாண் இரசாயனம், பிடுமன், லூப்ரிகண்டுகள் மற்றும் சிறப்பு தயாரிப்புகள் மற்றும் CCU & SSE பணிமனையின் துணைப்பிரிவுகள் உட்பட CPC இன் சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை கட்டுப்படுத்தி ஒருங்கிணைக்கும் பணியை அவர் செய்கிறார்.



திரு. வி என் வீரசூரிய
துணை நிதி மேலாளர் (நிதி)

திரு. வி. என் வீரசூரிய அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகப் பட்டத்தையும் அதே பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் முகாமைத்துவ கற்கைகள் நிறுவகத்தின் வியாபார முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினரும் CPA (ASA) பங்குதாரரும் CMA (FCMA) உறுப்பினரும் ஆவார்.

அவர் 1994 ஆம் ஆண்டு பீ.ஆர்.டீ சில்வா அன்ட கம்பனியிலும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்திலும் கணக்காய்வு இலிகிதராகவும் வரி மேற்பார்வையாளராகவும் தனது தொழிலை ஆரம்பித்தார். அதன் பின்னர் அவர் மைக்ரோ செல்ஸ் லிமிடட்டில் கணக்காளராகவும் V Com இன்டர்நஷனல் குழுவிற்கு நிதி மற்றும் நிர்வாக முகாமையாளராகவும் நாகர் டிரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் லிமிடட்டிற்கு நிதி முகாமையாளர்-ாகவும் அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்னில் உள்ள பெஸ் பிரீஸ் பிரைவட் லிமிடட்டின் நிதி மற்றும் நிர்வாக முகாமையாளராகவும் 2017 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளராக இணைவதற்கு முன்னர் ஹன்டர் அண்ட் கம்பனி பி.எல்.சி இல் நிதி முகாமையாளராகப் பதவி வகித்தார்.

அவர் நிதி தொடர்பான செயற்பாடுகள், திறைசேரி முகாமைத்துவம், வரி மற்றும் காப்புறுதித் திட்டமிடல் மற்றும் இணங்குதல், கணக்கீடு மற்றும் நிதியியல் கொள்கைகளை வரைதல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதோடு இயல்பு நிலையினை அறிக்கையிடல் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை பல்வேறு அனுமதிகளை பெறுவதற்கு வழிப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.



திரு.எம்.ஏ.டி மல்லிகாரச்சி
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிநுட்ப சேவைகள் மற்றும் கூட்டாண்மை விவகாரங்கள்)

திரு. மல்லிகராச்சி UOP இல் இளங்கலை பொறியியலில் (உற்பத்தி) பட்டம் பெற்றவர் மற்றும் அமெரிக்காவின் புராஜெக்ட் மேனேஜ்மென்ட் இன்ஸ்டிட்யூட்டில் உறுப்பினராகவும், இலங்கையின் இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஜினியர்ஸின் இணை உறுப்பினராகவும் உள்ளார். முன்னணி உள்ளூர் மற்றும் சர்வதேச கல்வி, தொழில்முறை மற்றும் தொழில்துறை வசதிகளில் மேலாண்மை மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பல முதுகலை பயிற்சி திட்டங்களிலும் அவர் பங்கேற்றுள்ளார்.

பல்வேறு துறைகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தை அவர் கணக்கிடுகிறார். 1996 இல் பொறியாளராக ஜினசேன குழுமத்தில் தனது வாழ்க்கையைத் தொடங்கிய அவர், பின்னர் Interbatch Porcelain Pvt இல் பணியாற்றினார். உதவி மெக்கானிக்கல் இன்ஜினியராக வரையறுக்கப்பட்டவர்.

அவர் 1999 இல் CPC இல் மெக்கானிக்கல் பொறியாளராக சேர்ந்தார், பின்னர் அவர் CPC யில் BIA இல் CPC இன் விமானப் போக்குவரத்து செயல்பாட்டிற்கான திட்டப் பொறியாளர், விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளின் துணை மேலாளர், திட்ட மேலாளர் மற்றும் மேலாளர் ஏவியேஷன் ஆபரேஷன்ஸ் உட்பட பல்வேறு பதவிகளை வகித்தார். தற்போது அவர் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் நிறுவன விவகாரங்களின் துணை பொது மேலாளராக உள்ளார்



திரு.டி.எம்.பி. திசாநாயக்க
பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் செயல்திட்டங்கள்)

திரு. திசாநாயக்க இயந்திரப் பொறியியல் துறையில் ஓர் இளமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளதுடன், ஒரு பட்டயப் பொறியியலாளரும் மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் ஒரு உறுப்பினருமாவர். அத்தோடு, அவர் சட்டத்திலும் ஓர் இளமானிப் பட்டத்தைக் கொண்டுள்ளதுடன் ஒரு சட்ட வழக்கறிஞருமாவர்.

அவர் இ.பெ.கூ உடன் 1988 இல் கூட்டுத்தாபன எண்ணெய் சுத்திகரித்தல் பகுதியில் ஓர் இயந்திரப் பொறியியலாளராக இணைந்து கொண்டார். இ.பெ.கூ சுத்திகரித்தல் பகுதியுடனான அவரது மூன்று தசாப்த கால தொழில் வாழ்க்கையில், பிரதிப் பொறியியல் முகாமையாளர், பொறியியல் முகாமையாளர் (இயந்திரவியல்), சிரேஷ்ட பொறியியல் முகாமையாளர், பொறியியல் முகாமையாளர் (பராமரித்தல் மற்றும் செயல்திட்டங்கள்), மற்றும் இறுதியாக, 2016 தொடங்கி, பிரதி சுத்திகரித்தல் முகாமையாளராக (பராமரித்தல் மற்றும் செயல்திட்டங்கள்), ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.



திரு.எல்.ஜி.எம்.ஆர் பெரேரா
பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (மின்சாரம் மற்றும் கருவிகள்)

திரு. பெரேரா மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு துறையில் ஓர் இளமாணிப் பட்டத்தைக் கொண்டுள்ளார். அவர் தனது தொழில் வாழ்க்கையை இ. பெ. கூ இல் ஓர் உபகரணப் பொறியியலாளராக 1992 இல் ஆரம்பித்தார். கருவிமயமாக்கல் கட்டுப்பாட்டுச் செய்முறைத் துறையில் 25 வருடங்களுக்கும் மேலான அனுபவங்களைக் கொண்டுள்ளதுடன் கருவியியல் திணைக்களத்தில் பல்வேறு பதவிநிலைகளையும் வகித்துள்ளார். பிரதி சுத்திகரித்தல் முகாமையாளராக (மின்சாரம் மற்றும் கருவிகள்) அவரது தற்போதைய பதவி நிலையில், அவர் மின்சாரம், கருவி மற்றும் சுத்திகரித்தலின் பொருட்கள் திணைக்களம் என்பவற்றுக்க தலைமை தாங்குகிறார்



திரு.கே.டபிள்யு.புஷ்பலால்
பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளம் - பதிற்கடமை)

திரு. புஷ்பலால் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டம் (அரசியல் அறிவியல் சிறப்பு) பெற்றுள்ளார். அவர் அவுஸ்திரேலியாவின் AHRI இன் சான்றளிக்கப்பட்ட நிபுணத்துவ உறுப்பினர் மற்றும் இலங்கையில் சான்றளிக்கப்பட்ட நிபுணத்துவ முகாமையாளர் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளார். திரு. புஷ்பலால் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகரிக்கப்பட்ட பல பயிற்சித் திட்டங்களை முடித்துள்ளார்.

திரு. புஷ்பலால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இல் முகாமைத்துவப் பயிற்சியாளராக 1997 ஆம் ஆண்டில் 21 வருட சேவையை எண்ணிச் சேர்ந்தார். அவரது பணியின் போது, அவர் ஊீஊ இல் துணை பணியாளர் மேலாளர், நிர்வாக மேலாளர், மனித வள மேலாளர் உட்பட பல்வேறு பதவிகளை வகித்தார், தற்போது அவர் செயலாளராக பதவி வகிக்கிறார். துணை பொது மேலாளர் (HR & A).



திரு. சி. ஆர். கே. கமகே

பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்) (பதிற் கடமை)

திரு. கமகே மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து பொறியியல் இளமானிப் படத்தைக் கொண்டுள்ளதுடன் அவர் ஒரு பட்டயப் பொறியியலாளர் மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் ஒரு சிறேஷ்ட உறுப்பினராவார். மேலும் அவர், ஐக்கிய அமெரிக்காவின், மொபியஸ் நி-றுவனத்தில் UT, PT, DT, MT,RT, IR Level- II சன்றிதழளிக்கப்பட்ட அதிர்வு பகுப்பாய்வு மட்டம் - I மட்டும் அழிவுமுறையற்ற பரிசித்தலுக்கான சங்கத்தின் சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். அவர் தனது தொழில் வாழ்க்கையை இயந்திரப் பொறியியலாளராக இ.பெ.கூ சுத்திகரித்தலில் 1993 வருடத்தில் ஆரம்பித்தார். அவர் சுத்திகரித்தலில் செயல்திட்டங்கள், பரா-மரித்தல், பரிசோதனை ரூ தொழிநுட்ப சேவைகள் ஆகிய பொறியியல் துறைகளில் 26 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் 2018 ஒக்டோபரில் பதில் பிரதி சுத்திகரித்தல் முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்) ஆக நியமிக்கப்படுவதற்கு முன் பிரதி பொறியியல் முகாமையாளர் (பரிசோதனை) மற்றும் பொறியியல் முகாமையாளர் (பரிசோதனை) ஆக பதவிகளை வகித்திருந்தார். தற்போது அவர் பரிசோதனை, ஆட்வுகூடம், தொழில்நுட்ப சேவைகள் உள்ளடங்கிய தொழில்நுட்ப சேவைகள் திணைக்களத்திற்கு தலைமை வகிக்கிறார்.



திரு.கே.ஜீ.எச் கொட்டகொட

பிரதி சுத்திகரிப்பு முகாமையர்(உற்பத்தி மற்றும் செயற்பாடுகள்)

திரு. கொட்டகொட அவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இரசாயன மற்றும் தொழிற்பாட்டுப் பொறியியலில் முதலாம் வகுப்பிலான விசேட பட்டம் ஒன்றையும் தாய்லாந்தின் ஷுலங்கோன் பல்கலைக்கழகத்தில் பெற்றோலியத் தொழிநுட்பம் மற்றும் வணிக நிர்வாகத்தில் இரு முதுநிலைப் பட்டங்களையும் கொண்டுள்ளார். அவர் ஒரு பட்டயப் பொறியியலாளர்-ாகவும் IESL கூட்டுத்தாபன உறுப்பினராகவும் இலங்கை சக்தித்துறை முகாமையாளர் சங்கத்தின் கூட்டுத்தாபன உறுப்பினராகவும் உள்ளார். ஆய்வுச் செயற்பாடுகளில் இவர் பல சர்வதேச பதிப்புக்களையும் முன்வைப்புக்களையும் மேற்கொண்டுள்ளார் மற்றும் IESL இன் இரசாயன மற்றும் தொழிற்பாட்டுப் பொறியியல் துறையில் தலைவராகவும் பணியாற்றியுள்ளதோடு 2 வருடங்களுக்கு சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் உள்ளார்.

திரு. கொட்டகொட அவர்கள் தனது பொறியியலாளர் தொழிலை 2002 ஆம் ஆண்டில் பிரைமல் க்ளாஸ் பி.எல்.சி இல் ஆரம்பித்து 2006 ஆம் ஆண்டு பெற்றோலியத் தொழிற் துறையில் அனுபவம் மிக்க இரசாயனப் பொறியியலாளராக தனது பணிகளைத் தொடர்ந்தார். பெற்றோலிய சுத்திகரிப்பு செயற்பாட்டு தொழிநுட்ப சேவைகள் மற்றும் உற்பத்தி மற்றும் செயற்பாடு உள்ளிட்ட துறைகளில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். 2021 பெப்ரவரியில் சுத்திகரிப்பு நிலையத்தில் பிரதிப் பொது முகாமையாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் இரசாயனப் பொறியியலாளர், பயன்பாட்டுச் செயற்பாட்டுத் தலைவர், முகாமையாளர்(சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகள்) ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

தற்பொழுது திரு. கொட்டகொட அவர்கள் செயற்பாட்டுப் பிரிவு, தீ மற்றும் பாதுகாப்புப் பிரிவு, பொருளாதார மற்றும் நிகழ்ச்சித் திட்டமிடல் பிரிவு மற்றும் சப்புகஸ்கந்த விநி-யோக முனையம் ஆகியவற்றை உள்ளடக்கிய உற்பத்தி மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் தலைவராக உள்ளார்.

சிரேஷ்ட முகாமைத்துவம



திருமதி ஆர்.ஏ.கே.சி ஆரியரத்ன (பிரதம சட்ட அதிகாரி)



எம்.சி.டி. பெரேரா, சிரேஷ்ட முகாமையாளர் (நிதி)



திரு. ஜி பி உபநந்தா மேலாளர் (மனித வளங்கள்)



மேஜர் எம்.ஆர்.எஸ்.பி சமரசிங்க முகாமையாளர் (பாதுகாப்பு மற்றும் விசாரணை)



திரு. ஜி.பி.கே. விஜேகோன், முகாமையாளர் (பொறியியல் மற்றும் திருமதி.



வளாகம்) எம்.எஸ்.ஆர். பெர்னாண்டோ, முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)



திரு. டபிள்யூ.கே.எஸ். குணவர்தன, முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)



திரு. பி.எஸ்.எஸ். பெரேரா, முகாமையாளர் (வேளாண இரசாயனங்கள்)



திரு. ரதீ ரணசிங்க, முகாமையாளர் (தணிக்கை)



திரு. புஆருறு டோமே-லாஸ்வல, முகாமையாளர் (லுப்ரிகண்ட் ரூ சிறப்புப் பொருட்கள்)



திரு. கே.கே.ஏ. ஜயவிக்ரம, முகாமையாளர் (வணிகம்)



திரு. ஏ.ஜி.டி. பண்டார, முகாமையாளர் (கப்பல் போக்குவரத்து)



திரு. என்.பி.எம்.பி. ஜீவசிறி, முகாமையாளர் (செயல்பாடுகள் – பங்குகள் மற்றும் டெர்மி-



திரு. எஸ்.எம்.சி.பி சமரகோன் முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)



திரு. எம் ஜி ஏ ஜே சோமதாச மேலாளர் (கார்ப்பரேட் திட்டமிடல் & வணிக மேம்பாடு)



திருமதி WAAC வீரசிங்க முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி).



திரு. கே.வி.ஜே. சந்திரவங்க, முகாமை-மையாளர் (பொறியியல் - மின்சாரம்)



திரு. ஆர்.ஏ.எஸ். ரா ஜபக்ஷ, முகாமையாளர் (பொருட்கள்)



திரு. கே.ஏ.கே.கே.குருப்பு, முகாமையாளர் (பொறியாளர்)



திரு. டபிள்யூ.ஏ.ஏன்.ஆர். விக்கிரமசிங்க, தொழில்நுட்ப மேலாண்மை சேவைகள். செயற்பாடுகள்)



திரு. ஆர்.ஏ.பி. திலங்க, முகாமை-மையாளர் (பொறியியல் - இயந்திரவியல்)



திரு. டபிள்யூ.எஸ். ரபெல், முகாமையாளர் (பொறியியல் - கருவி)



திரு. பி.எப்.டபிள்யூ. தயானத், முகாமையாளர் (பொறியியல் - சிவில்)



திருமதி எச் ஜி குமுதினி

மேலாளர் (கொள்முதல் & கடைகள்) (சட்டம்)



திரு. RWSM ராஜசிங்க, பிரதி முகாமையாளர (விமானப் போக்குவரத்து - செயற்பாடுகள்)



திரு. ஆர். எம் எம் டபிள்யு பண்டார பிரதி முகாமையாளர் (தீ மற்றும் பாதுகாப்பு)



.திருமதி/செல்வி பிரேமக-ாந்தி முகாமையாளர் (பொருளியல் மற்றும் நிகழ்சித் திட்டமிடல்)





திரு. ஏ ஜ வனசேகர பிரதி முகாமையாளர் (எஸ்.ரி – செயற்பாடுகள்)



திரு. ஏ.பீ கோரலேகெதர உதவி முகாமையாளர் (செயலகம்) (சட்டம்)

ஒழுங்கமைப்பு வரைபடம்




Refinery Manager
DRM (Elec. & Ins.)
DRM (Maint & Pro.)
DRM (Tech. Ser.)
DRM (Manu. & Ops.)
Manager (Materials)
Manager (Electrical)
Manager (Instrumental)
Manager (Civil)
Manager (Projects)
Manager (Mechanical)
Manager (Lab)
Manager (Inspection)
Manager (Technical Services)
Manager (Eco. & Sched)
Manager (Operation)
Dy. Manager (Fire & Safety)
Snr. Med. Officer
Dy. Ops. Mgr. (ST)

சந்தை மீளாய்வு மற்றும் தோற்றப்பாடு



96.62

உலகளாவிய எரி-பொருள் கேள்வி


(நாளொன்றிற்கு ஒரு மில்லியன் பீப்பாய்கள்)

6.1


உலகளாவிய மொ.தே.உ வளர்ச்சி

(சதவீதம்)

கச்சா எண்ணெய் (மர்பன்)




நாணய மாற்று விகிதம்



உலகளாவிய சூழல்

சர்வதேச நாணய நிதியத்தினால்(IMF)வெளியிடப்பட்ட உலக பொருளாதார தோற்றப்பாட்டின் படி (WEO) 2020 ஆம் ஆண்டில் 3.3 சதவீத நலிவுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டு உலகளாவிய பொருளாதாரமானது 6.1 சதவீதத்தினால் விரிவடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டில் முன்னேற்றகரமான பொருளாதாரங்கள் 5.2 சதவீத வளர்ச்சியை கொண்டிருந்தன என்பது மதிப்பீடு செய்யப்பட்டது. அதேவேளை எழுச்சி மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் தொடர்பாக 6.8 சதவீத வளர்ச்சி ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சிறப்பான நிதி மற்றும் நாணய ஊக்குவிப்புகள் அதே போன்று பெரும்பாலான பொருளாதாரங்களிலான நடமாட்டக் கட்டுப்பாட்டுத் தளர்வுகள் ஆகியவற்றினால் 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவு மீட்சிபெற்றது.

உலகளாவிய மொ.தே.உ வளர்ச்சி




Source : IMF - Word Economic Outlook 2022-April

ரஷ்யாவானது பெற்றோலிய உற்பத்தி வழங்குனர்களில் பிரதான ஒருவராக இருப்பதனால் ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளுக்கு இடையிலான பரபரப்பான சூழ்நிலையானது எதிர்பார்க்கப்பட்ட எரிபொருள் விலைகள் அதிகரிப்பை உருவாக்கியது. எரிபொருள் விலை அதிகரிப்பு உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது, குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

OPEC நிறுவனத்தின் படி உலகளாவிய எண்ணெய்க்கான கேள்வியானது சராசரியாக 95.1 mb/d ஆல் 2021 ஆம் ஆண்டு அதிகரித்து இருந்தது. இது 2020 பதிவு செய்யப்பட்ட 90.4 mb/d இருந்தான அதிகரிப்பாகும். விநியோக கட்டுப்பாடுகள் காரணமாக எண்ணெய் விலை அதிகரிப்புக்கு வழிவகுக்கக் கூடிய முன்னைய பெருந்தொற்று மட்டத்திற்கு உலகளாவிய எண்ணெய்க்கான கேள்வியானது மீண்டு எழுந்துள்ளது.

எண்ணைகளுக்கான உலகளாவிய கேள்வி



Source : OPEC Monthly Oil Market Report - March 2022


சர்வதேச நாணய நிதியத்தினால்(IMF)வெளியிடப்பட்ட உலக பொருளாதார தோற்றப்பாட்டின் படி (WEO) 2020 ஆம் ஆண்டில் 3.3 சதவீத நலிவுடன் ஒப்பிடும்போது 2021 ஆம் ஆண்டு உலகளாவிய பொருளாதாரமானது 6.1 சதவீதத்தினால் விரிவடைந்திருந்தது. 2020 ஆம் ஆண்டில் முன்னேற்றகரமான பொருளாதாரங்கள் 5.2 சதவீத வளர்ச்சியை கொண்டிருந்தன என்பது மதிப்பீடு செய்யப்பட்டது. அதேவேளை எழுச்சி மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் தொடர்பாக 6.8 சதவீத வளர்ச்சி ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சிறப்பான நிதி மற்றும் நாணய ஊக்குவிப்புகள் அதே போன்று பெரும்பாலான பொருளாதாரங்களிலான நடமாட்டக் கட்டுப்பாட்டுத் தளர்வுகள் ஆகியவற்றினால் 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவு மீட்சிபெற்றது.

WTI இன் சிங்கப்பூர் விலைகள்



மேம்பட்ட பொருளாதாரங்கள் மற்றும் எழுச்சி பெற்று வரும் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் சிறிதளவு மீட்சிக்கு பதிலளிக்கும் விதமாக, தேவை விநியோகத்தை விட அதிகமாக உள்ளது மற்றும் கச்சா எண்ணெய் (WTI) விலைகள் 2021 இல் தொடர்ச்சியான அதிகரிப்பை பதிவு செய்தன. கொவிட் 19 பெருந்தொற்றிலிருந்தான பொருளாதாரங்களின் மீட்சியைக் கருத்தில் கொண்டு, வருடாந்தம் கேள்விப் பக்கமானது 5 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் அதிகரித்த தேவையுடன் வரையறுக்கப்பட்ட விநியோகம் சர்வதேச விலைகளை படிப்படியாக அதிகரிக்கிறது.

சர்வதேச எரிபொருள் விலைகள்




2020 இல் பதிவான பீப்பாய் ஒன்றிற்கு 39.22 அமெரிக்க டொலர்கள் உடன் ஒப்பிடும் போது சராசரி WTI எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 67.99 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் பீப்பாய் ஒன்றுக்கு 69.91 அமெரிக்க டொலர்களாக இருந்த சராசரி கச்சா எண்ணெய் (மர்பன்) விலை 42.45 அமெரிக்க டொலர்களிலிருந்து கடுமையான அதிகரிப்பு ஒன்றைப் பதிவு செய்துள்ளது. 2021 இல் 64.69 சதவீத விலைகள் அதிகரித்ததை பிரதிபலிக்கிறது. உலகளாவிய பெற்றோலிய விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பு கூட்டுத்தாபனத்தின் பலவீனமான நிதிச் செயல்திறனைப் பெரிதும் பாதித்தது

உள்நாட்டுச் சூழல்

கொவிட் - 19 இலிருந்து மீட்சி பெறல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி ஆகியவற்றினால் உந்தப்பட்டு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3.6 சதவீதமாக நலிவடைந்து இருந்த இலங்கையின் பொருளாதாரமானது 3.7 சதவீத வளர்ச்சியுடன் மீண்டது. விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் எனப்படும் துறைகளானவை முறையே 2.0, 5.3 மற்றும் 3.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.

மொ.தே.உ வளர்ச்சி




ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதாரத்தின் நிலையான மீட்சியுடன் மொத்த பொருளாதார வளர்ச்சியானது 84.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக விரிவடைந்ததோடு 2020 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 3,695 அமெரிக்க டொலர்களாக இருந்த தலா வருமானமானது 3,815 அமெரிக்க டொலர்களாக விருத்தியடைந்தது.

இ.ம.வங்கி வெளியீட்டின்படி, பிரதானமாக உலகளாவிய மற்றும் உள்நாட்டு வழங்கலின் இடையூறுகள், உலகளாவிய ரீதியிலான பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் நிர்வகிக்கப்பட்ட விலைகளுக்களுக்கான மேல் நோக்கிய திருத்தங்கள் ஆகியவற்றினால் 2021 ஆம் ஆண்டில் பணவீக்கமானது அதிகரித்து இருந்த அதேவேளை பிரதான பணவீக்கமும் முக்கிய பண இருப்புக்களின் பின்தங்கிய நிலை காரணமாக அதிகரித்திருந்தது.

பணவீக்க வீதம்




ஆதாரம்: புள்ளியியல் துறை

வெளித்துறையானது நடைமுறைக் கணக்குக் குறைபாட்டின் பாரிய அதிகரிப்பு, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கீட்டின் தேய்மானம் மற்றும் இலங்கை ரூபாவில் குறிப்பிடத்தக்க தேய்மானமானத்தை ஏற்படுத்திய அழுத்தம் உள்ளிட்ட பல சவால்களுக்கு முகங்கொடுத்தது.

- பொருளாதார வளர்ச்சி வீதம் 3.7%
- பணவீக்க வீதம் 7%
- சராசரி நாணயமாற்று வீதம் 198.88 அமெரிக்க டொலர்கள்
- நாட்டின் இறக்குமதிகள் 20,637 மில்லியன் அமெரிக்க டொலர்கள.

எரிபொருள் விலைகள் உள்ளிட்ட பொருட்களின் அதிகரித்த விலை, பொருளாதார செயற்பாடுகளின் மீட்சி காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அதிகரித்த விலை, தடுப்பூசி போன்ற மருத்துவ மற்றும் மருந்தகப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதி மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி மீதான சில தளர்வுகள் ஆகியவை இறக்குமதி செலவினை அதிகரிக்க உந்துதல் அளித்தன.

இலங்கையின் இறக்குமதிச் செலவு




ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

எரிபொருள் விலைகள் உள்ளிட்ட பொருட்களின் அதிகரித்த விலை, பொருளாதார செயற்பாடுகளின் மீட்சி காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அதிகரித்த விலை, தடுப்பூசி போன்ற மருத்துவ மற்றும் மருந்தகப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதி மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதி மீதான சில தளர்வுகள் ஆகியவை இறக்குமதி செலவினை அதிகரிக்க உந்துதல் அளித்தன.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதிகள் அதிகரித்த போதிலும், வருட இறுதியின் போது வர்த்தகப் பொருட்களின் இறக்குமதியின் அதிகப்பானது 8,139 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டுக் கையிருப்புக்களின் தேய்மானத்திற்கு வழிவகுத்தது. இது 2020 ஆம் ஆண்டின் போது இருந்த 6,008 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து ஓர் அதிகரிப்பாகும்.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானமானமானது நிதிச் செயலாற்றுகை மற்றும் பாரிய வெளிநாட்டு நாணயக் கடன்கள் மற்றும் உண்டியல்கள் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிலை ஆகியவற்றின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியது. நாம் நாணயமாற்று வீத வேறுபாட்டின் தாக்கத்தைச் சரி செய்ய ஒவ்வொரு முயற்சியினையும் மேற்கொண்ட போதிலும், குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 33.2 பில்லியன் நாணயமாற்று வீத இழப்பிற்கு உள்ளாகியது.


நாணயமாற்று வீதம்



கொவிட் - 19 ஒழுங்குவிதிகள் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டவுடன் விமானங்களுக்கான எரிபொருள் வழங்கலின் ஊடாக விற்பனை வருவாயை மீட்டெடுத்தல் மற்றும் மீள எடுத்துக்கொண்டமையினால் விமான நிலைய செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின.

சர்வதேச எரிபொருள் விலைகளின் கடுமையான அதிகரிப்பு மற்றும் நாணய மாற்று விகிதம் ஆகியவை காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளாகிய செலவினை மீட்பதற்காக 2020 ஆம் ஆண்டு அரசாங்கமானது இரண்டு முறை பெற்றோல் மற்றும் டீசல் போன்ற எரிபொருள்களின் விலைகளை மாற்றி அமைத்தது

சில்லறை விலைகள்



முன்னோக்கிய பயணம்

சர்வதேச நாணய நிதியத்தின் படி உலகளாவிய பொருளாதாரமானது 2022 ஆம் ஆண்டில் 3.6 சதவீதமாகவும் 2023 ஆம் ஆண்டில் 3.6 சதவீதமாகவும் விரிவடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் ரஷ்யா மற்றும் உக்ரேன் ஆகியவற்றுக்கு இடையிலான யுத்தத்தின் தாக்கமானது யுத்தத்தின் பொருளாதார செலவு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட உலகளாவிய வளர்ச்சி வீதத்தினை குறைக்கும். இலங்கைப் பொருளாதாரம் குறைவடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 1.0 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, வெளிப்புற நிலையின் காரணமாக பொருளாதார ஸ்திரமின்மை குறிப்பாக வெளிநாட்டு இருப்புக்களின் இருப்புடன் மேலே உள்ள வளர்ச்சி நிலை மதிப்பிடப்பட்டுள்ளது.

தடுப்பூசி செயல்முறை தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கவும், பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கவும் உதவியது, எரிபொருள் தேவைக்கான வழிகளை உருவாக்குகிறது, இதன் விளைவாக அதிக அளவு வெளிநாட்டு நாணயம் வெளியேறுகிறது.

பொருளாதார செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியமையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது முன்னைய பெருந்தொற்று மட்டத்திற்கு எல்லாத்துறைகளிலும் வருவாயினை மீட்டு எடுக்கும் என எதிர்பார்க்கின்றது மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சவால் மிக்க பொருளாதார நிலைமைகளிலும் கூட கேள்விகளை பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளது.

செயற்பாட்டு மீளாய்வு

கொவிட் - 19 ஐக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் தேசிய பொருளாதாரமானது 2020 ஆம் ஆண்டில் 3.7 சதவீத பொருளாதார வளர்ச்சி உடன் மீண்டெழுந்தது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது இருக்கின்றது. பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியானது ஆண்டுக்கு ஆண்டு இரண்டு சதவீதத்தினால் அதிகரித்திருக்கின்றது. இது போக்குவரத்துத் துறை அதேபோன்று விமான வணிகத்துறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க இயக்கத்தை குறிக்கின்ற அதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 593 பில்லியன் வருமானத்தை அடைவதற்கு வழி காட்டியது. இது 2021 ஆம் ஆண்டில் 11.78 சதவீத அதிகரிப்பு ஒன்றாகும். குறித்த வருடத்தில் சர்வதேச விகைள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்ததால் அரசாங்கமானது உள்நாட்டு விற்பனை விலை-களை இரண்டு தடவை புதுப்பித்தது. இவ் வருவாய் அதி-கரிப்பு மற்றும் உள்நாட்டு விற்பனை அளவு கூட்டுத்தாபனத்தின் ஆதிக்கம் மிக்க வழுவான வருமானம் மூலமாக திகழ்வதற்கு வழிகோலியது.


5,130
விற்பனைகள்
(லீ.மி)

593
வருவாய்
(ரூ.பி)

1,270
கச்சா எண்ணெய் உள்ளெடுப்பு
(000' MT)

85.5%
செயற்பாட்டு நேர வினைத்திறன்
(000 MT)

துறை	வருவாய் (ரூபா. மி.)
போக்குவரத்து	455,477.94
மின் உற்பத்தி	47,322.79
விமானத்துறை	30,784.06
கைத்தொழில்கள்	16,249.05
வீட்டுப்பாவனை எரிபொருள் மற்றும் ஏனையவை	20,377.58
ஏற்றுமதிகள் மற்றும் கப்பல் எரிபெ-ாருள் வணிகம்	23,621.62
மொத்தம்	593,833.05




போக்குவரத்து

புதிய சாதாரண நிலைமைகளின் கீழ் பொருளாதார செயற்பாடுகள் மீண்டதனால் தேசிய பொருளாதாரத்தின் பெரும்பாலான துறைகள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடைந்தது. போக்குவரத்துத்துறையானது 1343 எரிபொருள் நிலையங்களைக் கொண்ட விரிவான நாடளாவிய ரீதியிலான வலையமைப்பின் ஊடாக ஒட்டுமொத்த எரிபொருள் வழங்களை உள்ளடக்குகின்றது. எரிபொருள் விலைகளில் ஏற்படும் சிறிய மாற்றமானது நாட்டு மக்களின் வாழ்க்கையில் தாக்கம் செலுத்துவதால் அவர்களது வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றில் நேரடியாக மாற்றத்தை ஏற்படுத்த கூடியவாறு வழிவகுக்கக் கூடிய இத் துறையானது மிகவும் விலை உணர்திறன் துறையாகும்.


இத் துறையானது ரூபா 455.47 பில்லியன் அதிகூடிய பங்களிப்பினை உருவாக்குகின்றது.(2020 இல் ரூபா 389.43 மில்லியன்) வருமானத்திற்கு மற்றும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பிரதானமாக வருடத்தில் இரண்டு முறை விற்பனை விலை அதிகரிப்பு காரணமாக 16.96 சதவீத வருவாய் அதிகரித்துள்ளது.

போக்குவரத்துத் துறையின் கேள்வி நடத்தை




பெற்றோல் 92, ஒட்டோ டீசல் மற்றும் சூப்பர் டீசல் ஆகியவை முறையே 7.57 சதவீதம், 13.43 சதவீதம் மற்றும் 11.25 சதவீதம் பிரதான உற்பத்திகளின் கேள்வித் தொகுதியானது அதிகரித்தது. பெற்றோல் மற்றும் டீசலின் விற்பனையானது முறையே 1,584 மில்லியன் லீற்றராகவும் 1,974 மில்லியன் லீற்றராகவும் காணப்பட்டது

வருவாய்க் கலவை - ஒட்டோ எரிபொருள்



குறித்த வருடத்தில் இரண்டு முறை ஒட்டோ எரிபொ-ருள்களின் உள்நாட்டு விற்பனை விலையானது மாற்றம் அடைந்ததோடு பிரதானமாக விற்பனை விலை அதி-கரிப்பினால் வருவாய் அதிகரித்தது.

உள்நாட்டு விற்பனை விலைகள்



உற்பத்திக்கான வசதியான அணுகலை மேம்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள நாடளாவிய ரீதியிலான வலையமைப்பிற்கு குறித்த வருடத்தில் 21 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கட்டுமான கடிதங்களானவை இன்னும் முடிவுக்கு உட்படுத்தப்படவில்லை மற்றும் இவை முடிவடைந்து தீர்மானத்திற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இவ் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நடைமுறையிலுள்ள செயற்பாட்டு நிலையங்களை விட சிறந்த வசதிகளுடன் அமைக்கப்படும். நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சேவையினை விருத்தி செய்வதற்காகவும் சூழல் நேய எரிபொருள் நிரப்பு நிலையங்களை உருவாக்குவதற்காகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான விநியோகஸ்தர்களால் இயக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் புனர்நிர்மாணம் செய்கின்றது.


நிலையான நுகர்வுப் போக்கு மற்றும் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது எப்பொழுதும் சூழல் நேய யூரோ 4 பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை ஊக்குவிக்கின்றது. இவ் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக செயல்நுணுக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கு இடையே காணப்படுகின்ற இடைவெளி காரணமாக குறைந்த வரு-மானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் மீனவ சமுதாயத்திற்கு வழங்கப்பட்டுள்ள மண்ணெண்ணெய் நிவாரணத்தை பஸ்கள் மற்றும் லொறிகள் போன்ற பாரிய போக்குவரத்தாளர்கள் தவறாகப் பயன்படுத்துவதனால் மண்ணெண்ணெய்க் கலப்படத்தை கட்டுப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்காகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் செயற்பாட்டு பலவீனங்களை அடையாளம் காண்பதற்காக விசேடமான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. சிறந்த வாடிக்கையாளர் உறவுமுறை மற்றும் அவற்றை சீரமைப்பதற்கு சூழல் நேய வணிகத்தை உறுதிப்படுத்துவதற்காக பலதரப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



புதிதாக திறக்கப்பட்ட நிரப்பு நிலையம்

போக்குவரத்துத் துறையிலிருந்தான இழப்பு



இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானத்துடன் இணைந்த சர்வதேச விலைகளின் உயர்வானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறித்த வருடத்தில் 35 பில்லியன் டொலரில் இருந்து 58.4 பில்லியன் டொலர் வரையான கடுமையான இழப்புக்கு வழிவகுத்தது. மீளாய்வாண்டின் போது பாரிய இழப்பு பதிவு செய்யப்பட்டிருந்தாலும் நாட்டின் சக்திப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை உறுதி செய்தது.

அவர்களின் வாழ்க்கையை நிலைநிறுத்த நிதிச் சுமைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு கடன் வசதிகளை நாங்கள் வழங்கினோம். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சூழலை பராமரிப்பதற்கான தொடர்ச்சியான வழங்கல் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

செயல்நுணுக்கங்கள்

- தெரிவுநிலை மற்றும் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்த, தற்போதுள்ள நிரப்பு நிலையங்களை மேம்படுத்தல்
- அண்மைக்கால நவீன தொழில்நுட்பங்களுடன் அமைப்பதற்கு, CODO எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு புதிய விநியோகிக்கும் பம்பிகளை நிறுவுதல்.
- செயல்நுணுக்க அமைவிடங்களில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சேர்த்தல்.
- சிறந்த வாடிக்கையாளர் திருப்தி நிலைகளுக்கு தொடர்ச்சியான விநியோகஸ்தர் பயிற்சி.
- தேவையான கையிருப்பு மட்டங்களை உறுதிப்படுத்த விநியோகஸ்தர் கையிருப்பு மட்ட கண்காணிப்பு முறைமைகளை மேம்படுத்துதல்.
- வாடிக்கையாளர் திருப்தியை உருவாக்க மற்றும் பராமரிக்க பல்வேறு இணக்க சரிபார்த்தல்களை அறிமுகப்படுத்துதல்.


மின் உற்பத்தி

மின் உற்பத்திக்கான எரிபொருள் என்பது பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான துறைகளில் ஒன்றாகும், ஏனெனில் மின்சார உற்பத்தி நாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இலங்கை மின்சார சபை மற்றும் சுதந்திர மின் உற்பத்தியாளர்களுக்கு (IPPs) நாட்டின் மின்சாரத் தேவைகளை உற்பத்தி செய்வதற்காக அவர்களின் அனல் மின் நிலையங்களுக்கு எரிபொருளை வழங்குகிறது.

2021 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி நோக்கத்திற்காக மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான ஒட்டுமொத்த கேள்வியானது 37.08 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதன் விளைவாக இத் துறையிலிருந்தான வருமான உருவாக்கம் 41.68 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது


குறித்த வருடத்தில் சர்வதேச பெற்றோலிய விலைகள் படிப்படியாக அதிகரித்த போதிலும், மின் உருவாக்கத் துறையிலிருந்து பாரிய இழப்புக்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய வகையில் வருட இறுதியின் போது அதிக சல்பர் கொண்ட உலை எண்ணெய், குறைந்த சல்பர் கொண்ட உலை எண்ணெய் மற்றும் சுபர் உலை எண்ணெய் ஆகியவற்றின் விலை லீற்றருக்கு 70 ரூபாவாக காணப்பட்டது. எவ்வாறிருப்பினும், எதிர்கால இழப்புக்களைக் குறைப்பதற்காக 2021.12.27 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விலைகள் அதி-கரிக்கப்பட்டன.

விற்பனைகள்



இத் துறையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 47.3 பில்லியன் வருவாயை உருவாக்கக்கூடிய இரண்டாவது வருமான உருவாக்கத் துறையாகக் காணப்பட்டது. (2019 – ரூபா 81.1 பில்லியன்) ஆகும். மீளாய்வின் கீழான வருடத்தின் போது மின் உருவாக்கத்திற்கான எரிபொருள் கேள்வியின் உள்ளடக்கமானது 78.1 சதவீதம் எரிபொருள் எண்ணெய் 19.66 சதவீதம் ஒட்டோ டீசல் மற்றும் 2.53 சதவீதம் நப்தா ஆகும். கடன்கள் மற்றும் கடன் வாங்கல் செலவுகளுக்கு வழிவகுக்கக் கூடிய பண உட்பாய்ச்சல்கள் மீதான பாரிய திரவத்தன்மைக்கு முகம் கொள்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை மின்சார சபை மற்றும் சுதந்திர மின் உற்பத்தியாளர்களிடமிருந்தான பலவீனமான தீர்வுகள் வழிவகுத்தன.

எரிபொருள் கலவை



இலங்கை மின்சார சபை மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களிடமிருந்தான பலவீனமான தீர்வுகள் இருந்த போதிலும் அவற்றை கவனத்தில் கொள்ளாது நாட்டின் பொருளாதாரத்தின் சுமுகமான செயற்பாட்டுக்கு தொடர்ச்சியான வழங்கல் அவசியம் என்பதை அறிந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை தொடர்வதற்கு பாரிய முயற்சியை மேற்கொண்டது.

இலங்கை மின்சார சபை மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களிடமிருந்தான பலவீனமான தீர்வுகள் இருந்த போதிலும் அவற்றை கவனத்தில் கொள்ளாது நாட்டின் பொருளாதாரத்தின் சுமுகமான செயற்பாட்டுக்கு தொடர்ச்சியான வழங்கல் அவசியம் என்பதை அறிந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை தொடர்வதற்கு பாரிய முயற்சியை மேற்கொண்டது.

மின் உற்பத்தித் துறையில் இருந்தான எரிபொருள் கேள்வி வாராந்தம் கையிருப்பு மீளாய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுவதோடு தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக செயல் நுணுக்கங்கள் நடைமுறையில் உள்ளன என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. நாட்டுக்கு சக்தி மற்றும் மின்சாரம் ஆகியவற்றின் தொடர்ச்சியான ஒட்டுமொத்த வழங்கலை உறுதிப்படுத்தல் எனும் ஒட்டுமொத்த இலக்கை அடைய இலங்கை மின்சார சபை மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்களுடன் சுமுகமான உறவு முறை ஒன்று பேணப்பட்டு வருகின்றது.


விமானத்துறை

கட்டுநாயக்கா, மத்தள, இரத்மலானை மற்றும் யாழ்ப்பாண விமான நிலையங்கள் ஊடாக நாட்டிலுள்ள விமான எரிபொருளின் ஏக வழங்குநர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகும். இலங்கை விமானப்படை, பயிற்சிப் பள்ளிகள் போன்ற ஏனைய நுகர்வோருக்கான விமான எரிபொருளும் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. சர்வதேச போக்குவரத்திற்கு அனைத்து உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான நிறுவனங்களுக்கும் விமான எரிபொருள் மிக முக்கியமானது என்பதால் இந்த துறையில் செயல்நுணுக்கக் கவனம் செலுத்தப்படுகிறது

இத் துறையானது 2020 ஆம் ஆண்டில் அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்திய துறையாக இருந்த போதிலும், விமானநிலைய செயற்பாடுகளின் தளர்வானது சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான சேவைகளுக்கு எரிபொருள் விற்பனைகளை மீட்டெடுக்க வழி வகுத்தது.

பாதுகாப்பானது முதன்மைக் கரிசனையாக இருப்பதனால், விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான சர்வதேச தரங்களைச் சந்திக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தர உத்தரவாதத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச தரங்களுக்கு இணங்குவதை சரிபார்க்க வருடாந்த கணக்காய்வுகள் கூட்டு மேற்பார்வைக் குழுவால் (JIG) மேற்கொள்ளப்பட்டது, 2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நமது விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளின் செயற்பாட்டுச் சிறப்பைக் குறிக்கும் வகையில் "நல்லது" (சராசரிக்கு மேல்) நிலையை அடைய முடிந்தது என்பதைக் குறிப்பிடுவது பாராட்டுக்குரியது.

வருவாய்



அதிகரித்த செலவு காரணமாக விமானத்துறை எரிபொருள் பிரிவிலிருந்து இழப்புக்கள் ஏற்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனமானது சர்வதேச விமான சேவைகளுக்கு நிவாரணம் ஒன்றை வழங்குவதற்கும் ஒன்றிணைந்த சேவைகளின் மூலம் சர்வதேச விமான சேவைகளை இலங்கைக்கு கவர்வதற்கான அரசாங்கத்தின் கொள்கைகளை உடன் இணைந்து விமான எரிபொருள் விலைக் குறைப்பினைத் தொடர்ந்தது.

2021 ஆம் ஆண்டில் விமானத்துறையானது 30.78 பில்லியன் ரூபா வருவாயைப் பதிவு செய்ததோடு இது 2021 ஆம் ஆண்டிற்கான 57.98 சதவீத அதிகரிப்பு ஒன்றாகும். 18.5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட விற்பனை அளவு மற்றும் அதிகரிக்கப்பட்ட விற்பனை விலைகளினால் உந்தப்பட்டதாகும்.

தர உத்தரவாதத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச தரங்களுக்கு இணங்குவதை சரிபார்க்க வருடாந்த கணக்காய்வுகள் கூட்டு மேற்பார்வைக் குழுவால் (JIG) மேற்கொள்ளப்பட்டது, 2021 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நமது விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளின் செயற்பாட்டுச் சிறப்பைக் குறிக்கும் வகையில் "நல்லது" (சராசரிக்கு மேல்) நிலையை அடைய முடிந்தது என்பதைக் குறிப்பிடுவது பாராட்டுக்குரியது.

முன்னோக்கிய பயணம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இலங்கையின் விமான நிலையங்களுக்குத் தொடர்சிசியான விமான எரிபொருள் வழங்கலை உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாக உள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் நவீனத் தொழிநுட்பத்துடன் கூடிய எரிபொருள் வழங்கல் ஆகியவற்றுக்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு தொடர்ச்சியான எரிபொருள் மற்றும் கொள்திறனை மேம்படுத்துவதற்காக குழாய் முறைமையில் இரு பாரிய கருத்திட்டங்கள் உள்ளன.


- ஜனவரி 2018 இல் விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு இணையாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் லங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது புதிய நீரேற்ற அமைப்பு மற்றும் விரிவாக்கத் திட்டத்தை ஆரம்பித்தது. கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக கருத்திட்டம் தாமதமானாலும், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 65 சதவீத அதன் பௌதீக முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

- ஜெட் A-1 களஞ்சிய வசதிகளை நிர்மாணிப்பதற்கும் முத்துராஜவெலயில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு குறைந்த விலையில் விமான எரிபொருளை மாற்றுவதற்கான குழாய் இணைப்பு வசதிகளை உருவாக்குவதற்குமான கொள்முதல் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.

தொழிற்துறைகள்

தொழிற்துறையானது, தனியார் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்துறை மண்ணெண்ணெய், தொழிற்துறை எரிபொருள் எண்ணெய், மசகுப் பொருட்கள், பிடுமின் மற்றும் கரைப்பான் (SBP) ஆகியவற்றிலிருந்து உருவான வருவாயை இத் துறை உள்ளடக்கியுள்ளது. இத்துறையில் இருந்து கிடைத்த வருவாய் ரூபா 16.25 பில்லியன் ஆகும். இது முன்னைய வருடத்தை விட 42.12 சதவீத அதிகரிப்பாகும். புதிய வழமையான நிலமைகளின் கீழ் மீட்சி பெற்ற பொருளாதாரமானது இத் தொழிற்துறையின் செயற்பாடுகளை மேம்படுத்த உதவியமையானது தொழிற்துறைகளுக்கான எரிபொருள் வழங்கலில் இருந்து பெறப்பட்ட மேற் குறித்த வருமான அதிகரிப்புக்கு காரணமாக அமைந்தது.

வருவாய்



தொழிற்துறையிலிருந்தான அதிகரித்த வருவாய்ப் பங்களிப்பாளராக இருக்கும் வகையில் எரிபொருள் எண்ணெய்யானது ரூபா 12.9 பில்லியன் வருவாயை உருவாக்கியது. பொருளாதார செயற்பாடுகளின் மீட்சி காரணமாக எரிபொருள் எண்ணெய்க்கான கேள்வியானது ரூபா 137.5 மில்லியன் லீற்றராக அதிகரித்தது. இது வருடத்திற்கு வருட 50.2 சதவீத அதிகரிப்பு ஒன்றாகும்.

பாதை நிர்மாண செயற்பாடுகள் பெருந்தொற்றுக்கு முன்னைய மட்டம் வரை மீட்டெடுக்கப்படாமையானது பிடுமனுக்கான கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியதன் விளைவாக பிடுமனிலிருந்து உருவாகும் வருவாயை ரூபா 0.6 பில்லியன் வரை குறைவடையச் செய்தது.

அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதை பராமரிப்பு செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பாரியளவான தரமான பிடுமன் மற்றும் பிடுமன் பீப்பாய்களை வழங்குகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட பீப்பாய் பிடுமனானது முத்துராஜவலயில் உள்ள பிடுமன் வளாகத்தில் வழங்கப்படும் அதே வேளை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பிடுமனானது வழங்கப்படுகின்றது.


சிறிய வாடிக்கையாளர்களிடமிருந்தான கேள்வி வழங்கலை நோக்காகக் கொண்டு பீப்பாய்களுக்கான மேலதிக உற்பத்திகளை நிரப்ப பிடுமன் பீப்பாய்களை நிரப்புவதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவ நாம் செயற்படுகின்றோம்.

எல்லா மசகு எண்ணெய்களும் ISO 9001/2000 தரச் சான்றிதழைக் கொண்ட அரைக்கும் ஆலையில் அரைக்கப்படுகின்றன. சிபெட்கோ தரக்குறியீட்டு மசகுப் பொருட்கள் அமெரிக்க பெற்றோலிய நிறுவனம் (API), MTU Friedrichshafen SmbH மற்றும் ஐரோப்பிய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் சங்கம் (ACEA) மற்றும் தொழில்துறை மற்றும் தன்னியக்க பிரயோக சேவைத் துறைகள் போன்ற தொடர்புடைய சர்வதேச தரக்குறியீடுகளைப் பூர்த்தி செய்யும் பல்வேறு மசகு எண்ணெய் வகைகளைக் குறிக்கின்றது.

பெற்றோலிய சுத்திகரிப்பு, அதி கூடிய தரம் வாய்ந்த உற்பத்திகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட தொழிலாளர் குழு ஒன்று மற்றும் நேர்மையானதும் வினைத்திறனானதுமான விநியோக வலையமைப்பு மற்றும் அதிகரித்த வாடிக்கையாளர்களுக்கு மொத்த சேவைகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதன் ஊடாக நாம் எமது செயல்நுணுக்க முக்கியத்துவத்தை திட்டமிடுகின்றோம்.

மசகுப் பொருட்களின் விற்பனை அளவு ஆண்டுக்கு ஆண்டு 7.5 சதவீதத்தினால் அதிகரித்திருக்கின்றதோடு வருவாயானது 19.62 சதவீதத்தினால் ரூபா 1.7 பில்லியனினால் அதிகரித்திருக்கின்றது. பொருளாதார செயற்பாடுகளின் மீட்சியானது மசகுப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்ததோடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது மசகுப் பொருட்கள் சந்தைப் பங்கை மீளக் கைப்பற்றுவதற்காக விலை வேறுபாட்டு செயல்நுணுக்கத்தைப் பின்பற்றியது.

விற்பனைகள்



2021 ஆம் ஆண்டில் மசகுப் பொருட்களின் கிரய அதிகரிப்பானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 156 மில்லியன் குறைந்த வருமானத்தை உருவாக்கியது.


பொருளாதார செயற்பாடுகளின் மீட்சியானது ஞீ இற்கான கேள்வியினை அதிகரிக்க வழிவகுத்ததோடு 115.71 சதவீதத்தினால் அதிகரித்தது மற்றும் வருவாயானது ரூபா 535 மில்லியனாக அதிகரித்தது. இது 2020 ஆம் ஆண்டுக்கு எதிராக 115.71 சதவீத அதிகரிப்பாகும்.

உள்நாட்டு துறை

உள்நாட்டுத் துறையானது மண்ணெண்ணெய் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு எண்ணெய் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இத் துறையானது மண்ணெண்ணெய்யை அதிகூடிய நிவாரண விலையில் விற்கப் பட்டதன் காரணமாக இழப்புக்களை ஏற்படுத்துவதைத் தொடர்ந்தது. குறித்த வருடத்தில் இத் துறையானது ரூபர் 8.9 பில்லியனைப் பதிவு செய்தது.

ஒரு லீற்றருக்கு ரூபா 87 என அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அதிகூடிய நிவாரண விலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது மண்ணெண்ணெய் வழங்குகின்றது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் மீனவ சமூகத்திற்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூபா 8.9 பில்லியன் இழப்பை மண்ணெண்ணெய உருவாக்கியது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இது நட்டத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் சமூகநல மற்றும் நிலையான நுகர்வுக்கான எமது பங்களிப்பு என இதை நாம் நம்புகின்றோம்.

மண்ணெண்ணெயிலிருந்தான இழப்பு



குறித்த வருடத்தில் பொருளாதார செயற்பாடுகளின் மீட்சி காரணமாக மண்ணெண்ணையில் இருந்தான வருவாயானது 13.25 சதவீதமாக அதிகரித்தது. மண்ணெண்ணெய் மற்றும் டீசல் ஆகியவற்றுக்கிடையே காணப்படுகின்ற இடைவெளி காரணமாக பஸ்கள் மற்றும் லொறிகள் போன்ற பாரிய போக்குவரத்தாளர்களினால் மண்ணெண்ணெய் கலப்படம் செய்யப்பட்டு தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்காக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உத்தேசிக்கப்படாத தரப்பினர்களுக்கு நிவாரணக் கூறுகள் வழங்கப்படுவதைத் குறைப்பதற்காக அமைச்சரவை மட்டத்திலான கவனமும் செலுத்தப்பட்டது. இச் செயற்பாடுகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்டபட்ட கடுமையான இழப்புக்களைக் குறைப்பதற்கு வழிவகுத்தது.


குறித்த வருடத்தில் திரவப் பெற்றோலிய வாயு விற்பனையானது ரூபா 2411 மில்லியன் வருவாயை உள்ளடக்கியது மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கிரயம் காரணமாக ரூபா 9 மில்லியனில் இருந்து ரூபா 202 மில்லியன் வரை அதிகரித்தது.

ஏற்றுமதிகள்

குறித்த வருடத்தில் நேரடி ஏற்றுமதித் துறையானது ரூபா 17.01 பில்லியனை உருவாக்கியது. இது ரூபா 17.01 பில்லியனிலிருந்தான அதிகரிப்பாகும். குறித்த வருடத்தில் மின் உற்பத்தி துறையில் இருந்தான நாப்தா மற்றும் எரிபொருள் எண்ணெய்க்கான குறைந்த கேள்வி மற்றும் களஞ்சிய வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையினால் அவற்றை ஏற்றுமதி செய்ய அழுத்தத்தை ஏற்படுத்தின.

மட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய கொள்திறன் வசதியானது நாப்தா மற்றும் உளை எண்ணெயினை சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளைக களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக செலவை விடக குறைவான விலையில் ஏற்றுமதி செய்வதற்கு அழுத்தத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க டொலர்களில் விற்பனைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும், இத் துறையானது ரூபா 1.7 பில்லியன் இழப்பை உருவாக்கியது. இது 2020 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 4.5 பில்லியனிலிருந்தான குறைப்பாகும்.

ஏற்றுமதிக் கலவை




விவசாய இரசாயனங்கள்

விவசாய இரசாயனங்களின் மட்டுப்பாடுகளுக்கான அரசாங்கக் கொள்கையினால் ஏற்பட்ட வருவாய் இழப்பு காரணமாக இத் துறையானது ரூபா 171 மில்லியனில் இருந்து ரூபா 67 மில்லியன் குறைவான வருமானத்தைப் பதிவு செய்திருந்தது.

விவசாய இரசாயனங்கள் உள்ளார்ந்த வகையில் இடர்களுக்கு உட்படக் கூடியதாக இருப்பதனால் சுகாதார மற்றும் பாதுகாப்பான சூழல் மற்றும் தரமான உற்பத்திகளை உறுதிப்படுத்துவதற்காக நியம நடைமுறையினை பின்பற்றுவதற்கு நாம் பொறுப்பாக்க பட்டுள்ளோம். இந் நோக்கத்திற்காக ISO 9001-2015, ISO 14001-2015 ஆகியவற்றுக்கும் அதே போன்று ISO 18001—2007 இற்கும் ISO செயற்பாட்டு மீளாய்வுகள் நடத்தப்பட்டன.

விற்பனை வருவாய்



ஊீஊ சநிழசவநன 0.295 மீளாய்வின் கீழான ஆண்டின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 0.295 மில்லியன் லீற்றர் விவசாய இரசாயன விற்பனையைப் பதிவு செய்திருந்தது.(2020 – 0.517 மில்லியன் லீற்றர்)

முன்னோக்கிய பயணம்

எல்லா வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய இரசாயன ஆலை ஒன்றை முத்துராஜவெல பகுதியில் நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளைத் தொடங்குவதற்காக நவீன புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஆய்வுகூடம் ஒன்று நிர்மாணிக்கப் படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கப்பல் எரிபொருள் வணிகம்

கூட்டுத்தாபனமானது மீண்டும் 2021 ஆம் ஆண்டு கப்பல் எரிபொருள் வணிகத்தில் உள் நுழைந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் நாட்டுக்கு அமெரிக்க டொலர்களில் வருவாயை உருவாக்கக்கூடிய ஒரு செயல்நுணுக்க வணிக அலகாகும். பெற்றோலிய வணிகத்தில் சந்தைத் தலைவராக இருப்பதனால் தன்மையான உள்ளார்ந்து அமைந்த போட்டு தன்மையினைக் கருத்திற்கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது குறுகிய காலத்திலும் கூட இக் கப்பல் எரிபொருள் வணிகத்தின் ஊடாக கணிசமான அளவு வருவாயை கைப்பற்றிக் கொண்டது.




இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2020 ஆம் ஆண்டு 62.77 மில்லியன் லீற்றர் கடல் டீசல் மற்றும் கடல் எரிபொருள் எண்ணெய்யினை விற்பனை செய்தது. இது ரூபா 224 மில்லியன் இலாபத்தினைத் தக்க வைத்திருந்த அதேவேளை 6.6 பில்லியன் ரூபா வருவாயை உருவாக்கியது.

சப்புகஸ்கந்த விநியோக முனையம்

சப்புகஸ்கந்த விநியோக முனையமானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒட்டோ எரிபொருள் விநியோக முனையமாகும் மற்றும் பெற்றோல் 92, ஒட்டோ டீசல், மண்ணெண்ணெய், உளை எண்ணெய் மற்றும் ஜெட் A-1 ஆகியவற்றையும் விநியோகிக்கின்றது. சுத்திகரிப்பு நிலையத்தினால் சுத்திகரிக்கப்பட்ட பகுதி அளவான பெற்றோலிய உற்பத்திகள் விநியோக நோக்கத்திற்காக முனையத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுகின்றது.

குறித்த வருடத்தில் ஜெட் A-1 உள்ளிட்ட ரூபா 453.47 மில்லியன் பெறுமதியான எரிபொருளை முனையமானது விநியோகித்தது.

முனைய விநியோகம்



சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடுகள்

1969 ஆம் ஆண்டிலிருந்து எமது தேசத்திற்கு பாரியளவு பெறுமானத்தை உருவாக்கக்கூடிய சப்புகஸ்கந்த வில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையமானது எமது பிரதான செயல்ணுக்கச் சொத்தாகும். சுத்திகரிப்பு நிலையமானது 1970களில் நாட்டில் உள்ள முழுமையான கேள்வியினை பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்த போதிலும் தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனைகளில் சுமார் 30 முதல் 35 சதவீதம் வரையே உள்ளடக்குகின்றது

இது எவ்வாறு பெறுமானத்தை உருவாக்குகின்றது?
• 100% இலங்கை ஊமியர்களுடன் செயற்படுகின்றது.
• 1100 அதிகமான குடிமக்களுக்கு நேரடி தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது.
• இ.பெ.கூ இன் மொத்த விற்பனைத் தொகுதியின் 30% - 35% ஐ பூர்த்தி செய்கின்றது.
• வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களின் சேமிப்பு.
• தொடர்ச்சியாக 53 வருட செயற்பாடுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது.
• சுத்திகரிக்கப்பு நிலைய பயிற்சிக்கு வெளிநாடுகளால் வழங்கப்பட்ட உயர் அங்கீகாரம்.

சுத்திகரிக்கப்பு நிலையத்தின் மேம்பாட்டுக்கான புதிய கருத்திட்டங்களை செயற்படுத்தல், பங்கிலாபங்களை அதிகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியினைக் குறைத்தல், சுற்றாடல் பராமரிப்பு, தரமான உற்பத்திகளை வழங்கல் மற்றும் உயர் மட்டத்தில் தொழிலானர் பொறுப்புக்களைப் பேணல் போன்ற ஏதிர்பார்க்கப்பட்ட நலன்களை நாட்டுக்கு வழங்குவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் உள்ளெடுப்பு




2021 ஆம் ஆண்டில் சுத்திகரிப்பு நிலையமானது 1,265,938 MT கச்சா எண்ணெய் பதப்படுத்தியுள்ளதோடு இது கச்சா இறக்குமதிக்கு வெளிநாட்டு நாணயத்தினைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான பாரிய மூடுகை காரணமா முன்னைய வருடத்தை விட 25 சதவீதம் குறைவானதாகும்.

2021 ஆம் அண்டு ஜனவரி, ஏப்ரல், மே, ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில், சுத்திகரிப்பு நிலையமானது சாதாரண உற்பத்தியில் சுமார் 5200 MT/D ஆகவும், எஞ்சிய ஆண்டு முழுவதற்குமான சுத்திகரிப்பு உற்பத்தியானது 3500 MT/D ஆகவும் செயற்பட்டு இருந்தது.

உள்ளடக்கம்	2021	2020
செயற்படும் தினங்கள்	285.70	362.44
சராசரி உற்பத்தி - TPSD (MT)	3456	4650
செயற்பாட்டு வினைத்திறன்	85.54%	99.03%

2021 பெப்ரவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பாரிய மூடுகையானது சுத்திகரிப்பு நிலையத்தின் குறைவான வருடாந்த உற்பத்திக்கு வழிவகுத்தது. மிகவும் அரிதான நிகழ்வாக அமை-மயக்கூடிய கச்சா எண்ணெய் இன்மை காரணமாக நவம்பர் 15 முதல் டிசம்பர் ஆரம்பகால பகுதி வரை சுத்திகரிப்பு நிலையமானது மூடப்பட்டிருந்தது.

சுத்திகரிப்பு நிலைய உற்பத்தி 2021



சுத்திகரிக்கப்பட்ட 9 பெற்றோலிய உற்பத்திகளின் 1,216,085 MT மெ.தொ ஐ சுத்திகரிப்பு நிலையமானது உற்பத்தி செய்தது. ஒட்டோ டீசல், எரிபொருள் எண்ணெய், ஜெட் A-1, பெற்றோல் 92 மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவையே சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தான உற்பத்திகளின் பிரதான பங்காளர்கள் ஆகும். சுத்திகரிப்பு நிலையமானது இவ் உற்பத்திகளை கொலன்னாவையில் அமைந்துள்ள ஆலை, சப்புகஸ்கந்த விநியோக முனையம் மற்றும் இலங்கை மின்சார சபை மற்றும் சுயாதீன மின் உற்பத்தியாளர்கள் போன்ற வாடிக்கையாளர்களுக்கும் நேரடியாக பரிமாற்றம் செய்தது.

வாடிக்கையாளர்களுக்கான உற்பத்திகள்	2021 MT	2020 MT
தி.பெ.வா	16,707	25,210
இ.மி.ச இற்கு உளை எண்ணெய்	103,547	162,392
ஏசியா பவருக்கான உளை எண்ணெய்	10,137	35,628
மொத்தம்	**130,391**	**223,230**

எமது செயல்நுணுக்கங்கள்

போக்குவரத்து, உற்பத்தி செயற்பாடுகளுக்கான சக்தி, அதே போன்று மின் உற்பத்தி ஆகியவற்றுக்கு அவசியமாக இருப்பதனால் தேசிய பொருளாதாரத்தினை சுமுகமாக இயக்குவதற்கு பெற்றோலிய உற்பத்திகளானவை முக்கிய வகிபங்கினை வகிக்கின்றன. இவ்வாறு, நாட்டின் தேசிய இலக்குகளை அடையும் பொருட்டு தேசத்திற்கான தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பொறுப்புடையதாக உள்ளது.

இலாபகரமான வளர்ச்சி

எமது இலாபத்தன்மையினை அதிகரிப்பதற்கு சந்தர்ப்பங்களைக் கைப்பற்றுவதற்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலப் பொறிமுறைகள் , புத்தாக்கங்கள் மற்றும் வளப் பங்கீடுகள் எமது செயற்பணி மற்றும் தூர நோக்கினை அடைவதற்கான எமது பிரதான செயல்நுணுக்கத் தூண்களாகும். தரக் குறியீட்டைக் கட்டியெழுப்பல் மற்றும் எமது நலனுரித்தாளர்களுக்கான பெறுமதி சேர்த்தல் ஆகியவற்றின் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தகப் பங்காளர்களை மகிழ்விக்கின்றது.

பிரதான செயல்நுணுக்கங்கள்

- செயல்நுணுக்க அமைவிடங்களில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைத்தல்.
- சந்தைக்கு புதிய இலாபகரமான உற்பத்திகளின் அறிமுகம்.
- களஞ்சியக் கொள்திறன் மேம்பாடு.
- நப்தா மற்றும் எரிபொருள் எண்ணெய் போன்ற கீழ்மட்ட உற்பத்திகளை அதிக பெறுமானங் கொண்ட உற்பத்திகளாக மாற்றுவதற்கு சுத்திகரிக்கப்பு நிலையத்தை மேம்படுத்தல்.
- எமது செயல்நுணுக்க வணிக அலகுகளின் விரிவாக்கம்.

செயற்பாட்டு மேலாண்மை


இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அதன் இலக்குகள் மற்றும் செயல்நுணுக்கக் குறிக்கோள்களை அடைவதற்கு வினைத்திறன் மற்றும் விளைதிறனை அதிகரிப்பதற்காக எல்லா செயற்பாடுகளிலும் செயற்பாட்டு மேலாண்மையை மேம்படுத்துவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதலீடு செய்கின்றது. விளைதிறனை அதிகரிப்பதற்கும் நலனுரித்தாளர்களுக்கு அதிக பெறுமானத்தை உருவாக்குவதற்குமான உயர் கிரயப் பயன்பாடு தொடர்ச்சியான செயன்முறை மற்றும் சொத்து அபிவிருத்தி செயற்பாடுகள் குழாய் அமைப்புக்களில் உள்ளன.

பிரதான செயல்நுணுக்கங்கள்

- செயற்பாட்டுக் கொள்திறனை அதிகரிப்பதற்காக பாரிய கருத்திட்டங்களில் முதலீடு செய்தல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்பாட்டுக் கொள்திறனை அதிகரிப்பதற்கு நடைமுறையில் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தரமுயர்த்தல்.
- CODO எரிபொருள் நிரப்பு நிலையங்களில் புதிய விநியோகப் பம்பிகளை நிறுவுதல்.
- அதிகமாக இருக்கும் பிடுமனை நிரப்புவதற்காக பீப்பாய் நிரப்பல் தொழிற்சாலையை நிறுவுதல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகின் அறிமுகம்.

சவால்கள் : நிவாரண எரிபொருள் விலைகள் டொலர் மீதான கட்டுப்பாடுகள் கடன் பெறுகைகள்

பெற்றோலிய வணிகத்தின் சந்தைத் தலைவர் எனும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அதன் செயல்நுணுக்கங்களை விருத்தி செய்துள்ளதோடு தேசிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால செயல்நுணுக்கங்களோடு இணைந்துள்ளது. சராம்சம் செய்யப்பட்ட எமது செயல்நுணுக்கத் தூண்கள் மற்றும் செயல்நுணுக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



மனித மூலதன அபிவிருத்தி

பெறுமான உருவாக்க செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக எமது தொழிலாளர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் நாம் அததிகப் பொறுப்புடன் உள்ளதோடு தொடரச்சியாக முதலீடு செய்கின்றோம். எமது வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதற்கான பயிற்சி மற்றும் நிபுணத்தவத்தைக் கட்டியெழுப்ப எமது வர்த்தகப் பங்காளர்களுக்கு பயிற்சி மற்றும் தொடர்ச்சியான தொடர்பாடலை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியது.

பிரதான செயல்நுணுக்கங்கள்

- தொழிலாளர்கள் மீதான பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு.
- சிறந்த வாடிக்கையாளர் பராமரிப்பு மற்றும் திருப்தி மட்டங்களுக்கான தொடரச்சியான விற்பனையாளர் பயிற்சி.

தொழிநுட்ப முன்னேற்றம்

எமது இலக்குகள் மற்றும் செயல்நுணுக்கக் குறிக்கோள்களை அடைவதன் ஊடாக எமது செயற்பணி மற்றும் தூர நோக்கினை அடைவதற்கு மிகத் துல்லியமான மற்றும் அறிக்கையிடும் நடவடிக்கையை வசதிப்படுத்துவதனால் தொழிநுட்ப முன்னேற்றமானது எமது நலனுரித்தாளர்களுக்கு பெறுமானத்தை உருவாக்குவதற்கான திறனை உருவாக்குகின்றது.

பிரதான செயல்நுணுக்கங்கள்

- டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் பயிற்சியில் பயிற்சி.
- தீர்மானம் எடுத்தலுக்கான ஒரு நிகழ் நேர தரவை வழங்குவதற்கு ERP—SAP முறைமையின் வினைத்திறனான பயன்பாடு.
- இணைய வங்கிப் பயன்பாட்டின் விருத்தி

நிலைபேறான தன்மை

காபன் அடிச்சுவட்டைக் குறைப்பதற்கும் சர்வதேச மட்டத்திலான நியமங்களுக்கு ஏற்ப கழிவு நீரை வெளியிடுவதற்கும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கான கொள்கைகள் மற்றும் நடவடிக்கையை உறுதிப்படுத்துவதற்கான நுகர்வுப் போக்கு அகியவற்றுக்காக நாம் பொறுப்பாக்கப்பட்டுள்ளோம்.

பிரதான செயல்நுணுக்கங்கள்

- சர்வதேச மட்டத்திலான நியமங்களுக்கு ஏற்ப கழிவு முறைமையை நிறுவுதல்.
- சக்தி நுகர்வு மற்றும் பொருட்கள் /உற்பத்திகளின் ஆதாரம் ஆகியவற்றின் உச்ச பயன்பாடு.
- வாடிக்கையாளர் திருப்தி மற்றும் சட்ட ரீதியான இணக்கப்பாட்டை கட்டியெழுப்புவதற்கும் பேணுவதற்கும் பல்வேறுபட்ட இணக்கப்பாட்டு சோதனைகளின் அறிமுகம்.

கிரயம் ஒரு விலைவாங்கி களஞ்சியக் குறைபாடு சேமடைந்த குழாய்கள்

எமது வணிக மாதிரி

உள்ளீடு

நிதி மூலதனம்
புங்குதாரர் நிதிகள்
கடன்பெறுகைகள்
மூலதன முகாமைத்துவம்

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்
எரிபொருள் நிரப்பு நிலையங்களின் வலையமைப்பு
ஆதனம் பொறி மற்றும் கருவி

மனித மூலதனம்
எமது மக்கள்
அனுபவம்
திறன்கள் மற்றும் தேர்ச்சிகள்
பயிற்சி மற்றும் அபிவிருத்தி

சமூக மற்றும் உறவு முறை மூலதனம்
நலனுரித்தாளர்கள் முகாமைத்துவம்
சுகாதார மற்றும் பாதுகாப்பு முயற்சிகள்

அறிவுசார் மூலதனம்
தொழிநுட்ப நிபுணத்துவம்
தரக்குறியிடுதல்
செயற்பாட்டு மேம்பாடுகள்

இயற்கை மூலதனம்
சக்தி முகாமைத்துவம்
நீர் முகாமைத்துவம்
ஏனைய இயற்கை வளங்கள்


தூரநோக்கு

செயல்நுணுக்கத் தூண்கள்
இலாபகரமான வளர்ச்சி
நிலைபேறான தன்மை
செயற்பாட்டு மேலாண்மை
தொழிநுட்ப முன்னேற்றம்
மனித மூலதனத்திலான முதலீடு

முதன்மை செயற்பாடுகள்
சந்தைப்படுத்தல்
இறக்குமதி – கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள்
சுத்திகரித்தல் – கச்சா எண்ணெய்
விநியோகம் - நாடளாவிய ரீயிலான நுகர்வோர்

கூட்டுத்தாபன ஆளுகை

இடர் முகாமைத்துவ


பெறுமான உருவாக்கம்
உள்ளீடு
வெளியீடு
நிதி மூலதனம்
மொத்த வருவாய் ரூபா 594 பில்லியன்
விற்பனைத் தொகுதி 5,130 மில்லியன் லீற்றர்
பங்குதாரர்கள்
சொத்து உருவாக்கம்
நிதி வளர்ச்சி
உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்
புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள்
மொத்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள்
வாடிக்கையாளர்கள்
தரமான உற்பத்திகள்
நாடுபூராகவும் கிடைக்கும் தன்மை
நியாயமான விலை
மனித மூலதனம்
ஆளணிச் செலவு ரூபா 6.89 பி
ஊழியப் படை
ஊழியர்கள்
திறன் மற்றும் வினைத்திறன்
ஊழியப் படை
பாதுகாப்பான மற்றும் சமமான சூழல்
சமூக மற்றும் உறவு முறை மூலதனம்
அரசாங்கத்திற்கான பங்களிப்பு ரூபா 105 பி
ஒழுங்கமைப்பாளர்கள்
சக்திப் பாதுகாப்பிற்கான பங்களிப்பு
பெருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பு
அறிவுசார் மூலதனம்
ஒட்டுமொத்த சேவை அனுபவம் 38,270 வருடங்கள்
சமூகம்
நிலைபேறான உறவு முறைகள்
இயற்கை மூலதனம்
சக்தி முகாமைத்துவம்
சட்டங்களுடன் இணங்கல்
வழங்குனர்கள்
நிலைபேறான பெறுமான சங்கிலி
செயற்பணி
வணிக ஒழுங்குகள்
போக்குவரத்து
மின் உற்பத்திக்கான எரிபொருள்
விமானத்துறை
கைத்தொழில்கள்
வீட்டுப்பாவனை எரிபொருள்
விவசாய இரசாயனம்
மசகுப் பொருட்கள்
ஏற்றுமதிகள்
கப்பல் எரிபொருள்
ஒத்துழைக்கும் செயற்பாடுகள்
வணிகச் செயல்நுணுக்கம்
தொழிநுட்ப சேவைகள்
மக்கள் முகாமைத்துவம்
தகவல் தொழிநுட்ப ஒத்துழைப்பு
கூட்டுத்தாபன சமூக முதலீடு
வெளிச் சூழல்

நிதி மூலதனம்



593.8
வருவாய்
(ரூபா பில்லியன்)

4.1
மொத்த நட்டம்
(ரூபா பில்லியன்)

82.2
நிகர நட்டம்
(ரூபா பில்லியன்)


(82.3)
ஏனைய விரி-
வான வருமானம்
(ரூபா பில்லியன்)

80.9
நிகர பண
உட்பாய்ச்சல்கள்
(ரூபா பில்லியன்)

வருவாய்

கொவிட் - 19 ஐக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக தேசிய பொருளாதாரமானது 2021 ஆம் ஆண்டில் மீட்சி பெற்றது. பொருளாதாரத்தின் மீட்சியுடன் போக்குவரத்துத்துறை அதேபோன்று விமானத்துறை வணிகங்களில் குறிப்பிடத்தக்க அளவு நகர்வினை காட்டக்கூடிய வகையில் பெற்றோலிய உற்பத்திக்கான ஒட்டுமொத்த கேள்வியானது ஆண்டுக்கு ஆண்டு 2 சதவீதத்திலான ஓரளவு அதிகரிப்பைக் காட்டியது. உள்நாட்டு எரிபொருள் விற்பனையானது கூட்டுத்தாபனத்தின் ஆதிக்கம் கொண்ட வருமான மூலமாக இருந்தது. குறித்த வருடத்தில் சர்வதேச விலைகளானவை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்ததன் காரணமாக அரசாங்கமானது உள்நாட்டு விற்பனை விலைகளை இரண்டு முறை புதுப்பித்தது.

விற்பனை வருவாய்



ஒட்டோ டீசலானது 2021 ஆம் ஆண்டில் அதிக அளவு வருமான உருவாக்கியாக இருப்பதைத் தொடர்ந்ததோடு அதனைத் தொடர்ந்து பெற்றோல் 92 ஆனது இரண்டாவது வருமான உருவாக்கியாக இருந்தது. ஒட்டோ டீசலானது தேசிய பொருளாதாரத்தோடு பாரியளவு சம்பந்தப்பட்டிருப்பதால் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்பானது ஆண்டுக்கு ஆண்டு விற்பனைத் தொகுதிகளை 10.36 சதவீதத்தினால் அதிகரிக்க வழிவகுத்தது.

துறை	வருவாய் (ரூ.மில்.)
போக்குவரத்து	455,477.94
மின் உற்பத்தி	47,322.79
விமானத்துறை	30,784.06
கைத்தொழில்கள்	16,249.05
வீட்டுப்பாவனை எரிபொருள் மற்றும் ஏனையவை	20,377.58
ஏற்றுமதி மற்றும் கப்பல் எரிபொருள்	23,621.62
மொத்தம்	593,833.05


விமானத்துறையிலிருந்து பெறப்பட்ட வருவாயானது குறிப்பிடத்தக்க அளவு மீட்சி பெற்றமையானது அத் துறையிலிருந்தான வருமான முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கப்பல் எரிபொருள் வணிகத்தை மீண்டும் தொடங்கியதோடு அது ரூபா 6.6 பில்லியன் வருவாயை உருவாக்கியது. சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடுகளைத் தொடர்வதற்காக களஞ்சிய வசதிகளை உருவாக்குவதற்கு மின் உற்பத்தித் துறையிலிருந்தான குறைவான கேள்வியானது நப்தா மற்றும் எரிபொருள் எண்ணெய்யை நட்டத்திலும் கூட ஏற்றுமதி செய்ய கட்டாயப்படுத்தியது. குறித்த வருடத்தில் ஏற்றுமதித் துறையானது 2020 ஆம் ஆண்டை விட 51.03 சதவீத அதிகரிப்புடன் ரூபா 17.0 பில்லியன் வருமானத்தை உருவாக்கியது.

Year	Gross Profit /(loss) (Rs. Mn.)	Gross Profit /(loss) Margin (%)
2017	26,989	5.23
2018	(4,124)	(0.70)
2019	4,261	0.66
2020	67,653	12.73
2021	(4,068)	(0.69)

மொத்த இலாபம்

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கடுமையான வீழ்ச்சியுடன் கூடிய தொடர்ச்சியான சர்வதேச எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு மற்றும் சர்வதேச எண்ணெய் விலைகளின் அதிகரிப்புக்கு இணையான விற்பனை விலைகளின் ஒத்திசைவின்மை ஆகியவை ரூபா 4 பில்லியன் மொத்த இழப்பைப் பதிவு செய்தது.(2020 இல் மொத்த இலாபம் ரூபா 67.6 பில்லியன் ஆகும்.)

மொத்த லாபம்/(இழப்பு)



ஏனைய வருமானம்

மீளாய்வாண்டில் ஏனைய வருமானமானது ரூபா 818 மில்லியனிலிருந்து 1120 மில்லியனாக அதி-கரித்திருக்கின்றது. நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் நிலுவையில் இருந்த கடன் மீதிகள் மற்றும் வழங்கல்கள் மீள் எழுதப்பட்டமையானது ஏனைய செயற்பாட்டு வரு-மானத்துடன் சேர்க்கப்பட்டது.

முதலீட்டு சொத்துக்கள் மீதான வருமானம், வாடகை வருமானம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உபகரணங்களின் விற்பனை ஆகியவையும் ஏனைய செயற்பாட்டு வருமான அட்டவணையில் அட-யாளப்படுத்தப்பட்டன.

நாணய மாற்று விகித வேறுபாடு


இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானம் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2021 ஆம் ஆண்டில் ரூபா 33,220 மில்லியன் நாணய மாற்று விகித நட்டத்தைப் பதிவு செய்தது(2020 இல் ரூபா 21,841 மில்லியன்). இரு அரச வங்கிகளுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்களை தீர்ப்பதற்கான போதியளவு வெளிநாட்டு நாணயம் இலங்கையில் இன்மையானது மேலும் இந் நிலைக்குப் பங்களிப்புச் செய்தது.

நிதி வருமானம்

திறைசேரி முறிகளிலிருந்தான வருமானம், நிலையான வைப்புக்கள், அழைப்பு வைப்புக்கள் மற்றும் தாமதமான வாடிக்கையாளர் செலுத்தல் மீதான கட்டணங்கள் ஆகியவற்றை நிதி வருமானம் உள்ளடக்குகின்றது. அன்றாட மேலதிகப் பணமானது அதிக வட்டியைப் பெற்றுத் தரும் மூலங்களில் முதலீடு செய்யப்பட்டது.

சந்தை வட்டி விகித அதிகரிப்பு அதே போன்று விசேட-மாக இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எய-ர்லைன்ஸ் போன்றவற்றிலிருந்தான தாமதமான வரடிக்கையாளர் கட்டணங்கள ஆகியவை காரணமாக 2020 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் நிதி வரு-மானமானது 64.19 சதவீதத்தினால் அதிகரித்தது. கூட்டுத்தாபனமானது அன்றாட மேலதிகப் பணத்தை அதிக வட்டியைப் பெற்றுத் தரும் மூலங்களில் முதலீடு செய்தத்து.

நிதி வருமானம்



நிதிச் செலவுகள்

பிரதானமாக இலங்கை மின்சார சபை, சுயாதீன மின் உற்பத்தியாளர்கள் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய அரச நிறுவனங்களிலிருந்தான திருப்தியற்ற வர்த்தக வருமதிகளின் தீர்வு, பெற்றோலிய உற்பத்திகளை நட்டத்தில் விற்றல் ஆகியவற்றினால் ஏற்பட்ட விற்பனை இழப்பு காரணமாக குறைந்த பணச் சேகரிப்பு மற்றும் நிலுவையில் உள்ள வெளிநாட்டு நாணயக் கடன்கள் மற்றும் வட்டிச் செலவுகளைத் தீர்ப்பதற்கு சந்தையில் வெளிநாட்டு நாணயம் இன்மை ஆகியவை கடுமையான அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது.

மேலும், இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானமானது கடன் வட்டிகள் டொலரில் தீர்க்கப்பட வேண்டி இருந்ததனால் வட்டிக் கிரயத்தைக் கடுமையாகப் பாதித்தது. மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களுடன் இணைந்த வகையில் வங்கிகளிடமிருந்தான அதிகரித்த வட்டி வீதங்கள் காரணமாக 2020 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் நிதிச் செலவானது நிதிச் செலவானது 22.637 சதவீதத்தினால் அதிகரித்தது.

	2021 ரூ.மி	2020 ரூ.மி
நிதிச் செலவுகள்	25,643	20,911
நாணயமாற்றுவிகித வேறுபாடுகள்	33,220	21,841


வருமான வரிச் செலவுகள்

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் படி வரி வரு-மானத்திலிருந்து முன்னெடுத்துச் சென்ற வரி விதிக்கத்தக்க வணிக இழப்புக்களுக்கு உரிமை கோர கூட்டுத்தாபனமானது உரித்துடையதாக இருந்தமையினால் குறித்த வருடத்தில் வருமான வரிப் பொறுப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை.

முன்னெடுத்துச் செல்லப்பட்ட வரி இழப்புக்கள் இருந்தமையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நிதிக் கூற்றுக்களில் ஒத்திவைக்கப்பட்ட வரிகளை அடையாளப்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் படி சொத்துக்களை அடையாளப்படுத்துவதன் மீது காணிகள் வரி விதிப்புக்கு உட்படுவதனால் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களானவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காணிகளின் மீள் மதிப்பீட்டின் போது அடையாளப்படுத்தப்பட்டது.

இலாபத்தன்மை

சர்வதேச எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் கடுமையான வீழ்ச்சி மற்றும் அதிகரித்த வட்டிக் கிரயம் ஆகியவை ரூபா 82.21 பில்லியன் நட்டம் ஏற்பட வழிவகுத்தது. இது 2020 ஆம் ஆண்டில் இருந்த ரூபா 2.4 பில்லியன் வரு-மானத்திலிருந்தான அதிகரிப்பாகும்.



வர்த்தக வருமதிகள்

சுமுகமான தேசிய பொருளாதார இயக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு வசதிப்படுத்துவதுடன் கடன் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பெற்றோலிய உற்பத்திகளை வழங்குகின்றது.. சில நிறுவனங்கள் நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களை உரிய தினத்தில் செலுத்தாமையினால் வர்த்தக வருமதிகளின் மீதியானது ஒன்றுதிரள வழிவகுத்தது. வர்த்தக வருமதிகளானவை ஆண்டுக்கு ஆண்டு 14.15 சதவீதத்தினால் அதிகரித்ததோடு 2021 ஆம் ஆண்டின் இறுதியின் போது அது ரூபா 161 பில்லியன் அகும்.

	2021 ரூ.பி	2020 ரூ.பி
அரசாங்கத்தின் ஈடுசெய்தல் வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு எதிரான வருமதிகள்	11,401	11,208

நிலுவையில் உள்ள வருமதிகளை மீட்பதற்காக உரிய அமைச்சுக்கள் மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றின் தலையீட்டுடனான தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. திறைசேரிக் கட்டணங்களாக அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் இருந்த போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது முப்படைகள் , இலங்கை பொலிஸ் மற்றும் புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து ரூபா 11, 401 மில்லியன் பெறுமதியான வர்த்தக வருமதிகளை மீட்டெடுத்தது.

அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலிருந்தான பாரிய நிலுவைகள் இருந்த போதிலும், பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதற்காகவும் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படாமலும் இருக்கவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இந் நிறுவனங்களுக்கான தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை வசதிப்படுத்துகின்றது.

தனியார் விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளைக் குறைப்பதற்கு செயல்நுணுக்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதோடு விலைப்பட்டியல்களைச் செலுத்துவதற்கு வசதியானதும் துரிதமான கட்டணங்களுக்கும் எரிபொருளைக் கட்டளை செய்யும் செயன்முறைக்கும் அவர்கள் மின்னியல் வங்கி வசதியினைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கடன் மற்றும் கடன்பெறுகைகள்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்க கருத்திட்டத்திற்கு சமாந்தரமான வகையில் புதிய எரிபொருள் குழாய் முனை முறைமையையின் கட்டுமானத்திற்கான கருத்திட்டத்தில் முதலீடு செய்வதற்காக பெறப்பட்ட சுய நிதியிடல் கடன் காரணமாக நீண்ட கால கடன்பெறுகைகளானவை ரூபா 848 மில்லியனாக அதிகரித்தது. கடன் தொயையானது கருத்திட்டத்தின் தொடரும் வேலையின் அடிப்படையில் அதிகரிக்கும்.

வகை	2021 Rs. Bn.	2020 Rs. Bn.
நீண்ட காலக் கடன்கள்	5.89	5.06
குறுகிய கால கடன்கள்	510.27	390.75
மொத்தம்	516.16	395.81

கூட்டுத்தாபனமானது சுத்திகரிக்கப்பட்ட/கச்சா எண்ணெய் இறக்குமதிகளுக்கு திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களை அக் கடிதங்களின் முதிர்ச்சியின் போது குறுகிய கால கடன்களாக மாற்றுகின்றது மற்றும் அதன்படி, பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதிக்கான செயற்பாட்டு மூலதனத் தேவைப்பாடுகளானவை இரு அரச வங்கிகளினால் பெறப்பட்ட குறுகிய கால கடன்கள் ஊடாக ஒழுங்கமைக்கப்படுகின்றது.

- குறைந்த பணச் சேகரிப்பு, வாங்குவதற்கும் தீர்ப்பதற்கும் சந்தையில் வெளிநாட்டு நாணயம் இன்மை மற்றும் இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானம் ஆகியவை காரணமாக இரு அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்ட குறுகிய கால கடன்களானவை குறித்த வருடத்தில் ரூபா 119,519 மில்லியனாக அதிகரித்தது.
- ரூபா 538 மில்லியன் வங்கி மிகைப்பற்றானது மேலே உள்ளடக்கப்பட்டிருந்ததோடு இது காசோலை மாத்திரமே வழங்கப்பட்டமையையும் ஆனால் அறிக்கையிடும் திகதியின் போது அடையாளப்படுத்தப்படவில்லை என்பதை பிரதிபலிக்கின்றது.
- நிலுவையில் உள்ள நாணயக் கடிதம் உள்ளிட்ட வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளும் ரூபா 56,160 மில்லியனால் அதிகரித்தமையானது சர்வதேச விலைகளின் கடுமையான அதிகரிப்பு மற்றும் உண்டியல்களைத் தீர்ப்பதற்கு செலவு செய்யப்பட்ட குறைந்த தொகை அகியவை காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட அதிக பெறுமானம் கொண்ட உண்டியல்களைப் பிரதிபளிக்கின்றது.

வருடத்தின் இறுதியின் போது இறக்குமதி செய்யப்பட்ட உண்டியல்களின் மாற்றீட்டின் ஊடாக உருவாகிய புதிய கடன்கள், சந்தையில் அமெரிக்க டொலர் இன்மை அதே போன்று நாணயமாற்றுவீத அதிகரிப்பு ஆகியவை காரணமாக குறுகிய கால கடன்களானவை ரூபா 510.2 பில்லியனாக 30.59 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டில் இறக்குமதி விலைகளானவை கடுமையாக அதிகரித்ததோடு அதே நேரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட உண்டியல்களும் அதிகரித்தமையானது குறுகிய கால வெளிநாட்டு நாணயக் கடன்களை அதிகரிக்கச் செய்தது.

பங்கு மூலதனம்

பிரதான பெற்றோலிய உற்பத்திகளை அரசாங்கம் நிர்ணயித்த நிவாரண விலையில் விற்பது பெருமளவில் திரட்டப்பட்ட இழப்புக்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது மற்றும் அவை இரு அரச வணிக வங்கிகளிலிருந்து பெறப்படும் வட்டியை சுமந்து வரும் குறுகிய கால வெளிநாட்டு நாணயக் கடன்கள் ஊடாக நிதியளிக்கப்படுகின்றன. வருட இறுதியின் போது கூட்டுத்தாபனத்தின் எதிர்மறைப் பங்கு மூலதனமானது ரூபா 357.5 பில்லியனாக அதிகரித்திருக்கின்றது.

பணப் பாய்ச்சல்கள்

குறுகிய கால முதலீடுகளின் உயர்வுடன் காசு மற்றும் காசுச் சமானங்களின் நிலையானது ரூபா 59.1 பில்லியனில் இருந்து ரூபா 140.1 பில்லியனாக அதி-கரித்திருக்கின்றது. வெளிநாட்டு நாணயக் கடன்களைத் தீர்ப்பதற்கும் கொள்வனவு செய்வதற்கும் சந்தையில் அமெரிக்க டொலர் இன்மையானது வருட இறுதியின் போது காசு மற்றும் காசுச் சமானங்களின திரட்சிக்கு வழிவகுத்தது.

சேர்க்கப்பட்ட பெறுமானம்

வகை	2021 ரூ.மி	2020 ரூ.மி
விற்பனை வருவாய்	584,754	522,533
ஏனைய வருமானம்	19,490	12,007
பொருட்களாகவும் சேவைகளாகவும் பெறப்பட்டவை	(546,055)	(350,574)
தேய்மானம்	(2,682)	(2,668)
சேர்க்கப்பட்ட பெறுமானம்	55,507	181,298
ஊழியர்கள் மீது பிரயோகிக்கத்தக்கது.		
சும்பளம், படிகள் மற்றும் ஏனைய நலன்கள்	6,891	5,719
மூலதன வழங்குநர்கள்		
குடன் மீதான வட்டிகள்	25,643	20,911
கூட்டுத்தாபனம்		
தக்க வைக்கப்பட்ட வருமானம்	(82,226)	2,356
அரசாங்கம்		
வரிகள் மற்றும் தீர்வைகள்	105,199	152,311
சேர்க்கப்பட்ட பெறுமானம்	**55,507**	**181,298**

உற்பத்தி செய்யப்பட்ட மூலதனம்



2.5

நிலையான சொத்துக்கள் மீதான முதலீடு

(ரூபா பி)

1,343

எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

21

புதிய எரிபெ-ாருள் நிரப்பு நிலையங்கள்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு





419.8

மொத்த சொத்துக்கள்

(ரூபா பி)

60.2

Fixed Assets

(*Rs. billion*)

எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனமானது சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள், முதலீட்டுச் சொத்துக்கள், தகவல் தொழிநுட்ப (IT) மற்றும் மென்பொருள் முறைமைகள் உள்ளிட்ட அருவச் சொத்துக்கள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை உள்ளடக்கிய வலையமைப்பு என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. நிலைபேறான வணிகச் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் சக்திப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் பெற்றோலிய உற்பத்திகளை சுத்திகரிக்க, வழங்க மற்றும் விநியோகிக்க நாம் உற்பத்தி மூலதனத்தை விருத்தி செய்கின்றோம்.

கூட்டுத்தாபனமானது நாட்டின் சக்திப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பெற்றோலியத் தொழிற்துறைக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான நிறுவனமாகும். எனவே, எமது உற்பத்தி செய்யப்பட்ட மூலதனத்தின் விருத்தி மற்றும் பராமரிப்பிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கின்றது.



மிதவை

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

கூட்டுத்தாபனமானது நடைமுறையில் உள்ள நிலையான சொத்துக்கள் மீது ரூபா 2,525 மில்லியனை முதலீடு செய்தது. ண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள நவீன விமான மீள் எரிபொருளிடும் வசதி மற்றும் விரிவாக்கக் கருத்திட்டத்தின் முன்னெடுப்பு ஆகியவை மேற்குறிப்பிடப்பட்ட உள்ளீட்டுக்கு பாரிய அளவில் பங்களிப்புச் செய்தது. நிகரப் புத்தகப் பெறுமதியானது ரூபா 43,431 மில்லியனாக பதிவு செய்யப்பட்ட அதே வேளை முதலீட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய எமது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவை ரூபா 60,319 மில்லியனாக அதிகரித்தது.

சுருக்கம் - 2021

- வருடத்தில் பதிவு செய்யப்பட்ட தேய்மானமானது ரூபா 2,682 மில்லியன் ஆகும்.
- நடைமுறையில் உள்ள நிலையான சொத்துக்களில் ரூபா 2,525 மில்லியனை நாம் முதலீடு செய்துள்ளோம்.
- வருடத்தில் இ.பெ.கூ ஆனது ரூபா 48 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களை அகற்றியது.
- பாரிய கருத்திட்டங்கள் நடைமுறையில் இருப்பதோடு திட்டமிடப்பட்டிருக்கின்றன.

எமது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானவை பாரிய சொத்துக்களாக சுத்திகரிப்பு நிலையம், விமான நிலையங்களில் உள்ள விமானத்துறை செயற்பாட்டுச் சொத்துக்கள், SPM வசதிகள் மற்றும் தலைமை அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.



சுத்திகரிப்பு குழாய்கள்

களனி, சபுகஸ்கந்தவில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையம் பிரதான செயல்நுணுக்கச் சொத்தாக இருப்பதோடு சுத்திகரிப்பு நிலையமானது 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது மற்றும் அது நிறுவப்பட்ட போது அப்பொழு நாட்டில் இருந்த கேள்வியினைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. தற்பொழுது சுத்திகரிப்பு நிலையமானது நாளொன்றிற்கு 50000 பீப்பாய்களை சுத்திகரிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதோடு கூட்டுத்தாபனத்திற்கான அண்ணளவான 30 சதவீதக் கேள்வியினைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சுத்திகரிப்பு நிலையமானது உற்பத்தி செய்வது அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை குறைக்க உதவியது.

ஏற்கனவே, சுத்திகரிப்பு நிலையமானது 60 வருடங்களைத் தாண்டியிருப்பினும் பிரதானமாக முறையான பராமரிப்பு மற்றும் ஒழுங்கின்றி இருக்கும் உபகரணங்களின் பதிலீடு காரணமாக இது சுமுகமாகத் தொழிற்படுகின்றது. பாரிய பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான சுத்திகரிப்பு நிலையத்தின் பாரிய மூடுகையானது 3 வருடங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுவதோடு கொவிட் - 19 இன் தாக்கம் காரணமாக பல சவால்களுடன் இறுதியாக 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. பாரிய பராமரிப்பு நடவடிக்கையானது பப்ல் கருத்தியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.



சுத்திகரிப்பு ஆலை பொய பணிநிறுத்தம் பழுது

பொருளாதார அபிவிருத்திக்கு சக்திப் பாதுகாப்பானது முக்கிய வகிபங்கினை வகிப்பதோடு சுத்திகரிப்பு நிலையமானது நாட்டின் தொடர்ச்சியான சக்திப் பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்கின்றது. சுத்திகரிப்பு நிலையமானது கூட்டுத்தாபனத்தின் உயிர்நாடியாக இருப்பதனால் அதனைத் தரமுயர்த்துவதற்கும் அதன் சுத்திகரிப்புக் கொள்திறனை மேம்படுத்துவதற்கும் குழாய்த் தொகுதியில் பல கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

விமான நிலையங்களில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விமானத்துறைச் சொத்துக்களும் விமானங்களுக்கு விமான எரிபொருள்களை வழங்குவதில் பிரதான வகிபங்கை வகிக்கின்றன. கட்டுநாயக்க மற்றும் மத்தளை விமான நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்குவதோடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் உள்ள நவீன தொழிநுட்பத்துடன் கூடிய ஹைட்ரன்ட் உபகரணமானது எல்லா வகையான விமானங்களுக்கும் எரிபொருள் வழங்க உதவுகின்றது.



விமானத்திற்கு எரிபொருள் நிரப்புதல்

முதலீட்டுச் சொத்துக்கள்

கொழும்பு தேர்ஸ்டன் வீதி மற்றும் பிளவர் வீதியிலும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் அமைந்துள்ள சொத்துக்களை முதலீட்டுச் சொத்தக்கள் உள்ளடக்குகின்றன. கொழும்பு தேர்ஸ்டன் வீதி மற்றும் பிளவர் வீதியில் உள்ள கட்டடங்களானவை மின்வலு அமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சொத்துக்கள் பற்றிய விபரம்
CODO - கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான விற்பனையாளர்களால் இயக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள
இல.80 பிளவர் வீதி கொழும்பு 07 இல் அமைந்துள்ள சொத்து
இல.22/1 தேர்ஸ்டன் வீதி கொழும்பு 03 இல் அமைந்துள்ள சொத்து

குறித்த வருடத்தில் முதலீட்டுச் சொத்துக்களுகு சேர்மானம் எதுவும் சேர்க்கப்படவில்லை. குறித்த வருடத்திற்கான தேய்மானமானது ரூ. 1.91 மில்லியன் ஆகும்.கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்தான வாடகை உள்ளிட்ட முதலீட்டுச் சொத்துக்களிலிருந்து ரூ. 42.46 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருக்கின்றது.

விநியோகச் சங்கிலி

இறுதி வாடிக்கையாளர்களுடனான உறவுகள் ஏற்படும் நிறுவனத்தின் முக்கிய புள்ளியாக நாடு முழுவதிலுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய வலையமைப்பு விளங்குகின்றது. விரிவான எரிபொருள் நிரப்பு நிலைய வலையமைப்பு ஊடாக பொது மக்களுக்கான பெற்றோலிய உற்பத்திகளின் வழங்கலானது உறுதி செய்யப்படுகின்றது..

கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான விற்பனையாளர்களால் இயக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்(CODO) மற்றும் விற்பனையாளர்களுக்குச் சொந்தமான வியாபாரியால் இயக்கப்படும் நிரப்பு நிலையங்கள்(DODO). என்றவாறு நிறுவனத்துக்கு இரண்டு வகையான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. குறித்த வருடத்தில் பாரிய விநியோகக வலையமைப்புக்குச் சேர்க்கப்பட்ட 21 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கையானது 1343 ஆக அதிகரித்துள்ளது.


நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள பொது மக்களுக்கு பெற்றோலிய உற்பத்திகளை விநியோகிக்க புவியியல் தடமானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உதவியுள்ளது. இப் புவியியல் தடமானது நாட்டின் தேசிய எரிபொருளுக்கான கேள்வியின் 80% இற்கும் அதிகமான சந்தைப் பங்கை அடையும் அதே வேளை சந்தைத் தலைமையினைப் பேண வசதியளித்திருக்கின்றது. கூட்டுத்தாபனத்தின் 76% இற்கும் அதிகமான வருமானமானது இவ் வலையமைப்பின் ஊடாக பெறப்பட்டுள்ளது.

வகை	எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எண்ணிக்கை
கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான விற்பனையாளர்களால் இயக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்	243
விற்பனையாளர்களுக்குச் சொந்தமான வியாபாரியால் இயக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள்	1,100
மொத்தம்	**1,343**



புதிதாக திறக்கப்பட்ட நிரப்பு நிலையம்

எமது விநியோகச் சங்கிலி



வட மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
1	யாழ்ப்பாணம்	22	66	88
2	கிளிநொச்சி	4	15	19
3	முல்லைதீவு	-	23	23
4	வவுனியா	1	22	23
5	மன்னார்	5	31	36
	மொத்தம்	32	157	189

வட மேல் மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
6	புத்தளம்	7	75	82
7	குருநாகல்	14	97	111
	மொத்தம்	21	172	193

வட மத்திய மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
8	அநுராதபுரம்	12	46	58
9	பொலன்னறுவை	8	20	28
	மொத்தம்	20	66	86

மேல் மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
10	கம்பஹா	17	127	144
11	கொழும்பு	39	87	126
12	களுத்துறை	11	43	54
	மொத்தம்	67	257	324

தென் மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
13	காலி	11	59	70
14	மாத்தறை	9	37	46
15	ஹம்பாந்தோட்டை	7	28	35
	மொத்தம்	27	124	151

கிழக்கு மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
23	திரு-கோணமலை	4	37	41
24	திரு-கோணமலை	4	46	50
25	அம்பாறை	6	55	61
	மொத்தம்	14	138	152

சப்ரகமுவ மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
21	கேகாலை	6	27	33
22	இரத்தினபுரி	9	41	50
	மொத்தம்	15	68	83

மத்திய மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
18	மாத்தளை	3	21	24
19	கண்டி	18	48	66
20	நுவரெலியா	13	5	18
	மொத்தம்	34	74	108

ஊவா மாகாணம்

	மாவட்டம்	CODO	DODO	மொத்தம்
16	மொனராகலை	6	20	26
17	பதுளை	7	24	31
	மொத்தம்	13	44	57

மூலதன முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் தோற்றப்பாடு

நாட்டின் சக்திப் பாதகாப்புக்குத் தேவையான மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக் கூடிய பல்வேறு செயல்நுணுக்க கருத்திட்டங்களை நிறுவுவதற்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது எப்பொழுதும் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் அதே வேளை அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை அடைவதற்காக முன்னோக்கிச் செயற்படுகிறது.

வணிகத்தின் அபிவிருத்தி மற்றும் தொடர்ச்சிக்கும் நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கும் அவசியமான குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்ட கால செயல்நுணுக்கத் திட்டங்களுக்கு செயல்நுணுக்க அவதானிப்பு வழங்கப்பட்டுள்ளது.



BIA மேம்பாட்டு திட்டம்

- விமான எரிபொருள் நிரப்புகை முனையம் மற்றும் தற்போதைய எரிபொருள் ஹைட்ரண்ட் அமைப்புக்களின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு மற்றும் புதிய கவசத்தின் எரிபொருள் ஹைட்ரண்ட் அமைப்பினுடைய நிறுவல் என்பன பகுதி II கட்டம் 2 அபிவிருத்தித் திட்டத்துடன் இணையாக கட்டுநாயக்க பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் 2018 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதோடு, அதன் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக் கருத்திட்டமானது பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற செயற்பாட்டில் முறையே 60 மற்றும் 46 சதவீதத்தை அடைந்துள்ளது. கருத்திட்டம் பூர்த்தி அடைந்ததன் பின்னர் எதிர்காலத்தில் விமானத் துறையில் அதிகரிக்கக் கூடிய விமான எரிபொருளுக்கான கேள்வியினை நவீன தொழிநுட்பத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனால் இலகுவாகப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்முத்துராஜவலயிலிருந்து BIA கட்டுநாயக்காவுக்கான A-1 பரிமாற்ற குழாய்வழியினுடைய நிர்மாணத்துக்கான பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, முத்துராஜவலயில் தற்போதைய முனைய வசதிகளுக்கான மாற்றங்களுடன் jet A-1 சேமிப்புத் தாங்கிகளும் அதனுடன் தொடர்புடைய வசதிகளும் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கான வலுத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தவும் jet A-1 விநியோக வழிகளை இலகுபடுத்
- சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தும் திட்டமானது சேமிப்புக் கொள்ளளவினுடைய பற்றாக்குறையின் காரணமாக உலை எண்ணெய் மற்றும் நாப்தாவினுடைய ஏற்றுமதியிலிருந்து தோன்றிய இழப்பினைத் தடுப்பதற்கு வழிவகுப்பதனூடாக அது கீழ்மட்ட உற்பத்திகளை உயர் மட்ட உற்பத்திகளாக தரமுயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- சர்வதேச சுற்றுச்சூழல் நிலைப்பாடுகளுக்கு இணையாக சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கான பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- உயர் தரம் மிக்க தாங்கி பிடுமனை வழங்கும் நோக்கத்திற்காக சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் தாங்கி ஆலை ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- குறை கேள்வி நிலவும் காலங்களில் அதிகப்படியான உற்பத்திக்கு இடமளிக்கும் வகையில் சேமிப்புத் திறனை மேம்படுத்துவதற்கும் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை குறையும்போது கச்சா எண்ணெய்/ இறக்குமதி செய்யப்பட்ட, சுத்திகரிக்கப்பட்ட பொருட்களைக் களஞ்சியப்படுத்தவதற்கும கூட்டுத்தாபனமானது எதிர்பார்க்கின்றது.

நாட்டின் முக்கிய செயல்நுணுக்க வணிக நிறுவனமாக, கூட்டுத்தாபனமானது எப்போதும் நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகச் செயற்படுகிறது. நீண்ட கால பாரிய மூலதனத் திட்டங்கள் மற்றும் குறுங்கால செயல்நுணுக்கத் திட்டங்கள் என்பவற்றின் மீதான முதலீடுகள், எமது பங்குதாரர்களுக்கான பெறுமான அதிகரிப்பினை உருவாக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உதவுகிறது.

மூலதன வர்த்தகப் பரிமாற்றம்

வங்கிகளிலிருந்து பெறப்படும் கடன் ஏற்பாடுகளுக்கூடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் நிதியளிக்கப்படுகின்றமையினால், திட்ட செலவினத்துக்கும் இறுதியில் நிறுவனத்தின் இலாபத்துக்கும் வழிவகுக்கும் விதமாக அதிக நிதிச் செலவில் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக நிதி மூலங்கள், ஏற்பாடுகள் என்பன பெறப்பட வேண்டும்.

அறிவுசார் மூலதனம்



38,270
ஒட்டுமொத்த சேவை அனுபவம்
(வருடங்கள்)

4.08
பயிற்சிச் செலவு
(ரூ.மி)

85.5%
செயற்பாட்டு வினைத்திறன் - சுத்திகரிப்பு நிலையம்

1,008
20 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தைக் கொண்ட ஊழியர்கள்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு



அறிவுசார் மூலதனமானது கலாசாரம், நெறிகள், பெறுமானங்கள், ஒழுங்கமைப்பு அறிவு, முறைமைகள், செயன்முறை, செயன்முறை மற்றும் நடைமுறைகள், கற்றல் மற்றும் தரமதிப்பீடு போன்ற புலப்படாதவற்றை உள்ளடக்குகின்றது. தூரநோக்கு மற்றும் செயற்பணி ஆகியவற்றை உணர்ந்து கொள்வதற்கு அவசியமான மறைமுக அறிவை உயர்த்துவதற்கு எமது வளங்களை நாம் போஷிக்கின்றோம். எமது உற்பத்தியானது எமது நாட்டு மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றில் தாக்கம் செலுத்துவதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கலாசாரத்தால் கட்டியெழுப்பப்பட்ட தனக்கே உரிய நன்னெறி நியமங்கள் மற்றும் பெறுமானங்களைக் கொண்டுள்ளது.

பெற்றோலிய உற்பத்திகளின் தடையற்ற வழங்கலை உறுதி செய்வதற்கு பிரதானமாக தகவல் தொழிநுட்ப மற்றும் செயல்நுணுக்கப் பரப்புக்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாரிய வினைத்திறன் மற்றும் செயற்பாட்டு மேலாண்மையை கொண்டு வருவதற்கு முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினரின் வருகையுடன் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் வழங்குவதற்காக முறைமைகள் விருத்தி செய்யப்பட்டன. கொவிட் - 19 பரவல் காரணமாக மாற்றம் அடையும் சூழலுக்கான எமது துலங்கல் மற்றும் இசைவாக்கம் ஆகியவை எமது நெகிழும் தன்மை மற்றும் எமது ஆளணியினரின் பொறுப்புடைமையை பிரதிபளிக்கின்றது.

எமது தரக்குறியீடுகள்

60 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட "எதிர் காலத்தை மேம்படுத்தும் ஒரு நிறுவனமாக எங்கள் தரம் காணப்படுகின்றது. பெற்றோலிய பொருட்கள் மக்களின் வாழ்க்கைச் செலவில் முக்கிய பங்கைக் கொண்டிருப்பதுடன் இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் எங்கள் தரக்குறியீட்டின் கீழான நியாயமான வர்த்தகம் வழிவகுக்கின்றது.

CEYPETCO LUBRICANTS
The Best From The Best

சிபெட்கோ மசகு எண்ணெய்யானது நாட்டு மக்களுக்கு மிக நெருக்கமானதும் நன்கு உணரப்பட்டதுமான எமது தரக்குறியீடு ஒன்றாகும். எமது எல்லா மசகு எண்ணெய்களும் ISO 9001/2000 சான்றிதழைக் கொண்ட கலவை ஆலையில் அறைக்கப்பட்ட எண்ணெய்களாகும். சிபெட்கோ தரக்குறியீட்டு மசகு எண்ணெய்களானவை அமெரிக்க பெற்றோலிய நிறுவனம் (API), MTU Friedrichshafen SmbH மற்றும் ஐரோப்பிய ஒட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் சங்கம் (ACEA) மற்றும் தொழில்துறை மற்றும் வாகன பயன்பாடுகள் ஆகிய சேவைத் துறைகளில் தொடர்புடைய சர்வதேச நியமங்களைப் பூர்த்தி செய்கின்றன.

CEYPETCO AGRO - "පොහොසත් සහකාරයි"

செயல்நுணுக்க வணிக அலகு என்ற வகையில் சிபெட்கோ விவசாய இரசாயனமானது 5 தசாப்தங்களுக்கு மேலாக கலங்மற்ற சேவையை வழங்கியுள்ளது. சிபெட்கோ விவசாய இரசாயனங்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து விவசாய இரசாயன வணிகத்தில் (ISO) ; 9001:2015(தர முகாமைத்துவ முறைமை) ISO 14001:2015 (சூழல் முகாமைத்துவ முறைமை) போன்ற சவைதேச தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. விவசாயிகளின் பயிர்ச் செய்கையை வளப்படுத்துவதற்காக பீடைகள் பங்கசு மற்றும் களைகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதன் மூலம் விவசாய நிலங்களைப் பண்படுத்துவதிலிருந்து அறுவடை வரை வினைத்திறனான தீர்வுகளை வழங்குவதற்காக சிபெட்கோ விவசாய இரசாயனங்கள் எனும் தரக் குறியீடானது அர்ப்பணிப்புடன் உள்ளது.

எமது பெறுமானங்கள்

இ.பெ.கூ ஆனது நிறுவனத்தின் கலாசாரத்தில் கட்டமைக்கப்பட்ட தனக்கேயுரிய நெறிகள் தரநியமங்களையும் பெறுமானங்களையும் கொண்டுள்ளது. எங்கள் தயாரிப்பு நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு நபரின் வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைத்தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் சரியான தயாரிப்பு மற்றும் தயாரிப்புக்கான அனுகலைப் பெறுவதை உறுதிப்படுத்த முழுத்தரப்படுத்தப்பட்ட தயாரிப்பை நாங்கள் பராமரிக்கின்றோம்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தொடர்ச்சியாக பெற்றோலிய உற்பத்திகளில் சர்வதேச தரநியமங்களைப் பின்பற்றுகிறது, ஏனெனில் இவ் உற்பத்திகள் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு சவால்களுக்கு அதிகமாக உட்படக்கூடியவை. தொழில்நுட்ப, செயற்பாட்டு மற்றும் வாடிக்கையாளரகளைக் கையாளுதலில் பலதரப்பட்ட பயிற்சிகள் அதன் மதிப்பை வழங்குவதற்காக அர்ப்பணிப்பு நிபுணத்துவத்தை உருவாக்க உள்ளமைக்கப்பட்டுள்ளன. எங்களின் பங்கு இழப்புக் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவானது இயற்கைக்குப் பாதிப்பின்றி உற்பத்திகள் மற்றும் சேவை மேம்பாட்டிற்கு தீவிரமாகப் பங்களிக்கிறது.


மேம்பாட்டுச் செயன்முறை

கொடுக்கல்வாங்கல்களின் பாதுகாப்பு மற்றும் துல்லியத்தன்மையின் அளவு ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான மின்னியல் கட்டண முறைமையானது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது மற்றும் தன்னியக்க முறைமை தரமுயர்த்தப்பட்டுள்ளது. இம் முறைமையானது இ.பெ.கூ இன் கணக்குகளுக்கு நிதியினை உடனடியாகச் சேகரிக்கவும் நுகர்வோரின் கட்டளைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தவும் உதவுகின்றது.

தொடர்ச்சியான கற்றல் மற்றும் மேம்பாடு

நடைமுறை வணிக சூழலில் ஓர் அறிவு அடிப்படையானது ஒரு முக்கியமான மறைமுகச் சொத்தை உருவாக்குகின்றது. பிரதான செயல்நுணுக்கம் ஒன்றான அறிவை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டதில் இருந்து அவர்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கான அவர்களது திறன்களை விருத்தி செய்வதற்காக எண்ணற்ற பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் தரமுயர்த்துவதற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 4.08 மில்லியன் ரூபாவினை முதலீடு செய்துள்ளது.

அனுபவத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை வகைப்படுத்தல்



எமது அறிவுத் தளமானது இருபது ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான சேவை அனுபவத்தைக் கொண்ட 1,008 தொழிலாளர்களைக் கொண்டுள்ளது. நடைமுறையில் உள்ள தொழிற்படையின் ஒட்டுமொத்த சேவை அனுபவமானது 38,270 வருடங்களைச் தாண்டிச் செல்கின்றது. தொலைநோக்கு மற்றும் செயற்பணியினை நடைமுறையில் அடைந்து கொள்வதற்கான சிறந்த செயற்பாட்டு மேலாண்மையைக் கட்டியெழுப்புவதற்கான மறைமுகமான அறிவைப் பேண கூட்டுத்தாபனத்தின் கற்றல் மற்றும் ஆதரவளிக்கும் கலாசாரமானது உறுதியளிக்கின்றது.


முக்கிய பணிநிறுத்தம் பராமரிப்பு

மனித மூலதனம்



2304

ஊழியர்களின் எண்ணிக்கை

141

சேவை விருதுகள்

77

ஆட்சேர்ப்புக்கள்

6.89

ஆளணிக் கிரயம்

(ரூ.பி)

71

பயிற்சியாளர்களின்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு



எமது மனித மூலதனமானது தூரநோக்கு மற்றும் செயற்பணி ஆகியவற்றை அடைந்துகொள்வதற்குப் பயன்படுத்தப்படும் செயல்நுணுக்கச் சொத்தாகும். நன்கு திறமை உள்ள, தேர்ச்சி மற்றும் பொறுப்பு மிக்க ஊழியர் படையானது இலங்கையில் பெற்றோலியத் தொழிற்துறையில் சந்தைத் தலைவராக தனது நிலை-யைப் பேணுவதற்கு கூட்டுத்தாபனத்தை இயக்குகின்றது. எமது மனித வளக் கொள்கையானது அவர்களை மகிழ்விப்பதற்காகப் பாரிய தொழில் முன்னேற்ற வாய்ப்புக்களுடன் கூடிய சிறந்நத சுகாதார மற்றும் பாதுகாப்பு வெகுமதிகளை வழங்குவதோடு சிறந்த வேலைச் சூழலையும் உறுதிப்படுத்துகின்றது.

எமது மனித வளக் கொள்கையானது நலனுரித்தாளர்களுக்குப் பெறுமதியைச் சேர்க்கும் ஊழ-ியர்களை ஈர்க்கவும், தக்கவைத்துக் கொள்ளவும் மற்றும் மேம்படுத்தவும் உதவுகிறது.

வகை	ஊழியர்களின் எண்.
நிலையான ஊழியர்கள்	2,304
ஒப்பந்தம்	2
பயிற்சித் தொழிநுட்பவியலாளர்கள்	-
பயிலுநர்கள் (வெளியக் கல்சவி நி-றுவனங்களில் அருந்து)	71
மொத்தம்	2,377

ஆளுகை

பணிப்பாளர் சபையானது கூட்டுத்தாபனத்தின் செயல்நுணுக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மனித வளக் கொள்கைகளின் உருவாக்கத்திற்குப் பொறுப்பான உச்ச அமைப்பாகும். சபையினால் வழங்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையுடன் மனித வளங்கள் தொழிற்பாட்டுப் பிரிவினால் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த மனித வள மூ லதனமானது கையாளப்படுகின்றது. கூட்டுத்தாபனத்தின் செயல்நுணுக்க பணிப்புரையினை ஒத்துழைப்பதற்காக மனித வள செயல்நுணுக்கங்களை மீளாய்வு செய்தல் மற்றும் மீள்ஒழுங்கமைப்பதுடன் மனித வள தொழிற்பாடானது மேற்கொள்ளப்படுகின்றது.

பன்முகத்தன்மை


எமது மனித வளக் கொள்கையானது பன்முகத்தன்மை கொண்ட குழு ஒன்றை உருவாக்குவதை அங்கீகரித்து ஊக்குவிப்பதோடு பால், வயது, இனம், மதம் அல்லது வேறு ஏதேனும் காரணியின் அடிப்படையிலான பாரபட்சத்திற்கு எதிராக கடுமையான கொள்கையைப் பின்பற்றுகின்றது.

சிறந்த வாடிக்கையாளர் அணுகல் மற்றும் வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றை வழிப்படுத்துகின்ற முழு பன்முகத்தன்மையை செயற்படுத்த பல்வேறுபட்ட மாகாணங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.பெண்களுக்கு அவர்களது தொழில் வாழ்க்கையில் சமமான துறைசார் வகிபங்கினை வழங்குவதற்கு முயற்சிப்பதன் மூலம் வேலைத்தளத்தில் நாம் பால்நிலை சமத்துவத்தை முனைப்பாக ஊக்குவிக்கின்றோம்.


மாகாண ரீதியான ஊழியர்கள்	ஆண்	பெண்	மொத்தம்
மேல் மாகாணம்	1668	295	1963
கிழக்கு மாகாணம்	25	1	26
வட மாகாணம்	14	4	18
ஊவா மாகாணம்	16	2	18
வடமேல் மாகாணம்	36	12	48
மத்திய மாகாணம்	48	18	66
சப்ரகமுவ மாகாணம்	23	13	36
தென் மாகாணம்	83	11	94
வடமத்திய மாகாணம்	28	7	35
மொத்தம்	1941	363	2304

எமது பெண் ஊழியர்களுக்கு சிறந்த வேலைச் சூழலை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக எமது மனித வளக் கொள்கைகளை மீளாய்வு செய்வதனை கூட்டுத்தாபனமானது தொடர்ந்தது. விழிப்புணர்வு அமர்வுகள், கடுமையான கொள்கைகள் மற்றும் வலுவான குறைகேள் நடைமுறை ஆகியவற்றின் ஊடாக ஒப்புதல் மற்றும் பாரபட்சமின்மைக் கலாசாரத்தை உருவாக்குவதனை நாம் தொர்கிறோம். குறித்த வருடத்தில் பாரபட்ச நிகழ்வுகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

பால்நிலை அடிப்படையில் ஊழியர்கள்



கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை கூட்டுத்தாபனமானது எப்பொழுதும் ஊக்குவிக்கின்றதோடு சிரேஷ்ட முகாமைத்துவத்தின் 17 சதவீதத்தினர் மற்றும் மேற் குறிப்பிட்ட வகையினர் பெண்களாவர்.



வெகுமதிகளும் அங்கீகாரங்களும்

எமது தொழிலாளர்களுக்கு அங்கீகாரம் மற்றும் வெகுமதி-களை வழங்குவதானது எமது செயற்பாடுகளை மேற்கொள்ள மக்களுக்கு வழங்கும் முக்கிய அங்கீகாரமாகும். கவர்ச்சிகரமான வெகுமதி வழங்கும் திட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு நேர்மையாக செயற்படக்கூடிய ஊழியர்களை உருவாக்குவதோடு அவர்களின் கடமைகளை பொறுப்புணர்ச்சியுடன் செய்ய ஊழியர்களை ஊக்குவிக்கும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது நம்புகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சந்தை விகிதங்களுக்கு இணையான நிதி மற்றும் நிதி அல்லாத நலன்களைக் கொண்ட வெகுமதி பொதியை வழங்குகிறது. நிரந்தர ஊழியப்படையில் உள்ள 2,304 பணியாளர்களுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனது உத்தரவாதம் அளிக்கிறது, வேலையின் தன்மை மற்றும் பொறுப்புக்கு ஏற்ப நியாயமான மற்றும் போட்டித்தன்மை மிக்க ஊதியம் கிடைக்கும். எங்களின் சம்பளம் மற்றும் பலன் கட்டமைப்புகள் தொழில்துறை தரத்திற்கு இணையாக இருப்பதை உறுதி செய்வதற்காக எங்களிடம் சரியான இழப்பீட்டுக் கொள்கை உள்ளது. வெகுமதி முறைமை ஊழியர்களின் செயல்திறனுடன் இணைக்கப்பட்டுள்ளது மற்றும் அவர்களின் ஒட்டுமொத்த செயல்திறனின் அடிப்படையில் வருடாந்த செயல்திறன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

ஊக்க ஊதியம், சில தரங்களுக்கான பிரயாணக் கொடுப்பனவு, விடுமுறை பங்களாக்கள், ஊழியர் கடன்கள், மருத்துவ நலன்கள், சிக்கன சமூகத்தின் ஊடான பணிக்கொடை, பிரசவகால விடுமுறை மற்றும் ஓய்வு நலன்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பல்வேறுபட்ட நிதி மற்றும் நிதி அல்லாத நலங்கள் எல்லா நிரந்தர ஊழியர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

கூட்டு பேரம் பேசும் உடன்படிக்கையானது, ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒருமுறை புதுப்பித்தல் சுழற்சியின் மூலம் அனைத்து ஊதியம்/நலன் அதிகரிப்புக்களுடன் சேர்த்து, மொத்த பணியாளர்களை உள்ளடக்கியதாக உள்ளது. நடைமுறையில் உள்ள ஒப்பந்தமானது 2021 ஜனவரி 01 முதல் 2023 டிசம்பர் 31 வரை 2021 ஜனவரியில் புதுப்பிக்கப்பட்டது.

இ. பெ. கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதியம் (EPF), ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF) என்பவற்றிற்குத் தகுதியானவரகளாவர்.கூட்டுத்தாபனமானது ஊழியர்களின் ஓய்வுக்குப் (ETF) என்பவற்றில் முறையே 15% மற்றும் 3% விகிதங்கள் பங்களிப்பு செய்கிறது. இதற்கு மேல-திகமாக பணிக்கொடை சட்டத்திற்கு ஏற்ப கூட்டுத்தாபனமானது ஓய்வின் போது பணிக்கொடையை வழங்குவதோடு மேலதிக ஓய்வூதிய நலநன சிக்கன சமுதாயத்தின் மூலம் வழங்குகின்றது.

தமது ஊழியப் பொறுப்பை அங்கீகரித்து மதிக்கும் வகையில் சேவை விருதுகள் கூட்டுத்தாபனத்திற்காக மகத்தான சேவைப் பங்களிப்பை நிறைவு செய்யும் ஊழ-ியர்களுக்கு கூட்டுத்தாபனத்தின் மனிதவளக் கொள்கையாக சேவை விருதுகள் வழங்கப்படுகின்றன. குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது குறித்த வருடத்தில் 141 விருதுகளை வழங்குகின்றது.

சேவை வகை	விருதுகளின் எண்ணிக்கை
20 வருட சேவை	131
30 வருட சேவை	7
35 வருட சேவை	3
மொத்தம்	141

ஆட்சேர்ப்புக்கள்

ஒரு பொது கூட்டுத்தாபனமாக, ஆட்சேர்ப்பு செயல்முறை தேசிய மற்றும் பிற ஒழுங்குமுறைகள் மற்றும் தேசிய கொள்கைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பிட்ட பணிக்கான விண்ணப்பதாரரின் தகுதி, அவர்களின் தகுதிகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் நாங்கள் பணியில் அமர்த்துகின்றோம். ஒரு முறையான நேர்காணல் செயல்முறை மற்றும் திறன் சோதனைகள் என்பது வெளிப்படையான ஆட்சேர்ப்பு செயல்முறையை நிரப்ப அங்கீகரிக்கப்பட்ட ஊழியப்படைத் தேவைகளுக்கு இணங்கப் பயன்படுத்தப்படும் நி-றுவனங்களின் முன்நிபந்தனைகள் ஆகும். எனவே தொழில் முன்னேற்றத்திற்கான சாத்தியம் மற்றும் அதிக பொறுப்பைக் கையாளும் திறன் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களை நாங்கள் பணியமர்த்துகிறோம

கூட்டுத்தாபனமானது ஒரு பாரபட்சமற்ற தொழில்வழங்குநர் ஆகும். எல்லா நியதிச் சட்ட மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய அதே தொழில் வகைக்கு அதே வெகுமதி வழங்கும் கொள்கைக்கு(1:1) தகுதியான வகையில் ஆண் பெண் இரு பாலாரையும் இட்டுச் செல்லக் கூடிய வகையில் அனைத்து ஊழ-ியர்களும் பாரபட்சமற்ற வெகுமதியளிக்கும் கொள்கையின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றனர். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 18 வயதுக்கு மேற்பட்ட ஊழியர்களை மாத்திரமே எந்தவித பாகுபாடுமின்றி பணியில் அமர்த்துகிறது.

2021 ஆம் ஆணடில் கூட்டுத்தாபனமானது 77 பணியாளர்களை எங்கள் ஊழியப்படையில் ஆட்சேர்த்துக்கொண்டது.

பதவி உயர்வுகள்

எங்கள் பதவி உயர்வு கொள்கைகள் நிலையான மற்றும் கிடையான தொழில் இயக்கத்தை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன, இது எங்கள் ஊழியர்களின் வாய்ப்புகள் மற்றும் தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்த உதவும். அனைத்து பதவி உயர்வுகளும் தகுதி மற்றும் செயல்திறன் அடிப்படையிலானவை என்பதை உறுதி செய்வதற்கான விரிவான வழிகாட்டுதல்களை கொள்கை கொண்டுள்ளது.

தரம்	A	B	C	மொத்தம்
பதவி உயர்வுகளின் எண்.	45	69	26	140

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

இ. பெ. கூ எல்லா மட்டங்களிலும் உள்ள தனது மனித மூலதனத்தின் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதோடு அனைத்து ஊழியர்களும் தமது செயல்திறன் மற்றும் உற்பத்தித் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கான பயிற்சிகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்கிறது. கூட்டுத்தாபனத்தின் வருடாந்த பயிற்சி மற்றும் மேம்பாட்டுக்கான திட்டம் வேலையின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை வளர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

கொவிட்-19 பரவல் காரணமாக எதிர்கொள்ளப்படும் கட்டுப்பாடுகள் மற்றும் சவால்கள் பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளை மட்டுப்படுத்தினாலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனது தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தொழில்நுட்ப மற்றும் மென் திறன்களை வழங்க வேலைப் பயிற்சி மற்றும் வெளிப்புற கட்டமைக்கப்பட்ட பயிற்சிகள் உள்ளிட்ட உள்ளகப் பயிற்சி திட்டங்களை வழங்கியது. தொழில் முன்னேற்றத்திற்காக சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியும் வழங்கப்படுகிறது, இது நிறுவனத்தை ஒரு சிறந்த நிலைக்கு வழிநடத்த உதவும்.

Training Procurem,ent 1009

கூட்டுத்தாபனமானது 2021 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சித் திட்டங்களின் மூலம் மேம்படுத்துவதற்கு ரூ. 4.07 மில்லியன் செலவு செய்தது. பயிற்சியானது உற்பத்தித்திறனை அதிகரிப்பது, நிர்வாகத்தை வலுப்படுத்துதல், சொத்துக்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் இணக்கப்பாட்டுக் கலாச்சாரத்தை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. கற்றல் தீர்வுகளை வழங்குவதில் பெருந்தொற்று பல சவால்களை உருவாக்கியது.

கூட்டுத்தாபனமானது ஊழியர்களின் உயர் கல்வி வாய்ப்புகளுக்கான வழிகளை ஊக்குவிக்கிறது, இதில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவது, இது நிறுவனத்தின் செயல்பாட்டு சிறப்பிற்கு வழிவகுக்கும். இந்த நோக்கத்திற்காக, முதுகலை பட்டங்கள், பட்டங்கள் மற்றும் டிப்ளோமாக்களைப் பின்பற்றுவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி உதவிகளை வழங்குகின்றது.

வருடாந்த செயல்திறன் மதிப்பீடுகள் செய்யப்படுவதோடு ஊழியர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. வருடாந்தர மதிப்பீட்டிற்காக வருடத்தில் அடைந்துகொண்ட சாதனைகளும் பரிசீலிக்கப்பட்டது.

நன்நடத்தை மற்றும் இணக்கப்பாடு

நேர்மை மற்றும் தொழில்முறை ஆகியவை அடிப்படைகளாக உள்ளன மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கலாசாரத்தில் உள்ளார்ந்த எமது அனைத்து ஊழியர்களிடமும் இந்த பெறுமானங்களை உள்வாங்க முயற்சிக்கிறது. உற்பத்தித்திறன் மற்றும் நன்நடத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பயிற்சி மற்றும் விரிவுரைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன் தொடர்ந்து வழங்கியது. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறையை எடுக்கிறது. இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சகிப்புத்தன்மையற்ற அணுகுமுறையை எடுக்கிறது. எங்கள் ஊழியர்கள் அனைவரும் தொழில்ரீதியாகவும், நியாயமாகவும், நேர்மையாகவும், உத்தியோகபூர்வ நிலையில் பராமரிக்கப்படும் அவர்களின் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் மற்றும் உறவுகளிலும் செயல்பட வேண்டும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வலியுறுத்துகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அனைத்து தொழிலாளர் மற்றும் பிற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மதித்துப் பின்பற்றுகிறது. கூட்டுத்தாபனம் எந்தவொரு சிறுவர் தொழிலாளர்களையும் பணியில் அமர்த்துவதில்லை மற்றும் பொறுப்பானதும் நெறிமுறையான நடத்தையைக் குறிக்கும் கட்டாய உழைப்பு அல்லது கட்டாய உழைப்பைக் கொண்டிருக்கவில்லை.

ஓய்வு பெறுதல்

நிறுவனத்திற்குள் எங்களின் திறமையைத் தக்கவைத்துக்கொள்வது ஒரு வலுவான குழுவை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய அம்சமாகும், மேலும் அனைத்து வேலை நிலைகளிலும் அதிக அளவிலான தக்கவைப்பை நாங்கள் தொடர்ந்து அடைகிறோம் என்பதைக் குறிப்பிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

இந்த வருடத்தில் ஓய்வு பெற்றும், மரணமடைந்தும், இராஜினாமா செய்தும் மொத்தமாக 102 ஊழியர்கள பணியிலிருந்து விலகியுள்ளனர்.

ஓய்வு/மரணம்/இராஜினாமா			
குழு	ஆண்	பேண்	மொத்தம்
18-30 வருடங்கள்	—	-—	—
31-40 வருடங்கள்	—	—	—
41-50 வருடங்கள்	2	- —	2
51-60 வருடங்கள்	88	12	100
மொத்தம்	90	12	102

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

பெற்றோலிய உற்பத்திகளானவை அதிகளவு சுகாதார மற்றும் பாதுகாப்பு இடர்களுக்கு உட்படக் கூடிய உள்ளார்ந்த தன்மையைக் கொண்டிருப்பதனால் எமது ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது எமது முதற் கடமையாகும். ஊழியர்கள் அதே போன்று ஏனைய நலனுரித்தாளர்களைப் பாதுகாப்பதனை வசதிப்படுத்துவதற்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரநியமங்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி சுகாதாரமானதும் பாதுகாபானதுமான சுழலைப் பேணுவதற்கு ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுத்திகரிப்பு நிலையத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு		
சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	2021	2020
இழப்பு நேர விபத்துக்கள்	-	-
முதலுதவி விபத்துக்கள்	02	-
சிறிய தீ விபத்து அறிக்கைகள்	-	-

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் சுத்திகரிப்பு நிலையமானது முக்கிய பங்கு வகிக்கின்றதோடு சிறிய மற்றும் பெரிய ஆபத்துக்களைத் தடுப்பதற்காக திட்டமிடப்பட்ட கட்டமைப்பு முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன. சுத்திகரிப்பு நிலையத்தின் ஊழியர்கள் தினமும் HSE பயிற்சி உள்ளிட்ட பாதுகாப்புப் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டுள்ளனர். சுத்திகரிப்பு நிலையத்தின் சுமுகமான இயக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அன்றாட பாதுகாப்பான கணக்காய்வுகள், கண்காணிப்புக்கள் மற்றும் சுகாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டிலும் கொவிட் - 19 பரவலானது கூடுதல் உடல்நலம் மற்றும் பாதுகாப்புக் கரிசணைகளை உருவாக்கியது. சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தலைமை அலுவலகம் ஆகிய இரண்டிலும் ஒரு செயல் திட்டத்தை உருவாக்கவும், பெருந்தொற்றின் போது ஊழியர்களைப் பாதுகாக்கவும் சிறப்பு கொவிட் - 19 கட்டுப்பாட்டுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. முடக்க காலத்தில் கடுமையான உடல்நலம் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களின் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு கூட்டுத்தாபனம் இயங்கியது.

ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு எங்களின் முதன்மையான அக்கறையாக இருப்பதால், இந்தக் காலகட்டத்தில் வருகை தந்த ஊழியர்களுக்கு அலுவலக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன. அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பெற்றோலியப் பொருட்களின் விநியோகம் நாட்டிற்கு இன்றியமையாததாக இருப்பதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை உறுதி செய்யும் பணியாளர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் கருத்தியலும் செயற்பட்டது.

நலன்புரி

கூட்டுத்தாபனத்தில் நேர்மையானதும் பொறுப்பு மிக்கதுமான ஊழியர்களைக் கட்டியெழுப்புவதற்கும் ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்ளல் மற்றும் ஈர்த்தல் ஆகியவற்றுக்கும் நலன்புரி சேவைகள் அவசியமாகின்றன. சுகாதாரமான மற்றும் பொறுப்பு மிக்க ஊழியப்படையினை உறுதி செய்வதற்குப் பல நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டானது கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் காரணமாக பணியாளர்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய சிறப்பு ஆண்டாகும். ஊழியர்களின் போக்குவரத்து, உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான சானிடைசர்கள், கடன் தீர்வுகளை ஒத்திவைத்தல் போன்ற பல்வேறு வசதிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கியது. தொற்றுநோய் காலத்தில் ஊழியர்களின் நல்வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது.

எல்லா ஊழியர்களுக்கும் அவர்களது வாழ்க்கைத்தரம் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கான அவர்களது பங்களிப்பை அடையாளங் காண்பதற்கு சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தில் பல கடன் திட்டங்கள் வழங்கப்பட்டன.


ஊழியர்களின் குழந்தைகளுக்கு உதவித்தொகை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் குழந்தைகளுக்கு வேலை வாழ்க்கை சமநிலையை எளிதாக்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தனது பங்களிப்புகளை விரிவுபடுத்தியது. பல்கலைக்கழக கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் போன்ற கல்வி சாதனைகளை எட்டிய பிள்ளைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் 26 புதிய புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

வேலை வாழ்க்கை சமநிலையை ஊக்குவிப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மருத்துவத் திட்டம் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு பணியாளரையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் உள்ளடக்குகின்றது.

எல்லா மத ஊழியர்களுக்கும் அவர்களது மதப்படி மத வழிபாடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆபத்தில்லாத சூழலைப் பேணுவதற்காக, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பைப் பேண சம்பந்தப்பட்ட ஊழ-யர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊழியர் பொறுப்பு

எங்கள் ஊழியர்கள் பொறுப்புடன் இருக்க வேண்டும் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் மற்றும் ஈடுபாடு பொறுப்புடமை கலாச்சாரத்தில் உள்ளமைக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில் கொவிட்-19 பரவலால் ஏற்பட்ட சவாலான நிலைமைகளின் கீழ் செயற்பட அதிக அளவு ஊழியர் ஈடுபாடு முக்கிய அங்கமாக இருந்தது. பல பொறிமுறைகள் மூலம் வழக்கமான தகவல்தொடர்புகளை உறுதி செய்யும் வகையில், முடக்க காலத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமது ஊழியர்களுடன் ஒரு நிலையான உரையாடலைப் பேணியது. பெறுந்தொற்றின் போது வேலை மற்றும் விநி-யோகங்களை நிர்வகிப்பதற்கான ஒரு பகுதியாக, அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிக்கவும், செயற்பாட்டு மற்றும் அறிக்கையிடல் கால எல்லையைக் கடைப்பிடிக்கவும், வீட்டிலிருந்து வேலை செய்வதை எளிதாக்குவதற்கு பல்வேறு கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பணிபுரியும் வாழ்க்கை சமநிலை மற்றும் அங்கீகாரத்திற்குத் தேவைப்படும் விளையாட்டு மற்றும் பிற கூட்டு நடவடிக்கைகளில் பணியாளரின் ஈடுபாட்டிற்கு அதன் பங்களிப்பை ஊக்குவிக்கிறது.



தொழில்முறை உறவுகள் மற்றும் இணக்கப்பாடு

தொழில்முறை உறவுகளானவை வணிக செயற்பாடுகளின் தொடர்ச்சிக்குஅத்தியவசியமாகும். தொழில்முறை உறவானது மனிதன் பணம் மற்றும் பொருள் ஆகியவற்றை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு உதவுகின்றது. கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு செயல்நுணுக்கங்களுடன் வணிகச் செயற்பாடுகளை மறுசீரமைக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது முயற்சிக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சந்தைத் தலைவர் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வணிக உறவுமுறை முகாமைத்துவத்தை தொடர்ச்சியாக விரிவுபடுத்துகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊழியர்களால் உருவாக்கப்பட்ட அனைத்து தொழிற் சங்கங்களையும் ஏற்றுக் கொள்கின்றது. நலனுரித்தாளர்களுக்கு பெறுமானத்தை சேர்க்கக் கூடிய எல்லாத் தரப்பினர்களுடனும் சுமுகமான நல்லுறவைப் பேணுகின்ற அவர்களது ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் நடத்தையினை வரவேற்கின்றது

ஊழியர்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய தொழிற் சங்கங்களில் இணைந்து கொள்வதற்கான சுதந்திரம் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2021.12.31 ஆம் திகதி ஆகும் போது ஒன்பது பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் இருந்ததோடு தடையற்ற செயற்பாடுகளை உத்தரவாதப்படுத்த கூட்டுத்தாபனமானது அத் தொழிற் சங்கங்களுடன் நல்லுறவைப் பேணுகிறது.

மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஊழியர் நலன்களை பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் அணுகப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் நெருக்கமாகத் தொடர்புபடுகின்றதோடு போதிய அறிவித்தலுடன் எல்லா செயற்பாட்டு மாற்றங்களும் கலந்துரையாடப்பட்டன. குறித்த வருடத்தில் தொழிற் சங்க நடவடிக்கை நிகழ்வுகள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்



105
அரசாங்கத்திற்கான பங்களிப்பு
(ரூ.பி)

2,352
அரசாங்கத்திற்கான பங்களிப்பு
(ரூ.பி)

680
எண்ணெய் அல்லாத பெறுகைகளின் எண்.

1,130
கச்சா எண்ணெய் இறக்குமதிகள்
(000 மெ.தொ)

8.9
மண்ணெண்ணெய் நிவராணம்
(ரூ.பி)

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு



நலனுரித்தாளர்களுடனான வினைத்திறனான உறவு முறையானது செயற்பாடுகளின் தொடர்ச்சி மற்றும் பெறுமான உருவாக்க செயற்பாட்டுக்கு இன்றியமையாததாகும். பொதுத் திறைசேரி, இலங்கை மத்திய வங்கி, வங்கியாளர்கள், கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் வழங்குநர்கள், கப்பல் வணிகங்கள், உள்நாட்டு வழங்குநர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் போன்ற செயல்நுணுக்கப் பங்காளர்களோடு சுமுகமான உறவை கூட்டுத்தாபனமானது பேணுவதோடு அதனை மேம்படுத்தவும் செய்கின்றது.

சுரண்டு எடுக்கக் கூடிய எந்தவொரு பெற்றோலிய வளங்களும் இல்லாத காரணத்தினால், கச்சா அல்லது சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களாக நாட்டிற்கு பெற்றோல் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இ.பெ.கூ அரசாங்கத்தினூடாக இப் பொருட்களை இறக்குமதி செய்கிறது. கொள்முதல் நடைமுறைகளை நிறுவுதலானது கொள்முதல் செய்வதற்கு அதிக வெளிப்படைத்தன்மையை வழங்குகிறதோடு தரமான உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கு சிறந்த விற்பனையாளர்களை ஈர்க்கிறது.

பெற்றோலிய இறக்குமதிகள்

சுரண்டு எடுக்கக் கூடிய எந்தவொரு பெற்றோலிய வளங்களும் இல்லாத நாடாக இலங்கை விளங்குவதனால் எல்லா பெற்றோலிய உற்பத்திகளும் வெளி மூலங்களிலிருந்தே பெறப்பட வேண்டி இருந்தது. வெளிப்படையான பெறுகை நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக நன்கு வரையறை செய்யப்பட்ட பெறுகை நடைமுறைகள் நிறுவப்பட்டுள்ளன. கையிருப்பு மீளாய்வுக் குழுவானது கையிருப்புத் தேவைப்பாடுகள், தரம் மற்றும் மலிவான உற்பத்திகள் பற்றி தீர்மானிப்பதில் கையிருப்பு மீளாய்வுக் குழுவானது முனைப்பாகச் செயற்படுகின்றது

இவ் வருடத்தில் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய உற்பத்தி செயன்முறைக்கு மர்பன் கச்சா எண்ணெய்யுடன் சேர்த்து மொத்தமாக 1,130,237 மெ.தொன் (1,666,807 மெ.தொன் - 2020) அளவுடைய 13 கச்சா கப்பல்கள் இறக்குமதி செய்யப்பட்டன.




எரிபொருள் வெளியேற்றம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனையில் 30 - 35 % ஐ சுத்திகரிப்பு நிலையம் பூர்த்தி செய்வதால், மீதி பெற்றோலிய உற்பத்திகளானவை, சுத்திகரிப்பு உற்பத்திகளாக நேரடியாக இறக்குமதி செய்யப்படுகிறது. மேற் குறிப்பிடப்பட்ட பெறுகை நடைமுறை ஊடாக ரூபா 1755.06 மில்லியன் அமெரிக்க டொலர்கள்(949.83 மில்லியன் அமெரிக்க டொலர்கள் - 2020) (DAP அடிப்படை) பெறுமதியான சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை நாட்டிற்கு இறக்குமதி செய்தது.


பெற்றோலிய இறக்குமதி

வகை	2021 மி.அ.டொ .	2020 மி.அ.டொ
கச்சா எண்ணெய்	596.94	583.34
சுத்திகரிக்கப்பட்ட பாரிய உற்பத்திகள்	1,755.06	949.83
மொத்தம்	**2,362.00**	**1,533.17**

விலையின் அடிப்படையில் சுத்திகரிக்கப்பட்ட இறக்குமதி கலவை



கச்சா இறக்குமதி




எண்ணெய் அல்லாத பெறுகைகள		
பெறுகை வகை	பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைக-ளின் எண்.	தொகை (ரூபா.மி)
திணைக்களப் பெறுகைக் குழு	680	327.39
அமைச்சின் பெறுகைக் குழு		
அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு		
மொத்தம்		

அரசாங்கப் பங்களிப்பு

சர்வதேச விலைகளானவை தொடர்ச்சியாக அதி-கரித்தமையினால் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் அரசாங்க வரி வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யும் பாரிய வரிப் பங்காளராக கூட்டுத்தாபனமானது காணப்படுகின்றது. குறித்த வருடத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 18 சதவீத வருவாயாக இருக்கும் ரூபா 105,198 மில்லியனை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பங்களிப்புச் செய்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளாகும் இழப்புக்களைக் குறைப்பதற்கு பெற்றோலிய உற்பத்திகள் மீதான வரியை அரசாங்கம் குறைத்தது.

வரிப் பங்களிப்பு



இந்த ஆண்டில் பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதிக்கான சுங்க இறக்குமதி வரிகளை (CID) அரசாங்கம் குறைத்தது மற்றும் CID பங்களிப்பானது 68% குறைந்துள்ளது. சர்வதேச எண்ணெய் விலைகள் அதிகரிக்கப்பட்டதற்கு இணையாக ஏற்பட்ட மொத்தக் கிரயத்தைக் குறைப்பதற்கு கூடுதல் வரி நீக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது விற்பனைத் தொகுதிகளின் அதிகரிப்புக் காரணமாக கலால் வரியானது 10 சதவீதத்தினால் அதிகரித்தது. சர்வதேச விலைகளானவை அதிகரித்தமையினால் 2020 ஆம் ஆண்டுக்கு எதிராக துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் மேம்பாட்டு வரியானது(PAL)73 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த வரிகள் மற்றும் தீர்வைகளானவை 30.39 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வணிகப் பங்காளர்

பொது மக்களுக்கு உற்பத்திகளின் வழங்கலை உத்தரவாதப்படுத்துகின்ற 1343 விற்பனை நிலையங்களைக் கொண்ட நாடளாவிய ரீதியிலான விரி-வான விற்பனை வலையமைப்பினை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது. பெற்றோலியத் தொழிற்துறையில் 80 சதவீதத்திற்கும் அதிகமான சந்தைப் பங்கினை வைத்திருக்கும் சந்தைத் தலைவர் என்ற வகையில் எமது பிரதான கடமைப்பொறுப்பாக உள்ள பொது மக்களுக்கான சக்திப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு எமது வணிகப் பங்காளர்களுடன் சுமுகமான வணிகத் தொடர்பினைப் பேணுவது எமது முதன்மைக் கரிசணையாகும். தரமான உற்பத்திகளுக்கான நியமங்களின் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களுடன் எரி பொருள் நிரப்பு நிலையங்களைப்

மாகாண எரி பொருள் நிரப்பு நிலையங்கள்	
மாகாணம்	எ.நி.நி.எண்.
மேல் மாகாணம்	324
வடமேல் மாகாணம்	193
வடமத்திய மாகாணம்	86
மத்திய மாகாணம்	108
வட மாகாணம்	189
தென் மாகாணம்	151
ஊவா	57
கிழக்கு மாகாணம்	152
சப்ரகமுவ	83
மொத்தம்	1343

பேணுவதற்காக இறுக்கமான வழிகாட்டல் நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேற் குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக எமது விவசாய இரசாயன மற்றும் மசகு எண்ணெய் கையிருப்பில் வைத்திருப்பவர்கள் மற்றும் விற்பனையாளர்களும் உற்பத்தியின் இருப்புக்கு முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

வணிகப் பங்காளர் களுக்கான ஒத்துழைப்பு

2021 ஆம் ஆண்டிலும் கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக அனைத்து வணிகத் துறைகளும் பாதிக்கப்பட்டதனால், எங்கள் வணிகப் பங்காளர்களும் இந்த ஆண்டில் பல சவால்களை எதிர்கொண்டனர். கூட்டுத்தாபனமானது எமது வணிகப் பங்காளர்களுக்கு தொற்றின் போது தங்கள் வணிகங்களை இயக்குவதற்கும், வணிகத்தின் இருப்பைப் பாதுகாப்பதற்கும் உறுதி செய்வதற்கும் அவர்களின் வணிகங்களை தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு மீட்டெடுக்க உதவுவதற்கு பல்வேறு சலுகைகளை வழங்கியது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பல்வேறு உற்பத்திக் கடன் திட்டங்களை வழங்கியது, பல்வேறு அபராதங்களைத் தள்ளுபடி செய்தல் போன்றவற்றைப் பாதுகாப்பதற்காக வழங்கியது மற்றும் கொவிட்-19 இற்குப் பிறகு பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவளிக்க உறுதி பூண்டுள்ளோம்.

உற்பத்திப் பொறுப்பு

எங்கள் உற்பத்திகளுடன் தொடர்புடைய எரியக்கூடிய தன்மை மற்றும் பாதுகாப்பு அபாயங்களின் உள்ளார்ந்த தன்மை, தயாரிப்பு பொறுப்பு என்பது நுகர்வோருக்கு எல்லா நேரத்திலும் தரமான தரப்படுத்தப்பட்ட தயாரிப்புக்கு உத்தரவாதம் அளிப்பதில் எங்களின் முதன்மையான கரிசனைகளில் ஒன்றாகும். தர செயல்முறை பெறுகைச் செயல்முறையுடன் தொடங்குகிறது மற்றும் ஒட்டுமொத்த செயல்முறை முழுவதும் கையாளுதல், விநியோகம் மற்றும் தர சோதனை செயல்முறை கண்காணிக்கப்படுகிறது.



நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான சரியான வழிமுறைகளை அடையாளங் காணவும் எடுக்கவும் வாடிக்கையாளர் தொடு புள்ளியில் சிறப்பு கண்காணிப்பு அமைப்பு வைக்கப்பட்டுள்ளது. தீ விபத்துக்களில் இருந்து பாதுகாப்பதற்காக பாதுகாப்பு அமைப்புகள் உள்ளன மற்றும் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் தீயை அணைக்கும் கருவிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய தொடர்ச்சியான மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அடையாளங் காணப்பட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதல் மற்றும் எதிர் காலத்தில் அவற்றைத் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை ஆகியவற்றுக்காக எடுத்தல் எரி பொருள் நிரப்பு நிலையங்கள் மீது பலதரப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மண்ணெண்ணெய் கலப்படத்தைக் கண்டறியவும், அவர்கள் உள்ளெடுக்கும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தவும் அதிக கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் செயற்பாட்டில் உள்ளன.

இலங்கையில் தடை செய்யப்பட்ட ஏதேனும் உற்பத்தியினை கூட்டுத்தாபனமானது விற்பனை செய்வதில்லை. நாட்டில் கிளைபோசேட்டினை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கான அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் என்ற வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கிளைபோசேட்டினை இறக்குமதி செய்து ஒழுங்கமைப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட விவசாயத் துறைகளுக்கு வழங்குகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கண்காணிப்புக் குழுவானது நாடளாவிய ரீதியில் உள்ள எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் பார்வையிட்டு ஏதேனும் ஆபத்து மற்றும் குறைபாடுகளைக் கண்டறிவதற்கான நோக்கத்துடனும் நடைமுறைகளை மீறல், பாதுகாப்பற்ற நடவடிக்கைகள், பராதரிப்பு ஆபத்துக்களை அடையாளங்காணல் போன்றவற்றின் மீது பின்னூட்டங்களைப் பெறும் நோக்கத்துடனும் பாதுகாப்பான கண்காணிப்பு மற்றும் கணக்காய்வுகளை மேற்கொண்டது. குறைபாடுகளை சீரமைப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு தொடர்ச்சியான செயறபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்விக்கான ஒத்துழைப்பு

இலங்கையில் உள்ள ஒரே சுத்திகரிப்பு நிலையம் என்ற வகையில் இலங்கைப் பொருளாதாரத்திற்கு பெறுமான அதிகரிப்புச் சேர்க்கையை உருவாக்கக் கூடிய வகையில் உள்நாட்டு மாணவர்களுக்கு பல பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் பெற்றோலியத் துறையில் அனுபவம் மிக்க பொறியியலாளர்களுக்கு கேள்விகள் அதிகமாகக் காணப்படுவதனால் கூட்டுத்தாபனமானது அதிகபட்ச சாத்தியமான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குகின்றது. மேலதிகமாக, தொழிநுட்ப மாணவர்களுக்கு அவர்களது அறிவு அபிவிருத்தி நோக்கங்களுக்காக தொழில்சார் வருகைகள் வழங்கப்படுகின்றன.

நிதி, தகவல் தொழிநுட்பம், மனித வள முகாமைத்துவம் போன்ற தொழிற் பயிற்சி வாய்ப்புக்கள் உள்நாட்டு பல்கலைக்கழக மற்றும் ஏனைய கல்வி நிறுவன மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

சமூகப் பொறுப்பு

எமது அணுகலானது தொடர்புபட்ட சமூகங்களுடன் நல்லுறவினைப் பேணுவதாகும். எமது பிரதான விநியோகச் சங்கிலியானது 15000 இற்கும் மேற்பட்ட நேரடித் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. மேலதிகமாக, பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவக் கூடிய ஆயரக்கணக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்ற விவசாய இரசாயன மற்றும் மசகுப் பொருட்கள் கையிருப்பாளர்கள் எம்மிடம் உள்ளனர்.

பெறுமானத்தை உருவாக்கும் இறுதி நுகர்வோர் தொடுதல் புள்ளிகள் என்பதால், விநியோகஸ்தர்கள் மற்றும் கையிருப்பு வைத்திருப்பவர்களுக்கு அவர்களின் வாடிக்கையாளர் உறவை கட்டியெழுப்பவும் மேம்படுத்தவும் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

நியாயமான விலையில் தரமான உற்பத்திகள் கிடைப்பது மற்றும் வசதியான அணுகல் சமூகத்துடன் நல்ல நேரடி மற்றும் மறைமுக உறவுகளை உருவாக்குகிறது.

மண்ணெண்ணெய் நிவாரணம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே இலங்கையில் உள்ள தனி மண்ணெண்ணெய் வழங்குநர் ஆகும். குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் மீனவ சமூகம் தனது அன்றாடத் தேவைகளுக்காக மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்றனர். மண்ணெண்ணெய் விலையானது ஜூன் மாத்தில் 7 ரூபாவாலும் டிசம்பர் மாதத்தில் 10 ரூபாவாகவும் புதுப்பிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் விலையானது கடுமையாக அதிகரித்ததிலிருந்து சர்வதேச விலை அதிகரிப்புக்கு இணையாக உள்நாட்டு விலைகள் புதுப்பிக்கப்படவில்லை.

மண்ணெண்ணெய் விலை மிகவும் உணர்திறன் வாய்ந்ததாக இருப்பதாலும் குறைந்த எரிசக்தி விலையானது இம் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பேண பங்களிக்கிறது என்பதால், மானிய விலையில் மண்ணெண்ணெய் தொடர்ந்து வழங்குவதன் மூலம் சமூக நாம் சமூக நலனிற்கு பெரும் பங்களிப்பை வழங்குகிறோம் என்று நாங்கள் நம்புகிறோம்.குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், கிராமப்புற சிறு விவசாயிகள் தங்கள் தேவைகளுக்கு மண்ணெண்ணெய் முக்கிய ஆதாரமாக பயன்படுத்துகின்றனர்.

குறித்த வருடத்திலான மண்ணெண்ணெய் விற்பனையானது ரூபா 236 மில்லியன் ஆகும்.

ஒரு லீற்றருக்கான மண்ணெண்ணெய் நிவாரணமானது ரூபா 38.04 ஆகும்.

மொத்த நிவாரணமானது ரூபா 8,975 ஆகும்.

பெரும்பாலான மீன்பிடிப் படகுகள் மண்ணெண்ணெய்யைப் பயன்படுத்தி இயக்கப்படுவதால், குறைந்த ஆற்றல் செலவில் மீனவ சமூகம் குறைந்த செலவில் அதிக உற்பத்தியைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, இது இரு மீனவ சமூகங்களுக்கும் இலங்கை மீன் நுகர்வோருக்கும் அதிக நன்மைகளை உருவாக்குகிறது.

சமூக நலன்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இலங்கை மக்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்திற்கான பொருளாதார நிலைபேறான தன்மையை வழங்குவதற்காக எமது விரியோகச் சங்கிலியின் ஊடாக 15000 இற்கும் அதிகமானோருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பொது மக்களின் வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைத் தரமானது பெற்றோலிய உற்பத்திகளுக்கு அதி உணர்திறன் கொண்டது என்பதை விளங்கிக்கொண்டிருக்கின்றுத. எனவே, பெற்றோலிய உற்பத்திகளுக்கு வசதியான அணுகல் மற்றும் நியாயமான விலை என்பன பொருளாதாரத்திற்கான எமது பிரதான கரிசனையாகும்.

விவசாய இரசாயனப் பிரிவு குறைந்த வருமானத்தை ஈட்டினாலும், போட்டித்தன்மையான விவசாய இரசாயன நிறுவனங்களின் சுரண்டலில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் கட்டுப்பாட்டுக் தரப்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விவசாய இரசாயன சந்தையில் உள்ளது.

இயற்கை மூலதனம்



0.6%
சாதாரண இழப்பு

00
ஆபத்தான விபத்துக்களின் எண

567
நீர் நுகர்வு
(000 மெ.தொ)

63
சொந்த நுகர்வு
((000 மெ.தொ)

0.5106
விசேட சக்தி நுகர்வு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான எமது பங்களிப்பு



எப்பொழுதும் எங்கள் செயற்பாடுகளின் நிலைத்தன்மைக்காக நாங்கள் பொறுப்புடன் இருக்கிறோம். கச்சா சுத்திகரிப்பு செயல்பாட்டில் எங்கள் செயல்பாடுகள் இயல்பாகவே ஆற்றல் மற்றும் நீரைப் பயன்படுத்துகின்றன என்றாலும், கார்பன் தடம் மற்றும் மின்சாரத்தின் நிலையான நுகர்வு ஆகியவற்றைக் குறைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. கழிவு முகாமைத்துவ முறைமைக்கான எங்கள் செயல்பாடுகளில் கடுமையான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

நீர் நுகர்வு

சுத்திகரிப்பு நிலையமானது சுத்திகரிப்புச் செயன்முறைக்காக குறிப்பிடத்தக்களவு நீரினை நுகர்கின்றதோடு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களனியவில் அமைந்துள்ள நீர் உள்ளெடுப்பினூடாக பாரிய அளவு நீர் சுத்திகரிக்கப்படுகின்றது. எஞ்சியவை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிலிருந்து பூர்த்தி செய்யப்படுகின்றது. நீர்ப் பராமரிப்பு மற்றும் நிலையான நுகர்வுப் போக்கிற்கு நாம் எப்பொழுதும் பொறுப்பாக உள்ளோம்.

கழிவு நீரானது சுத்திகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்ப வெளியேற்றப்படகின்றது.

சுத்திகரிப்பு நிலையத்தில் நீர் நுகர்வு			
	2021 மெ.தொ	2020 மெ.தொ	குறைப்பு
சுத்திகரிக்கப்பட்ட நீர்	528,283	672,302	21.42%
நீர் சபை	38,555	171,288	77.49%
மொத்தம்	**566,838**	**843,590**	32.81%

சக்தி நுகர்வு

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை உருவாக்குவதற்காக எண்ணெய் சுத்திகரிப்புச் செயன்முறையானது கணிசமான அளவு சக்தி மற்றும் வலுவினை நுகர்கின்றது.

சுத்திகரிப்பு நிலையமானது தனது செயற்பாடுகளுக்கு மின்சாரத்தை உருவாக்குவதோடு இடைவெளியானது இலங்கை மின்சார சபை வழங்கலினூடாகப் பூர்த்தி செய்யப்படுகின்றது. சுத்திகரிப்பு நிலையமானது நுகர்ந்த மின்சாரமானது மாதம் ஒன்றிற்கு (இலங்கை மின்சார சபை வழங்கல்) சாதாரண மணித்தியாலங்களில் 159.0ஆறூா மற்றும் 285.0ஆறூா வரை வேறுபட்டிருந்ததோடு உச்ச மணித்தியாலங்களில் 45.5ஆறூா மற்றும் 88.9ஆறு வரையும் வேறுபட்டிருந்தது. இலங்கை மின்சார சபை வழங்கலில் அதி கூடிய கேள்வியானது 1136 முஏயு மற்றும் 1613முஏயு வரை வேறுபட்டிருந்தது.

மின்பிறப்பாக்கி	செயற்படும் மணித்தியாலங்கள்
TG1	4,632 hrs.
TG2	2,634 hrs.
DG1	4,884.5 hrs.
DG2	4,793.5 hrs.

சுத்திகரிப்பு நிலையம், வலு நுகர்வினைக் குறைப்பதற்கும் பெறுமதியான நுட்பங்களை அடையாளம் காண்பதற்கும் இழப்பு மற்றும் வினைத்திறன்சார் மதிப்பாய்வுகளை நடாத்துகிறது.

கூட்டுத்தாபனமானது நிலையான நுகர்வுப் போக்கினை கொள்கைகளில் உள்ளடக்கியிருப்பதோடு அதற்கிணங்க நிலையான நுகர்வுப் போக்கினை முன்னெடுத்துச் செல்வதற்காக சுற்றுலா விடுதிகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களை சூரிய சக்தியினால் வலுவூட்டப்பட்ட கட்டடங்களாக மாற்றுவதற்கு முதலீடு செய்கின்றது.

பொருள் முகாமைத்துவம்

எரிபொருள், உபகரணங்கள் போன்ற முக்கிய பொருட்களின் பயன்பாட்டை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம், மேலும் இந்த வளங்களை மிகவும் திறமையாக பயன்படுத்துவதை உறுதிசெய்ய முயற்சிக்கின்றோம். நுகர்வு செயல்திறனை அதிகரிக்க தொழில்நுட்ப பொறிமுறைகள் உருவாக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

பொறுப்பான ஆதாரமிடல்

சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பொறுப்பான முறையில் பெறுவதற்கு நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறோம். நிலையான ஆதாரமிடல் பொறிமுறையினை உறுதிப்படுத்துவதற்கு விநியோகஸ்தர்கள் அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க அதிக விநியோகஸ்தர்களை ஊக்குவிக்கும் வெளிப்படையான பெறுகை முறையை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

அபாயகரமான பொருட்களை அகற்றுதல்

அபாயகரமான விவசாய இரசாயனங்கள் கடுமையான சுற்றாடல் நேய நடைமுறைகளின் கீழ், தேவையான ஒப்புதல்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களின் மேற்பார்வையுடன் அகற்றப்படுகின்றன. மனித அல்லது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காமல் அங்கீகரிக்கப்பட்ட தரப்பினரால் அகற்றப்படுகிறது.

சுத்திகரிப்பு நிலையம் அபாயகரமான கழிவுகளை உருவாக்குகிறது மற்றும் அவை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளின்படி அகற்றப்படுகின்றன. சுற்றுச்சூழலுடன் கலப்பதைத் தவிர்ப்பதற்காக அபாயக் கழிவுகள் சுடருக்கு அனுப்பப்பட்டு எரிக்கப்படுகின்றன, மேலும் இந்த ஆண்டில், எரிபொருளுக்கான மொத்த எரி-பொருள் வாயு 556 MT ஆகவும், வெடிப்பதற்கான CDU வாயுவின் அளவு 442 MT ஆகவும் பதிவாகியுள்ளது.

பயன்படுத்தப்பட்ட நீர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைக-ளின்படி சுத்திகரிக்கப்படுகிறது மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் வெளியேற்றம்/மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. மறுசுழற்சி செய்யக்கூடிய பிற பொருட்கள் எங்கள் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் மறுசுழற்சி செயல்முறைக்காக பெறப்படும் அல்லது சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் அப்புறப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்படுகின்றன.

நிலையான மற்றும் சுற்றாடல் நேயப் பொருளாதாரம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நுகர்வு மீதான சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்காக அதிக சூழல் நேய தயாரிப்புகளை ஊக்குவிப்பதில் பொறுப்பாக உள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது மிகவும் வினைத்திறனான எரிபொருளை வழங்க சூழல் நேய Euro IV பெற்றோல் மற்றும் டீசலை அறிமுகப்படுத்தியது.

குறைந்த கரியமில தடம் கொண்ட அதிக நிலையான நுகர்வு முறையைத் தொடர இலங்கையில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை (LNG) அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் தயாராகி வருகின்றன.

உயிர்ப்பல்வகைமை

நிறுவனத்தினுடைய செயற்பாடு எண்ணெய்க்கசிவுகள், எரிபொருள் கசிவு, மற்றும் கழிவுகள் ஆகியவற்றின் மூ லம் உயிர்ப்பல்வகைமையின் மீது எதிர்மறையான தாக்கங்களைக் கொண்டிருக்கலாம். உயிர்ப்பல்வகைமைக்கான எதிர்மறை விளைவுகளைத் தணிப்பதற்கான சகல முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு அளவீடுகளை உறுதிப்படுத்துவதற்காக கடுமையான இயக்கச் செயன்முறைகள், முன்வைக்கப்பட்டுள்ளன.

2021 ஜூன் 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் ஏற்பட்ட கடுமையான மழைவீழ்ச்சி காரணமாக API பிரிவிற்கு கடுமையான நீர் உட்புகுதல் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகள் மற்றும் தாங்கிப் பண்ணைகளில் நீர் முறைமை மாசடைதலை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கு காரணமாக எண்ணெய் நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவு நீர் உட்புகுதல் அதிகரித்தது. இவ் விடயமானது அறிக்கையிடப்பட்டவிடத்து நிலமையைக் கட்டுப்படுத்துவதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இணக்கப்பாடு

சூழலுடன் போஷிக்கப்படும் நிலையான கூட்டுத்தாபனத்தின் குடிமகனாக, மீளாய்வாண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சூழலியல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைமைகள் என்பனவற்றுடன் செயற்பாட்டு மட்டத்திலும் அறிக்கை நிலையிலும் இணக்கப்பாடின்மைகள் ஏதும் இருக்கவில்லை. அதற்கிணங்க, மேலே வெளிப்படுத்தப்பட்டவற்றைத் தவிர குறிப்பிடப்பட்ட அபராதமோ அல்லது பணமற்ற பொருளாதாரத் தடைகளோ மீளாய்வாண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீது விதிக்கப்படவில்லை. சூழலியல் ஆபத்துக்களைத் தோற்றுவிக்கின்ற குறிப்பிட்ட உள்ளார்ந்த அபாயமொன்றினை எமது வியாபாரம் கொண்டுள்ளமையினால் நிறுவனம், சூழல் சார் கட்டுப்பாட்டாளர்களுடன் நெருங்கி செயலாற்றுகின்றது.

எங்கள் செயற்பாடுகளின் பாதகமான தாக்கங்களைச் சமாளிக்க நாங்கள் எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ளோம். சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கட்டுப்படுத்த சர்வதேச நிறுவனத்துடன் நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம், மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது சர்வதேச எண்ணெய் மாசு இழப்பீட்டு நிதியில் (IOPCF) உறுப்பினராக உள்ளது, இது எண்ணெய்த் தாங்கிகளில் இருந்து தொடர்ந்து எண்ணெய் கசிவதால் ஏற்படும் எண்ணெய் மாசு சேதத்திற்கு இழப்பீடு வழங்குகிறது.

பங்குதாரர்களின் பொறுப்பு




CPC எங்கள் முக்கிய பங்குதாரர்களைப் புரிந்துகொள்வதற்கும் அடையாளம் காண்பதற்கும் ஒரு வலுவான செயல்முறையைப் பின்பற்றுகிறது மற்றும் மதிப்புகளின் உருவாக்கம் மற்றும் விநியோகத்திற்கான அவர்களின் நியாயமான கவலைகளை நிவர்த்தி செய்கிறது. மூலோபாய திட்டமிடல் செயல்முறை மூலம் வாய்ப்புகளை அடையாளம் காணவும், வணிக மாதிரியுடன் அவற்றை இணைக்கவும் CPC க்கு உதவும் பங்குதாரர் குழுக்களை அடையாளம் காணவும் இணைக்கவும் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது. மதிப்பு உருவாக்கும் செயல்பாட்டில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் பங்குதாரர் கட்சிகளுக்கு மூலோபாய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தற்போதைய பங்குதாரர்களின் அதிகாரம் மற்றும் ஆர்வத்தின் அளவு மாற்றங்களை அடையாளம் காணவும் அத்துடன் புதிய பங்குதாரர் குழுக்களை அங்கீகரிப்பதற்காகவும் CPC தொடர்ந்து எங்கள் வணிகச் சூழலை மதிப்பீடு செய்கிறது.

பங்குதாரர் மேப்பிங், எங்கள் வணிக மாதிரியில் பங்குதாரர்களின் சக்தி மற்றும் ஆர்வத்தை அடையாளம் காண உதவுகிறது, இது நிறுவனத்திற்கு செல்வாக்கின் அளவை தீர்மானிக்க உதவுகிறது. பங்குதாரர்களின் கவலைகளின் முன்னுரிமையானது செல்வாக்கின் அளவிற்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மற்றும் பங்குதாரர்களுடன் சுமுகமான உறவைப் பேணுவதற்கு அதற்கேற்ப உத்திகள் அமைக்கப்படுகின்றன.

பொறுப்புக் கட்டமைப்பு



பங்குதாரர்கள்

பொறுப்புப் பொறிமுறைகள்	மாதாந்த நிதிக் கூற்றுக்களின் ஒப்படைப்பு வருடாந்த நிதிக் கூற்றக்கள் கூட்டுத்தாபன இணையதளம்
எழுப்பப்பட்ட கரிசனைகள்	பருவ கால நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு நிதி அறிக்கைகள் வெளிப்பாடுகள் எதிர்கால வளர்ச்சி மற்றும் முன்னோக்கு
எமது பதில்கள்	நிதி மற்றும் நிதியல்லாத தகவல்களை உரிய நேரத்தில் ஒப்படைத்தல், கூட்டுத்தாபனத்தின் இணையதளத்தை புதுப்பித்தல்

தொழிலாளர்கள்

பொறுப்புப் பொறிமுறைகள்	செயலாற்றுகை மதிப்பீடுகள் தொழிலாளர் பொறுப்பு நடவடிக்கைகள் தொழிலாளர் அமைப்புகளுடனான சந்திப்புக்கள் விளையாட்டு மற்றும் ஏனைய நிகழ்வுகள் ஆளணியினருக்கான நலன்புரி வசதிகள்
எழுப்பப்பட்ட கரிசனைகள	போட்டித் தன்மையான ஊதியக் கட்டமைப்புக்கள் தொழில் பாதுகாப்பு உகந்த வேலைச் சூழல் திறன் மற்றும் அறிவு விருத்தி பாதுகாப்பானதொரு வேலைத்தளம் தொழில் விருத்தி மற்றும் தொடர்ச்சி
எமது பதில்கள்	தொழில் நியமங்கள், பாதுகாப்பான வேலைச் சூழல் மற்றும் ஈடுபடுத்தப்பட்ட தொழிற் படையின் அபிவிருத்தி ஆகியவற்றுடன் இணைந்த வகையில் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள் மற்றும் கவர்ச்சிகரமான சம்பளத்தை நாம் வழங்குகின்றோம்.

ஒழுங்கமைப்பாளர்கள்

பொறுப்புப் பொறிமுறைகள்	பருவ கால fyêதுரையாடல், அரசாங்கம் மற்றும் ஒழுங்கமைப்பாளர்களுக்கு அறிக்கையிடல் செயலாற்றுகை மீதான பருவ கால அறிக்கையிடும் முறைமை மற்றும் இ.பெ.கூட்டுத்தாபனத்தின் இணக்கப்பாடுகள் நிதி/பருப் பொருளியல் தீர்மானங்கள் மேற்கொள்ளலில் உரிய நேரத்தில் அரசாங்கத்திற்கு தகவல் வழங்கல்
எழுப்பப்பட்ட கரிசனைகள	கூட்டுத்தாபன ஆளுகை ஒழுங்குவிதிகளுடனான இணக்கம் வரிகளுடனான இணக்கம் சூழல் பாதுகாப்பு
எமது பதில்கள்	ஒழுங்கமைப்பாளர்களால் வேண்டப்படும் தகவல்களை வழங்கல் மற்றும் வெளிப்படையான உரையாடலைப் பேணல் ஒழுங்கமைப்பாளர்களுடன் இணைந்து தொழில் அபிவிருத்தியை ஊக்குவித்தல்



சமூகம்

பொறுப்புப் பொறிமுறைகள்

பிராந்திய அலுவலகப் பொறுப்புக்கள்
CSR செயற்பாடுகள் மற்றும் அனுசரனையாளர்கள்
ஊடகம் மற்றும் ஏனைய சமூக நிகழ்வுகள்

எழுப்பப்பட்ட கரிசனைகள

தொழில் வாய்ப்புக்கள்
உற்பத்திகளுக்கான அணுகல்
பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்கள்
CSR செயற்பாடுகள்
அனுசரனைகள்

எமது பதில்கள்

சமூகங்களுடன் நல்லுறவு ஒன்றினை விருத்தி செய்தல். வலுவூட்டல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்தல்.



நுகர்வோர்

பொறுப்புப் பொறிமுறைகள்

உற்பத்தி, பதவி உயர்வுகள்
எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊடான பொறுப்புகள்
நுகர்வோர் திருப்தி ஆய்வுகள்
சந்தைப்படுத்தல் கிளைகள் ஊடான தொடர்பாடல்கள்
பிராந்திய நிறுவனங்களின் ஊடான இயங்கலை மற்றும் உள்ளூர் பொறுப்புகள்

எழுப்பப்பட்ட கரிசனைகள

வுசதி மற்றும் அணுகல்
உற்பத்தித் தரம்
மலிவுத்தன்மை
வாடிக்கையாளர் பராமரிப்பு சேவை

எமது பதில்கள்

இலகுவான அணுகலை உறுதிப்படுத்துவதற்காக நாம் விநியோக வலையமைப்பினை வலுப்படுத்தியுள்ளோம். நுகர்வோரின் முறைப்பாடுகளை விசாரித்து அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கு நுகர்வோர் பராமரிப்பு அலகு வலுப்படுத்தப்பட்டது.



வழங்குநர்கள

பொறுப்புப் பொறிமுறைகள்

வெளிப்படையான ஏல செயற்பாடுகள்
வழங்குநர் பதிவு செயற்பாடு
அன்றாட சந்திப்புக்கள், எழுதப்பட்ட தொடர்பாடல்
மற்றும் உறவு முறை முகாமை

எழுப்பப்பட்ட கரிசனைகள

நீண்ட காலப் பங்குடைமை
உரிய நேரத்திலான கட்டணங்கள்
பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்கல்
ஒழுங்குவிதிகளுடன் இணங்கல்

எமது பதில்கள்

நீண்ட கால நல்லுறவினை ஊக்குவித்தல், உரிய நேரத்திலான கட்டணம், உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தரநியமங்கள் மற்றும் நிலைபேறான தன்மையினை உறுதிப்படுத்தல்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளானவை மக்களுக்கும் இக் கோளுக்கும் நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் சமாதானம் மற்றும் சௌபாக்கியத்தை வழங்குவதற்காகப் பங்கீடு செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை வழங்குகின்றது. சர்வதேசப் பங்குதாரர்களாக உள்ள எல்லா நாடுகளும் 17 நிலைபேறான இலக்குகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாய சூழலில் உள்ளன. காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தல் மற்றும் சமுத்திரங்கள், காடுகளைப் பாதுகாக்கும் அதேவேளை, சுகாதாரம் மற்றும் கல்வியினை விருத்தி செய்யக் கூடியதும் அசமத்துவத்தைக் குறைக்கக் கூடியதும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கக் கூடியதுமான செயல்நுணுக்கங்களுடனும் இணைந்த வகையில் வறுமை மற்றும் ஏனைய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் அவசியத்தை உணர்ந்துள்ளனர்.

பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனம் என்ற வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை தனது குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகளில் உள்ளடக்குவதன் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்குப் பங்களிப்புச் செய்கின்றது.

SDG	நாங்கள் எவ்வாறு பங்களிக்கிறோம்
	2377 நபர்களை உள்ளடக்கிய பலதரப்பட்ட தொழிலாளர் குழாமிற்கு சந்தை விலையின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டதோடு அவர்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனமானது 6.89 பில்லியன் ரூபாவை தொழிலாளர் செலவாகச் செலுத்தியது. மேலும், தொழிலாளர்களினதும் அவர்களது குடும்பத்தினரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கடன் திட்டங்கள், மருத்துவ வசதிகள் போன்ற பலதரப்பட்ட நலன்புரி செயற்பாடுகள் வழங்கப்பட்டன. வறுமையைக் குறைப்பதற்காக சமூகத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக எமது விநியோக வலையமைப்பின் ஊடாக நாடளாவிய ரீதியில் 15,000 இற்கும் மேற்பட்ட மறைமுகத் தொழில் வாய்ப்புக்களை நாம் வழங்குகின்றோம். இ.பெ.கூ தாபனமே மண்ணெண்ணையை வழங்குகின்ற ஒரே நிறுவனமாக இருப்பதோடு குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மீனவ சமூகத்தினது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக பொருளாதார நிவாரணம் ஒன்றை வழங்கும் நோக்கத்தில் மண்ணெண்ணையை நிவாரண விலையில் வழங்குகின்றது. 2021 ஆம் ஆண்டிற்கான நிவாரணமானது ரூபா.8975 மில்லியன் ஆகும்.
	பெற்றோலிய உற்பத்திகளானவை உள்ளார்ந்த வகையில் எப்பொழுதும் சுகாதார மற்றும் பாதுகாப்பு இடர்களுக்கு உட்பட்டிருப்பதால் தொழிலாளர்கள் உள்ளிட்ட மொத்த சமூகத்திற்கும் சிறந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான சூழலை வழங்குவதற்காக இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆபத்தான சூழலைக் குறைப்பதற்காக சுத்திகரிப்பு நிலையத்தல் சர்வதேச தரத்திலான தரநியமங்கள் பின்பற்றப்படகின்றன. சுகாதாரம் மற்றும் நலன்களை விருத்தி செய்வதற்காக தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையிலான மருத்துவத் திட்டங்களின் ஊடான மருத்துவ நலன்கள், நன்கொடை, பிரசவகால விடுமுறை போன்றவற்றை உள்ளடக்கிய நலன்களை கூட்டுத்தாபனமானது வழங்குகின்றது.
	கூட்டுத்தாபனமானது சமமான வாய்புக்களை வழங்கும் தொழில் வழங்குநர் ஆகும் மற்றும் கூட்டுத்தாபனமானது பால் அடிப்படையில் பாரபட்சம் பார்ப்பதில்லை. சட்ட மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்கு ஏற்பஎல்லா ஊழியர்களும் பாரபட்சம் பார்க்காத வெகுமதிக் கொள்கையின் அடிப்படையில் ஒரே தொழில் வகைக்கு ஆண் பெண் ஆகிய இரு தரப்பினரும் சமமான வெகுமதிகளுக்கு (1:1) தகுதியுடையவர்கள் எனும் அடிப்படையில் நடாத்தப்படுகின்றனர்.
	நாட்டின் சக்திப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அதேவேளை வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார செயற்பாடுகளின் நலன்களுக்காக பெரும்பாலான உற்பத்திகள் நிவாரண விலையில் வழங்கப்பட்டன. குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மீனவ சமூகத்தினருக்கு மலிவான விலையில் உற்பத்திகளை வழங்கும் நோக்கத்துடன் மண்ணெண்ணையானது அதி நிவாரண விலையில் வழங்கப்பட்டது. நுகர்வோர் தரமான பெற்றோலிய உற்பத்திகளைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

SDG	நாங்கள் எவ்வாறு பங்களிக்கிறோம்
	நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்திற்கு கூட்டுத்தாபனமானது பலதரப்பட்ட வரி மற்றும் தீர்வைகளாக ரூபா 155,299 மில்லியன் பங்களிப்பினை வழங்கியது. நாட்டில் 80 சதவீதத்துக்கும் அதிகமான எரிபொருளுக்கான கேள்விக்கு தடையில்லாத வழங்கலானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக தொழிற்துறைகளுக்கான தொடர்ச்சியான வழங்கலானது சக்திப் பாதுகாப்பினை உறுதி செய்தது. மேலும், சுத்திகரிப்பு நிலையமானது தேசிய பொருளாதாரத்திற்கு எமது 30 சதவீத வருமானத்தை சேர்ப்பதன் மூலம் பொருளாதாரத்திற்கு பெறுமானம் சேர்த்துள்ளது.
	எல்லோருக்குமான சமமான அணுகல் மற்றும் மலிவான தன்மையில் கவனம் செலுத்துவதனுடன் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித நலன் ஆகியவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்க , நம்பகத் தன்மை, நிலையான மற்றும் மீட்டெழும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல். இ.பெ.கூ தாபனத்தின் செயற்பாடுகளின் செயற்பாட்டுத் திறன்கள் மற்றும் வினைத்திறன்களை விருத்தி செய்யயக் கூடிய நடுத்தர மற்றும் நீண்ட கால செயல்நுணுக்கத் திட்டங்களை இ.பெ.கூ தாபனமானது நடைமுறைப்படுத்துகின்றது/திட்டமிடுகின்றது. குறித்த வருடத்தில் இந் நோக்கத்திற்காக நாம் ரூபா 2.5 பில்லியன் முதலீடு செய்துள்ளோம்.
	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச கட்டமைப்புக்களுக்கு ஏற்ப விசேடமாக சுத்திகரிப்பு நிலையம் மற்றும் விவசாய இரசாயனங்களின் சுழற்சியின் ஊடாக வெளியிடப்படும் இரசாயனங்கள் மற்றும் கழிவுகளை சூழலுக்கு உகந்த வகையில் முகாமை செய்கின்றதோடு மனிதர்களின் சுகாதாரம் மற்றும் சூழல் மீதான அவற்றின் பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக காற்று, நீர் மற்றும் மண் ஆகியவற்றில் அவை கலக்கப்படாமல் இருப்பதனை உறுதி செய்கினறது. சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கக் கூடிய வகையில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட முறையில் ஆபத்தான கழிவுகள் அகற்றப்படுகின்றன. கூட்டுத்தாபனமானது நிலைபேறான உற்பத்திப் போக்கிற்காக வளங்களை விளைத்திறனாகவும் வினைத்திறனானகவும் பயன்படுத்துவதையும் நிலைபேறான நுகர்வுப் போக்கினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியினையும் உறுதிப்படுத்துகின்றது. நிலைபேறான எரிபொருள் நுகர்விற்கு இட்டுச் செல்லக் கூடிய சூழலுக்கு உகந்த யூரோ 4 தரமான டீசல் மற்றும் பெற்றோலை கூட்டுத்தாபனமானது அறிமுகப்படுத்தியது.
	காலநிலை தொடர்பான ஆபத்துகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளின் தாக்கங்களைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் எங்களின் செயல்நுணுக்கங்களில் உள்ளார்ந்த நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகளை நாங்கள் உள்வாங்கியுள்ளோம். அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் காலநிலை மாற்ற நடவடிக்கைகளை நாங்கள் எங்கள் செயல்நுணுக்கங்களில் ஒருங்கிணைக்கிறோம். சுத்திகரிப்பு நிலைய ஊழியர்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன.
	கூட்டுத்தாபனமானது எரிபொருள் கசிவுகள் இன்மையை அடையாளங்காண்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் முக்கியமான தர உறுதிப்பாட்டு நடைமுறையைப் பயன்படுத்தியது. போக்குவரத்து மட்டம், களஞ்சிய மட்டம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய மட்டங்களில் ஏற்படும் எண்ணெய்க் கசிவுகளை அடையாளங் காண்பதற்காக தரமானதும் ஒழுங்கானதுமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாங்கிகளில் இருந்து வெளிவரும் நிலையான எண்ணெய்க் கசிவுகளின் விளைவாக ஏற்படும் எண்ணெய் மாசடைதல் காரணமாக ஏற்படும் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய சர்வதேச நிதியத்தின் உறுப்பினராக கூட்டுத்தாபனம் இருப்பதோடு இது நீர் மாசடைதலைத் தடுப்பதற்காக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைக்கின்றது. கூட்டுத்தாபனமானது சர்வதேச நிதியத்தில் (IOPC) உறுப்பினராக உள்ளது, இது தாங்கிகளில் இருந்து தொடர்ந்து எண்ணெய் கசிவதால் ஏற்படும் எண்ணெய் மாசு சேதத்திற்கு இழப்பீடு வழங்குகிறது, மேலும் இது நீர் மாசுபாட்டைத் தடுக்க விரைவான நடவடிக்கைகளை எடுக்க உதவுகிறது.
	நாம் விவசாய இரசாயன உற்பத்திகளின் நிலையான உற்பத்தியினையும் சர்வதேச மட்டத்திலான தர நியமங்களுக்கு ஏற்பவுமான விநியோகத்தினையும் உறுதிப்படுத்துகின்றோம். பூமியில் உள்ள உயிர்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கு தகவல் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இடர் முகாமைத்துவ அறிக்கை

பெற்றோலியத் தொழிற்துறையின் சந்தைத் தலைவர் என்ற வகையில் இந்த வலுவான சமூக மற்றும் பொருளாதார சூழலில் இடர் முகாமைத்துவமானது ஒருங்கிணைந்த வகிபங்கை வகிக்கிறது. இடர் முகாமைத்துவக் கொள்கையானது, நாட்டின் சக்திப் பாதுகாப்பிற்கான சுமுகமான வணிக செயற்பாட்டின் தொடர்ச்சியினை உறுதிப்படுத்துவதற்கு எல்லா இடரகளையும் தணிக்கும் வகையில் எல்லா இடர் பரப்புக்களையும் உள்ளடக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது.


இடர் முகாமைத்துவ அறிக்கையின் நோக்கம்
சுற்றுச்சூழலுக்கும், சந்தைக்கும் மற்றும் உள்ளக குற்றங்களுக்கும் பாதிப்புக்குள்ளாகாமல் கூட்டுத்தாபனத்தைப் பாதுகாப்பதற்கு
முறையாக சமநிலை வளர்ச்சி மற்றும் இடர்,
நீண்டகால இருப்புக்கு உத்தரவாதம் அளித்து, எங்கள் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், பொது மக்களைப் பாதுகாத்தல்,
நிகழக்கூடிய எதிர்மறையான நிகழ்வுகளிலிருந்து கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாக்கவும்.

எமது இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது, கூட்டுத்தாபனத்தை பாதிக்கும் முக்கிய இடர்களை முன்கூட்டியே கண்டறிந்து, தாக்கத்தை மதிப்பீடு செய்து, அந்த இடர்களை திறம்பட நிர்வகித்து, தேசத்திற்குத் தொடர்ச்சியான சக்தி விநியோகத்தை உறுதிசெய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.இடர் முகாமைத்துவக் கட்டமைப்பானது இடர் கொள்கைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்கியவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது.

இது வினைத்திறனான திட்டமிடல் மற்றும் தீர்மானம் எடுத்தல் ஆகியவற்றுக்கு இட்டுச் செல்லக் கூடிய ஒரு நிலையான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட முறையினூடாக கூட்டுத்தாபனத்தை அதன் செயல்பாடுகளைச் செய்ய உதவுகிறது.

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம், நிதி ஒழுங்குமுறைகள், நல்லாட்சிக்கான வழிகாட்டுதல்கள், பொது நிறுவனங்களுக்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் பல்வேறு ஒழுங்குமுறைகள் என்பன இடர்களை அடையாளங் காணல், கட்டுப்படுத்தல் மற்றும் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்காக இடர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு உறுதியான அடித்தளத்தை நிறுவியுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இடர் முகாமைத்துவச் செயலன்முறையானது மூன்று உறுதியான பாதுகாப்பு வரிசைகளினால் வலுப்படுத்தப்படுகிறது. வணிகம் மற்றும் செயல்பாட்டு அலகுகள் பாதுகாப்பின் முதல் வரிசையில் உள்ள, அதே நேரத்தில் இரண்டாவது வரிசை பாதுகாப்பு உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பைக் கொண்டுள்ளது மற்றும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து ஆபத்துகள் கட்டுப்படுத்தப்படுவதையும், நிர்ணயிக்கப்பட்ட இடர் நாட்டத்திற்கு ஏற்ப நிர்வகிக்கப்படுவதையும் உறுதி செய்கின்றன. மூன்றாவது வரிசைப் பாதுகாப்பு என்பது உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு மற்றும் நிறுவப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு எதிரான பிற இணக்கங்களை உள்ளடக்கியது.



முதல் வரிசைப் பாதுகாப்பு

வணிகம் மற்றும் செயற்பாட்டு நிலைப் பிரிவுகள் இடர் உரிமையாளர்களாவர் மற்றும் அவர்கள் இடர் அடையாளங் காணல், முகாமைத்துவம் மற்றும் இடர்களை அறிக்கையிடல் அவை வெளிப்படும் இடர்களை அடையாளங்கண்டு முதல் வரிசைப் பாதுகாப்புடன் திறம்பட முகாமை செய்யப்படுகின்றன ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும

இரண்டாம் வரிசைப் பாதுகாப்பு

மேலே குறிப்பிட்டுள்ள சட்டங்களின்படி வடிவமைக்கப்பட்ட தெளிவாக வரையறுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் கூடிய விரிவான உள்ளகக் கட்டுப்பாடுகளை கூட்டுத்தாபனமானது கொண்டுள்ளது. இது இரண்டாவது வரிசைப் பாதுகாப்பு மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய இடர்களைக் கண்டறிய, முகாமை செய்ய மற்றும் தடுக்க கூட்டுத்தாபனத்திற்கு ஒத்துழைப்பை வழங்குகின்கிறது.

மூன்றாம் வரிசைப் பாதுகாப்பு

மூன்றாம் வரிசைப் பாதுகாப்பில் இடர் முகாமைத்துவ செயற்பாட்டில் உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நிதி மற்றும் செயற்பாட்டு முறைமைகளின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலின் வினைத்திறனை உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வு ஆய்வு செய்கிறது. பணிப்பாளர்கள் சபையினால் நிறுவப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, நிறுவப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களுக்கு எதிரான செயலாற்றுகையுடன் முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் முகாமைத்துவத் துலங்கல்களை மதிப்பீடு செய்கின்றது.


மேலே உள்ள இடர் ஆளுகைக் கட்டமைப்பானது இடர்கள் அடையாளங் காணப்படுவதையும், அளவிடப்படுவதையும், தணிக்கப்படுவதையும், அறிக்கையிடப்படுவதையும் உறுதி செய்கிறது.

இடர் ஆளுகை

இடர் முகாமைத்துவத்தின் உச்சப் பொறுப்பானது தலைவர் தலைமையிலான பணிப்பாளர்கள் சபையிடம் உள்ளது மற்றும் அது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களால் வலுப்படுத்தப்படுகிறது. நன்கு வரையறுக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பயனுள்ள கண்காணிப்புடன் கணக்காய்வுக் குழுவின் செயற்பாடு முகாமைத்துவத்திற்கு அவ்வப்போது அறிக்கையிடல் மூலம் செய்யப்படுகிறது.

இடர் முகாமைத்துவக் கொள்கையைச் செயற்படுத்த இடர் முகாமைத்துவக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் அக் குழுவின் முகாமைத்துவப் பணிப்பாளர் மூலம் கணக்காய்வுக் குழுவுக்கு குறிப்பீடு செய்யப்படுகின்றது. இடர்ப் பரப்புக்களை அடையாளங்காணல், கட்டுப்படுத்தல் மற்றும் காரணிகளைத் தணிப்பதற்கு இக் குழு ஒவ்வொரு செயற்பாட்டிலிருந்தும் முகாமையாளர்கள் மற்றும் நிறைவேற்ற நிலை அதிகாரிகளைக் கொண்டுள்ளது. இடர் முகாமைத்துவக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

கடமைகள் மற்றும் பொறுப்புகள்
வெளிப்படுத்தப்பட்ட இடர்களை அடையாளங்காணல் - ஒவ்வொரு செயற்பாட்டு மற்றும் அறிக்கையிடல் பகுதிகளுக்கும் சென்று, வெளிப்படும் அனைத்து இடர்களையும் அடையாளங் காண வேண்டும்.
2.வெளிப்படுத்தப்பட்ட இடர்கள் மற்றும் இடர் நிகழ்வுகள் நிகழும் வாய்ப்பு மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்.
3.இடரைத் தணிக்கும் உத்திகளை உருவாக்குதல் - இடர் தணிக்கும் உத்திகளைக் கண்டறிந்து ஒவ்வொரு இடர் வகைக்கும் அவற்றை வகுத்தல்.
4. நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு -- இடர் முகாமைத்துவத்தை நிறுவுதல்/தணித்தல் உத்திகள் மற்றும் அவற்றைக் கணித்தல்.




இடர் முகாமைத்துவத்திற்கான செயல்நுணுக்கங்கள்

விசேடமாக சுகாதார மற்றும் பாதுகாப்பு இடர்களுக்கு இலகுவாக உட்படக் கூடிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்ளார்ந்த தன்மை காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பல இடர்களுக்கு முகங்கொடுக்கின்றது. எனவே, கூட்டுத்தாபனமானது ஏற்படுவதற்கு வாய்ப்பான இடர்களை அடையாளங்காண ஆழமாக பகுப்பாய்வு செய்வதோடு அவற்றை மூன்று பாதுகாப்பு மட்டங்களிலும் கட்டுப்படுத்துவதற்கு/தணிப்பதற்கு செயல்நுணுக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இடர் வகை மற்றும் அவற்றின் கடுமையான தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இடர் முகாமைத்துவத்திற்காக கூட்டுத்தாபனமானது செயல்நுணுக்கங்களைப் பரியோகிக்கின்றது. இடரானது அடையாளங்காணப்படுமிடத்து; இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது,

- இடர் ஏற்படும் வாய்ப்பைத் தவிர்க்கும் அல்லது
- இடரை வேறு தரப்பினருக்கு பரிமாற்றம் செய்யும், அல்லது
- விளைவுகளை ஏற்றுக்கொள்ளும் மற்றும் அதற்கான வரவு செலவை மேற்கொள்ளும்.

இடர் நாட்டம்

டர் நாட்டம் என்பது, செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் ஒவ்வொரு முக்கிய இடர் வகைகளுக்கும் சகிப்புத்தன்மை அளவைக் குறிப்பிடுவதன் மூலம் வணிகம் மற்றும் இடர் கரிசனையை முகாமை செய்வதற்கான வரம்புகளைக் குறிக்கிறது. பெற்றோலியப் பொருட்களின் கையாளுதல் மற்றும் செற்பாட்டில் உள்ள அபாயங்களின் உள்ளார்ந்த தன்மையைக் கருத்தில் கொண்டு சகிப்புத்தன்மை நிலைகள் நி-றுவப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்திற்குப் பொருள் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் பல அபாயங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது அடையாளங் காண்கின்றது.



இடர் வகைப்பாடு	இடர் மட்டம்	பங்குபற்றல் மட்டம்
1 - 5	மிகக் குறைவு	ஆளணி/கணிஷ்ட முகாமைத்துவ மட்டம்
6 - 11	குறைவு	கூட்டுத்தாபன முகாமைத்துவ மட்டம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்
12-19	நடுத்தரம்	கூட்டுத்தாபன முகாமைத்துவ மட்டம்
20 -24	அதிகம்	முகாமைத்துவப் பணிப்பாளர்
25	மிக அதிகம்	பணிப்பாளர்கள் சபை

எமது செயற்பாடுகளுக்கான முக்கியத்துவத்தைக் கண்டறிய, கொடுக்கப்பட்ட இடர் நாட்ட அட்டவணையில் வெளிப்படும் அனைத்து இடர்களையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வகைப்படுத்துகின்றது. இடர்களின் அளவைப் பொறுத்து அவற்றைப் பிரித்து, நிகழும் வாய்ப்பைத் தவிர்ப்பதற்கும், இடரை வேறொரு தரப்பினருக்கு மாற்றுவதற்கும் அல்லது ஆபத்து நிலையின் அடிப்படையில் அதற்கான விளைவுகள் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும் உத்திகளை உருவாக்குகிறோம்.

இடர் பரப்புக்களை முகங்கொள்ளும் வாய்ப்புக்களை அதிகமாகக் கொண்டுள்ளதால் சுத்திபரிப்பு நிலைய செயற்பாடுகளுக்கு விசேட கவனயீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையமானது ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பல இடர் பரப்புக்களுக்கு வாய்ப்பாக உள்ளது மற்றும் இடர் முகாமைத்துவமானது சுத்திபரிப்பு நிலைய செயற்பாடுகளுக்காக முக்கிய வகிபங்கினை வகிக்கின்றது. விமான நிலையங்களில் செயற்படும் விமானத்துறை செயற்பாடுகளும் இடர் பரப்புக்களை முகங்கொள்ளும் வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன. விவசாய இரசாயன செயற்பாடுகளும் பல்வேறுபட்ட சுகாதார இடர்களுக்கு உட்படக் கூடியதாக இருக்கின்றது மற்றும் வணிகச் செயற்பாடுகளின் தொடரச்சியினை உறுதிப்படுத்துவதற்கு இடர் முகாமைத்துவ உத்திகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை பிரதான கரிசனைகளாகும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்படக் கூடிய இடர்கள

கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் இடர்கள் மற்றும் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றிய சுருக்கமான விவரம் மற்றும் இடரை மேலும் குறைப்பதற்கான உத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார இடர்

இலங்கை ரூபாயில் இருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் விற்பனை வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் பெற்றோலியப் பொருட்கள் அமெரிக்க டொலர் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுவதால், நாட்டின் பணவீக்க விகிதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. பெரும்பாலான முக்கிய பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் சமுதாயத்திற்கு நிவாரணம் வழங்குவதற்காக சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளுக்காக அதி நிவாரண விலையில் வழங்கப்படுகின்றன. பேற்றோலியப் உற்பத்திப் பொருட்கள் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானவை என்பதால் பெற்றோலிய விலைகளின் இயக்கம் தேசியப் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது. பணவீக்க விகிதம், வட்டி விகிதம், பரிமாற்ற வீதம் ஆகியவற்றின் பாதகமான தாக்கம் தயாரிப்புகளின் விலையை அதிகரிப்பது விலை உயர்வுக்கு வழிகாட்டி இறுதியில் இலாபத்தை பாதிக்கின்றது. ஆண்டுக்கு சுமார் 5 பில்லியன் லீற்றரின் விற்பனை அளவு காரணமாக பொருளாதார காரணிகளில் சிறிய மாற்றம் இலாபத்தை குறைக்கிறது.

தணிப்பதற்கான காரணிகள்

- வினைத்திறனான கிரய முகாமைத்துவ முயற்சிகள்
- வெளிப்படையான விலையிடும் பொறிமுறைகள்
- மசகு எண்ணெய் மற்றும் பிட்டுமன் போன்ற போட்டித்தன்மையான உற்பத்திகளின் மீதான போட்டித்தன்மையான விலையிடல்

செயல்நுணுக்கங்கள்

- கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகள் ஆகிய இரண்டையும் சமப்படுத்தக் கூடிய வகையில் விலையிடும் பொறிமுறையினை அறிமுகம் செய்தல்.
- அரசாங்கத்தின் மூலமான நிவாரணக் கூறின் மீள்செலுத்தல்

பொருள் விலை இடர்

இலங்கையில் அகழ்ந்து எடுக்கக் கூடிய பெற்றோலியப் உற்பத்திப் பொருட்கள் இல்லாததால், கச்சா எண்ணெய் மற்றும் பிற சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் சர்வதேச சந்தையில் இருந்து நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவதோடு இலங்கை சர்வதேச சந்தையில் சிறிய கொள்வனவரளராக உள்ளது. சர்வதேச பெற்றோலிய சந்தையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு விலை வாங்கியாக இருப்பதால், கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்து நாட்டிற்குள் சுத்திகரிப்பு/விநியோகம் செய்வதனால், கூட்டுத்தாபனமானது எப்போதும் பொருள் விலை இடரிற்கு உட்பட்டுள்ளது. உலகளாவிய எண்ணெய் விலையில் ஏற்படும் பாதகமான இயக்கம், கூட்டுத்தாபனத்தின் விற்பனைச் செலவு, இலாபம் மற்றும் பணப்புழக்கங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தணிப்பதற்கான காரணிகள்

- தொடர்ச்சியான விலைக் கண்காணிப்பு மற்றும் பயன் தரும் விலை நகர்வுகள்
- கையிருப்புக்களை மிகவும் கிரய வினைத்திறனான முறையில் வாங்குதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்

செயல்நுணுக்கங்கள்

- உலகளாவிய சந்தையில் எண்ணெய் விலைகள் குறைவடையும் போது கையிருப்புக்களைப் பேணுவதற்காக களஞ்சியக் கொள்திறனை மேம்படுத்தல்
- கிரயத்தை உள்ளடக்கக் கூடிய வெளிப்படையான விலையிடும் பொறிமுறையை அறிமுகம் செய்தல்
- போட்டித்தன்மையை அதிகரிப்பதற்காக வழங்குநர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல

வட்டி வீத இடர்

திரட்டப்பட்ட இழப்புகளால் கூட்டுத்தாபனத்தின் பங்குகள் குறைந்துவிட்டதால், சக்திப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாட்டிற்குப் பெற்றோலியப் பொருட்கள் சீராக செல்வதை உறுதி செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், செயற்பாட்டு மூலதன ஏற்பாடுகளுக்காக நிதியைக் கடன் வாங்குகிறது. 2021.12.31 அன்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 2.5 பில்லியனுக்கும் மேல் செலுத்த வேண்டிய கடனைக் கொண்டிருந்ததோடு மீளாய்வாண்டின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செலவு ரூபா 25 643 மில்லியன் ஆகும். மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அரசாங்க வணிக வங்கிகள் மூலம் நிறுவப்பட்ட நாணயக் கடிதம் (LC) மூலம் பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்கிறது மற்றும் இந் நாணயக் கடிதங்களின் முதிர்ச்சியின் போது அவை கடன்களாக மாற்றப்படுகின்றன. இலாபத்தன்மையினைப் பாதிக்கக் கூடிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக சுமையினை உருவாக்கும் வட்டி விகிதத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வானது கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றுகையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தணிப்பதற்கான காரணிகள்

- வட்டி வீதத்தைக் குறைப்பதற்காக வங்கிகளுடன் தொடர்ச்சியான பேசுவார்த்தைகள்
- வட்டியை ஈட்டித் தரக் கூடிய மூலங்களில் அன்றாடம் மேல்திகமாக எஞ்சும் பணத்தை முதலீடு செய்தல்
- நிதிக் கிரய கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள்

செயல்நுணுக்கங்கள்

- வங்கிக் கடன்களைச் செலுத்துவதற்காக அரசாங்கமானது நிவாரணக் கூறினை தாமதியாது செலுத்தல்
- அமெரிக்க டொலரிலான கடன்களை ரூபா கடன்களாக மாற்றல் மற்றும் ரூபா தொகுதியைக் கொண்டு கடனைத் தீர்த்தல்
- குறைந்த கிரயத்தைக் கொண்ட நீண்ட கால நிதியிடல் வசதிகளைத் தேடல்

திரவத்தன்மை இடரேந்து நிலை

குறித்த நேரமுறையில் குறுகிய கால ஒப்பந்த மற்றும் ஏனைய பொறுப்புக்களை எதிர்கொள்வதற்கான கூட்டுத்தாபனத்தினுடைய இயலாமையே திரவத்தன்மை இடரேது நிலைகளை உருவாக்குகின்றது. இரண்டு அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்ட குறுகிய கால கடன்பெறல்களினூடாக திருப்திசெய்யப்படும் இ.பெ.கூ இன் மூலதன தேவைப்பாடுகள் மூலமாக அதிகபடியான திரவத்தன்மை இடரேது நிலைகளுக்கு இ.பெ.கூ உட்படுகின்றது. அவை கடன்தொகைகளாகும் போது பொறுப்புக்கள் தீர்க்கப்படாமையின் காரணமாக மேலதிக வட்டிக் கிரயம் அடைக்கப்பட வேண்டும். பொறுப்புக்கள் மற்றும் வழங்குனர் கடன் தொகைகளைத் தீர்ப்பதற்கான கூட்டுத்தாபனத்தின் இயலாமையானது கூட்டுத்தாபனத்தினுடைய மதிப்பினை மங்கச்செய்கின்றது.

தணிப்பதற்கான காரணிகள்

- வேறுபட்ட குறுகிய கால மற்றும் நீண்ட கால நிதிமுறைகளினுடைய சீராக்கல்.
- திரவத்தன்மை இடரேது நிலைகளை தொடர்ச்சியாக கண்காணிப்புடன் அதன் முதிர்ச்சி அட்டவணையின் படி கையாளுதல்.
- பயனுள்ள சேகரிப்புப் பொறிமுறை

செயல்நுணுக்கங்கள்

- கடன் முகாமைத்துவக் கொள்ளையை முறைப்படுத்தல்
- நீண்டகால நிதி வசதிகளுக்கான தேடல்
- ரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய மானிய கூறினை மீட்டல்

பாதுகாப்பு இடரேது நிலை

பெற்றோலிய உற்பத்திகளினுடைய எளிதில் எரியக்கூடிய தன்மையானது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினுடைய உள்ளார்ந்த இடரேது நிலைகளுடன் கையாளப்படுகின்றது. சுத்திகரிப்பு நிலையமானது இவ் இடரேது நிலைகளுக்கு ஆளாகையில், தேவைகளுக்கு இணங்கிக் காணப்படுவதற்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு தர நியமங்கள் உள்ளன. பாதுகாப்பு இடரேது நிலைகளை உறுதிப்படுத்த தொடர்ச்சியான வழக்கமான சரிபார்த்தல்கள் மற்றும் பயிற்சிகள் பின்பற்றப்பட்டன. மேலும், 24 மணித்தியாலயங்கள் இயக்கப்படும் நேரடி விமான நிலையங்களின் இயங்கு தன்மையின் காரணமாக விமான போக்குவரத்து தொழிற்பாடுகளிலும் பாதுகாப்பு இடரேது நிலைகள் வெளிப்பட்டன. பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் தர நிலைகளுக்கு உடன்படாமையானது வணிக நடவடிக்கைகள், கூட்டுத்தாபனத்தினுடைய சொத்துக்கள் அதே போன்று அபராதங்கள், தண்டனைகள் மற்றும் வணிகம் அல்லது இயங்கு தடைகளின் மீதான மேலதிக செலவினை ஏற்படுத்துகின்ற மனித வாழ்வுகள் என்பவற்றைப் பாதிக்கின்றன.

தணிப்பதற்கான காரணிகள்

- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மீதான கடுமையான கொள்ளைகள் மற்றும் நடைமுறைகள்.
- தீ, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மீதான வழக்கமான ஊழியர் பயிற்சிகள்.
- தரநியமங்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான வழக்கமான பராமரிப்பு
- சொத்துக்களை பராமரிப்பதற்கு 3 வருடத்திற்கு ஒருமுறை சுத்திகரிப்பு நிலையத்தினுடைய பாரிய சீரமைப்பு

செயல்நுணுக்கங்கள்

- தொடர்ச்சியான உள்ளக/வெளியக கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்படாத ஊழியர் பயிற்சி.
- நடைமுறையிலுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்களை எதிர்கொள்வதற்கு சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துதல்.
- செயல்பாடுகளுக்கான ISO, LSL போன்ற தர மற்றும் பாதுகாப்பு தர நிலைகளைப் பெறல். .

தகவல் தொழில்நுட்ப இடரேந்து நிலை

நம்பகத்தன்மை வாய்ந்த தகவல் முறைமையானது உரிய காலத்தில் துல்லியமான முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுவதுடன் நிகழ்நிலை தகவல் முறைமையின் எளிதில் கிடைக்கக்கூடிய தன்மையானது சந்தையில் போட்டியிடுவதற்கான உகந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு மிகவும் முக்கியமானதாகும்.

தணிப்பதற்கான காரணிகள்

- அதன் MIS பரிவர்த்தனைகளை பதிவு செய்வதற்கும் அறிக்கையிடுவதற்கும் SAP-ERP முறைமையினைப் பயன்படுத்துதல்.
- பயனாளிகளுக்கு தொடர்ச்சியான தகவல் தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில்தொடர்ச்சியான முதலீடு

செயல்நுணுக்கங்கள்

- தாவர மாதிரியின் பயன்பாடு போன்ற ERP முறைமை-யினுடைய வினைத்திறனான பயன்பாட்டை அதிகரித்தல்.
- SAP-ERP முறைமையின் மீதான சரியான கட்டுப்பாடு
- முறைமையினை நவீன முறைக்கு புதுப்பித்தல். .

மனிதவள இடரேந்து நிலை

பொறுப்புள்ள ஊழியர்கள் கூட்டுத்தாபனத்தினுடைய ஒரு மூலோபாய சொத்துக்களாகுவதுடன் கூட்டுத் தாபனத்தினுடைய சொத்துக்களின் சுமுகமான நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு என்பன சுமூகமான உறவினை உறுதிசெய்கிறது. இ.பெ.கூ ஆனது தகுதிவாய்ந்த ஊழ-யர்களை கவர்வதற்கும் மற்றும் தக்கவைத்துக்கொள்வதற்குமாக செயற்படுவதுடன் ஊழியர்களினுடைய பெறுமதி வாய்ந்த உருவாக்கங்களுக்கு மதிப்பளிப்பதற்கும் மற்றும் அவர்களுடனான வழக்காடலைத் தவிர்ப்பதற்கும் சிறந்த வெகுமதித் திட்டத்தினை வழங்குகின்றது. பொருத்தமற்ற பணியாளர்கள் அல்லது ஓர் ஊழியர் கூட உற்பத்திகளினுடைய தரப்பிரச்சினைக்கு வழிவகுக்கும் அழிவினை ஏற்படுத்தக்கூடிய முரண்பாடுகளை உருவாக்குகின்றனர். அத்துடன் பலவீனமான வாடிக்கையாளர் கையாளுகையானது இ.பெ.கூ இனுடைய செலவு மற்றும் இலாபத்தின் மீது பாதகமான விளைவினையே ஏற்படுத்துகின்றது. ஊழ-யர்களுடனான முரண்பாடுகள் இ.பெ.கூ இற்கு மேலதிக ஊழியர்கள் மற்றும் வழக்குச் செலவினை ஏற்படுத்துகின்றது.

தணிப்பதற்கான காரணிகள்

- தகுதி அடிப்படையிலான ஆட்சேர்ப்பு முறைமை
- சிறந்த வெகுமதி முறைமை
- ஊழியர்களினுடைய பயிற்சிகள் மற்றும் முன்னேற்றங்கள்
- தொழிலாளர் சங்கங்களுடனான கூட்டு ஒப்பந்தங்கள்
- ஊழியர் நலன்பேணல் மற்றும் ஏனைய நன்மைகள் திட்டம்

செயல்நுணுக்கங்கள்

- செயற்திறன் அடிப்படையிலான வெகுமதி முறைமையை மேம்படுத்துதல்.
- அதிகளவான தொழில் மேம்படுத்தல் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் புதிய தண்டுபிடிப்புக்களுக்கான பயிற்சி மற்றும் மேம்படுத்தல்கள்.

கடன் இடரேந்து நிலை

உரிய திகதியில் நிலுவையிலுள்ள விலைப்பட்டியல்களை வாடிக்கையாளர்கள் செலுத்துவதற்கு தவறும் போது கடன் இடரேது நிலைகள் ஏற்படுகின்றன. கூட்டுத்தாபனமானது, பெருமளவான பெற்றோலிய உற்பத்திகளை கடன் அடிப்படையில் விற்பனை செய்வதுடன் பிணையங்களுடன் கடன் அடிப்படையில் பெற்றோலிய உற்பத்திகளை தனியார் தரப்புக்களுக்கும் வழங்குகிறது. அரசாங்க நிறுவனங்களுக்கான கடன் விற்பனைகளானது உத்தரவாதமின்றி உருவாக்கப்பட்டது. வாடிக்கையாளர்கள் எவரேனும் இ.பெ.கூ இற்கான தனது ஒப்பந்த கடப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு தவறுகையில் மற்றும் அவரது கொடுப்பனவுகளை செலுத்த தவறுகையில் அல்லது தாமதமாகையில் பணப்பாய்ச்சல் (திரவநிலை) சிக்கல்களை ஏற்படுத்தும் கடன் இடரேது நிலைகளுக்கு வழிவகுப்பதுடன் இலாபத்தில் மறைமுக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. 90% இற்கும் அதிகமான பெறுமதிகள் சக்தி துறை மற்றும் விமான போக்குவரத்து துறை என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றது. இத் துறைகளின் செயற்பாடுகள் இ.பெ.கூ இனுடைய கடன் நிலைமைகளின் மீதும் இறுதியில் இலாபம் மற்றும் நிதிசார் நிலைமைகளுக்கும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

தணிப்பதற்கான காரணிகள்

- செலுத்த வேண்டிய வரிகளினுடைய ஒரு பகுதிக்கு எதிராக அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறக்கூடியவற்றை அமைத்தல்.
- நிலுவையிலுள்ள மீதிகளை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் தலையீடு
- நிலுவையிலுள்ள மீதிகளை மீட்டெடுப்பதற்கான சட்ட நடவடிக்கை
- கடன் கொள்கைகளை ஒழுங்குபடுத்துதல்.

செயல்நுணுக்கங்கள்

- பாதுகாப்பு அடிப்படையில் அரசாங்க நிறுவனங்களுக்கான கடன் விற்பனைகளும் ஒப்பந்தங்களுக்கு உட்படுதலும்.
- கடன் கொள்ளைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்தல்.
- அரசாங்க நிலுவையிலுள்ள மீதிகளின் மீட்பிற்கான பொதுத் திறைசேரியினுடைய ஈடுபாடு.

நாணயமாற்று வீத இடரேது நிலை

வட்டி மீள்செலுத்தல் உட்பட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் கடன் என்பவற்றினுடைய இறக்குமதி செலவு பெருமளவில் அமெரிக்க டொலர்களில் செலுத்தப்படுகையில் 90% இற்கும் அதிகமான விற்பனை வருமானம் இலங்கை ரூபாய் நாணயத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதன்படி, இ.பெ.கூ ஆனது 2021.12.31 அன்று 2.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையை இ.பெ.கூ பெற்ற கடனாகவும் 1 பில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான தொகையை கடன்கள் மற்றும் விலைப்பட்டியல் சென்மதிகளாகவும் நாணயமாற்று வீத இடரேது நிலையில் அதிகளவில் ஏற்பட்டுள்ளது. ரூபா.1 ஆல் நாணயமாற்று வீதத்தின் நகர்வானது இ.பெ.கூ. இன் நிதிசார் நடவடிக்கைக்கு பில்லியனில் தாக்கம் செலுத்துகின்றது. அமெரிக்க டொலர்களுக்கான இலங்கை ரூபாய் நாணயங்களின் மதிப்பிறக்கமானது இலாபம், நிதிசார் நிலைமைகள் மற்றும் பணப்பாய்ச்சல்களின் மேல் நாணயமாற்று வீத நட்டத்தினுடைய மேல்-திக சுமையை உருவாக்கியுள்ளது.

தணிப்பதற்கான காரணிகள்

- அனைத்து வங்கிகள் மற்றும் சந்தை நடவடிக்கைகள் மற்றும் அமெரிக்க டொலர்களினுடைய மாற்றமடையும் கொள்முதல் என்பவற்றால் குறிப்பிடப்பட்ட நாணயமாற்று வீதத்தினுடைய தொடர்ச்சியான கண்காணிப்பு.
- நியாயமான நாணயமாற்று வீதத்தில் டொலர்களை கொள்முதல் செய்வதற்கு வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல்.
- அமெரிக்க டொலரின் விற்பனை வீதத்தை தீர்மானிப்பதிலும் ஓர் எல்லையினை ஏற்படுத்துவதிலும் வங்கிகளின் மீதான அரசாங்கத்தின் தலையீடு.

செயல்நுணுக்கங்கள்

- எந்தவொரு உரிமையளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளிலிருந்தும் போட்டி வீதத்தில் அமெரிக்க டொலர்களை கொள்ளுமுதல் செய்வதற்கு சுய அதிகாரம் வழங்குதல்.
- அமெரிக்க டொலரின் கடன்களை இலங்கை ரூயாய் கடன்களுக்கு மாற்றுதல்.
- வங்கிகளினுடைய கடன்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தால் மானியக் கூறுகளை வழங்குதல்.

கூட்டுத்தாபன ஆளுகை

சிறந்த கூட்டுத்தாபன ஆளுகையானது, செயற்திறனை மேம்படுத்துவதன் மூலமும், வெளி மூலதனத்திற்கான அவர்களின் அணுகலை அதிகரிப்பதன் மூலமும், மூலோபாய வளர்ச்சி நோக்கங்களை அடைவதன் மூலமும் நிலையான வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது. எமது கூட்டுத்தாபன ஆளுகையானது பணிப்பாளர்கள் சபை , முகாமைத்துவம், பங்குதாரர்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பிற நலனுரித்தாளர்களுக்கு இடையிலான உறவுகளைப் பேணுவதில் கரிசணை கொண்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் வெற்றி மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பதில் எமது ஆளுகைக் கொள்கைகள் கவனம் செலுத்துகின்றன.

எமது கூட்டுத்தாபன ஆளுகைக் கட்டமைப்பானது உள்ளக மற்றும் வெளியகக் கருவிகளில் உள்ள கொள்கைகள் மற்றும் தேவைகளால் வழிநடத்தப்படுகின்றது.

உள்ளகக் கருவிகள
1961 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம்
உப குழுக்கள் சபையின் ஆய்வெல்லைகள்
சபை அங்கீகரித்த கொள்கைகள் மற்றும் கொள்கை கையேடுகள்
நிதி அதிகாரக் கையளித்தல்
நடத்தைக் கோவை
வெளியகக் கருவிகள்
1971 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க நிதிச் சட்டம்
நல்லாட்சிக்கான பொது நிறுவனங்களின் வழிகாட்டல்கள்
திறைசேரி அல்லது அரசாங்க சுற்றறிக்கைகள்
இலங்கை பட்டயக் கணக்காளரினால் இனால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவை
சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் மன்றத்தினால் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கட்டமைப்பு
சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கையிடல் மன்றத்தினால் வெளியிடப்பட்ட நிலையான அறிக்கையிடலுக்கான நியமங்கள்

எங்கள் கூட்டுத்தாபன ஆளுகை அறிக்கையானது சபை தனது கடமைகளை நிறைவேற்றும் முறையின் மூலம் நடைமுறையில் ஆளுகைக்கான எங்கள் அணுகுமுறையை அமைக்கிறது.

பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபை கூட்டுத்தாபனத்தின் பிரதான உந்து சக்தியாக உள்ளதுடன், அது மூலோபாயம், நிதி மற்றும் நற்பெயர் விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கிறது. 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம், சபை செயற்படுவதற்கான எல்லைகளை நிர்ணயித்து சிறந்த கூட்டுத்தாபன ஆளுகையை உறுதிப்படுத்துகிறது.மேலும் பணிப்பாளர்களுக்கான கட்டமைப்பு மற்றும் பதவிக் காலம் உட்பட அவர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புகளையும் அது நிர்ணயிக்கிறது.

பெயர்	பணிப்பாளர் அந்தஸ்து
திரு. மொஹமட் உவைஸ் மொஹமட்	தலைவர்
திரு.எல்.ஈ சுசந்த சில்வா	முகாமைத்துவப் பணிப்பாளர்
திருமதி.ஆர்.எம்.டீ.கே.ரத்னாயக்க	பணிப்பாளர்
திரு.டப்ளியு.டப்ளியு.டீ.சுமித் விஜேசிங்க	பணிப்பாளர்
கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ	பணிப்பாளர்

கூட்டுத்தாபனத்தின் நோக்கு மற்றும் செயற்பணியை அடைவதற்கு தனியாகவும் கூட்டாகவும் செயற்படக் கூடிய பலதரப்பட்ட துறை நிபுணர்களையும் வணிகத் திறன் கொண்டவர்களையும் இச் சபையானது கொண்டமைந்துள்ளது. இவ் அறிக்கையின் 19 முதல் 22 வரையிலான பக்கங்களில் திறமையான பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் தகுதி மற்றும் அனுபவங்களின் சுருக்கமான விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்	பணிப்பாளர் அந்தஸ்து	நியமன/ மீள் நியமனத் திகதி	புதவி விலகிய திகதி
திரு.டப்ளியு.டப்ளியு.டீ.சுமித் விஜேசிங்க	தலைவர்	03.01.2020	
திரு. புத்திக ஆர். மதிஹஹேவ	முகாமைத்துவப் பணிப்பாளர்	17.01.2020	
திருமதி.ஆர்.எம்.டீ.கே.ரத்னாயக்க	பணிப்பாளர்	13.01.2020	
திரு. ஷமிந்த ஹெட்டியாரச்சி	பணிப்பாளர்	17.01.2020	07.12.2021
திரு. திலங்க பொல்வத்த	பணிப்பாளர்	17.01.2020	30.03.2021
திரு. தரிந்து எக்னெந்தகெதர	பணிப்பாளர்	17.01.2020	30.03.2021
திரு.புத்திக இத்தமல்கொட	பணிப்பாளர்	17.01.2020	14.03.2021
திரு.தம்மிக்க ரத்மலே	பணிப்பாளர்	05.03.2021	
கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ	பணிப்பாளர்	09.04.2021	
திரு. பந்துல சமன் குமார	பணிப்பாளர்	21.04.2021	
திரு. ரோஹன தல்பவில	பணிப்பாளர்	07.12.2021	

நியமனங்கள்

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையானது எரிசக்தித் துறை அமைச்சரால் நியமிக்கப்படுகிறது. சபை உறுப்பினர்களுள், ஒரு பணிப்பாளர் பொதுத் திறைசேரியின் ஒரு பிரதிநிதி என்பதுடன் மற்றொரு பணிப்பாளர் எரிசக்தித் துறை அமைச்சின் ஒரு பிரதிநிதியாகவும் இருப்பர். 2021 ஆம் அண்டின் போது தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் தவிர மற்றைய அனைத்துப் பணிப்பாளர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாதவர்களாவர். 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக்

கூட்டுத்தாபன சட்டத்தின்படி, பணிப்பாளர்கள் சபையில் மூன்று வருடங்களுக்கு மேற்படாத ஆரம்ப பதவிக்காலத்தை அவர்களின் மீள்நியமனத்திற்கு உட்பட்ட வகையில் கொண்டிருப்பார்கள்.

சபைக் கூட்டங்கள்

வழமையான சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடைபெறுகையில், விசேட சபைக் கூட்டங்கள் தேவை கருதிய சமயங்களில் கூட்டப்படுகின்றன. கூட்டுத்தாபன மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள் இச்சந்திப்புகளில் அழைப்பின் பேரில் கலந்து கொள்வார்கள். சபைக் கூட்டங்கள் ஒரு முறைசார் நிகழ்ச்சிநிரலுக்கமைய நடத்தப்படுவதுடன் கூட்டங்களிற்கு முன்னதாக கூட்டுத்தாபன முகாமைத்துவத்தால் சம்பந்தப்பட்ட விரிவான பின்னணித் தகவல்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும். மீளாய்வாண்டின் போது 14 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சபைக் கூட்டங்களில் ஒவ்வொரு பணிப்பாளரினதும் வருகைகளை கீழ்வரும் அட்டவணை காண்பிக்கிறது.

2021 ஆம் ஆண்டின் போது 14 சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சபைக் கூட்டத்திற்கான பங்கேற்பானது கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்	வருகை
திரு.டப்ளியு.டப்ளியு.டீ.சுமித் விஜேசிங்க	14/14
திரு. புத்திக ஆர். மதிஹஹேவ	14/14
திருமதி.ஆர்.எம்.டீ.கே.ரத்னாயக்க	14/14
திரு. ஷமிந்த ஹெட்டியாரச்சி	13/13
திரு. திலங்க பொல்வத்த	3/3
திரு. தரிந்து எக்னெந்தகெதர	3/3
திரு.புத்திக இத்தமல்கொட	½
திரு.தம்மிக்க ரத்மலே	7/12
கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ	11/11
திரு. பந்துல சமன் குமார	10/11
திரு. ரோஹன தல்பவில	-/-

சகல தகவல்களும் கூட்டுத்தாபன முகாமைத்துவத்தினால் வழங்கப்படுகின்றதுடன் தேவைப்படின், வினைத்திறனான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சகல பணிப்பாளர்களுக்கும் சபைக்கூட்டத்திற்கு அல்லது உப சபைக் கூட்டங்களுக்கு முன்பாக வெளியக வல்லுநர்களினால் வழங்கப்படும். பொருத்தமான தகவல்களை வழங்குதலும் மற்றும் சபை விளைத்திறனாகவும் வினைத்திறனாகவும் அவர்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் சரியான நேரத்தில் பணிப்பாளர்கள் சபையினால் கோரப்படும் தகவல்களை வழங்குதலும் கூட்டுத்தாபன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பணிப்பாளர்களின் சுயாதீனம்

சபையானது ஒரு சுயாதீனமான திறனில் செயற்படுகின்ற நிவைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களை அதிகளவில் கொண்டுள்ளது. நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் முகாமைத்துவ சுயாதீனமானவர்கள் என்பதுடன் அவர்களின் சுயாதீன தீர்ப்பின் தீர்மானங்களை பொருள் ரீதியாக பாதிக்கக்கூடிய எந்தவொரு வணிக அல்லது உறவிலிருந்தும் விடுபட்டவர்களாவர். வருடாந்த சுயாதீன அல்லது சுயாதீனமற்ற அறிவிப்புகள் நிதியியல் அறிக்கைகள் அறிக்கையிடும் திகதியில் சகல பணிப்பாளர்களிடமிருந்தும் பெறப்படுகின்றன. 176 ஆம் பக்கத்தில் உள்ள நிதியியல் அறிக்கைகளின் 31 ஆம்

இலக்க குறிப்பின் கீழ் பணிப்பாளர்களின் நலன்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்

கூட்டுத்தாபனத்தின் வெற்றி மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றுக்கான முழுமையான பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் சபையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் வகிபாகம், நலனுரித்தாளர்களின் சிறந்த நலன்களைப் பாதுகாக்கும் அதேவேளையில், கூட்டுத்தாபனத்தின்

மூலோபாய நெறிப்படுத்தல் மற்றும் முழுமையான செயலாற்றுகையை நோக்கி சிறந்த தலைமைத்துவத்தை நடைமுறைப்படத்துவதில் முதன்மைக் கவனம் செலுத்துகிறது.

- இ.பெ.கூ இன் மூலோபாயத்தைப் பயனுறுதல், அதன் தொழில்பாட்டு ரீதியிலான செயலாற்றுகை மற்றும் நிதிப் பெறுபேறுகளை
- மேற்பார்வை செய்தல்
- இ.பெ.கூ இன் கூட்டாண்மை ஆளுகைக் கட்டமைப்பின் இறுதிப் பாதுகாவலனாக இருத்தல்
- இடர் முகாமைத்துவம் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இணக்கப்பாட்டு முறைமைகளை நிறுவுதல்.
- நிதியியல் அறிக்கையிடலின் நேர்மைத் தன்மையினை உறுதிப்படுத்தல்.
- நியதிச் சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் நன்நெறி நியமங்களுடன் இணங்கல்.

பணிப்பாளர்கள் சபையானது ஒதுக்கப்பட்ட பொறுப்பை அடைவதற்கு அதன் அதிகாரங்கள் அல்லது கடமைகளை ஏதேனும் பணிப்பாளர் அல்லது ஊழியருக்கு ஒப்படைக்கலாம். கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான கொள்கைகளை உருவாக்கியும் மற்றும் நடைமுறைப்படுத்தியும் மற்றும் அவற்றின் பயனுறுதியான அமுல்படுத்தலை உறுதிப்படுத்தும் ஒரு செயல்முனைப்பான முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு சபை முயற்சி செய்கிறது. உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அணியின் அனைத்து உறுப்பினர்களுடனும் சபை உறுப்பினர்கள் நேரடியாக தொடர்பாடுவர். மேலும், சபையானது இடர்முகாமைத்துவத்திற்கான அமைப்பொன்றை நிறுவுவதுடன் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுடன் இணங்குதலும் வேண்டும். அது இ.பெ.கூ இன் சொத்துக்கள் மற்றும் வினைத்திறனான மற்றும் விளைத்திறனான வள ஒதுக்கீடுகள் மற்றும் பயன்பாடுகள் என்பவற்றை பாதுகாக்க உதவும்.

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள், வருடாந்தப் பாதீடுகள், கூட்டாண்மைத் திட்டம், ஆண்டறிக்கை, செயற் திட்டம் என்பவற்றுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் நாளாந்த அடிப்படையில் நிதிச் செயலாற்றுகையினை மீளாய்வு செய்தல் ஆகியவற்றுக்கும் இச் சபையானது பொறுப்பாக உ ள்ளது. மேலும், ஆளணியினரின் பதவி உயர்வு, பிரதான நியமனங்கள், பாரிய மூலதன முதலீடுகள், கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு கடன் மற்றும் கடன் வசதிகள் தொடர்பான அனுமதியினை வழங்குகின்றது.

தலைவரின் வகிபாகம்

தலைவர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவார், தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் சகல பணிப்பாளர்களும் தமது கடமைப்பொறுப்புக்களை விளைத்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு வினைத்திறனாக பங்காற்றுவர் என்பதை உறுதிசெய்வார்.

தலைவரின் வகிபாகம் மற்றும் கடமைப்பொறுப்புக்கள்

- தகுந்த முறையில் குழு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல
- கூட்டங்களுக்கு முன்பாக பணிப்பாளர்களுக்கு தகவல்களை வழங்குதல
- முறையான பதிவுகளைப் பேணல்
- சபை உறுப்பினர்களை பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஊக்குவித்தல் மற்றும் உதவுதல்
- கலந்துரையாடலின் போது சகல பணிப்பாளர்களின் பங்களிப்பினையும் உறுதிசெய்தல
- சகல சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்குதலை உறுதிசெய்தல்
- கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல்

முகாமைத்துவப் பணிப்பாளரின் வகிபாகம்

முகாமைத்துவப் பணிப்பாளர், பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட முடிவுகளை செயற்படுத்துகிறார். அவர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகத்தின் பொறுப்பாளராக உள்ளார். முகாமைத்துவப் பணிப்பாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விளைத்திறனாகவும் வினைத்திறனாகவும் இயங்குவதை உறுதி செய்வதற்காக நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் மேற்பார்வையிடுகிறார்.

நிறுவனத்தின் செயற்பணி மற்றும் நோக்கங்களை அடையவும் உரிய நியதிச் சட்டங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கும் வகையில் முகாமைத்துவப் பணிப்பாளர், குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு, தொழிற்துறையின் வளர்ச்சிகள் குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தவும், அதற்கான கொள்கைகள் உருவாக்கப்படுவதை உறுதி செய்யவும், செயல்நுணுக்கப் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குகிறார்.

பணிப்பாளர்களின் ஊதியம்

தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோரின் கட்டணங்கள் அல்லது ஊதியம் பொதுத் திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டு செலுத்தப்படுகின்றது. முகாமைத்துவத்திற்குச் செலுத்தப்படும் பணம் மற்றும் ஊதியம் என்பன 177 ஆம் பக்க நிதியியல் அறிக்கைகளின் 31 ஆம் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்படுகிறது.

உப குழுக்கள்

பணிப்பாளர்கள் சபையில் அவர்களின் பொறுப்புகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதில் உதவி செய்யும் குறிப்பிட்ட திட்டங்களுக்காக பணிப்பாளர்கள் சபையினால் சபை உப குழுக்கள்

நிறுவப்பட்டிருக்கின்றன. கணக்காய்வுக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு என்பன பிரதான குழுவின் சில கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளன.

கையிருப்பு மீளாய்வுக் குழு ஏனைய பொருத்தமான தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்புடன் நாட்டின் உற்பத்திகள் கிடைக்கக்கூடிய தன்மையை உறுதி செய்யும் இடத்திலுள்ளது. வெளிப்படையான பெறுகை செயல்முறையை உறுதிசெய்வதற்காக பொதுத் திறைசேரியினால் தொடர்புடைய அதிகார மட்டங்களுடன் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகைக் குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது சபைக்கு பொறுப்புக்கூறல் கடப்பாட்டுடன் முகாமைத்துவத்திலிருந்து ஒரு சுயாதீனமான வகிபங்கை வகிக்கின்றது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு மூன்று நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இந்த வருடாந்த அறிக்கையின் பக்கங்கள் 93 மற்றும் 94 இல் கணக்காய்வுக் குழு அறிக்கையில் அதன் கட்டமைப்பு, வகிபாகம், கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் கணக்காய்வுக் குழுவின் வருகைப் பதிவு என்பன விபரிக்கப்பட்டுள்ளன.

கையிருப்பு மீளாய்வுக் குழு

கையிருப்பு மீளாய்வுக் குழு தற்போதைய கையிருப்பு நிலைமையை ஆராய்ந்த பின்னர் அடுத்த மூன்று மாதங்களுக்கான கையிருப்புத் தேவைப்பாட்டை மதிப்பிடுகின்றது. அது, CPSTL, LIOC மற்றும்

இ.மி.ச பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் வாராந்தம் கூடுகிறது. நாட்டில் எதிர்வு கூறப்பட்டுள்ள கேள்வி, சுத்திகரிப்பாலை உற்பத்திச் செயற்றிறன்கள் மற்றும் தாங்கிகளின் களஞ்சியக் கொள்திறன் என்பவற்றிற்கு கவனம் கொடுத்த பின் இறக்குமதி செய்ய வேண்டிய அளவுகள் மற்றும் கப்பலில் சரக்கேற்றல் என்பன திட்டமிடப்படுகின்றன. இந்த கூர்மையான கண்காணித்தல் செயன்முறையானது

இறக்குமதி, சுத்திகரித்தல் மற்றும் வைத்திருக்கும் செலவு என்பவற்றைக் குறைக்கும் வேளையில் நாட்டில் எரிபொருளின் தடைகளற்ற வழங்கலுடன் சுமுகமான செயற்பாட்டுக்கு கூட்டுத்தாபனத்தை

இயலச் செய்கிறது.

பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம், அரசாங்க நிறுவனங்களுக்காக உற்பத்திகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் என்பவற்றை பெறுகை செய்வதற்கு பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுக்கள் என்பன

ஸ்தாபிக்கப்படுகின்றன அல்லது பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் என்பவற்றை கொள்முதல் செய்வதற்கு தேவைப்படும் போது ஸ்தாபிக்கப்படுகின்றன.

இ.பெ.கூ இற்கு நிதி ரீதியாக கூடுதல் அனுகூலமான மற்றும் தர ரீதியாக மிகச் சிறந்த சேவைகள் மற்றும் வழங்கல்களைப் பெறுவதற்கும் மற்றும் தாமதங்களைக் குறைத்து, வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தே.பெ.நி ஆல் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு செயற்படுகின்றன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொள்வனவுகளின் தொழில்நுட்ப அம்சங்களுக்கு கவனம் செலுத்துகையில் பெறுகைக் குழு ஒரு கொள்வனவின் ஏனைய அம்சங்கள் மீது கவனம் எடுக்கிறது. பிராந்திய பெறுகைக் குழு, திணைக்கள ரீதியான பெறுகைக் குழு, அமைச்சு பெறுகைக் குழு, அமைச்சரவை நியமன பெறுகைக் குழு, செயல்திட்டப் பெறுகைக் குழு ஆகியவை கொள்வனவின் பெறுமதியின் அடிப்படையில் செயற்படுகின்றன.

பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் பிரகாரம், அரசாங்க நிறுவனங்களுக்காக உற்பத்திகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் என்பவற்றை பெறுகை செய்வதற்கு பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்பக் குழுக்கள் என்பன

ஸ்தாபிக்கப்படுகின்றன அல்லது பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் என்பவற்றை கொள்முதல் செய்வதற்கு தேவைப்படும் போது ஸ்தாபிக்கப்படுகின்றன.

இ.பெ.கூ இற்கு நிதி ரீதியாக கூடுதல் அனுகூலமான மற்றும் தர ரீதியாக மிகச் சிறந்த சேவைகள் மற்றும் வழங்கல்களைப் பெறுவதற்கும் மற்றும் தாமதங்களைக் குறைத்து, வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தே.பெ.நி ஆல் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு செயற்படுகின்றன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கொள்வனவுகளின் தொழில்நுட்ப அம்சங்களுக்கு கவனம் செலுத்துகையில் பெறுகைக் குழு ஒரு கொள்வனவின் ஏனைய அம்சங்கள் மீது கவனம் எடுக்கிறது. பிராந்திய பெறுகைக் குழு, திணைக்கள ரீதியான பெறுகைக் குழு, அமைச்சு பெறுகைக் குழு, அமைச்சரவை நியமன பெறுகைக் குழு, செயல்திட்டப் பெறுகைக் குழு ஆகியவை கொள்வனவின் பெறுமதியின் அடிப்படையில் செயற்படுகின்றன.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

கூட்டுத்தாபனம் சுமுகமாகச் செயற்படுவதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின் ஒரு வினைத்திறனான முறைமை அத்தியாவசியமாகும். கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதையும் முறையான பதிவுகள் பேணப்படுதல் மற்றும் சரியான நேரத்தில் சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்வதையும் இந்த முறைமை நோக்காகக் கொண்டது.

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நிதி, செயற்பாடு மற்றும் இடரேதுநிலை முகாமைத்துவத்துடன் கூடிய இணக்கப்பாட்டுக் கட்டுப்பாடுகள் உட்பட, அனைத்து வகைக் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. நடைமுறையில், கொள்கைகள் மற்றும் வணிகக் குறிக்கோள்களை அடைவதற்குத் தவறும் இடரேதுநிலையை ஒழிப்பதை விட, ஓர் ஏற்றுக்கொள்ளத்தக்க இடரேதுநிலை வரைவாக்கத்தினுள் இ.பெ.கூ இன் முக்கிய இடரேதுநிலை விடயங்களை, உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை முகாமை செய்கின்றது. உள்ளகக் கட்டுப்பாடுகளின் முறைமையானது நிதித் தகவல்கள் பொருள் ரீதியான தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளது என நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றது.

உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்களானவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல், இடர் மட்டம், இடர் ஏற்படக் கூடிய வாய்ப்பு, இடர்ப் பரப்புக்களை அடையாளங் காணல் மற்றும் பரிவர்த்தனைகளின் பூரணத்தன்மையினை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அவை உபயோகத்தில் இருந்தன. குறிப்பீடு செய்யப்பட்ட விசேட விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும் நோக்கத்துடன் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டிற்கு விசேட கணக்காய்வுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம் மற்றும் கடமைப்பொறுப்புக்கள்

- உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையின் போதியதன்மையினை மீளாய்வு செய்தல் மற்றும் சீராக்கப்பட வேண்டிய பலவீனங்களை கலந்துரையாடல்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் அதில் உள்ள கண்டுபிடிப்புக்களின் தற்போதைய நிலமையைக் கலந்துரையாடல்.
- அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்குஅமைய கணக்காய்வுகளை மேற்கொண்டமை.
- விசேட கணக்காய்வு விசாரனையினை நடாத்தல்.
- செயற்பாட்டு முன்னேற்றங்கள் மற்றும் வினைத்திறன் அதிகரிப்பு ஆகியவற்றை அடையாளங்காண முகாமைத்துவ கணக்காய்வுகளை மேற்கொண்டமை.

உள்ளகக் கணக்காய்வுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனத்தில் நல்லாட்சியை ஒத்துழைக்க உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடானது தொழில் ரீதியாக தகைமை கொண்ட ஊழியர்களினால் முகாமை செய்யப்படுகின்றது.

கூட்டுத்தாபன முகாமைத்துவம்

காலத்திற்குக் காலம் பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்ட மூலோபாய வழிப்படுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் அனுமதிக்கப்பட்ட நடைமுறைகள் என்பவற்றின் அடிப்படையில்

கூட்டுத்தாபனத்தின் வழமையான விவகாரங்களை தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளரும் முகாமை செய்கின்றனர். அவர்கள் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதோடு வேறுபாடுகளை கண்காணித்து செயல்நுணுக்க வழிகாட்டலுடன் மறுசீரமைக்க சரியான நடவடிக்கையினை எடுக்கின்றது.

இலகுவாகக் கட்டுப்படுத்தும் நோக்கங்களுக்காக செயற்பாடுகள் மற்றும் பிரதான நிர்வாக நடவடிக்கைகள் என்பன சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் உட்பட தலைமை அலுவலக செயற்பாடுகள் என்பன பிரதானமாக இரண்டாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சுத்திகரிப்பு நிலையச் செயற்பாடுகளானவை மின்னியல் மற்றும் உபகரணங்கள், உற்பத்தி மற்றும் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் செயற் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் போன்ற வேறுபட்ட முக்கிய பகுதிகளுக்குப் பொறுப்பான பிரதி சுத்திகரிப்பு முகாமையாளர்களின் ஒத்துழைப்புடன் சுத்திகரிப்பு நிலைய முகாமையாளரால் தலைமைதாங்கப்படுகின்றது.

தலைமை அலுவலக செயற்பாடுகளானவை பல்வேறு செயற்பாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு செயல் நடவடிக்கையும் ஒரு பிரதிப் பொது முகாமையாளர் அல்லது கூட்டுத்தாபனத்தின் நாளாந்த செயற்பாடுகளில் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு ஒத்தாசை அளிக்கின்ற ஒரு முகாமையாளரால் தலைமை தாங்கப்படுகின்றது. சுத்திகரிப்பு நிலைய மற்றும் தலைமை அலுவலகம் ஆகிய இரண்டினதும் கூட்டுத்தாபன முகாமையாளர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுப் பரப்புக்களில் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் திறமை மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளனர். கூட்டுத்தாபன முகாமையாளர்களின் சுருக்கமான சுயவிபரங்களுடன் அவர்களது தகைமைகள் என்பன இவ் அறிக்கையின் 23 முதல் 26 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணக்கப்பாடு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது தனது சகல செயற்பாடுகளிலும் வெளிப்படைத்தன்மையினைப் பேணுவதற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. பிரயோ-கிக்கத்தக்க எல்லா சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள், தரநியமங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் கோவைகள் என்பவற்றுடன் இணங்குதல் கூட்டுத்தாபனத்தின் வெற்றி மற்றும் நிலைபேறான தன்மை என்பவற்றுக்கு அடிப்படையானவையாகும்.

இ.பெ.கூ இன் கூட்டுத்தாபன ஆளுகையானது, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபன ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைக் கோவையில் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் 2003 இல் நிதி அமைச்சின் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாட்சிக்கான பொதுத் தொழில்முயற்சிகள் வழிகாட்டல்கள் என்பவற்றால் கட்டமைக்கப்பட்டுள்ளது. வலுவான கூட்டுத்தாபன ஆளுகை நடைமுறைகளைப் பாதுகாக்கும் அவ் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் ஆகியவற்றிற்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் நாளாந்த செயற்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையுடன் கூடிய நிதிசார் கூற்றுகள் வருடாந்தம் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபையின் உப குழுவாகும். உரிய தகைமை மற்றும் அனுபவத்தைக் கொண்ட நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதோடு அவர்கள் பணிப்பாளர் சபைக்குப் பொறுப்புக்கூறும் கடமைபபாட்டைக் கொண்டுள்ளனர். பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளுடன் தமது கண்டுபிடிப்புக்களை அறிக்கையிடும் கணக்காய்வுக் குழுவின் முதன்மை வகிபங்கானது நிதி அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வு நடைமுறையின் நேர்மையை உறுதிப்படுத்தல் மற்றும் சரியான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ முறைமை-களை பேணல் ஆகும். குழுவின் பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது

- அறிக்கையிடும் தரநியமங்களுக்கு இணங்க போதியளவான வெளிப்படுத்தல்களை உறுதிப்படுத்துவதற்காக நிதி அறிக்கையிடல் முறைமையை மேற்பார்வை செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் நேர்மை மற்றும் அவற்றில் உள்ள முக்கியமான அறிக்கையிடல் தீர்மானங்கள்.
- வணிகச் செயற்பாடுகளில் உள்ள இணக்கப்பாடுகளைக் கண்காணித்தல்.
- உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் வினைத்திறன் மற்றும் செயற்பாடுகளை மீளபய்வு செய்தல்.
- உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ முறைமையின் வினைத்திறனை மீளாய்வு செய்தமை.
- கூட்டுத்தாபனமானது உட்படக்கூடிய இடர்களையும் அவ் இடர்களைத் தணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் வினைத்திறன் ஆகியவற்றை மீளாய்வு செய்தல்.
- ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தை கலந்துரையாடுதல் மற்றும் அனுமதித்தல்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட அறிக்கையைக் கலந்துரையாடியமை.

குழுவின் கட்டமைப்பு

கணக்காய்வுக் குழு, பணிப்பாளர்கள் சபையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் மீளாய்வுக்கு உட்பட்ட இந்த வருடத்தின் போது, கூட்டுத்தாபனமானது பணிப்பாளர்கள் சபையினால் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்ட நான்கு (04)கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்தியுள்ளது.

திருமதி.ஆர்.எம்.டீ.கே ரத்நாயக்க(தலைவர்), திரு.ஷமிந்த ஹெட்டியாரச்சி(உறுப்பினர்) மற்றும் திரு.தரிந்து எக்நந்தகெதர(உறுப்பினர்) ஆகியோர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 92 மற்றும் 93 ஆம் இலக்க குழுக் கூட்டத்திற்கான குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர் மற்றும் திருமதி.ஆர்.எம்.டீ.கே ரத்நாயக்க(தலைவர்), திரு.ஷமிந்த ஹெட்டியாரச்சி (உறுப்பினர்) மற்றும் கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ (உறுப்பினர்) ஆகியோர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 94 மற்றும் 95 ஆம் இலக்க குழுக் கூட்டத்திற்கான குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் சுருக்கமான விபர-மானது 20 முதல் 22 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது. நிதி,செயற்பாடு மற்றும் ஆளுகை விடயங்களில் அவர்களது தனியான மற்றும் கூட்டான நிபுணத்துவமானது அவர்களது கடமைகளை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

பொது வர்த்தகத் தொழில்முயற்சிகளில் கணக்காய்வுக் குழுக்களை நடத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள திறைசேரிச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறான பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறிப்பான கடமைகள் ஆகிய விடயங்களை உள்ளடக்கி குழுவின் கணக்காய்வுப் பட்டயம் தயார் செய்யப்பட்டுள்ளது.

கூட்டங்கள்

கூட்ட இல.	திகதி	பங்கு பற்றல்	வருகை தந்த உறுப்பினர்கள்
92	02.02.2021	3/3	திருமதி.ஆர்.எம்.டீ.கே ரத்நாயக்க திரு.ஷமிந்த ஹெட்டியாரச்சி திரு.தரிந்து எக்நந்தகெதர
93	29.03.2021	3/3	திருமதி.ஆர்.எம்.டீ.கே ரத்நாயக்க திரு.ஷமிந்த ஹெட்டியாரச்சி திரு.தரிந்து எக்நந்தகெதர
94	01.10.2021	3/3	திருமதி.ஆர்.எம்.டீ.கே ரத்நாயக்க திரு.ஷமிந்த ஹெட்டியாரச்சி கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ
95	29.12.2021	3/3	திருமதி.ஆர்.எம்.டீ.கே ரத்நாயக்க, திரு.ஷமிந்த ஹெட்டியாரச்சி கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, மேற்குறிப்பிட்டவாறு கணக்காய்வுக் குழுவிடம் நம்பிக்கைப் பொறுப்பளிக்கப்பட்ட கடமைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு நான்கு (04) கணக்காய்வுக் குழு கூட்டங்கள் நடைபெற்றன.

கணக்காய்வுக் மற்றும் முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காகவும் முன்வைப்பதற்காகவும் பின்பற்றப்பட்ட நிதியியல் அறிக்கையிடும் முறைமையை குழு மீளாய்வு செய்தது. நிதிசார் கூற்றுக்களைத தயார் செய்வதற்காகப்

பயன்படுத்திய SLFRS/ LKAS உட்பட அறிக்கையிடல் முறைமையுடன் ஏற்றுக்கொண்டதும் மற்றும் இணங்கிக் கொண்டதுமான கணக்கீட்டுக் கொள்கைகளின் நிலையான தன்மையையும் கூட அது உறுதிப்படுத்துகிறது. மேலும் இக் குழுவானது கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் போதுமான தன்மை, நேரப் பொருத்தப்பாடு மற்றும் இருப்பு ஆகியவற்றையும் மீளாய்வு செய்கின்றது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கு மேலதிகமாக குழுவானது தனது கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக பின்வரும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

- 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையைக் கலந்துரையாடியமை.
- 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின் சுருக்கம் கண்காணிக்கப்பட்டமை.
- நிலுவையில் உள்ள ஒழுக்காற்று நடவடிக்கைள், மீள்செலுத்தப்படாத வீட்டுக் கடனுடன் தொர்புடைய பிரச்சினைகள் மற்றும் மாதரந்தப் பயன்பாட்டுக் கட்டண சேகரிப்புடன் தொர்புடைய பிரச்சினைகளின் நடைமுறை நிலை பற்றி கலந்துரையாடியமை.
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டொரேஜ் டர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கிடையிலான மீதிகளில் உள்ள வேறுபாடுகள் கலந்துரையாடப்பட்டமை.
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுச் சாசனம் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டமை.
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுக் கையேடு மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டமை.
- பிரதான செயலாற்றுகைச் குறிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டமை
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இடர் முகாமைத்துவப் பகுப்பாய்வுச் செயற்பாடுகள் கலந்துரையாடப்பட்டமை.

உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு

உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனை மதிப்பிடுதல், இடரேதுநிலைப் பகுதிகளை இனங்காணுதல் மற்றும் பணிப்பாளர்கள் சபைக்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்காக பரிவர்த்தனை நடவடிக்கைகளின் துல்லியத்தன்மை மற்றும் முழுமையான தன்மையைச் சரிபார்த்தல் ஆகியவற்றை உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம் உள்ளடக்குகின்றது.

உள்ளகக் கணக்காய்வினால் தயாரிக்கப்படும் ஒரு கணக்காய்வுத் திட்டமானது வருட ஆரம்பத்தின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்படுவதோடு கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாக்கும் வகையில் உள்ளகக் கணக்காய்வு முறைமைகளானவை உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வு அறிக்கைகளின் சாராம்சமானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் மீளாய்வும் செய்யப்படுகின்றது.


மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, முகாமைத்துவத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க கட்டாய நிலுவைகளின் மீதான கண்காணிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் பற்றிய விசேட விசாரணையில் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடானது ஈடுபடுகின்றது. கணக்காய்வுப் பரிந்துரைகளானவை செயற்பாட்டில் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வுகள் காலத்திற்குக் காலம் அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

மீளாய்விற்கு உட்பட்ட வருடத்தில் உள்ளகக் கணக்காய்வினால் செயலாற்றப்பட்ட பணிகளின் சாராம்சம்.

- உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையின் போதியதன்மையினை மீளாய்வு செய்தல் மற்றும் சீராக்கப்பட வேண்டிய பலவீனங்களை கலந்துரையாடல்.
- கணக்காய்வபளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் அறிக்கையின் கண்டுபிடிப்புக்களில் உள்ள தற்போதைய நிலை ஆகியவற்றைக் கலந்துரையாடல்.
- அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்கமைய 90 கணக்காய்வுகளை மேற்கொண்டமை.
- கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் உள்ளகக் அறிக்கைகளைக் கலந்துரையாடியமை.
- செயற்பாட்டு விருத்திகள் மற்றும் வினைத்திறன் அதிகரிப்பு ஆகியவற்றை முகாமைத்துவக் கணக்காய்வினை மேற்கொண்டமை

முடிவுரை

கூட்டுத்தாபனத்தின் நிர்ணயிக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் முகாமை செய்யப்பட்டுள்ளது என்பதற்கான உறுதிப்படுத்தல்களை கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை வழங்குகின்றது எனவும் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் கணக்கிடப்பட்டு போதியளவு பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற அபிப்ராயத்தையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது கொண்டுள்ளது.



ஆர். எம். டீ. கே. ரத்னாயக்க

தலைவர்- கணக்காய்வுக் மற்றும் முகாமைத்துவக குழு

பணிப்பாளரின் அறிக்கை

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டத்தின் பிரிவு 32(3) இன் படி 2021 டிசம்பர் 31 ஆம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுவின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள், தலைவரின் செய்தி, முகாமைத்துவப் பணிப்பாளர்களின் மீளாய்வு, முகாமைத்துவ மீளாய்வு, பெறுமதி உருவாக்கம், கூட்டுத்தாபன ஆளுகை, கணக்காய்வு குழு அறிக்கை, கணக்காய்வாளர்களின் அறிக்கை மற்றும் பிற தகவல்கள் என்பனவற்றுடன் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு அரசுடைமை வணிகத் தொழில் முயற்சியாகும். கூட்டுத்தாபனம் ஒரு பணிப்பாளர்கள் சபையால் முகாமைத்துவம் செய்யப்படுகிறது. கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இல. 609, கலாநிதி. டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

இவ் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் வெளியிட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRSs/LKASs) மற்றும் 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 1961 ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் அதற்குப் பிந்தியதான திருத்தங்களின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கமைவாக சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்களுடன் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது.

பிரதான நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தின் பிரதான நடவடிக்கைகள் இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல் மற்றும் விற்பனை செய்தல் என்பனவையாகும். கூட்டுத்தாபனம் அதன் பெற்றோலிய உற்பத்திகள் சிலவற்றை ஏற்றுமதியும் செய்கின்றது.

துணை நிறுவனம்

இ.பெ.கூ, 2/3 என்ற ஒரு பங்கு உரிமையுடன் கூடிய, வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் (CPSTL) எனும் ஒரு துணை நிறுவனத்தைக் கொண்டுள்ளது. CPSTL இன் பிரதான நடவடிக்கைகள் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் ஏற்பாடு மற்றும் விநியோக வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளின் வழங்கல் என்பனவையாகும்.

கூட்டுத்தாபனம் மற்றும் குழுவின் நிதிக் கூற்றுகள்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான, கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகள் 2022 ஒக்டோபர் 19 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டது.

கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வின் கீழான வருடத்தின் போது, இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மீதான சுங்க வரிக்கான கணக்கீட்டுக கொள்கை தவிர, 'நிதிசார் கூற்றுக்களின் சமர்ப்பணம்' தொடர்பான இலங்கை கணக்கீட்டுத் தராதரம் இல.1 இனால் தேவைப்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்திணைகின்றதான அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் இருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கையின் மாற்றத்தின் தாக்கம் மற்றும் சரிக்கட்டல்கள் என்பன நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கணக்காய்வாளரின் அறிக்கை

நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையானது 102 முதல் 134 பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செயற்பாட்டு மீளாய்வு

2021 நிதியாண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயல்திறன் மற்றும் விவகாரங்களின் மதிப்பாய்வு, தலைவரின் மீளாய்வில் பக்கங்கள் 13 முதல் 15 வரையிலும், முகாமைத்துவப் பணிப்பாளரின் மீளாய்வில் பக்கங்கள் 16 முதல் 18 வரையிலும், கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை அறிக்கையில் பக்கங்கள் 35 முதல் 44 வரையிலும் உள்ளன.

பணிப்பாளர்கள்

2021.12.31 ஆம் திகதி ஆகும் போது பதவி வகிக்கும் பணிப்பாளர்களின் பெயர்கள்:

பெயர்	பணிப்பாளர் அந்தஸ்து
திரு.டப்ளியு.டப்ளியு.டீ.சுமித் விஜேசிங்க	தலைவர்
திரு. புத்திக ஆர். மதிஹஹேவ	முகாமைத்துவப் பணிப்பாளர்
திருமதி.ஆர்.எம்.டீ.கே. ரத்னாயக்க	பணிப்பாளர்
திரு. தம்மிக்க ரத்மலே	பணிப்பாளர்
கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ	பணிப்பாளர்
திரு. பந்துல சமன்குமார	பணிப்பாளர்
திரு. ரோஹன தல்பவில	பணிப்பாளர்

தற்போதைய பணிப்பாளர் சபை

பெயர்	பணிப்பாளர் அந்தஸ்து
திரு. மொஹமட் உவைஸ் மொஹமட்	தலைவர்
திரு.எல்.ஈ சுசந்த சில்வா	முகாமைத்துவப் பணிப்பாளர்
திருமதி.ஆர்.எம்.டீ.கே. ரத்னாயக்க	பணிப்பாளர்
திரு.டப்ளியு.டப்ளியு.டீ.சுமித் விஜேசிங்க	பணிப்பாளர்
கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ	பணிப்பாளர்

கூட்டங்கள்

சபைக் கூட்டங்கள், கணக்காய்வுக் மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியதான பணிப்பாளர்களின் கூட்டங்கள் பற்றிய விபரங்கள் கூட்டுத்தாபனத்தின் ஆளுகை அறிக்கையில் 87 இலிருந்து 94 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

மீளாய்வின் கீழான வருடத்தின் போது நடைபெற்ற கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை பற்றிய விபரம் வருடாந்த அறிக்கையின் 88 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் ஊதியம்

குறித்த வருடத்தின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட பணிப்பாளர்களின் ஊதியம் பற்றிய விபரம் பின்வருமாறு;

	2021 Rs. Mn	2020 Rs. Mn
பணிப்பாளர்களின் ஊதியம்	10.568	5.547

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

பணப்பாளர் சபையானது, கூட்டுத்தாபனத்தில் உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுள்ள மற்றும் விரிவான அமைப்பை நிறுவியுள்ளது. உள்ளக நடைமுறைகள், இடர்ப் பகுப்பாய்வு, இணக்கப்பாடுகள் மற்றும் பிற கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்யவும், மதிப்பீடு செய்யவும் சரிபார்க்கவும் தகுதிவாய்ந்த பட்டயக் கணக்காளர் தலைமையில் ஒரு தனி உள்ளகச் செயற்பாடு உள்ளது. கண்காணிப்புகள் காலத்துக்குக் காலம் கணக்காய்வுக் குழுவிடம் குறிப்பீடு செய்யப்படுகின்றன. அதுமட்டுமின்றி, அவதானிப்புகளை சரிசெய்வதற்கான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நிர்வாகத்திற்கு கண்காணிப்புகள் அனுப்பப்படுகின்றன.

இடர் முகாமைத்துவம்

வாய்ப்பான இடர்களை அடையாளங்கண்டு மதிப்பீடு செய்வதற்காகவும் கூட்டுத்தாபனத்தினால் வெளிப்படுத்தப்பட்ட இடர்களைக் குறைப்பதற்கான செயற்படக் கூடிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது வினைத்திறனான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் இடர் முகாமைத்துவக் குழு ஒன்றை நிறுவியுள்ளது. இடர் பற்றிய விரிவான விபரங்கள் மற்றும் அவற்றைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் எடுக்கப்பட்ட குறிப்பான நடவடிக்கைகள் இடர் முகாமைத்துவ அறிக்கையின் 81 இலிருந்து 86 வரையான பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன.

நிதிச் செயலாற்றுகை

உலகெங்கும் பரவிய கொவிட் 19 தாக்கத்தின் காரணமாக 2021 ஆம் ஆண்டானது குழப்பங்கள் நிறைந்த சூழல் ஒன்றைக் கொண்டிருந்தது. கொவிட் 19 இன் தாக்கத்திலிருந்து ஓரளவு மீளக் கூடியதாக இருப்பினும், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்துடனான சர்வதேச எரிபொருள் விலைகளின் ஏற்றமானது குறித்த வருடத்திலான நிதியியல் செயலாற்றுகையில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறித்த வருடத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகளானவை இரு மடங்காக அதிகரித்ததோடு அவ் அதிகரிப்புக்களானவை கூட்டுத்தாபனம் உட்பட்ட இழப்புக்களை மீட்பதற்கு போதியதாக இல்லை. 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றுகையின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

	2021 ரூபா.மி	2020 ரூபா.மி
நிகர விற்பனை வருமானம்	584,754	522,532
விற்பனைச் செலவுகள்	(588,822)	(454,880
மொத்த இலாபம்	**(4,068)**	**67,652**
நிதி மற்றும் செயற்பாட்டு வருமானம்	19,489	12,006
செலவுகள்	(64,427)	(55,462)
நாணயமாற்று வீத வேறுபாடு	(33,220)	(21,841)
இலாபம் /(நட்டம்) வரிக்கு முந்தியது	**(82,226)**	**2,356**

வருவாய்

குறித்த வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் வருவாயானது 11.91% ஆல் ரூ. 585 பில்லியன் வரை அதிகரித்தது. அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்துடனான நாட்டின் பெரும்பாலான துறைகளின் மீட்சி மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைத்திருத்தத்துடனான பொருளாதார செயற்பாடுகளின் வழமைக்குத் திரும்புதல் ஆகியவை வருவாயானது 62 பில்லியனாக அதிகரிக்க வழிவகுத்தது.

துறைசார் செயலாற்றுகை

பிரதானமாக குறித்த வருத்தில் இரு மடங்கான விற்பனை அளவு மற்றும் விற்பனை விலை அதிகரிப்பு காரணமாக மொத்த வருமானத்திற்கு போக்குவரத்துத் துறையானது ரூபா.455.5 பில்லியன்(ரூபா.389.4 பில்.) அதி கூடிய பங்களிப்பினை உருவாக்கியுள்ளது இது 2020 ஆண்டுடன் ஒப்பிடும் போது 16.94% அதிகரிப்பாகும்.

	2021 ரூபா.மி	2020 ரூபா.மி
போக்குவரத்து	455,478	389,435
மின் உற்பத்தி	47,323	81,147
விமானப் போக்குவரத்து	30,784	19,486
கைத்தொழிற்துறை	16,249	11,433
உள்நாட்டுத்துறை	19,931	17,871
விவசாய இரசாயனம்	446	639
ஏற்றுமதி மற்றும் கப்பல் எரிபொருள்	23,622	11,261
மொத்தம்	**593,833**	**531,272**

பெற்றோல் 92 ஒட்டோ டீசல் மற்றும் சுபர் டீசல் ஆகியவற்றுக்கான கேள்வி முறையே by 7.57%, 13.43மூ மற்றும் 11.25% ஆல் அதிகரித்தது. நடைமுறையில் உள்ள நாடளாவிய வலையமைப்பிற்கு 25 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சேர்க்கப்பட்டன.

மின்சக்தித் துறையானது ரூபா.47.3 பில்லியன் பெறுமதியான இரண்டாவது (2019 ரூபா.81.1 பில்.) அதி கூடிய பங்களிப்பினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உருவாக்கியுள்ளது மற்றும் மின்சக்தி உருவாக்கத்திற்கான கேள்வியானது 41.68மூ ஆல் குறைவடைந்தது. சர்வதேச பெற்றோலிய விலைகள் அதிகரித்த போதும் குறித்த வருட இறுதி வரையில் உளை எண்ணெய் விலையானது லீற்றருக்கு 70 ரூபாவாகவே இருந்ததோடு விலைகளானவை 2021.12.27 ஆம் திகதியிலிருந்தே நடைமுறைக்கு வந்தது.

2021 ஆம் ஆண்டில் விமானத் துறையானது ரூபா 30.78 பில்லியன் வருவாயினைப் பதிவு செய்தது. இது விமானத்துறை செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியமை மற்றும் விற்பனை விலை அதிகரிப்பு காரணமாக ஆகியவற்றினால் உந்தப்பட்ட விற்பனைத் தொகுதிகளின் 18.5% அதிகரிப்பினால் ஏற்பட்ட 57.98% அதிகரிப்பாகும்.

கைத்தொழில் துறையில் இருந்து உருவாக்கப்பட்ட வருமானமானது ரூபாய் 16.11 பில்லியன் வரை விருத்தியடைந்து இருந்தது. இது குறித்த வருடத்தில் 42.50 சதவீத அதிகரிப்பாகும். புதிய வழமையான நிலைமையின் கீழ் பொருளாதாரத்தின் மீட்பானது கைத்தொழில் துறையின் செயற்பாடுகள் மேம்படுத்துவதற்கு வழிவகுத்தது. உள்நாட்டுத் துறையிலிருந்தான விற்பனை வருவாய் 11.53 சதவீதமாக அதிகரித்தது.

குறித்த வருடத்தில் நேரடி ஏற்றுமதித் துறையானது ரூ. 17.01 பில்லியன் வருமானத்தைப் பதிவு செய்தது. இது ரூ. 11.26 பில்லியனிலிருந்தான அதிகரிப்பாகும். குறித்த வருடத்தில் மின் உற்பத்தித் துறையிலிருந்து நப்தாவுக்கான கேள்வியின்மையினாலும் களஞ்சியக் கொள்திறனானது மட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையினாலும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான அழுத்தம் ஏற்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கப்பல் எரிபொருள் வணிகத்தை மீண்டும் தொடங்கியதோடு அது ரூபா 6.6 பில்லியன் வருமானத்தை உருவாக்கியது.

2021 ஆம் ஆண்டில் சுத்திகரிப்பு நிலையமானது 314 நாட்காட்டி தினங்கள் செயற்பட்டதோடு கச்சா எண்ணெய் நுகர்வானது 1, 269, 938 மெற்றிக் தொன்னாக இருந்தது. சுத்திகரிப்பு நிலையமானது 1, 216, 085 மெற்றிக் தொன்னாக சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் மூலம் வருவாய்க்குப் பங்களிப்புச் செய்தது.

இலாபங்கள்

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்துடனான தொடர்ச்சியான சர்வதேச எரிபொருள் விலைகளின் ஏற்றம் மற்றும் சர்வதேச எரிபொருள் விலைகளின் அதிகரிப்புக்கு சமாந்திரமாக விற்பனை விலைகள் சரிசெய்யப்படாமை ஆகியவை ரூபா.18.55 பில்லியன் மொத்த இழப்பு ஒன்றை ஏற்படுத்தியது. ரூபாவின் தேய்மானம் மற்றும் நிதிச் செலவு அதிகரிப்பு ஆகியவை 2020 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ரூபா.2.4 பில்லியன் வருமானத்திலிருந்து எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தி ரூபா.82.21 பில்லியன் நிகர நட்டம் ஒன்று ஏற்பட வழிவகுத்தது.

வரிவிதிப்பு

வருமான வரிச் செலவானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் படி கொடுப்பனவு செய்யப்பட்டது. கூட்டுத்தாபனம் ஒரு நட்டத்தை ஈட்டியதால் மற்றும் திரட்டப்பட்ட வரி இழப்பு முன்னோக்கியுள்ளதால், இவ்வாண்டிற்கான பொருண்மை ரீதியான வருமானவரிப் பொறுப்பு எழவில்லை. விரிவான வரிப் பொறுப்பானது பக்கம் 153 இல் நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்பு 07 இல் தரப்பட்டுள்ளது.

விசேட கட்டணம்

2014 வருடத்தின் போது, பொதுத் திறைசேரி ரூ.10 பில்லியனை ஒரு விசேட கட்டணமாக கொடுப்பனவு செய்வதற்கு அறிவுறுத்தியதுடன், வருமானக் கூற்றிலிருந்து 2014 வருடத்திற்காக ரூ. 250 மில்லியன், 2015 வருடத்திற்காக ரூ.750 மில்லியன் மற்றும் 2016 இலிருந்து 2024 வரையான காலத்திற்காக வருடாந்தம் ரூ. 1000 மில்லியனையும் ஒரு செலவாக அறவிடுவதற்கும் வேண்டிக்கொண்டது. அதற்கமைய, 2021 ஆண்டிற்காக ரூ. 1000 மில்லியன் தீர்க்கப்பட்டது.

ஆதனம், பொறி & உபகரணம்

கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் முதலீட்டுச் சொத்து ஆகியவற்றின் விபரங்கள் பக்கம் 154 இலுள்ள நிதிசார் கூற்றுகளின் குறிப்பு 08 இல் தரப்பட்டுள்ளன.

பங்களிக்கப்பட்ட மூலதனம்

கூட்டுத்தாபனத்தின் மொத்தப் பங்களிக்கப்பட்ட மூலதனம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிப்படி ரூ. 28,487.125 மில்லியனாகும். (2019- ரூ. 28,487.125 மில்லியன்)

மூலதன ஒதுக்கீடுகள்

கூட்டுத்தாபனத்தின் மூலதன ஒதுக்கங்கள் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூ. 4,992.686 மில்லியனாகும். (2020- ரூ. 4,992.686 மில்லியன்)

மனித வளங்கள்

மனித வளமானது கூட்டுத்தாபகத்தின் மூலோபாய சொத்துக்களின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாகும் மற்றும் பொறுப்பு வாய்ந்த ஊழியர்கள் கூட்டுத்தாபனம் அதன் வணிக நோக்கு மற்றும் தூரநோக்கு என்பவற்றை யதார்த்தமானதாக நிறைவேற்றுவதில் பெறுமானத்தை வழங்குகின்றனர். நிலையான கூட்டாண்மையை அடைவது நோக்கி அதன் மனித வளத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் அவர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இ.பெ.கூ இன் மனித வளக் கொள்கையானது நிலையான மனித மூலதனத்தை கட்டியெழுப்புவதற்கு பயிற்சியளித்தல் & மேம்படுத்தல் மற்றும் தொழில் முன்னேற்றம் என்பவற்றை ஊக்குவிக்கிறது. மனித மூலதன விபரங்கள் பெறுமதி உருவாக்கல் பக்க இலக்கள் 62 – 67 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள வழக்குகள்

பணிப்பாளர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வழக்கறிஞர்களின் கருத்துப்படி, நிதிநிலை அறிக்கையின் குறிப்பு 27ன் கீழ் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு எதிரான நிலுவையில் உள்ள வழக்குகள், நிறுவனத்தின் நிதி நிலைத்தன்மையில் அல்லது அதன் எதிர்கால செயற்பாடுகளில் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

பிரயோகிக்கத்தக்க சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் முரண்படும் எந்த நடவடிக்கைகளிலும் கூட்டுத்தாபனம் ஈடுபடவில்லை.

சுற்றாடல் பாதுகாப்பு

கூட்டுத்தாபனமானது உரிய சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு அதன் சிறந்த முயற்சிகளைப் பயன்படுத்தியது.

நன்கொடைகள்

கூட்டுத்தாபன சமூகப் பொறுப்பு செயற்பாடுகளுக்காக குறித்த வருடத்தில் கூட்டுத்தாபனமானது ரூபா. 8.5 பில்லியனைச் செலவு செய்தது.

நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

அனைத்து சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் நியதிச்சட்ட அதிகாரங்களுக்கு உரித்தான அனைத்து சட்டபூர்வமான கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் மற்றும் இருக்கும் நிதிசார் இயலாற்றல்களுடன் கொடுப்பனவு செய்யப்பட்டன என பணிப்பாளர்கள், தங்களது அறிவு மற்றும் நம்பிக்கை என்பவற்றுக்கு எட்டியவகையில் திருப்தி அடைகின்றனர்.

அரசாங்கத்திற்கான பங்களிப்பு

இவ்வாண்டு கூட்டுத்தாபனம், இலங்கை சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடமைகள், வரிகள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான வரிகள் என்பவற்றின் அடிப்படையில் ரூ. 105,198 மில்லியனை (2020 – ரூ.152,311 மில்லியன்) அரசாங்கத்திற்கு பங்களிப்பு செய்துள்ளது.

அறிக்கையிட்ட திகதிக்குப் பின்னதான நிகழ்வுகள்

இந்த அறிக்கையின் பக்கம் 174 இல் உள்ள நிதிசார் கூற்றுக்களின் குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர்த்து, நிதிசார் கூற்றுக்களுக்கு சீரமைவுகளைத் தேவைப்படுத்தும் விடய முக்கியத்துவம் கொண்ட எந்த நிகழ்வும் நிதிசார் நிலைக் கூற்றின் திகதிக்கு பின்னதாக நடைபெறவில்லை.

தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு

கூட்டுத்தாபனத்தின் தோற்றப்பாட்டை மேம்படுத்துகின்றதும், செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் மற்றும் எதிர்காலத்திற்காக வலுப்படுத்தப்பட்ட வர்த்தகத் திறனை உறுதிப்படுத்தும் ஒரு நோக்குடன் பணிப்பாளர்கள் சபை கூட்டாண்மைத் திட்டத்தை தயார் செய்தது. அதன்படி, நிதிசார் கூற்றுகள் ஒரு தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

கணக்காய்வாளர்களின் நியமனம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார், அதன்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியே கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளராவர்.

கணக்காய்வாளரின் கணக்காய்விற்கான ஊதியம் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 31 ஆவது பிரிவிற்கமைவாக தீர்மானிக்கப்படும்.

கணக்கய்வாளர்களின் ஊதியம் மற்றும் கூட்டுத்தாபனத்துடனான ஒப்பந்தங்களிலான நலன்கள்

கூட்டுத்தாபனத்தால் 2021 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுகளில் கணக்காய்வுக் கட்டணம் ரூ. 23.07 மில்லியன் (ரூ. 4 மில்லியன் - 2020) ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பணிப்பாளர்கள் அறிந்தவரை, கூட்டுத்தாபனம் அல்லது அதன் துணை நிறுவனத்துடனான ஒப்பந்தங்களில் வேறு எந்த உறவை அல்லது நலனை கணக்காய்வளர்கள் கொண்டிருப்பதில்லை.

அறிக்கையின் உள்ளடக்கங்களுக்கான ஏற்றுக்கொள்ளல்

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 32(3) இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு, 2021 ஆம் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையானது பணிப்பாளர்கள் சபையினால் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டறிக்கையானது பணிப்பாளர்கள் சபைக்காகவும் மற்றும் சார்பாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றது.



தலைவர்



முகாமைத்துவப் பணிப்பாளர்

பணிப்பாளர்களின் கடமைப்பொறுப்புக் கூற்று

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது எல்லா கொடுக்கல்வாங்கல்களையும் முறையான கணக்குப் புத்தகம் ஒன்றில் பதிகின்றது என்பதையும் அலுவல்களின் நியாயமான மற்றும் உண்மைத் தன்மை பற்றியும் குறித்த வருடத்திற்கான இலாபம்/நட்டம் அகியவற்றையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கு உண்டு.

அதன்படி, பணிப்பாளர்கள் சபையானது அவர்களது அன்றாடக் கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழுவின் ஊடாக நிதி அறிக்கையிடலுக்கான முகாமைத்துவத்தின் கடமைப்பொறுப்புக்களை மேற்பார்வை செய்கின்றது. கணக்காய்வுக் குழு அறிக்கையானது 93 முதல் 94 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையானது, வினைத்திறனான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை நிறுவியுள்ளதோடு நிதி, செயற்பாடு, இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மதிப்பீடு ஒன்றையும் நடாத்தியுள்ளது மற்றும் அதன் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக வினைத்திறனாகவும் வெற்றிகரமான முறையிலும் அவர்களது வணிகத்தை நடாத்திச் செல்வதற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொண்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையானது, கூட்டுத்தாபனத்தின் கூட்டுத்தாபன/வணிகத் திட்டங்களை மீளாய்வு செய்ததோடு எதிர்பார்க்கக் கூடிய எதிர்காலத்திற்கான வணிகத்தைத் தொடர்வதற்கு போதியளவு வளங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது கொண்டுள்ளது என்பதோடு நடைமுறைக் கரிசணையின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதில் திருப்திடைகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது, அவர்கள் நிலையான அடிப்படையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பின்பற்றி உள்ளனர் எனக் கருதுவதோடு 135 முதல் 178 வரையிலான பக்கங்களில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுவின் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்வைப்பானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுமத்தினதும் அலுவல்களின் நிலைமை பற்றிய ஒரு உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றது என உறுதிப்படுத்துகின்றது.

விரிவான வருமானக் கூற்றுக்கள், நிதி நிலமைக் கூற்றுக்கள், பங்குகளில் உள்ள மாற்றங்கள் பற்றிய கூற்றுக்கள், பணப்பாய்ச்சல் பற்றிய கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுவின் நிதிக் கூற்றுக்களானவை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமையவும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்ப (SLFRSs/LKASs) தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளுடன் இணங்குகின்றது எனவும் ஏதேனும் பொருண்மைசார் இணக்கமின்மையையும் சரிசெய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் சபையானது நம்பிக்கை கொண்டுள்ளது.



முகாமைத்துவப் பணிப்பாளர்

நிதி அறிக்கைகள் & தணிக்கை அறிக்கை

	பக்க எண்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் றிக்கை	102
விரிவான வருமானக் கூற்றுக்கள்	135
நிதியியல் நிலைக் கூற்றுக்கள்	136
சொத்துரிமை மாற்றம் பற்றிய கூற்றுக்கள்	137
பணப்பாய்ச்சல் பற்றிய கூற்றுக்கள்	138
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	139

23.12.2022

தலைவர்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் விதிகளுக்கமைய 2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1 நிதிக் கூற்றுக்கள்

1.1 தகுதி பெற்ற கருத்துக்கள்

2021 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) நிதிக்கூற்றுக்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தினதும் அதன் துணை நிறுவனத்தினதும் (“குழு”) திரட்டு நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வானது விரிவான வருமானக் கூற்றுக்கள் மற்றும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியின் போதான நிதியியல் நிலைக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றது. அதன் பின்னர் வருடத்திற்கான சொத்துரிமை மாற்றங்கள் பணப் பாய்ச்சல் கூற்றுக்கள் நிறைவடைந்தன. அத்துடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு ஏற்பாடுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்புரையின் கீழ் முக்கியமான கணக்காய்வு கொள்கைகளின் சுருக்கம் ஒன்றை உள்ளடக்கிய வகையில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையானது பாராளுமன்றத்தில் அட்டவணை படுத்தப்படும்.

எனது கருத்துப்படி எனது அறிக்கையில் தகுதி பெற்ற கருத்துக்கள் எனும் பகுதியில் விளக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுவின் ஒத்துழைக்கும் நிதிக்கூற்றுக்கள்; கூட்டுத்தாபனத்தினதும் அதன் குழுவினதும் நிதி நிலைமை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தைத் தருகின்றது மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க குறித்த வருடத்திற்கான அவர்களது நிதியியல் செயலாற்றுகை மற்றும் பணப் பாய்ச்சல்களானவை நிறைவு பெற்றன.

1.2 விடயங்களின் முக்கியத்துவம்

வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி என மொத்தமாக ரூபா. 10.346 மில்லியன் பெறுமதியான நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் மீதிகளை விவரிக்கின்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு விதிக்கப்பட்ட வரிவிதிப்புக்கள் தொடர்பான நிச்சயமற்ற தன்மையினை விவரிக்கின்ற நிதிக் கூற்றுக்களுக்கான 07 மற்றும் 27 ஆம் குறிப்புக்களுக்கு கவனத்தை ஈர்க்கின்றேன். இவ் விடயம் தொடர்பாக எனது கருத்தானது தகுதி பெறவில்லை.

1.3 முனைப்பழியுள்ள அபிப்ராயத்திற்கான அடிப்படை

1.3.1 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மை

2021 ஆம் ஆண்டு முடிவடைந்த வருடத்தின் ரூபா 82,225.78 மில்லியன் வரிக்குப் பின்னரான கூட்டுத்தாபன செயற்பாட்களின் நட்டம் ஒன்றின் மீது கவனம் ஈர்க்கப்படுகின்றதோடு அதன்படி, மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 357,536.67 மில்லியன் மறை நிகரச் சொத்துக்களின் நிலை ஒன்று பதிவு செய்யப்பட்டது. குறுகிய கால கடன்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் நிதிச் செலவுகளின் தொடர்ச்சியான அதிகரிப்பு, நாணயமாற்று விகித ஏற்றத் தாழ்வுகளின் மறைத் தாக்கம், விநியோகஸ்தர்களின் விற்பனைப் பங்கு அதிகரிப்பு, பொருத்தமற்ற விலையிடும் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட இடர்குறைப்பு பரிமாற்றங்கள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட பாரிய நட்டத்தின் எதிர்மறைத் தாக்கங்கள் ஆகியன கடந்த வருடங்களில் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நட்டங்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக கூட்டுத்தாபனத்தின் நிகர சொத்து நிலையானது மேலும் தேய்மானம் அடைந்தது. இவ்வாறு, அரசாங்கத்தின் நிதி உதவி இல்லாது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து இயங்கும் திறனானது சந்தேகத்திற்குரியதாகும்.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ) நிறுவனங்களுக்கு இடையிலான நிலுவைகள்

கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின் படி, துணை நிறுவனமான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டிற்கு(CPSTL) செலுத்தப்பட வேண்டிய மற்றும் CPSTL இருந்து பெற்றுக்கொள்ளத்தக்க தொகையான முறையே ரூபா 8,330.84 மற்றும் ரூபா 662.45 மில்லியன் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டிற்கு செலுத்த வேண்டிய நிகர தொகையானது ரூபா 7,668.39 மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும், ஊழியவுடு இன் நிதிக் கூற்றுக்களின் வரைவின் படி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளத்தக்க மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையான முறையே ரூபா 8,764.83 மற்றும் ரூபா 403.97 மில்லியன் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ளத்தக்க நிகர தொகையானது ரூபா 8,36087 மில்லியன் ஆகும். எனவே, இரு நிறுவனங்களினதும் மீதிகளுக்கு இடையே ரூபா 692.47 மில்லியன் (முறையே ரூபா 433.99 மில்லியன் மற்றும் ரூபா 258.48 மில்லியன்) முரண்பட்ட வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

ஆ) மண்ணெண்ணெய் நிவாரணம்

திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட 2015 நவம்பர் 24 ஆம் திகதிய FP/06/100/02/2016 ஆம் இலக்க கடிதம் மற்றும் 2014 டிசம்பர் 04 ஆம் திகதிய TTIP/l /83(l)T ஆம் இலக்க கடிதம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஏதேனும் விலை குறைப்பினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் நட்டத்தை மீட்டெடுப்பதற்காக அரசாங்க நிவாரணம் வழங்கப்படும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனமானது அரசாங்கம் நிர்ணயித்த விலையில் மண்ணெண்ணையை விற்பனை செய்கின்றது. 2014 முதல் 2021 வரையான காலப் பகுதிக்கு மொத்த நிவாரண மீட்டெடுப்பானது ரூபா 39,587 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் பொது திறைசேரியானது ரூபா 4,459 மில்லியனை மாத்திரமே மீளச் செலுத்தியது. மீளாய்வாண்டின் இறுதியில் பெறத்தக்க மொத்த நிவாரணமானது ரூபா 35,129 மில்லியனாக கணக்கிடப்பட்டாலும் ரூபா 5,097.72 மில்லியன் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட்டது. அதன் விளைவாக முன்னைய வருடங்களில் (2017 இலிருந்து)மீளாய்வாண்டின் இறுதியில் வருமானமானது 27,909 மில்லியனாக குறை மதிப்பிடப்பட்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தப் வருமானமானது 30,031 மில்லியனாக குறை மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இலாபம் மீதான எல்லா நேரடி மற்றும் மறைமுக வரிகள் கணக்கிடப்படவும் இல்லை செலுத்தப்படவும் இல்லை.

இ) மாதாந்த பயன்பாட்டுக் கட்டண அறவீடு (MUF)

2013 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிய 38/1140 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி, 2014 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான எல்லா வணிக விற்பனையாளர் செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் (CODO) மற்றும் திறைசேரிக்குச் உரிமையான எல்லா விற்பனை செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிடமிருந்தும் (DODO) மாதாந்த பயன்பாட்டு கட்டணத்தை (MUF) அறவிடுவதற்கு சபையானது அனுமதி அளித்திருக்கிறது. எவ்வாறிருப்பினும், இத் தீர்மானமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை மற்றும் அதன்படி, மீளாய்வாண்டின் போதான வருமான இழப்பானது ரூபா 510.223 மில்லியனாக இருந்ததோடு மீளாய்வாண்டின் இறுதியின் போது திரண்ட வருமான இழப்பானது ரூபா 3,557 மில்லியனாக இருந்தது. அதன் விளைவாக, மீளாய்வாண்டின் போதான நிகர வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியின் போது திரண்ட வருமானம்/ தக்கவைத்துக் கொண்ட ஈட்டல்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களானவை முறையே அதே தொகைகளினால் குறைமதிப்பீடு செய்யப்பட்டது. 2022 ஜூலை 06 ஆம் திகதிய 27/1267 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின்படி, 2022 ஜூலை 01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மாதாந்த பயன்பாட்டுக் கட்டணச் (MUF) சேகரிப்பானது ஆரம்பிக்கப்பட்டது என முகாமைத்துவப் பணிப்பாளரினால் சபைக்கு அறிவிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும், இவ் அறிக்கைத் திகதி வரையிலுமான மாதாந்த பயன்பாட்டுக் கட்டணத்தை மீட்பதற்கு உரிய நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. அதன் விளைவாக, 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியாகும் போது திரண்ட வருமான இழப்பானது ரூபா 4.011 மில்லியனாக அதிகரித்தது.

ஈ) குறைத்து மதிப்பிடப்பட்ட விநியோக தரகுத் தொகை மீதான வரிகள்

கூட்டுத்தாபனத்தின் நிதிநிலை அறிக்கையில் விநியோக தரகுத் தொகைகளை குறைத்து மதிப்பிடுவது தொடர்பான பிழையை சரிசெய்வதில், உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்கு (IRD) செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி(NBT) மற்றும் தொடர்புடைய ஏனைய வரிகள், கணக்குகளில் முழுமையாக சரிசெய்யப்பட்டு செலுத்தப்படவில்லை. இதன் விளைவாக, கூட்டுத்தாபனத்தினால் மதிப்பிடப்பட்ட அந்தந்த ஆண்டுகளுக்கான உரிய வரிப் பொறுப்பானது குறைத்து மதிப்பிடப்படும் இடர் ஏற்பட்டது. மேலும், அந்த திருத்தம் தொடர்பான திருத்தப்பட்ட வரி அறிக்கைகள் இன்னும் உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

1.3.3 இலங்கை கணக்கீட்டு நியமங்களில் இருந்து விலகிச் செல்லல் (LKAS)

இ.க.நி 16 இன் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப - ஆதனம், பொறி, மற்றும் உபகரணம் அண்ணளவாக ரூபா 10654.46 மில்லியன் பெறுமதியான முழுமையான தேய்மானமடைந்த சொத்துக்களானவை அவற்றின் ஆயுட்காலம் மீள் மதிப்பீடு செய்யாமலும் அதற்கு ஏற்ப கணக்கிடப்படாமலும் கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் சோதனைப் பரீட்சிப்பில் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 22 காணித் துண்டுகள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதோடு அது கணிசமாக குறைவான தொகையையே நிதிக் கூற்றுக்களில் காண்பித்திருக்கின்றது என கணக்காய்வு வெளிப்படுத்துகின்றது.

1.3.4 துணை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வுக் கருத்து

துணை நிறுவனமான CPSTL இன் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கருத்தானது கூட்டுத்தாபனம் மற்றும் குழுவிற்கு இடையே உள்ள இணையான மீதிகள்/பரிவர்த்தனைகளுடனான இணக்கமின்மையை ஏற்படுத்தக்கூடிய பின்வரும் விடயங்கள் காரணமாக என்னால் அங்கீகரிக்கப்படுகிறது.

1.3.4.1 விடயங்களின் முக்கியத்துவம்

சொத்துக்களின் நியாயமான மதிப்பீடு தொடர்பான விடயங்களை விவரிக்கும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தால் நீண்டகால நிலுவைத் தொகைகள் தொடர்பாக நிறுவனத்திடம் எழுப்பப்பட்ட மதிப்பீட்டின் பின்வரும் குறிப்புகளுக்கு நான் கவனம் செலுத்துகிறேன். இவ் விடயங்களில் எனது கருத்து தகுதிபெற்றவை அல்ல.

அ) நிலையான சொத்துக்களை அதன் நியாயமான மதிப்பிற்கு கொண்டு வருவதற்கான மீள்மதிப்பீட்டினை நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 10.5 விளக்குகின்றது. கம்பனியானது அதன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக 2003 ஆம் ஆண்டு அதன் தொடங்கப்பட்டதிலிருந்தே முறையான கொள்கை ஒன்றை நி-றுவி இருக்கவில்லை மற்றும் அதன்படி, 22,902 பொருட்களை உள்ளடக்கிய ரூபா 7,875.28 மில்லியன் மதிப்புள்ள முழுமையாக தேய்மானமடைந்த சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள், மீள்மதிப்பீடு மற்றும் பயனுள்ள பொருளாதார வாழ்நாள் முழுவதும் கணக்கீடு செய்யப்படாமல் நிறுவனத்தால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன.

ஆ) வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி(PAYE) உள்ளிட்ட ரூபா 897 மில்லியன் பெறுமதியான நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கம்பனியுடன் தொர்புடைய மீதிகளான உள்நாட்டு இறை வரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட வரியினை நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20.1(ஆ) விளக்குகின்றது.

1.3.4.2 துணை நிறுவனமான ஊஸ்ளுவுடு இன் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கருத்தானது கூட்டுத்தாபனம் மற்றும் குழுவிற்கு இடையே உள்ள இணையான மீதிகள்/பரிவர்த்தனைகளுடனான இணக்கமின்மையை ஏற்படுத்தக்கூடிய பின்வரும் விடயங்கள் காரணமாக என்னால் அங்கீகரிக்கப்படுகிறது.

அ) ஆதனம், **பொறி மற்றும் உபகரணம்**

(i) மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 142,505,091 மில்லியன் பெறுமதியான கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு தயாராக இருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானவை தொடர்ச்சியான செயற்பாட்டில் இருப்பதாகக் காட்டப்பட்டது. மேலும், LKAS 16 இன் விதிகளில் தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கம்பனிக்குச் சொந்தமாகாத வலுசக்தித் துறை அமைச்சரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தை புனர்நிர்மாணம் செய்ய 2021 ஆம் ஆண்டில் கம்பனியானது ரூபா 10,171.541 மில்லியன் செலவிற்கு உட்பட்டது மற்றும் இது மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியான செயற்பாட்டில் இருப்பதாகப் செய்யப்பட்டது.

ஆ) கம்பனிக்கு இடையிலான நிலுவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) கம்பனியின் பதிவுகளின்படி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறத்தக்க மற்றும் செலுத்தத்தக்க தொகையானது முறையே 8,608 மில்லியன் மற்றும் ரூபா 404 மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்ட பதிவுகளின்படி கம்பனிக்கு செலுத்தத்தக்க மற்றும் கம்பனியிடமிருந்து பெறத்தக்க தொகை முறையே 8,331 மில்லியன் மற்றும் ரூபா 662 மில்லியன் ஆகும். அதன்படி, முறையே இரு நிறுவனங்களுக்கும் இடையேயான ரூபா 277 மில்லியன் பெறத்தக்க மற்றும் ரூபா 258 செலுத்தத்தக்க தொகை ஆகியவற்றினை உள்ளடக்கிய ரூபா 535 மில்லியன் இணக்கமற்ற நிகர வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ii) கம்பனியின் பதிவுகளின் படி, LIOC இடமிருந்து கிடைக்கப்பெறக் கூடிய தொகையானது ரூபா 710 மில்லியன் ஆகும், மற்றும் LIOC இடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களின்படி, கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையானது ரூபா 715 மில்லியன் ஆகும். அதன்படி, இரு நிறுவனங்களுக்கும் இடையே ரூபா 5 மில்லியன் பெறுமதியான இணக்கமற்ற வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

இ)காசு மட்டும் காசுச் சமானங்கள்

5 வருடங்களுக்கு மேலாக உள்ள வெளிநாட்டு நாணய மீதிகளினால் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்குகளை ரூபாவாக பரிமாற்றம் செய்வதுடன் தொடர்புடைய ரூபா 92.134 மில்லியன் மொத்தப் பரிமாற்ற வருமானமானது மீளாய்வாண்டின் போது முழுமையான வருமானமாக அடையாளங்காணப்பட்டது. எவ்வாறிரப்பினும், பரிமாற்ற வருமானமானத்தினுள் 2021,2020 மற்றும் 2020 இற்கு முன்னரான வருடத்திற்கு முறையே ரூபா 19.898 மில்லியன், ரூபா 20.290 மில்லியன் மற்றும் ரூபா 51.946 மில்லியன் தொகையானது தொடர்புடையதாக இருந்தது. அதன் விளைவாக, 2020 ஆம் ஆண்டின் இறுதியின் போதான காசு மட்டும் காசுச் சமானங்கள் மீதி மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான பரிமாற்ற வருமானமானது முறையே ரூபா 72.235 மில்லியன் மற்றும் ரூபா 20.29 மில்லியனாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டுக்கான பரிமாற்ற வருமானமானது ரூபா 72.235 மில்லியனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈ)வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்க மீதிகள்

(i) மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தமாக 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையிலுள்ள ரூபா 1,446,123 பெறுமதியான 25 செலுத்தத்தக்க மீதிகள் மற்றும் ரூபா 823,996 பெறுமதியான 13 செலுத்தத்தக்க மீதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரை காணப்பட்டன. எவ்வாறிருப்பினும், CPSTL இன் முகாமைத்துவமானது அதனைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகை எதனையும் எடுக்கவில்லை அதன்படி, அத்தகைய் மீதிகளின் இருப்பு மற்றும் துல்லியத்தன்மை ஆகியவை கணக்காய்வில் தெளிவாக இல்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,936,685 பெறுமதியான 20 வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத்தக்க கணக்குகளின் கடன் மீதிகள் காணப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் ரூபா 4,100,099 பெறுமதியான 10 கடன் மீதிகள் 5 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்தப்படாது இருந்ததோடு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத்தக்க கணக்குகளின் கீழ் இருந்த ரூபா 1,836,585 பெறுமதியான 10 கடன் மீதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரை தீர்க்கப்படாது இருந்தன. எவ்வாறிருப்பினும், கம்பனியானது கடன் செலுத்தாத நிலையில் விற்பனையாளர்களுடன் தொடர்ச்சியான பரிவர்த்தனைகளில் ஈடுபட்டிருந்தது. எனவே, அத்தகைய கடன் மீதிகளின் இருப்பு மற்றும் துல்லியத்தன்மை ஆகியவை கணக்காய்வில் கேள்விக்கு உட்பட்டதாகவே இருந்தன

உ) வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்க மீதிகள்

(i) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 11,246,582,021 பெறுமதியான வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்க (உரிய தரப்பினர்களை உள்ளடக்கிய) மீதிகள் காணப்பட்டன.கிடைக்கப்பெறத்தக்க மீதி ஒன்று 5 வருடங்களுக்கு மேலாக மீட்டெடுக்கப்படாது இருந்தது. எவ்வாறிருப்பினும், அத்தகைய தொகையின் மீட்டெடுப்பு தொடர்பாக போதியளவான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 2,568,941 பெறுமதியான 07 கடன் மீதிகள் காணப்பட்டன. எவ்வாறிருப்பினும், கம்பனியானது கடன் மீதிகளை செலுத்தாத நிலையிலும் தொடர்ச்சியாக அவ் வழங்குறர்களுடன் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டிருந்தது. எனவே, அத்தகைய கடன் மீதிகளின் இருப்பு மற்றும் துல்லியத்தன்மை ஆகியவை கணக்காய்வில் கேள்விக்கு உட்பட்டதாகவே இருந்தன.

ஊ) முன்னைய ஆண்டின் பிழைத் திருத்தங்கள்

மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல.22.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 77.801 மில்லியன் ரூபா 125.288 மில்லியன் 157.264 ரூபா மில்லியன் பெறுமதியான மிகைக் கட்டணங்களின் மீட்பானது பின்னோக்கித் திருத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும், உரிய வருடத்தில் போக்குவரத்துக்கான மிகைக் கட்டணமாகப் பதிவு செய்யப்படாது மாறாக ஏனைய செயற்பாட்டுச் செலவினமாகப் பதிவு செய்யப்பட்டது. அதன் விளைவாக, 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கம்பனியின் வரு-மானம் மற்றும் மொத்த இலாபம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களானவை முறையே ரூபா 125.288 மில்லியனாகவும் ரூபா 157.264 மில்லியனாகவும் மிகையாகக் குறிப்பிடப்பட்டது. மேலும், 2020 ஜனவரி 01 ஆகும் போது ரூபா 125.288 மில்லியன் வருவாயைத் தக்கவைப்பதற்கான ஒட்டுமொத்த விளைவு சரிசெய்யப்படவில்லை மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான வரிச் சேமிப்பானது தவறாக ரூபா 2.075 மில்லியனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டது.

1.3.5 கணக்காய்வுக்கான சான்றுகளின் பற்றாக்குறை

அ) பெறத்தக்க மீதிகளைத் தள்ளுபடி செய்தல்

(i) 2021 ஜூலை 22 ஆம் திகதிய 08/1252 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின்படி, கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பதிவுகளில் இருந்த ரூபா 1,516.039 மில்லியன் பெறுமதியான பெறத்தக்க மீதியினை போதியளவான தகவல் இன்மை காரணமாக தள்ளுபடி செய்ய அனுமதி வழங்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், கிடைக்கப்பெற்ற தகவலின்படி அந்த இருப்பு அடிப்படையிலான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகள் மூலம் பெறத்தக்கவைகளை தள்ளுபடி செய்ய முடிவெடுப்பதற்கு முன், மோசடி நடவடிக்கைகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை சரிபார்க்க சபையானது முறையான நடவடிக்கைகளை எடுத்ததா என்பதை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை. மேலும், அந்த நிலுவைத் தொகை தொடர்பான ஆவணங்களை பராமரிக்கும் பொறுப்பில் இருந்த உத்தியோகத்தர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், இது தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளதா என்பதை கணக்காய்வில் கண்டறிய முடியவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்ட கட்டணங்களின் கீழ் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது தொடர்ச்சியதக இருந்த "ஆர்.எப்.டம்மி, எச்.ஓ.டம்மி" எனும் இரு போலிக் கணக்குகளானவை ஏதேனும் தீர்வுகளை மேற்கொள்ள முடியுமா என்பது பற்றி ஆராயப்படாமல் எழதப்பட்டிருந்தன.

ஆ) மீள் செலுத்தத்தக்க வைப்புக்கள் மற்றும் ஊழியர்களின் கணக்குகளுடன் தொடர்புடைய ஏனையவற்றின் கீழ செலுத்த வேண்டிய தொகைகளை தீர்ப்பதற்கான ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது இருந்தன. எவ்வாறிருப்பினும், நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்தமைக்கான காரணம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

இ) முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் மீள்குறிப்பிடப்பட்டது போல் வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளிலிருந்தான ரூபா 193.217 மில்லியன் பெறுமதியான கடன் மீதிகளுடன் தொடர்புடைய போதிய மற்றும் பொருத்தமான சான்றுகள் கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெறவில்லை. அதன்படி, அத்தகைய மீதிகளின் துல்லியத்தன்மை மற்றும் இருப்பு ஆகியவை கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

ஈ) காசு **மட்டும் காசுச் சமானங்கள்**

(i) 2017 முதல் 2022 வரையான காலப்பகுதியில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு 22 பண நடவடிக்கை குறிப்பேட்டுப் பதிவுகள் மூலம் ரூபா 186.249 மில்லியன் பணம் செலுத்தப்பட்டதாக கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உண்மையில் அத்தகைய கொடுப்பனவுகள் சுங்கத் திணைக்களத்திற்கு செலுத்தப்படவில்லை. மேலும் இது தொடர்பாக எந்த காசோலையும் வழங்கப்படவில்லை. இத்தகைய பரிவர்த்தனைகளை பதிவு செய்வதற்கான காரணங்களை கூட்டுத்தாபன நிர்வாகத்தால் விளக்க முடியவில்லை. ஆயினும்கூட, தவறான கணக்கியல் நடைமுறைகள் மூலம் மோசடியான முறைகேடுகளின் இடரை கணக்காய்வில் நிராகரிக்க முடியாது. மேலும், இது நிதி அறிக்கைகளை நியாயமற்ற முறையில் வழங்குவதற்கு காரணமாக இருக்கலாம். இதன் விளைவாக, வங்கி நிலுவைகள் மற்றும் தொடர்புடைய செலுத்த வேண்டிய நிலுவைகள் ஒரே மாதிரியான தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ii) மொத்தமாக ரூபா 0.338 மில்லியன் மீதியைக் கொண்ட ஐந்து வங்கிக் கணக்குகள் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக எந்த பரிவர்த்தனையும் செய்யாமல் மாறாமல் இருந்தன. எவ்வாறாயினும், அத்தகைய நீண்ட காலத்திற்கு எந்தவொரு பரிவர்த்தனையும் இன்றி அந்தக் கணக்குகளை பராமரித்ததற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

உ) மீதி **உறுதிப்படுத்தல்கள்**

வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சோதனையின்படி, மூன்றாம் தரப்பினர்களிடமிருந்தான மீதி உறுதிப்படுத்தல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட வர்த்தக வருமதி மீதிகளுக்கு இடையே ரூபா 9,773 மில்லியன் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதோடு 131 வாடிக்கையாளர்களிடமிருந்து நேரடியாக இம் மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றன. 131 வாடிக்கையாளர்களுள் 80 வாடிக்கையாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதியானது அதேவேளை பேரேட்டு கணக்குகளில் ரூபா 9,381 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்த மீதியை விட அதிகமாகும். அதேவேளை 51 வாடிக்கையாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதியானது பேரேட்டு கணக்குகளில் ரூபா 392 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்த மீதியை விட அதிகமாகும்.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் 3 வாடிக்கையாளர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 4.022 மில்லியனாக இருந்தது, அதே சமயம் பேரேட்டு கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தொடர்புடைய கடன் இருப்பு ரூபா 4.031 மில்லியன் ஆகும்.அதன்படி, அவ் இரு மூலங்களுக்கு இடையே ரூபா 8.053 மில்லியன் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.6 இணக்கப்பாடற்ற வித்தியாசங்கள்

அ) கலால் வரிக்கான சரிப்படுத்தல் ஒன்றினை மேற்கொள்வதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வரி விதிக்கத்தக்க வருமானமானது ரூபா 3243 மில்லியனினால் குறை மதிப்பீடு செய்யப்பட்டதோடு அத் தொகையானது உள்நாட்டு இறை வரித் திணைக்களத்திற்குச் செலுத்தத்தக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக(NBT) 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் அடையாளங்காணப்பட்டன. எவ்வாறாயினும், இம் மீதியானது நீண்ட காலமாக திருப்பிச் செலுத்தப்படாது கணக்குப் பதிவுகளில் பதியப்பட்டு இருந்தன. மேலும், திருத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி(NBT) மீட்சிகள் ஒப்படைக்கப்படவில்லை.

ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் வியாபாரம் வருமதிகளுடன் தொடர்புடைய வயதுப் பகுப்பாய்வின்படி, ரூபா 2,308,285 மில்லியன் பெறுமதியான 78 பற்று மீதிகளும் ரூபா 7.706 மில்லியன் பெறுமதியான 20 கடன் மீதிகளும் 5 வருடங்களுக்கு மேலாகத் மீட்கப்படாமல்/தீர்க்கப்படாமல் இருந்தன. எவ்வாறாயினும், நிலுவையில் உள்ள இம் மீதிகள் தீர்க்கபடாத நிலையில் இவ் வர்த்தகர்களுடன் தொடர்ச்சியான பரிவர்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் இருப்புத் தன்மை ஆகியவை கணக்காய்வில் தெளிவாக இல்லை.

இ) மீளாய்வாண்டின் இறுதியின் போது, 1 முதல் 5 வருடங்கள் வரையிலான ரூபா 1,164.044 மில்லியன் பெறுமதியான 18 பற்று மீதிகளையும் ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள ரூபா 137.548 மில்லியன் பெறுமதியான 16 பற்று மீதிகளையும் உள்ளடக்கிய மீதியானது ஆரம்பத்திலேயே மீட்டெடுப்பதற்கு முறையான செயற்பாடுகள் இன்றி கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்க மீதிகளின் கீழ் காணப்பட்டன. மேலும், அப் பற்று மீதிகளை மீட்டெடுப்பதற்கான உடனடி செயற்பாடுகள் இன்றி கூட்டுத்தாபனமானது அத் தரப்பினர்களுடன் பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, அந் மீதிகளின் துல்லியத் தன்மை மற்றும் இருப்புத் தன்மை ஆகியவை சந்தேகத்திற்குரியதாக இருந்தது.

ஈ) கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின்படி, வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் ஐந்து வருடங்களுக்கு மேலாக ரூபா 40,081 மில்லியன் பெறுமதியான 41 வர்த்தகர்களின் கொண்டு செல்லப்பட்ட மீதிகளும் மீளாய்வாண்டின் இறுதியில் காட்டப்பட்ட ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் 1 முதல் 5 வருடங்களுக்கு மேலாக ரூபா 11,765.714 மில்லியன் பெறுமதியான 103 விற்பனையாளர்களின் மீதிகளும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன. எவ்வாறிருப்பினும், இம் மீதிகளைச் செலுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தினால் மேற்கெர்ளளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக போதிய சான்றுகள் கணக்காய்வுக்கு வழங்கப்பட்டவில்லை. எவ்வாறிருப்பினும், கிடைக்கப்பெற்ற தகவலின்படி, அம் மீதிகளைத் தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் உடனடி நடவக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் இருப்புத் தன்மை ஆகியவை சந்தேகத்திற்குரியதாக இருந்தது.

உ) கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின்படி, மீளாய்வாண்டின் இறுதியின் போது திரண்ட தாமதக் கட்டணங்கள் ரூபா 726 மில்லியன் ஆகும் மற்றும் 2014 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு விநியோகஸ்தர்களினால் மொத்தமாக உரிமை கோரப்பட்ட 1,474,396 அமெரிக்க டொலர்கள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. மேலும், முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது வழங்குநர்களினால் உரிமை கோரப்பட்ட தாமதக் கட்டணங்கள் ரூபா 67 மில்லியன் முதல் ரூபா 400 மில்லியன் வரை அதிகரித்தது. எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனம் உள்ளாகிய உண்மைத் தாமதக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஊ) மொத்த எல்லைக் கூற்றின்படி, மீளாய்வாண்டிற்கான விற்பனை அளவானது 4,532,994,911 லீற்றராக இருந்த அதேவேளை ERP (SAP) முறைமையின்படியான விற்பனை அளவானது 5,484,937,264 லீற்றராக இருந்தது. அதன்படி, 951.942.353 லீற்றர் விற்பனைத் தொகுதியில் சரிசெய்யப்படாத வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக லங்கா பெற்றோல்(ஒக்டேன் 92), லங்கா ஒட்டோ டீசல் மற்றும் ஜெட் விமானங்களுக்கான எரிபொருள் பயன்பாடுகள் என்பன முறையே 15.885, 65.631 மற்றும் 189.570 லீற்றர் என மிகை குறிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மொத்த விற்பனை அளவில் நப்தா மற்றும் உளை எண்ணெய் விற்பனை அளவானது ERP (SAP) முறைமையுடன் ஒப்பிடும் போது முறையே 454,835,774 லீற்றர் மற்றும் 462.961,068 லீற்றர் என குறைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு(SLAuSs)ஏற்ப மேற்கொண்டேன். அத் தரநியமங்களின் கீழான எனது கடமைப் பொறுப்புக்களானவை மேலும் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வுப் பகுதியில் கணக்காளரின் கடமைப் பொறுப்புக்களில் விளக்கப்பட்டுள்ளது. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளானவை எனது தகுதியான கருத்துக்கு அடிப்படை ஒன்றை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகின்றேன்.

1.4 கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்

கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ள தகவலை ஏனைய தகவலானது உள்ளடக்குகின்றது. ஆனால் கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதியின் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதில் உள்ள கணக்காய்வாளரின் அறிக்கையை உள்ளடக்குவதில்லை. முகாமைத்துவமானது ஏனைய தகவ-லுக்கு பொறுப்புடையதாகும்.

நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அபிப்ராயத்தை ஏனைய தகவலானது உள்ளடக்குவதில்லை மற்றும் அதன் மீதான ஏதேனும் வடிவத்திலான எனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதில்லை.

நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக எனது கடமையானது மேலே அடையாளங்காணப்பட்ட தகவல்களை அவை கிடைக்கப்பெறும் போது வாசித்தல் மற்றும் அவ்வாறு வாசிக்கும் போது தகவலானது நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மை ரீதியாக சீராக உள்ளதா அல்லது கணக்காய்விலிருந்து பெறப்பட்டதா அல்லது பிழையான கூற்றா எனக் கவனத்திற் கொள்ளல்.

நான் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசித்த பின்னர், அதில் தவறான கூற்றுக்கள் ஏதும் இருப்பதாகக் கருதினால் அதைத் திருத்துவதற்காக அது தொடர்பாக உரிய ஆளுகையைக் கொண்டவர்களுடன் கலந்துரையாட தேவைப்படுத்தப்பட்டுள்ளேன். மேலும் திருத்தப்படாத தவறான கூற்றுக்கள் இருப்பின் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய பாராளுமன்றத்தரிற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அவை உரிய காலத்தில் அட்டவணைப்படுத்தப்படும்.

1.5 முகாமைத்துவத்தின் கடமைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் ஆளுகையுடன் தொடர்புபட்ட கடமைகள்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை வழங்கக் கூடிய நிதிக்கூற்றுக்களின் தயாரிப்புக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதோடு மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்படக்கூடிய தவறான மூலக் கூற்றுகளில் இருந்து விடுவிக்கப்பட்ட வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க உதவும் வகையில் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு முகாமைத்துவத் தீர்மானமானது அத்தியாவசியமாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நடைமுறைக் கரிசனையாகத் தொழிற்படுவதற்காக கூட்டுத்தாபனம் மற்றும் குழுவிற்கு இருக்கும் திறனை, நடைமுறைக் கரிசனையுடன் தொடர்புடைய விடயங்களை பிரயோகிக்கத்தக்கதாக வெளியிடுதல அகியவற்றுக்கு முகாமைத்துவமானது பொறுப்புடையது ஆகும். மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினைக் கலைக்க அல்லது செயற்பாடுகளை முடக்குவதைத் தவிர, அல்லது உண்மையான மாற்றுவழிகள் இல்லாதிருப்பின் அவ்வாறு செய்வதற்கு நடைமுறைக் கரிசனையைப் பயன்படுத்துதல்.

ஆளுகைப் பொறுப்பு வழங்கப்பட்டவர்கள் கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வை மற்றும் குழுவினது நிதி அறிக்கையிடும் செயற்பாடுகளின் மேற்பார்வைக்கு பொறுப்புடையவர்களாவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு உதவும் வகையில் கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கு உரிய புத்தகத்தையும் பதிவுகளையும் பேண வேண்டும்.

1.6 கணக்காய்வின் நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளரின் கடமைகள்.

எனது குறிக்கோளானது, மோசடி அல்லது பிழை காரணமாக எந்த ஒரு தவறான கூற்றுகளிலிருந்தும் விடுபட்ட நிகிக் கூற்றுக்களுக்கான நியாயமான உறுதிப்பாடுகளைப் பெறுவதோடு எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதுமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் என்பது உயர் மட்டத்திலான ஓர் உறுதிப்பாடு ஆகும். இருப்பினும், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எப்பொழுதும் தவறான கூற்றுகள் ஏதும் இருப்பின் அதனைக் கண்டறியும் என உத்தரவாதப்படுத்த முடியாது. மோசடி அல்லது தவறு காரணமாக தவறான கூற்றுகள் ஏற்படலாம் மற்றும் அவை பொருண்மை சார்ந்ததாகக் கருதப்பட்டால், தனிப்பட்ட ரீதியில் அல்லது ஒட்டு மொத்தமாக இக் கூற்றுக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பயனாளிகளின் பொருளாதாரத் தீர்மானங்களில் நியாயமான முறையில் தாக்கங்களை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக இக் கணக்காய்வில் நியாயமான தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதோடு கணக்காய்வு முழுவதிலும் தொழில் ரீதியான சந்தேக மனப்பான்மையைப் பேணுகின்றேன். மேலும் நான்,

- மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய நிதிக் கூற்றுக்களின் பொருண்மைசார் தவறான கூற்றுக்களின் இடர்களை அடையாளங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல், அவ் இடர்களுக்கான துலங்கள் நடவடிக்கைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல் மற்றும் எனது கருத்துக்களுக்கு அடிப்படைகளை வழங்கக் கூடிய போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெறல். கூட்டுச்சதி, போலி ஆவணங்கள், வேண்டுமென்றே தவிர்த்தல், தவறான விவரிப்புகள் அல்லது உள்ளக் கட்டுப்பாட்டினை இரத்துச் செய்தல் ஆகிய செயற்பாடுகள் மோசடியில் இடம்பெறுவதால் தவறு காரணமாக ஏற்படுகின்ற பொருண்மைசார் தவறான கூற்றுக்களை அடையாளம் காணாமல் இருக்கும் இடரை விட மோசடி காரணமாக ஏற்படும் பொருண்மைசார் தவறான கூற்றுக்களை அடையாளங் காணாமல் இருப்பது பாரிய ஆபத்தாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போன்று பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைகளை வடிவமைப்பதற்கான கணக்குடன் தொடர்புடைய உள்ளக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளல். இருப்பினும், கூட்டுத்தாபனம் மற்றும் குழுவினது உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மீதான ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் நோக்கங்களுக்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்காய்வுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பீடு செய்தல்.

- கணக்கீட்டின் அடிப்படையிலான முகாமைத்துவத்தின் நடைமுறைக் கரிசனைப் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினையும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினையும் அடிப்படையாகக் கொண்டு நடைமுறைக் கரிசனையாகத் தொடர்ந்து செயற்படக் கூடிய கூட்டுத்தாபனத்தின் திறன் மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளுடன் தொடர்புடைய பொருண்மைசார் நிச்சயமற்ற தன்மை உள்ளதா எனத் தீர்மானித்தல் பொருண்மை சார் நிச்சயமற்ற தன்மை உள்ளது என நான் தீர்மானித்தால்; நிதிக் கூற்றுக்களின் வெளிப்பாட்டுடன் தொடர்புடைய எனது கணக்காய்வாளரின் அறிக்கை மீது கவனம் செலுத்துவதற்கும் அல்லது அத்தகைய வெளிப்பாடுகள் பற்றாக்குறையாக இருப்பின் எனது கருத்தினை விருத்தி செய்வதற்கும் தேவைப்படுத்தப்படுகின்றேன். இதுவரையிலும் பெறப்பட்ட எனது கணக்காய்வாளரின் அறிக்கையும் கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளானவை கூட்டுத்தாபனத்தினது நடைமுறைக் கரிசனையாகச் செயற்படுவதை நிறுத்தக்கூடும்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் நியாயமான முன்வைப்பினைப் பெறக்கூடிய வகையில் பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை முன்வைக்கின்றனவா என மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது, உள்ளகக் கட்டுப்பாட்டில் ஏதேனும் முக்கியமான குறைபாடுகளை உள்ளடக்கிய முக்கியமான கண்டுபிடிப்புக்களை ஏனைய விடயங்கள், ஆளுகையுடன் தொடர்புடையவர்களோடு கலந்தாலோசிப்பேன்.

2. ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 முனைப்பழியுள்ள அபிப்ராயம் பந்திக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களும் வெளிப்பாடுகளும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரி-சோதனையிலிருந்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்கீட்டுச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கூட்டுத்தாபனம் முறையான நிதி அறிக்கைகளை பேணிவந்திருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 6 (1)(ஈ)(iii) ஆம் பிரிவின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 இவ்வறிக்கையில், 1.2.2(ஆ), 1.2.3(அ), (ஆ)1.2.5(அ),(ஆ),(ஊ),(எ) மற்றும் 1.2.6(அ), (ஆ),() ஆகியவற்றின் கீழக் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானவை 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட எல்லா பரிந்துரைகளையும் உள்ளடக்குகின்றது.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளிற்குள் காணப்பட்டன. எனினும் வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப சாதாரண வணிக நோக்கங்களுக்குப் புறம்பாக கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை சம்பந்தமாக கூட்டுத்தாபனத்தை ஆளும் குழு உறுப்பினர்களுக்கு ஏதேனும் நேரடியாக அல்லது மறைமுகமான நலன் உள்ளதா எனக் குறிப்பிடுவதற்கும்,

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவினால் வெளியிடப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகள் ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுதப்பட்ட சட்டங்களுடன் கூட்டுத்தாபனமானது இணங்கவில்லை எனக் குறிப்பிடுவதற்கு பின்வருவனவற்றைக் தவிர எனது கவனத்திற்கு எதுவும் வரவில்லை.

ஆளும் குழுவினால் வெளியிடப்பட்ட சட்டம் மற்றும் பொது மற்றும் விசேட பணிப்புரைகளுக்கான குறிப்பீடுகள்	விளக்கம்
அ) 2003 யூன் 02 இன் பீ ஈ டி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை – நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள்	
ii)வழிகாட்டல் 7.2	கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வியாபாரம், நிலக்கரி வியாபாரம், கப்பல் எரிபொருள் வியாபாரம் மற்றும் விவசாய இரசாயன வியாபாரம் போன்ற பாரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய படிமுறைக் கையேட்டை கூட்டுத்தாபனம் தயாரித்திருக்கவில்லை.
iv) வழிகாட்டல் 9.3	பொது முயற்சியாண்மைத் திணைக்களம் மற்றும் திறைசேரி ஆகியவற்றுக்கு இணங்க உரிய அமைச்சின் அங்கீகாரத்துடனான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான திட்டமொன்றை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை.
ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச் சுற்றிலக்கம்	பதவி வெற்றிடம் ஒன்றின் கடமைகளை கவனித்தல் மூன்று மாத காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். இருப்பினும், மூன்று “A” தர பதவிகளை உள்ளடக்கிய பதவி வெற்றிடங்களின் கடமைகளை மேற்கொள்வதற்காக 03 மாதங்களுக்கு மேலாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள்.

நிதி ஒழுங்கு விதி 396	தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் காசோலைகளானவை பழையதாகக் கருதப்படுவதோடு ஆரம்பக் கொடுக்கல் வாங்கலை மாற்றுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், 64 காசோலைகள் அச்சிடப்பட்டன. ஆனால், ரூபா 34,911,295 பெறுமதியான காசோலைகள் மீளளிக்கப்படாது இருந்தன.

ஈ) கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின்படி, மீளாய்வாண்டின் இறுதியின் போது 2011 முதல் 2021 வரையான காலப் பகுதிக்கு திரண்ட சுங்கத் தீர்வை மற்றும் செலுத்தத்தக்கவைகள் ரூபா 11,015.43 மில்லியன் ஆகும். அதன் படி, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின்படி, உரிய காலப் பகுதியினுள் கூட்டுத்தாபனமானது சுங்கத் தீர்வையை செலுத்தவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், 2021 டிசம்பர் 30 ஆம் திகதிய TIP/TP/09/06-02/21 ஆம் இலக்க திறைசேரிக்கான செயலாளரின் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்ட தீர்வைகள் /வரிகளின் கட்டணம் தொடர்பான பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனமானது இணங்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனமானது தனது அதிகாரதங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் பின்வருவனவற்றைத் தவிர நடவடிக்கைகை எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடுகின்றன;

அ) முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போல் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட்டினால் (LIOC) அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனத் திட்டமிடல் முறைமையின் (ERP) தலையீட்டுடன் தொடர்புடைய தமது கடமைகளை தொடர்பாக ஏதேனும் ஓர் ஒப்பந்தம் அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு கூட்டுத்தாபனம், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் (CPSTL) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவை வரவில்லை என்பதோடு விசேடமாக இம் முறைமையானது எரிபொருள் களஞ்சிய மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகளுக்கு போதியளவில் பயன்படுத்தப்படவில்லை.

ஆ) பொதுப் பயனர் வசதிகள் தொடர்பாக முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பின்வரும் அவதானிப்புக்களை சீராக்குவதற்கு கூட்டுத்தாபனத்தினால் உடனடி நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

(i) இலங்கை அரசாங்கம் (GOSL) , கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவற்றுக்கிடையே 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தமானது (GOSL/ CPC/LIOC) ஒப்பந்தத்தின் பதினைந்தாம் பிரிவின் விதிமுறைகளுக்கு ஏற்ப 2008 டிசம்பர் 31 ஆம் திகதி காலாவதியானது. ஆகையால், நிறுவனங்களின் ஆளுகை செயல்முறை மற்றும் உற்பத்தி செலவினைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் விலையிடும் சூத்திரம் மற்றும் slab கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துச் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் உள்வாங்கப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகளானவை; தொடர்புடைய எல்லாத் தரப்பினரதும் ஒப்பந்தத்துடன் புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. (இறுதியாக 2011 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது.)

2019 மே 13 ஆம் திகதி கூட்டுத்தாபனமானது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டுடன் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் பரிமாற்றம் மற்றும் உற்பத்திக் கட்டணங்களுக்கான அடிப்படைகளைத் தீர்மானித்தல் ஆகியவை தொடர்பாக

(ii) ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது. அதே விதிகளும் நிபந்தனைகளும் பிரயோகிக்கப் பட்டாலும், 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தத்தின் (GOSL/CPC/LIOC) பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக இருக்கக்கூடிய லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. எனவே, கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை இந்தியன் ஒயில் கம்பனியானது மறுக்கக் கூடிய இடர் ஒன்று காணப்பட்டது.

(iii) 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுவான பயனர் வசதிகளுக்கான பங்குதாரர் (GOSL/CPC/LIOC ஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தம் மற்றும் 2019 மே 13ஆம் திகதி கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு இணங்க குழாய் அமைப்புகள் அல்லது குழாய் அமைப்புகளின் பகுதியினை ஏற்றுக் கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப பேணல் மற்றும் இரண்டு மாத காலத்திற்கான எரிபொருள் களஞ்சிய வசதிகளை வழங்குதல் என்பன CPSTL இன் கடமையாகும். எவ்வாறு இருப்பினும் குழாய் அமைப்பில் உள்ள தடைகள் மற்றும் களஞ்சிய முறைமையின் வினைத்திறன் இன்மை காரணமாக கொள்கலன் ஒன்றில் இருந்து எரிபொருளை இறக்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக கூட்டுத்தாபனமானது தாமதக் கட்டணத்தினை செலுத்துவதற்கு பொறுப்பாக்கப்பட்டிருந்தது.

(iv) கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னாவ எண்ணெய்க் களஞ்சியம் வரையிலான 12 அங்குல விட்டம் மற்றும் 5,500 மீற்றர் நீளமான குழாய்த் தொகுதியினைப் புனரமைப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனமானது ரூபா 250 மில்லியனை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தியுள்ளது. கணக்காய்வுக்குக் கிடைக்கக்கூடிய தகவலின்படி, எதிர்காலத்தில் அச் செலுத்திய தொகையை மீட்பதற்காக கூட்டுத்தாபனமானது CPSTL உடன் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் வராததோடு எந்தவொரு சேசுவார்த்தையையும் மேற்கொள்ளவில்லை.

(v) ஒப்பந்தத்தின்படி உற்பத்திச் செலவுகளானவை களஞ்சிய முனையச் செலவு மற்றும் வருமான எல்லை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. களஞ்சிய முனையச் செலவானது தனிப்பட்ட செலவு, மேற்தலை மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் CPSTL இன் அடிப்படை சொத்துத் தேய்மானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. எவ்வாறிருப்பினும், CPSTL இன் போக்குவரத்துடன் தொடர்புடைய செலவுகளானவை உற்பத்திக் கட்டணங்களின் களஞ்சிய முனையச் செலவினை தீர்மானிக்கும் போது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக

CPSTL இன் போக்குவரத்துக் கட்டணங்களின் மீள்நிதியிடலானது நகல் செய்யப்படக் கூடும். கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின் படி மீளாய்வாண்டின் போது CPSTL இற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்துக் கட்டணமாக 2,501.8 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

(vi) 2003 டிசம்பர் 30 ஆம் திகதிய (GOSL/ CPC/LIOC ஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தின் படி, களஞ்சிய முனையச் செலவானது *"(இ) வருடத்துக்கு 12 சதவீதம் என்ற வட்டி விகிதத்தின் அடிப்படையில் கம்பனியில் கடன் அளிக்கப்பட்டுள்ளதோடு களஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒரு பகுதியை உருவாக்குதல் மற்றும் பணப்பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட மேலதிகக் கடன்கள்" என்பதாகும்.* இவ் ஒப்பந்தமானது 2008 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்தது. எவ்வாறிருப்பினும், ஒப்பந்தம் முடிவடைந்ததன் பின்னர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டினால் 2009 ஆம் ஆண்டு மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காக 2,183 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட ஒரு வட்டித் தொகை 2009 முதல் 2016 வரையான காலப்பகுதி வரை கூட்டுத்தாபனத்தில் செலுத்தப்பட்டது. அத்தகைய கட்டணமானது முறையான மதிப்பீடு இல்லாமலும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி செலுத்த வேண்டிய உண்மைத் தொகையினை உறுதிப்படுத்தாமலும் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

(vi) ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப குழாய் அமைப்புக்களை பரா-மரித்தலும் போதிய அளவிலான களஞ்சிய வசதிகளை வழங்குவதுமே துணை கம்பனியான CPSTL இன் பிரதான வகிபாகம் ஆகும். அதன்படி, நாட்டின் எரிபெ-ாருள் வழங்கலின் களஞ்சியப்படுத்தல் மற்றும் முனைய வசதிகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கட்டணமாக குறிப்பிடத்தக்க அளவு நிதி CPSTL இற்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வின் கீழான வருடத்தின் போது CPSTL ஆனது 1,000 மில்லியன் ரூபாவினைத் தேய்மானமாக அறவிட்டிருந்ததோடு கடந்த 11 வருடங்களுக்கான தொகையானது 12,000 மில்லியன் ரூபாவாகும். இதற்கு மேலதிகமாக மீளாய்வின் கீழான வருட இறுதியின் போது CPSTL ஆல் வருமான எல்லையாக 2,983 மில்லியன் ரூபா அறவிடப்பட்டதோடு கடந்த பத்து வருடங்களாக CPC மற்றும் LIOC ஆகியவற்றில் இருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகையானது 46,523 மில்லியன் ரூபாவாகும். எவ்வாறிருப்பினும், CPSTL ஆனது புதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காகவும் நடைமுறையில் உள்ள வசதிகளை பேணுவதற்காகவும் உடனடியாக ஏதேனும் நன்மை பயக்கின்ற நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த இயலாதிருந்தது.

எவ்வாறிருப்பினும், புதிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அல்லது தற்போதுள்ள வசதிகளை உடனடியாகப் பராமரிக்க CPSTL முறையான நடவடிக்கைகளை எடுத்ததா என்பதைக் கண்டறிய போதுமான மற்றும் பொருத்தமான சான்றுகள் இல்லை.

(இ) ERP முறைமையின் (SAP) பயன்பாடு

2005 ஆம் ஆணடில் வெளியிடப்பட்ட SAP ERP முறைமையின் ஆரம்பப் பதிப்பான ERP (SAP ECC 6.0) ஆனது கூட்டுத்தாபனத்தினால் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து புதுப்பிக்கப்படாது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2011 ஏப்ரல் 09 ஆம் திகதியிடப்பட்ட ADM/12/01/19 ஆம் இலக்கக் கடிதத்தின்படி, SAP முறைமையின் பயன்பாட்டுடன் தொடர்பான ஒரு சாத்தியக்கூறு கற்கை மற்றும் பணத்திற்கான மதிப்பைத் கணக்காய்வு செய்ய வலுசக்தித் துறை அமைச்சின் செயலாளர் கூட்டுத்தாபனம் மற்றும் CPSTL இன் தலைவரை அறிவுறுத்தியதோடு காலாவதியான முறைமை ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய இடரைத் தடுப்பதற்கு வழிநடத்தல் குழுவின் பரிந்துரைகளுடன் இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அறிவுறுத்தினார். மேலும், 2021 ஜூலை 22 ஆம் திகதியிடப்பட்ட 07/1252 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின்படி, உரிய வன்பொருள் மேம்பாட்டுத் தேவையுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட பதிப்பின் முன்மொழிவு மீதான பரிந்துரைகளைப் பெறுமாறும் பணிப்பாளர் சபையின் கருத்துக்களுக்கும் ஒப்படைக்குமாறு சபையானது ஆலோசனை வழங்கியது. எவ்வாறிருப்பினும், ஆலோசனை வழங்கப்பட்டதன்படி கூட்டுத்தாபனமானது SAP முறைமையை மேம்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லை.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கவும் உரிய காலப்பகுதியினுள்ளும் கூட்டுத்தாபனத்தின் வளங்கள் பின்வருவதைத் தவிர பொருளாதார ரீதியாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பெறுகை செய்யப்படாததோடு பயன்படுத்தப்படவுமில்லை.

அ)வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து கிடைக்கப்பெறக்கூடியவை

கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 2012 முதல் 2018 வரையான காலப் பகுதிக்கு வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து சேகரிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகையானது 4392675 அமெரிக்க டொலர்களாகும். இத் தொகையானது தாமதமான விநியோகம்/குறுகிய ஏற்றுதலக்காக விதிக்கப்பட்ட 1,476,556 அமெரிக்க டொலர் தண்டப்பணத்தையும் வெளியக இழப்புக்களுக்கான 178.678 அமெரிக்க டொலரையும் ஏற்றுக்கொள்ள முடியாத தரத்துக்கான 2,630,423 அமெரிக்க டொலரையும் விலை வித்தியாசம் காரணமான இழப்புக்களுக்கான 107.017 அமெரிக்க டொலரையும் உள்ளடக்கியுள்ளது. எவ்வாறிருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியின் போதும் இத் தொகைகளைச் சேகரிப்பதற்கும் செலுத்தத்தக்க தொகைகளுக்கு எதிராகத் தீர்க்கவும் கூட்டுத்தாபனமானது வினைத்திறனான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

ஆ) 2012 திகதிய 22 ஆம் திகதியிடப்பட்ட 12/0295/510/003/TRB ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, வாரந்தோறும் உடனடியாக வாங்குவதற்குப் பதிலாக, நீட்டிக்கப்பட்ட கடன் வசதிகளுடன் பெற்றோலியப் உற்பத்திகளை வழங்குவதற்கான கால ஒப்பந்தத்தில் கைச்சாத்திட உரிய அமைச்சு முயற்சி செய்ய வேண்டும். எவ்வாறிருப்பினும், மேற்கூறிய முடிவிற்கு மாறாக உடனடியாக வாங்கல் (ஒற்றைச் சரக்கு) தொடர்புகளின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் 99 ஏற்றுமதிகளில் 28 ஏற்றுமதிகளுக்கு உட்பட்டுள்ளன.

2.3 ஏனைய விடயங்கள்

2.3.1 2013 ஆம் ஆண்டு பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவுடன் தொடர்புடைய 32,344 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடைய 250,925,169 அமெரிக்க டொலர்களை கூட்டுத்தாபனத்தினால் டெஹ்ரானில் அமைந்துள்ள ஈரான் தேசிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டியிருந்தது. வழங்கப்பட்ட தகவலின் படி, அத்தையை நிலுவை மீதிக-ளின் கட்டணமானது ஐக்கிய அமெரிக்காவினால் ஈரான் மீது விதிக்கப்பட்ட தடை காரணமாக நிறுத்தப்பட்டது. அத்தகைய மீதியானது ஒவ்வொரு வருட இறுதியிலும் நாணயமாற்று விகிதத்தில் ஆரம்பத்திலிருந்தே காட்டப்பட்டு வந்திருந்ததோடு சரி செய்யப்பட்ட தொகையின் வித்தியாசமானது உரிய வருடத்தின் நாணயமாற்று விகிதத்தின் இலாபம் அல்லது நட்டமாகப் பரிமாற்றப்பட்டது. அதன்படி மீளாய்வாண்டின் கீழான வருட இறுதியின் போது(2012 முதல் 2021 வரை) செலுத்தத்தக்க மீதி மற்றும் திரண்ட நாணயமாற்று விகித வேறுபாட்டு இழப்பானது முறையே ரூபா 50,938 மில்லியன் மற்றும் ரூபா 18,594 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டுக்கான நாணயமாற்று விகித வேறுபாட்டு இழப்பானது ரூபா 3,004 மில்லியன் ஆகும். மேலும், கட்டுப்படுத்த முடியாத புறக் காரணிகளினால் தான் இந் நிலுவைகளின் கட்டணம் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், நீண்ட காலத்திற்கு அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் படிப்படியான தேய்மானம் ஏற்பட்டிருந்த சூழல் ஒன்றில் கூட்டுத்தாபனமானது இத் தொகையைச் செலுத்துவதற்கு ஏதேனும் மாற்று வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டதா என்பதையும் மீதியைச் செலுத்தாது வைத்திருப்பதன் நிதிச் சாத்தியப்பாட்டினை மதிப்பீடு செய்ததா என்பதை உறுதிப்படுத்த போதியளவான மற்றும் பொருத்தமான சான்றைப் பெற முடியவில்லை.

2.3.2 எனது முன்னனைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டதன் படி, மீளாய்வாண்டின் இறுதியில் கூட இலங்கை மின்சார சபை உள்ளிட்ட பாரிய வாடிக்கையாளர்களுடனான எரிபெ-ாருள் வழங்கல் தொடர்பாக

முறையான ஒப்பந்தங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

2.3.3 வரிகள் மற்றும் தீர்வைகளின் மீட்டெடுப்பு

எனது முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று ரூபா 648 மில்லியன் ரூபா கலால் வரியை உள்ளடக்குகின்ற நிராகரிக்கப்பட்ட ஏற்றுமதி சரக்குகளை வெளி-யேற்றுவதற்கு முன்னர் சுங்க வரி மற்றும் தீர்வையாக ரூபா 1,617 மில்லியன் தொகையானது செலுத்தப்பட்டது. எவ்வாறிருப்பினும், 2017 ஜனவரியிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கட்டணங்களினால் மீட்டெடுக்க அல்லது தீர்க்கப்பட முடியவில்லை.

2.3.4 பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல்

தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையில் உள்ள பெற்றோலிய களஞ்சிய கொள்திறனை மதிப்பீடு செய்து தற்பொழுது இலங்கையில் செயற்பாட்டில் உள்ள எரிபொருள் போக்குவரத்து குழாய் அமைப்பு முறைமையின் பொருத்தப்பாடு மற்றும் உற்பத்தித்திறன், புகையிரதம் மற்றும் பவுசர் வண்டிகளின் போக்குவரத்து முறை-மை ஆகியவற்றை மதிப்பீடு செய்து நாட்டிலுள்ள பெற்றோலிய கட்டிடத் தொகுதி மற்றும் எரிபொருள் போக்குவரத்து ஆகியவற்றில் சுமுகமான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்கின்றதுமான எனது விசேட அறிக்கையானது பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. சுமுகமான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்குத் தேவையான மற்றும் நாட்டில் எரி-பொருள் செயற்பாடு ஆகியவற்றுக்கான முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை கூட்டுத்தாபனத்தினால் பொருத்தமாக வடிவமைக்கப்பட்டு நிறுவப்படவில்லை அக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

2.3.5 திருகோணமலை தாங்கிப் பண்ணை

திருகோணமலை தாங்கிப் பண்ணையில் 100 எண்ணெய்த் தாங்கிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர் (m^3)(10,000MT) கொள்ளளவினைக் கொண்டுள்ளன. மற்றும் தொடர்புபட்ட ஏனைய வசதிகளானவை 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. தாங்கிப் பண்ணைக்கு சொந்தமான 358.553 ஹெக்டயர் நிலப் பரப்பானது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் பிரித்தானிய அரசாங்கத்தின் Lord High Admiralty இன் ஆணையாளர்களுக்கு 999 வருடங்களுக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1961 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுத்தாபனமானது மூ ன்று தவணைகளில் 2,50000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை செலுத்தி 1964 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் காணி எண்ணைத் தாங்கி கட்டடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான உரிமையைப் பெற்றுக்கொண்டது. இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட நிலத்திற்காக இதுவரை அரசாங்கத்திடமிருந்து எந்த ஒரு சட்டரீதியான ஆவணமும் பெறப்படவில்லை.

2003 ஆம் ஆண்டில் 35 வருட காலங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் நிலத்தினை லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு குத்தகைக்கு விடுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கும் இடையே ஓர் ஒப்பந்தத்தினை மேற்கொண்டதோடு ஒப்பந்தமானது ஒப்பந்த திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது. கூட்டுத் தாபனமானது எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை அல்லது தாங்கிகளைப் பயன்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் 2003 ஆம் ஆண்டிலிருந்து லங்கா இந்தியன் ஒயில் கம்பனியானது இச் சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்றது. 2015 ஏப்ரல் 29 ஆம் திகதி அன்று மேற் பிரிவில் கைவிடப்பட்டு இருந்த 84 தாங்கிகளை நவீனமயப்படுத்துவதற்கான ஆரம்பத் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடுகளானவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தாங்கிக் கட்டடத் தொகுதியின் அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாணத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

திருகோணமலையில் உள்ள எண்ணெய்த்தாங்கி கட்டிடத்தொகுதியினை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகிய இரண்டும் இணைந்து "ட்ரின்கோ பெற்றோலியம் டெர்மினல் பிரைவட் லிமிடட் " இனை நிறுவினாலும், நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான முறையான செயற் திட்டம் ஒன்று அக் கம்பனியினால் இது வரை தயாரிக்கப்படவில்லை.

2.3.6. நிலுவையில் உள்ள பரிவர்தனைகள்

2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்குறைப்பு பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின்படி, 2021 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அச் செலுத்தல்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டமானது 14,028 மில்லியன் ரூபாவாகும். மேலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொமர்ஷல் வங்கியானது 8,648,300 அமெரிக்க டொலர்களை உரிமை கோரி வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

2.3.7 சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட நடைமுறையில் உள்ள சுத்திகரிப்பு நிலையமானது (1969 இல் ஆரம்பிக்கப்பட்டது) அடிப்படை சுத்திகரிப்பு சாலை என்பதுடன் இதன் மூலம் நாட்டில் அதிகரித்து வரும் பெற்றோலியக் கேள்விகளைப் பூர்த்தி செய்ய இயலாது உள்ளது. மேலும் செயற் திறனை அதிகரிக்கக் கூடிய வகையில் குறைந்த விலையில் பெற்றோலிய உற்பத்திகளை உற்பத்தி செய்யக்கூடியதும் கீழ்மட்ட உற்பத்திகளை பெற்றோல், டீசல் போன்ற உயர் பெறுமானத்தைக் கொண்ட உற்பத்திகளாகத் தரம் உயர்த்துவதற்கான ஆற்றல்களை உள்ளடக்கிய வசதிகளுடன் கூடிய தொழில்நுட்பத்தில் தொழிற்படக் கூடிய சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பிடும்போது இச் சுத்திகரிப்பு நிலையமானது குறைவான செயற்றிறன் மிகைளுடன் தொழிற்படுகின்றது. எவ்வாறிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் உற்பத்திகளை செலவு குறைந்த முறையில் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தினை (SOREM) அல்லது ஏனைய பதில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

மேலும் 1003 மில்லியன் செலவில் எடுக்கப்பட்ட காணியானது இவ்வறிக்கையினை மேற்கொள்ளும் திகதி வரையிலும் விளைவற்ற நிலையிலேயே உள்ளது. மேலும், கச்சா எண்ணெய்ப் பற்றாக்குறை காரணமாக பல முறை மேற்கொள்ளப்பட்ட பாரிய மூடுகையானது மனித வலு மற்றும் ஏனைய வளங்களை செயற்பாடற்று இருக்கச் செய்தது. எவ்வாறிருப்பினும், எல்லா விடயங்களையும் முழுமையாகக் கற்பதன் மூலம் சுத்திகரிப்பு நிலையத்தினை இயங்கச் செய்வதன் பொருளாதார மற்றும் சமூப் பெறுமானம் பற்றிய முறையான மதிப்பீடானது நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தினால் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை நவீனமயப்படத்தவும் விரிவுபடுத்த அல்லது புதிய சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை நிறுவவும் முடியாதுள்ளது.

2.3.8 பதிவு செய்யப்பட்ட வணிகர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்புதல் பெற்ற விநியோகச் செயற்பாடுகள்

பெற்றோலிய உற்பத்திகளானவை கூட்டுத்தாபனத்தினால் நேரடியாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் ஊடாகவோ இறுதி நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டன. விற்பனைகளானவை விநியோகஸ்தர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தால் தரகுத் தொகை ஒன்று விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டும். கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டு இருந்தால், அத்தகைய தரகுத் தொகையை செலுத்தத் தேவையில்லை. இதற்கு மேலதிகமாக, 2008 ஆம் ஆண்டிலிருந்து தரகுக் கட்டணம் ஒன்றிற்கு உட்படக் கூடிய "ஷிப் டு பார்டி சிஸ்டம் (SPS)" எனும் முறைமையின் கீழ் தனியார் நுகர்வோருக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கான அதிகாரத்தை கூட்டுத்தாபனமானது சில தெரிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு வழங்கியுள்ளது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) SPS இன் கீழ் தனியார் நுகர்வோருக்கு நேரடியாக எரிபொருளை விநியோகிக்க விநியோகஸ்தர்கள் கையாளும் செலவு அல்லது செயற்பாட்டுச் செலவு அல்லது மேல்நிலைச் செலவு எதுவும் ஏற்கப்படவில்லை என்பது கணக்காய்வின் போது தெரியவந்தது. எனவே, கூட்டுத்தாபனத்திற்கு மேலதிக செலவில் SPS முறையை அமுல்படுத்துவதற்கான காரணம் கணக்காய்வில் தெளிவாக இல்லை.

(ஆ) அனைத்து தனியார் நுகர்வோருக்கும் எரிபொருளை விநியோகிப்பதற்கு CPSTL இன் பவுசர் தொகுதிகளிலும் வாடகைக்கு எடுக்கப்பட்ட பவுசர்களின் தொகுதிகளிலும் போதுமான எண்ணிக்கையிலான பவுசர்கள் இருந்தன. எனவே, SPS வாடிக்கையாளராகப் பதிவு செய்துள்ள தனியார் தரப்பினர், நுகர்வோராகப் பதிவு செய்ய எந்தத் தடையும் இல்லை, அப்படி இருந்தால், பெருந்தொகையான வணிகத் தரகுத் தொகையை கூட்டுத்தாபனம் சேமிக்க முடியும். எனவே, கூட்டுத்தாபனத்தினால் இத்தகைய நீண்ட காலத்திற்கு SPS செயன்முறையை செயற்படுத்துவதும் பராமரிப்பதும் கேள்விக்குட்பட்டதாக உள்ளது.

(இ) கணக்காய்வுக்குக் கிடைத்த தகவலின்படி, SPS முறைமையின் கீழ் 5 விநியோகஸ்தர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு, தனியார் நுகர்வோருக்கு நேரடியாக எரிபொருளை விநியோகிக்க அதிகாரம் அளிக்கப்பட்டு, மீளாய்வாண்டில் ரூபா 132.453 மில்லியன் தரகுப் பணம் செலுத்தப்பட்டது. ஆனால், அவர்கள் தேர்வு செய்யப்பட்டதற்கான அடிப்படை கணக்காய்வில் விளக்கப்படவில்லை.

2.3.9 விநியோகஸ்தர்களுக்கான விற்பனைத் தரகுப் பணம்

2019 ஜூலை 30 ஆம் திகதிய 05/1231 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி, பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றில் திறைசேரிக்குச் உரிமையான எல்லா விற்பனை செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலைய விநியோகஸ்தர்களுக்கு(DODO) 3 சதவீதமும் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான எல்லா வணிக விற்பனையாளர் செயற்பாட்டு எரிபொருள் நிலைய விநியோகஸ்தர்களுக்கு (CODO) 2.75 சதவீதமுமாக உயர் மற்றும் கீழ் எல்லைகளுக்கு இடையே பின்வரும் ஒவ்வொரு உற்பத்திகளுக்குமான தற்காலிக நடவடிக்கையாக கொள்கை அடிப்படையில் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

விவரங்கள	பெற்றோல		டீசல்	
	ஒக்டேன் 92	ஒக்டேன் 95	எல்ஏடீ	எல்எஸ்டீ
உயர் எல்லை	ரூ. 162.00	ரூ. 170.00	ரூ. 121.00	ரூ. 145.00
கீழ் எல்லை	ரூ.117.00	ரூ. 128.00	ரூ. 95.00	ரூ. 110.00

இரண்டு சதவீத நிலையான தரகுத் தொகை வீதமானது மண்ணெண்ணைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேற் குறிப்பிடப்பட்ட முடிவுகளை 2019 ஆகஸ்ட் 15 முதல் நடைமுறைப்படுத்த கூட்டுத்தாபனம் முடிவு செய்திருந்தாலும், அது 2022 மார்ச் 10 அன்று விநியோகஸ்தர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது, அதாவது. 31 மாதங்களுக்கும் மேல் தாமதமாக. எவ்வாறாயினும், சபையின் முடிவை விநியோகஸ்தர்களுக்கு சரியான நேரத்தில் தெரிவிக்க வேண்டிய பொறுப்பை புறக்கணித்த அதிகாரிகளுக்கு எதிராக கூட்டுத்தாபனத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், அனைத்து விநியோகஸ்தர்களுக்கும் பொருந்தக்கூடிய விநியோக தரகுத் தொகை கட்டமைப்பை நிர்ணயம் செய்ய நியமிக்கப்பட்ட குழுவிற்கு தரகுத் தொகையின் மேற்குறித்த திருத்தம் தொடர்பான விவரங்களை DGM இல் (சந்தைப்படுத்தல்) வழங்கப்படவில்லை.

(ஆ) விநியோகஸ்தர்களின் செயற்பாட்டு மற்றும் பிற மேல்நிலை செலவுகள் மற்றும் இலாப எல்லை ஆகியவற்றை மீட்டெடுப்பதற்காக விநியோக தரகுத் தொகை விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும், விற்பனை விலையின் அடிப்படையில் விநியோக தரகுத் தொகையினை நிர்ணயிப்பதில் விநியோக தரகுத் தொகைக்கும் எரிபொருள் விலைக்கும் இடையே உள்ள தொடர்பு கணக்காய்வில் தெளிவாக இல்லை.

(இ) சபையின் முடிவைச் செயற்படுத்த அப்போதைய முகாமைத்துவப் பணிப்பாளரினால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை, அதற்குப் பதிலாக, முடிவைச் செயற்படுத்துவதற்கு முன்னரே சந்தைப்படுத்தல் முகாமையாளர் அனைத்து விநியோகஸ்தர்களிதும் வருமானம் மற்றும் செலவினங்களைப் பற்றிய பகுப்பாய்வை சந்தைப்படுத்தல் பார்வையில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டார். அப்போது விநியோகஸ்தர்களுக்கு அதிகப்படியாக செலுத்திய தொகை ரூபா 100 மில்லியனுக்கு குறைவாகவே இருந்த போதிலும், நாளொன்றுக்கு குவிந்து வரும் மிகைக் கட்டணம் ரூ. 3 மில்லியன் ஆகும். அதன்படி, அந்த சபையின் முடிவை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், கூட்டுத்தாபனத்தின் நிதி நிலையை எதிர்மறையாகப் பாதித்துள்ளது. எனவே, சபை முடிவை அமுல்படுத்தாமல், முகாமைத்துவப் பணிப்பாளர், தன் சொந்த விருப்பத்தின் பேரில், இதுபோன்ற நடவடிக்கை எடுத்திருப்பது, கணக்காய்வில் கேள்விக்குறியாக இருந்தது.

(ஈ) அந்த முடிவை விநியோகஸ்தர்களுக்குத் தெரிவித்த பிறகு, பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கமும் மற்ற நான்கு விநியோகஸ்தர்களும் அந்த சபைத் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர், மேலும் தற்போதைய நிலையைப் பராமரிக்க நீதிமன்றம் ஒரு தடை உத்தரவைப் பிறப்பித்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, விநியோகஸ்தர் தரகுத் தொகையினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்படும் அடிப்படை, இது தொடர்பான சபையின் முடிவு, கூட்டுத்தாபனத்தின் வருவாய் மற்றும் எண்ணெய் விலை உயர்வு ஆகியவற்றில் விநியோக தரகுத் தொகையின் தாக்கம், மூன்றாம் தரப்பினரால் பொதுப் பணத்தை தவறாகப் பயன்படுத்துதற்கான சாத்தியம், விநியோகஸ்தர் தரகுத் தொகையினை அதிகமாகச் செலுத்துதல் (அது 2020 அக்டோபர் 31 இல் ரூபா 10,400 மில்லியனுக்கும் அதிகமாக இருந்தது) போன்றவை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேற் குறித்த தடை உத்தரவை 2022 ஜூலை 15 அன்று இரத்துச் செய்தது. அதன்படி, புதிய தரகுத் தொகை விகிதங்களைப் புதுப்பிக்க கூட்டுத்தாபனத்திற்கு இயலுமான வகையில் சபையின் முடிவை அமுல்படுத்துவதில் ஏதேனும் சட்டத் தடைகள் இல்லாமையினால் 2022 ஜூலை 16 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ERP அமைப்பில் (SAP) தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 2022 ஜூலை 17 வரையிலான அதிக ஊதியம் பெற்ற விநியோக தரகுத் தொகையான ரூ. 4,349.93 மில்லியனானது கூட்டுத்தாபனத்தினால் மீட்கப்படவில்லை.

(ஊ) சபையின் முடிவை செயற்படுத்தி மற்றும் நிதி நெருக்கடியைப் பொருட்படுத்தாமல் கூட்டுத்தாபனத்திற்கு எந்தத் சட்டத் தடையும் இல்லாத நிலையில் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு 2022 ஜூலை 25 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நடைமுறையில் உள்ள உயர் மற்றும் கீழ் மட்ட செலவு எல்லையினை நீக்குமாறு தலைவர் பணித்தார். அதன்படி, விநியோகத் தரகுத் தொகையின் மேல் மற்றும் கீழ் வரம்புகள் குறித்த சபையின் முடிவை கவனத்திற்கொள்ளாது, விநியோகத் தரகுத் தொகை தொடர்ந்து செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சபை முடிவின் திருத்தத்திற்கான எல்லா சபை உறுப்பினர்களினதும் ஒப்புதல் மற்றும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலிய சட்டத்திற்கு ஏற்ப உரிய அமைச்சரின் அனுமதி கணக்காய்வுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ii) விநியோகத் தரகுத் தொகையின் மேல் மற்றும் கீழ் வரம்புகளின் நீக்கத்திற்குப் பின்னர் 2022 ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 31 வரை விநியோகஸ்தர்களுக்குச் செலுத்தப்பட்ட மிகை விநியோகத் தரகுத் தொகை ரூபா 1,963.87 மில்லியனாக இருந்தது மற்றும் அதன்படி அத் திகதியின் போது திரண்ட மிகை விநியோகத் தரகுத் தொகையானது ரூபா 6537.96 மில்லியனாக இருந்தது.

(எ) சபைத் தீர்மானத்திற்கு இணங்க நாளொன்றிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 30.7 மில்லியன் விநியோகத் தரகுத் தொகையுடன் ஒப்பிடும் போது, 2022 ஜூலை 26 அன்று மிகையாகச்(கட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் நிலையின் கீழ் கூட) செலுத்தப்பட்ட உண்மை விநியோகத் தரகுத் தொகையானது ரூபா 67.9 மில்லியன் ஆகும். அதன்படி, உயர் மட்ட செலவு எல்லை வீதத்தின் நீக்கம் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட விநியோகத் தரகுத் தொகையின் தாக்கமானது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

விபரங்கள்	**நாளாந்தம்**	**மாதாந்தம்**	**வருடாந்தம்**
	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.
விநியோகத் தரகுத் தொகைகள்			
நடைமுறையில் உள்ள சபைத் தீர்மானத்தின் கீழ் செலுத்தத்தக்கவை(செலவு எல்லைகளுடன்)	30.7	921	11,052
புதிய அறிவுறுத்தல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டணங்கள் (செலவு எல்லைகளின்றி)	98.6	2,958	35,496
வித்தியாசம் - அதிகரிப்பு	67.9	2,037	24,444
நடைமுறையில் உள்ள சபைத் தீர்மானத்தின் படியான வீதமாக அதிகரித்தல் சபைத் தீர்மானம் (செலவு எல்லைகளுடன்)	221	221	221

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2019 ஜூலை 30 ஆம் திகதிய 05/1231 ஆம் இலக்க சபைத் தீர்மானத்துடன் ஒப்பிடம் போது, விநியோகத் தரகுத் தொகைக் கிரயமானது 221 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது மற்றும் அதன்படி, வருடாந்த விநியோகத் தரகுத் தொகைக் கிரயமானது ரூபா 24 பில்லியனாக அதிகரிக்கக் கூடும். அதன்படி, 2022 ஆம் ஆண்டிற்கான விநியோகத் தரகுத் தொகை அதி-கரிப்பானது குறித்த வருடத்திற்கான சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் உள்ளிட்ட கூட்டுத்தாபனத்தின் சராசரி ஊழிய செலவை விட நான்கு மடங்கு அதிகமாக இருக்கலாம்.

(i) பிடுமின், மசகுப் பொரட்கள் மற்றும் விவசாய உற்பத்திகள் மற்றும் பிற அரசு வாடிக்கையாளர்களுக்கான விநியோகத் தரகுத் தொகை உட்பட, கடந்த ஐந்து ஆண்டுகளாக கூட்டுத்தாபனம் செலுத்திய மொத்த விநியோகத் தரகுத் தொகை விபரங்கள் பின்வருமாறு,

வருடம்	**ரூபா.மி**
2017	10,995
2018	13,541
2019	14,132
2020	12,402
2021	14,486
அடுத்து வரும் 12 மாதங்களுக்கான எதிர்வுகூறத்தக்க விநியோகத் தரகுத் தொகை	35,496

அதன்படி, முந்தைய ஆண்டுகளின் சராசரியுடன் ஒப்பிடும் அடுத்து வரும் 12 மாதங்களுக்கான எதிர்வுகூறத்தக்க விநியோகத் தரகுத் தொகையானது குறிப்பிடத்தக்கதாகவும் அசாதாரணமாகவும் இருக்கும். எனவே, நாட்டில் எரிபொருள் விநியோகம் இயல்பு நிலைக்குத் திரும்பும் போது, விநியோகத் தரகுத் தொகையாயின் உயர் எல்லையைக் கட்டுப்படுத்தாமல் எரிபொருளின் விற்பனை விலையின் அடிப்படையில் முடிவு செய்யப்படுவதால், விநியோகத் தரகுத் தொகையானது மேலும் அதிகரிக்கும். விநியோகத் தரகுத் தொகையாயின் காரணமாக ஏற்படும் எரிபொருள் விலை அதிகரிப்பும் எரிபொருள் விலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஏ) பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை விலை மீதான விநியோகத் தரகுத் பங்கின் தாக்கம்

2022 மே 23 ஆம் திகதிய 22/0673/522/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையிடும் பொறிமுறையானது பெற்றோலிய உற்பத்திகளின் கிரயம் மற்றும் விற்பனை விலையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது மற்றும் அதன்படி, விநியோகத் தரகுத் தொகையானது அதிகரித்தது. பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை விலை மீதான விநியோகத் தரகுத் பங்கின் தாக்கமானது பின்வருமாறு,

விபரங்கள்	பெற்றோல் ஒக்டேன் 92	பெற்றோல் ஒக்டேன் 95	டீசல் எல்ஏடீ	டீசல் ஒட்டோ டீசல
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
உள்நாட்டுச் சந்தை விலை	450.00	540.00	430.00	510.00
உயர்மட்ட செலவு எல்லை	162.00	170.00	121.00	145.00
விலைக்கு ஏற்ற விநியோகத் தரகுத் தொகை சூத்திரம	13.50	16.20	12.90	15.30
சபைத் தீர்மானத்தின்படி, செலுத்தப்பட வேண்டிய உண்மை விநியோகத் தரகுத் தொகை	4.86	5.10	3.63	4.35
சபைத் தீர்மானத்துடன் இணங்காமையினால் அதிகரித்த எரிபொருள் விலை	8.64	11.10	9.27	10.95

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) விநியோகத் தரகுத் உயர்மட்ட செலவு எல்லை நீக்கப்பட்டதன் விளைவாக எரிபொருளின் விலையானது குறைந்தபட்சம் அண்ணளவாக லீற்றருக்கு 10 ரூபாவினால் அதிகரித்தது. அதன்படி, தொகையின பொது மக்கள் எரிபொருளுக்காக மேலதிகச் செலவினை சுமப்பதற்கு வழிவகுக்கும் வகையில் லங்கா ஒட்டோ டீசல் மற்றும் லங்கா சுபர் டீசல் ஆகியவை முறையே ரூபா 9.27 மற்றும் ரூபா 10.95 ஆல் அதிகரித்த அதேவேளை ஒக்டேன் 92 மற்றும் ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை ரூபா 8.64 மற்றும் ரூபா 11.10 ஆலும் அதிகரித்தது.

(ii) மேலும், எரிபொருள் விலையேற்றத்தினால் கூட்டுத்தாபனம் பெறக்கூடிய அனுகூலத்தை இழந்ததன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பும் இழக்கப்பட்டது. அந்த நிலைமை கூட்டுத்தாபனத்தின் எதிர்மறையான நிகர சொத்துகளின் நிலையை மென்மேலும் மோசமடையச் செய்யும்.

(i) அதன்படி, கூட்டுத்தாபனத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால நிதி நிலை குறித்த சரியான ஆய்வு மற்றும் மதிப்பீடு இல்லாத விநியோகத் தரகுத் தொகையின் மீதான அனுமதிக்கப்பட்ட மேல் மற்றும் கீழ் செலவு எல்லையினை அகற்றுவதற்கான முடிவு, நீண்ட காலத்திற்கு கூட்டுத்தாபனத்தின் நிலைத்தன்மைக்கு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவதானிக்க முடிந்தது.

2.3.10 எரிபொருள் கையிருப்புக்களின் விற்பனை மற்றும் விநியோகம்

CPSTL க்கு சொந்தமான 02 முக்கிய முனையங்கள் மற்றும் 11 துணைக் களஞ்சியங்கள் மூலம் கூட்டுத்தாபனம் மற்றும் LIOC வழங்கிய அறிவுறுத்தல்களின்படி நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோருக்கு எரிபொருள் கையிருப்புக்களை சேமித்து விநியோகிப்பதே CPSTL இன் முக்கிய வணிகமாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோரிடமிருந்து எரிபொருள் கட்டளைகளைப் பெறுதல், கடன் எல்லைகள் மற்றும் தொடர்புடைய முன் தகுதிகளைச் சரி-பார்த்தல், விலைப்பட்டியல்களை வழங்குதல், விநியோகஸ்தர்களிடமிருந்து பணம் வசூலித்தல் போன்ற எரிபொருள் விநியோக செயன்முறையின் பெரும்பாலான நடவடிக்கைகள் CPSTL ஆல் கையாளப்பட்டன. எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் (GOSL), CPC மற்றும் LIOC ஆகியவற்றுக்கு இடையில் 2003 டிசம்பர் 30 ஆம் திகதிய பொதுவான பயனர் வசதிகளுக்கான பங்குதாரர்(GOSL/ CPC/LIOC) ஒப்பந்தத்தின்படி, அந்த நடவடிக்கைகள் CPSTL க்கு ஒதுக்கப்படவில்லை. செயற்பாடுகளை கூட்டுத்தாபனம் செய்திருக்க வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் எரிபொருள் கட்டளைகளை கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பிக்காமல் நேரடியாக CPSTL இற்கு முன்வைத்துள்ளனர். மேலும், கூட்டுத்தாபனத்தின் பெரும்பாலான சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் சேகரிப்பு நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் ஒப்புதல் பெறப்படாமல் CPSTL ஆல் கையாளப்பட்டன.

(இ) பெற்றோலியப் பொருட்களின் போதிய கையிருப்பு இல்லாத காரணத்தால், நாடளாவிய ரீதியில் பெற்றோலியப் பொருட்களை விநியோகிப்பதற்கான முன்னுரிமைப் பட்டியல்கள் மற்றும் பிற நுகர்வோர்கள், கூட்டுத்தாபனத்தால் CPSTL இற்கு தினசரி வழங்கப்பட்டு வந்தது. 2022 ஜூன் 07 முதல் 18 வரையான காலப்பகுதியில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சையின் படி, பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) கூட்டுத்தாபனம் வழங்கிய முன்னுரிமைப் பட்டியலைக் கருத்திற் கொள்ளாமல் விநியோகஸ்தர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்காக CPSTL இன் ஒழுங்கு செயற்பாட்டு (OF) SAP முறைமை தினசரி தய-ாரிக்கப்பட்டது. நெருக்கடியான இச் சூழ்நிலையில் கூட்டுத்தாபனத்தினால் எந்த மேற்பார்வையும் மேற்கொள்ளப்படவில்லை.

(i) 2,509 பெற்றோலிய உற்பத்திச் சரக்குகள் (ஒரு சரக்குக்கு 6.600 லிட்டர்கள்) கூட்டுத்தாபனத்தின் முன்னுரிமைப் பட்டியலில் இருந்தும் விநியோகிக்கப்பட்டன, மேலும் முன்னுரிமை பட்டியலில் சேர்க்கப்பட்ட 2.524 பெற்றோலிய சரக்குகள் CPSTL ஆல் விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை.

(ii) கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் அந்நியச் செலாவணி பிரச்சினைகளிலிருந்து சிறிது நிவாரணம் பெற, வெளிநாட்டு நாணயத்தில் (USD) செலுத்தத் தயாராக இருக்கும் கம்பனிகள் அல்லது தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியது. கோரப்பட்ட பொருட்கள் உரிய தேதிகளில் வழங்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும், வெளிநாட்டு நாணயங்களில் பணம் செலுத்திய பிறகும் கோரப்பட்ட தயாரிப்புகள் உரிய தேதிகளில் வழங்கப்படாத சில நிகழ்வுகள் உள்ளன.

(இ) 2022 ஜூன் இல் நடாத்தப்பட்ட கணக்காய்வுச் சோதனை ஒன்றின் போது கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்த 1143 விநியோகஸ்தர்களில் 120 விநியோகஸ்தர்களுக்கு எந்தவொரு பெற்றோல் சரக்கும் வழங்கப்படவில்லை மற்றும் 22 விநியோகஸ்தர்களுக்கு தலா ஒரு சரக்குப் பெற்றோல்(6600 லீற்றர்) மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது. அதேநேரம், 08 விநியோகஸ்தர்களுக்கு அம் மாதத்தில் தலா 210,000 இற்கும் அதிகமான பெற்றோல் லீற்றர் வழங்கப்பட்டுள்ளன. லங்கா ஒட்டோ டீசலானது(எல்ஏடீ) 73 விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அதேநேரம், 08 விநியோகஸ்தர்களுக்கு தலா ஒரு சரக்கு மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தது. அதேநேரம், 17 விநியோகஸ்தர்களுக்கு லங்கா ஒட்டோ டீசலானது தலா 200,000 லீற்றர் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 06 விநியோகஸ்தர்களுக்கு வெண் எண்ணெய் உற்பத்திகளானது தலா ஒரு சரக்கு வீதம் வழங்கப்பட்டிருந்த அக் காலப்பகுதியில் 66 விநியோகஸ்தர்களுக்கு வெண் எண்ணெய் உற்பத்திகள் வழங்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும், அம் மாதத்தில் 15 விநியோகஸ்தர்களுக்கு தலா 350,000 லீற்றர் இற்கும் அதிகமான வெண் எண்ணெய் உற்பத்திகளானவை வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும், அத்தகைய பிரச்சினைகளை உரிய நேரத்தில் தடுப்பதற்கும் சீர்செய்வதற்கும் உடனடி நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

2.3.11 சுத்திகரிப்பு நிலையத்தின் பாரிய மூடுகைகள் மற்றும் பராமரிப்புக்கள்(சப்புகஸ்கந்த)

2021 மார்ச் 15 ஆம் திகதிய ஆம் 52/1248 இலக்க சபைத் தீர்மானத்தின்படி 2021 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்பு நிலையத்தின் பாரிய மூடுகை மற்றும் பராமரிப்பானது 2021 பெப்ரவரி 15 முதல் மார்ச் 21 வரை மேற்கொள்ளப்பட்டது. 35 நாட்கள் மூடுகைக்கான செலவானது மொத்தமாக ரூபா 907.30 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டது. சபைத் தீர்மானத்திற்கு மேலதிகமாக, சுத்திகரிப்பு நிலைய முகாமையாளரின் RRM/03/2021 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் மூலம் கட்டணங்கள் மற்றும் ஏனைய நடைமுறைகளுக்கு ஏற்பாடுகள் நிறுவப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாதிரி சோதனையின்படி, தொழிலாளர்களின் வருகையை சரிபார்க்காமல், கூடுதல் நேரம் உள்ளிட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட சம்பவங்கள் காணப்பட்டது. கைரேகை இயந்திரத்தின்படி பணிக்கு வருகை தந்து அலுவலகத்தை விட்டு வெளியேறாத ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கைரேகை இயந்திரப் பதிவுகளுடன் ஒப்பிடும் போது, போக்குவரத்துக் கொடுப்பனவு, வசதியற்ற கொடுப்பனவு, உணவுக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு போன்ற கொடுப்பனவுகளைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை வேறுபட்டதாக இருந்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின்படி, சுத்திகரிப்பு பிரிவின் பணியாளர்கள் துறையானது, சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவது மற்றும் பராமரிப்பது தொடர்பான அனைத்து ஊழியர்களின் பதிவுகளையும் வைத்திருந்தது. மேலும், அவர்கள் செலுத்த வேண்டிய அனைத்துக் கொடுப்பனவுகளையும் கணக்கிடுவதில் அத்தகைய பதிவுகளின் துல்லியத்தன்மையினை தாங்களே சரிபார்த்தனர். அதன்படி, ஊழியர்களின் வருகைப் பதிவேடுகளைப் பராமரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை திருப்திகரமான மட்டத்தில் இல்லை, இது மோசடியான கொடுப்பனவுகளுக்கு வழிவகுக்கும் என அவதானிக்கப்பட்டது.

(இ) மேற்குறிப்பிடப்பட்ட உள்ளகச் சுற்றறிக்கையின்படி, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிநிறுத்தத்தை முடிக்க முடியாவிட்டால், 82.5% கூடுதல் நேரத்தை மட்டுமே பணிநிறுத்தக் கொடுப்பனவாக செலுத்த முடியும். இருப்பினும், பணிநிறுத்தம் கூட 9 நாட்களுக்கு தாமதமான போதிலும், 100% பணிநிறுத்தக் கொடுப்பனவு சுற்றறிக்கைக்கு மாறாகச் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ரூபா 42.6 மில்லியன் அதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

(ஈ) அச் சுற்றறிக்கையின் படி. அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன விடுமுறைகள் உள்ளிட்ட சனிக்கிழமையானது (பதில் லீவு) விடுமுறை நாளாகக் கருதப்பட வேண்டும். ஊதிய நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் உள்ளிட்ட பிற நாட்களை பணிநிறுத்தக் காலத்தில் வேலை நாட்களாகக் கருத வேண்டும். அதன்படி, அந்த காலகட்டத்தில் அதிகபட்சமாக 5 பதில் லீவு நாட்கள் கிடைக்கும். இருப்பினும், 5 நாட்களுக்கு மேல் பதில் லீவு பெறப்பட்ட நிகழ்வுகள் உள்ளன. இதன் விளைவாக ரூ. 5.693 மில்லியன் மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டது.

2.3.12 மனிதவள முகாமைத்துவம்

(அ) ஊழியர் **கடன்கள்**

கூட்டுத்தாபனமானது தனது ஊழியர்களுக்கு மோட்டார் வாகனக் கடன், வீட்டுக் கடன், வீட்டு புனர்நிர்மாணக் கடன், அனர்த்தக் கடன், சிக்கனச் சங்கக் கடன்கள், சிறப்புக் கடன்கள், இடையூறுக் கடன்கள், முன்பணங்கள் போன்ற பல கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. 2021 டிசம்பர் 31 ஆகும் போது நிலுவையில் உள்ள மொத்தக் கடன்கள் ரூபா 4.314 பில்லியன் ஆகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கூட்டுத்தாபனத்தினால் குறிப்பிடத்தக்க கடன் ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வந்தாலும், கடன் ஆவணங்களை நிர்வகிப்பது தொடர்பாக சரியான நிதி ஆதாரம் எதுவும் நிறுவப்படவில்லை.

(ii) கடன்களை வழங்குவதற்கான திறன் மற்றும் வட்டியுடன் கடன்களை வசூலிக்கும் திறன் ஆகியவற்றின் போதியளவான கற்கை மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை, மேலும் இது தொடர்பான கொள்கை எதுவும் கூட்டுத்தாபனத்தினால் நிறுவப்படவில்லை. மேலும், ஒரு முதன்மைக் கடன் கோப்பு முறையாக பராமரிக்கப்படவில்லை, இதன் விளைவாக, இராஜினாமா செய்த அல்லது ஓய்வு பெற்ற ஊழியர்கள் நிலுவையில் உள்ள கடன் நிலுவைகளில் செலுத்தப்படாத அல்லது வசூலிக்கப்படாத நிலுவைகளாக சேர்க்கப்பட்ட நிகழ்வுகள் உள்ளன. மேலும், கடனைச் செலுத்தத் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தாத கடன் நிலுவைகள் ரூபா 16.67 மில்லியனாக இருந்தது.

(iii) கூட்டுத்தாபனத்தின் தனியார்ப் பிரிவின் 1985 ஜூலை 01 ஆம் திகதிய 1063 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி, ஊழியர் சம்பளம்/ஊதியத்தில் 50 சதவீதத்திற்குள் கடன்களின் மாதாந்த தவணைகளை ஏனைய கழிப்புக்களுடன் சேர்த்துக் கொள்ளலாம் என்றாலும், மாதாந்த தவணைகளை திருப்பிச் செலுத்துவதில் 64 ஊழியர்கள் தங்களது சம்பளத்தில் 50 சதவீதத்தைத் தாண்டியுள்ளனர்.

(iv) கூட்டுத்தாபன ஊழியர்களின் பெரிய அளவிலான கடன் ஆவணங்களைப் பராமரிப்பதன் காரணமாக ஏற்படும் போதியளவான நிதி இல்லாததால், மிக அவசர மற்றும் முக்கியமான மூலதன மேம்பாட்டு பணிகளை தாமதப்படுத்தவோ அல்லது ஒத்திவைக்கவோ வேண்டியிருந்தது. எவ்வாறிருப்பினும், மேற்கூறிய சிக்கல்களைச் சமாளிக்க வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு கடன் திட்டத்தை ஒப்படைப்பதில் செய்வதில் கார்ப்பரேஷன் கவனம் செலுத்தவில்லை.

(ஆ) மேலதிக நேரம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுள்ளன.

(i) ட்டுத்தாபனத்தில் உள்ள 2,296 ஊழியர்களில், 998 ஊழியர்களின் மேலதிக நேர ஊதியமானது அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்தை தாண்டியது. மேலும். 391 ஊழியர்கள் அல்லது மொத்த ஊழியர்களில் 17 சதவீதம் பேர் தங்களது அடிப்படை சம்பளத்தில் 100 சதவீதத்தை தாண்டியுள்ளனர், இதில் 16 ஊழியர்கள் தங்கள் அடிப்படை சம்பளத்தில் 200 சதவீதம் தாண்டியுள்ளனர்.

(i) சில ஊழியர்களின் முழு அடிப்படைச் சம்பளமும் கடன்களை வசூலிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அதன்படி, கடன்களை வசூலிக்க, உண்மையான தேவைகள் இல்லாத நிலையிலும் கூட, மேலதிக நேர வேலைகளை கூட்டுத்தாபனம் அனுமதிக்க வேண்டியிருந்தது.

2.3.13 சொத்துக்களின் முகாமைத்துவம்

பின்வரும் சொத்துக்களானவை அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

(அ) வனாத்தமுல்லையில் அமைந்துள்ள ஹல்கஹக்கும்புர காணி - இக் காணியானது திரவப் பெற்றோலிய வாயுக் கருத்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானம் ஒன்றினை ஸ்தாபித்தல் ஆகிய நோக்கங்களுக்காக ரூபா 10.6 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டது. எவ்வாறிருப்பினும் இது உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படவில்லை மற்றும் இது 700 இற்கு மேற்பட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மஹாஹேனக் காணி - கிடைக்கப்பெற்ற எழுத்தாவணங்களின்படி, இக் காணியானது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 0.625 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டது. மற்றும் இது கணக்கிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இக் காணியானது 1986 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட பின்னரும் அதன் முன்னைய உரிமையாளரினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

டபிள்யு.பி.சி விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

முழுமையான வருமானக் கூற்று

டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	இ.பெ.கூ		குழுமம்	
		2021	2020 மீள்குறிப்பிட்டது	2021	2020 மீள்குறிப்பிட்டது
		ரூ.மில்லி	ரூ.மில்லி	ரூ.மில்லி	ரூ.மில்லி
வருமானம்	2	584,754.423	522,532.832	585,019.248	522,755.005
விற்பனைச் செலவு		(588,822.595)	(454,880.140)	(596,798.652)	(462,019.238)
மொத்த (நட்டம்)/இலாபம்		**(4,068.172)**	**67,652.692**	**(11,779.404)**	**60,735.767**
ஏனைய செயற்பாட்டு வருமானம்	3	1,120.531	818.670	1,727.572	1,145.615
விற்பனை ரூ விநியோக செலவுகள்		(31,792.158)	(28,183.603)	(18,172.857)	(15,554.972)
நிர்வாகச் செலவுகள்		(6,992.077)	(6,367.186)	(12,047.761)	(10,823.405)
செயற்பாட்டு (நட்டம்)/ இலாபம்	4	**(41,731.876)**	**33,920.573**	**(40,272.450)**	**35,503.005**
நாணயமாற்று வீத வேறுபாடு		(33,220.081)	(21,840.759)	(33,220.081)	(21,840.759)
நிதி வருமானம்	5	18,369.081	11,187.890	18,570.652	11,497.173
நிதிச் செலவுகள்	6	(25,642.906)	(20,911.327)	(25,642.906)	(20,911.327)
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)		**(82,225.782)**	**2,356.377**	**(80,564.785)**	**4,248.092**
வருமான வரிச் செலவு	7	-	-	(551.476)	(156.761)
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)		**(82,225.782)**	**2,356.377**	**(81,116.261)**	**4,091.331**
ஏனைய முழு வருமானம்					
இலாபம் அல்லது நட்டத்திற்கு மீளவும் வகைப்படுத்தப்படா உருப்படிகள்					
இளைப்பாறல் நன்மைத் திட்டம் மீதான மீள்- அலவ-ிடுதல் ஆதாயம்/(இழப்பு)	18	(88.929)	99.573	339.677	(51.416)
ஆதனம், பொறி ரூ உபகரணத்தின் மீள்மதிப்பிடுதல்		-	17,675.906	-	17,675.906
ஏனைய முழு வருமானம் மீதான வரி		1.205	415.689	(101.660)	451.926
வருடத்திற்கான ஏனைய முழு வருமானம்/ (செலவு)		(87.724)	18,191.168	238.017	18,076.417
வருடத்திற்கான வரி நிகர, மொத்த முழு வருமானம் / (செலவு)		**(82,313.506)**	**20,547.545**	**(80,878.244)**	**22,167.748**
மொத்த முழு வருமானமும் உரியதானது:					
நிறுவனத்தின் உரிமையாளர்கள்		(82,313.506)	20,547.545	(81,356.268)	21,545.507
கட்டுப்படுத்தா நலன்கள்		-	-	478.024	622.241
		(82,313.506)	**20,547.545**	**(80,878.244)**	**22,167.748**

*இங்கு காட்டிய சில தொகைகள் 2020 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன.

பக்கங்கள் 139 இலிருந்து 178 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

நிதிசார் நிலைமையின் கூற்று

டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	இ.பெ.கூ		குழுமம்	
		2021	2020 மீள்குறிப்பிட்டது	2021	2020 மீள்குறிப்பிட்டது
		ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி
சொத்துகள்					
நடைமுறையல்லாச் சொத்துகள்					
ஆதனம், பொறி ரூ உபகரணம்	8	43,379.484	43,541.537	59,896.481	59,613.156
முதலீட்டுச் சொத்து	8.3	51.792	53.703	51.792	53.703
அருவச் சொத்துகள்	8.4	0.656	-	67.331	75.525
துணை நிறுவனத்திலான முதலீடு	9	5,000.000	5,000.000	-	-
நடைமுறையற்ற நிதிச் சொத்துகள்	10	244.052	239.981	244.052	239.981
வர்த்தக ரூ ஏனைய வருமதிகள்	11	7,464.536	7,519.518	9,025.380	9,153.749
		56,140.520	56,354.739	69,285.036	69,136.114
நடைமுறைச் சொத்துகள்					
கையிருப்புகள்	13	41,915.633	52,507.840	42,636.842	53,206.909
வர்த்தக ரூ ஏனைய சென்மதிகள்	11	180,135.773	151,930.737	185,471.336	156,613.267
குறுகிய கால முதலீடுகள்	14	-	92.590	-	92.590
காசும் காசுச் சமானங்களும்	15	141,607.205	64,563.572	143,772.001	68,005.593
		363,658.611	269,094.739	371,880.179	277,918.359
மொத்த சொத்துகள்		**419,799.131**	**325,449.478**	**441,165.215**	**347,054.473**
உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்					
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்					
பங்களிப்பு மூலதனம்	16	28,487.125	28,487.125	28,487.125	28,487.125
மூலதன ஒதுக்கம்	17.1	4,992.686	4,992.686	4,992.686	4,992.686
நியாயப் பெறுமதி நிதிச் சாதனம்		(38.000)	(38.000)	(38.000)	(38.000)
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	17.2	28,063.101	28,068.124	28,063.101	28,068.124
வைத்திருப்பு ஈட்டல்கள்		(419,041.581)	(336,733.099)	(404,920.744)	(323,569.499)
கட்டுப்பாடற்ற வட்டி		-	-	9,563.201	9,085.177
மொத்த உரிமையாண்மை		**(357,536.669)**	**(275,223.164)**	**(333,852.630)**	**(252,974.387)**
நடைமுறையில்லாப் பொறுப்புகள்					
இளைப்பாற்று நன்மைக் கடப்பாடு	18	1,861.808	1,702.435	3,471.132	3,718.078
ஒத்திவைக்கப்பட்ட வரி	19	2,492.927	2,494.132	4,102.738	4,090.682
கடன்களும் கடன்பெறல்களும்	20	5,273.036	4,776.927	5,273.036	4,776.927
		9,627.771	8,973.494	12,846.906	12,585.686
நடைமுறைப் பொறுப்புகள்					
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	21	256,818.738	200,659.603	251,281.648	196,403.628
கடன்களும் ரூ கடன்பெறல்களின் நடைமுறைப்பாகம்	20.1	620.358	289.397	620.358	289.397
குறுகிய காலக் கடன்பெறல்கள்	22	510,268.933	390,750.148	510,268.933	390,750.148
		767,708.029	591,699.148	762,170.939	587,443.173
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்		**419,799.131**	**325,449.478**	**441,165.215**	**347,054.473**

*இங்கு காட்டிய சில தொகைகள் 2020 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன. பக்கங்கள் 139 இலிருந்து 178 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

இந்த நிதிசார் கூற்றுகள் , டிசம்பர் 31, 2021 அன்றானவாறும் மற்றும் முடிவடைந்த வருடத்திற்கான நட்ட நிலை தொடர்பாக , இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் விவகாரங்களின் ஓர் உண்மையான மற்றும் நீதியான பார்வையைத் தருகின்றது.

வீ.என்.வீரசூரிய
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

இந்த நிதிசார் கூற்றுகளின் தயார் செய்தல் மற்றும் சமர்ப்பணத்திற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பானது. சபையின் சார்பில் அனுமதித்து மற்றும் கைச்சாத்திடப்பட்டது.

மொஹமட் உவைஸ் மொஹமட
தலைவர்
19 Oct 2022, கொழும்பு.

எல்.ஈ.சுசந்த சில்வா
முகாமைத்துவப் பணிப்பாளர

அதி.எம்.டீ.கே.ரத்னாயக்க
பணிப்பாளர்

உரிமையாண்மையிலுள்ள மாற்றங்களின் கூற்று

இ.பெ.கூ	பங்களிப்பு மூலதனம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	மூலதன ஒதுக்கம்	நிதிச் சாதன நியாயப் பெறுமதி	வைத்திருப்பு ஈட்டல்கள்	மொத்த உரிமையாண்மை
	ரூ.மிலி	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**
ஜனவரி 1, 2020 அன்றானவாறு	**28,487.125**	**10,392.218**	**4,992.686**	**(38.000)**	**(339,957.298)**	**(296,123.269)**
காலத்திற்கு முன்னதான சீராக்கல்கள்	-	-	-	-	352.560	352.560
ஜனவரி 1, 2020 அன்றான மீள் குறிப்பிட்ட மிகுதி	**28,487.125**	**10,392.218**	**4,992.686**	**(38.000)**	**(339,604.738)**	**(295,770.709)**
வருடத்திற்கான நட்டம்					2,356.377	2,356.377
ஏனைய முழு வருமானம்					515.262	515.262
மீள்மதிப்பீட்டு மிகை		17,675.906				17,675.906
டிசம்பர் 31, 2020 அன்றானவாறு	**28,487.125**	**28,068.124**	**4,992.686**	**(38.000)**	**(336,733.099)**	**(275,223.164)**
Loss for the year					(82,225.782)	(82,225.782)
Adjustment		(5.023)			5.023	-
Other Comprehensive Income					(87.724)	(87.724)
டிசம்பர் 31, 2021 அன்றானவாறு	**28,487.125**	**28,063.101**	**4,992.686**	**(38.000)**	**(419,041.581)**	**(357,536.669)**

குழுமம்	பங்களிப்பு மூலதனம்	மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	மூலதன ஒதுக்கம்	நிதிச் சாதன நியாயப் பெறுமதி	வைத்திருப்பு ஈட்டல்கள்	பங்குதாரர்களின் நிதி	கட்டுப்படுத்தப்படாத வட்டி	மொத்த உரிமையாண்மை
	ரூ.மிலி	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**	**ரூ.மிலி**
ஜனவரி 1, 2020 அன்றானவாறு	**28,487.125**	**10,392.218**	**4,992.686**	**(38.000)**	**(327,484.989)**	**(280,747.149)**	**8,736.270**	**(274,914.690)**
காலத்திற்கு முன்னதான சீராக்கல்கள்					45.891	45.891	(153.335)	(107.444)
ஜனவரி 1, 2020 அன்றான மீள் குறிப்பிட்ட மிகுதி	**28,487.125**	**10,392.218**	**4,992.686**	**(38.000)**	**(327,439.098)**	**(280,701.259)**	**8,582.935**	**(275,022.134)**
வருடத்திற்கான நட்டம்					3,430.839	3,430.839	660.493	4,091.331
ஏனைய முழு வருமானம்					438.760	438.760	(38.251)	400.509
மீள்மதிப்பீட்டு மிகை		17,675.906				17,675.906		17,675.906
கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம்				-		-	(120.000)	(120.000)
டிசம்பர் 31, 2020 அன்றானவாறு	**28,487.125**	**28,068.124**	**4,992.686**	**(38.000)**	**(323,569.499)**	**(259,155.753)**	**9,085.177**	**(252,974.387)**
Loss for the year					(81,485.705)	(81,485.705)	369.444	(81,116.261)
ஏனைய முழு வருமானம்					129.436	129.436	108.580	238.017
Adjustment	-	(5.023)	-	-	5.023	-	-	-
டிசம்பர் 31, 2021 அன்றானவாறு	**28,487.125**	**28,063.101**	**4,992.686**	**(38.000)**	**(404,920.744)**	**(340,512.021)**	**9,563.201**	**(333,852.630)**

**இங்கு காட்டிய சில தொகைகள் 2020 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன.

பக்கங்கள் 139 இலிருந்து 178 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

காசுப் பாய்ச்சல்கள் கூற்று

டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கானது	குறிப்பு	இ.பெ.கூ		குழுமம்	
		2021	2020 மீள்குறிப்பிட்டது	2021	2020 மீள்குறிப்பிட்டது
		ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	24	(14,724.706)	(53,979.424)	(13,974.896)	(52,300.946)
				-	-
செலுத்திய வட்டி		(24,348.677)	(20,361.566)	(24,348.677)	(20,361.566)
செலுத்திய இளைப்பாறல் பணிக்கொடுப்பனவு	18	(190.171)	(137.855)	(410.643)	(269.182)
செலுத்திய வருமான வரி.˙. பொ.சே.க (நுளுஊ)		(31.615)	(3,778.620)	(681.821)	(5,014.899)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கிய நிகர		(39,295.169)	(78,257.465)	(39,416.037)	(77,946.593)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்					
ஆதனம், பொறி ரூ உபகரணத்தின் விற்பனை மூ லமானனம்		8.514	1.707	8.514	1.707
ஆதனம், பொறி ரூ உபகரணக் கொள்வனவு	8	(1,567.453)	(805.159)	(2,925.380)	(1,863.004)
பங்கிலாப வருமானம்		-	0.122	-	0.122
பெறப்பட்ட வட்டி		9,304.561	8,276.846	9,506.132	8,586.129
திறைசேரி முறிகளிலான முதலீடு		83.520	25,094.373	83.520	25,094.373
Investment in Fixed Deposits		5.000	-	5.000	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் யோகித்தவை)		7,834.142	32,567.889	6,677.786	31,819.326
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள					
செலுத்திய பங்கிலாபங்கள்		-	-	-	(120.000)
பெற்ற புதிய கடன்கள்		421,982.969	407,387.132	421,982.969	407,387.132
கடன்களின் மீள்செலுத்துதல்		(309,551.761)	(330,106.638)	(309,551.761)	(330,106.638)
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்.˙.(உபயோகித்தவை)		112,431.208	77,280.494	112,431.208	77,160.494
காசு ரூ காசுச் சமானங்களிலான நிகர அதிகரிப்பு குறைதல்)		80,970.181	31,590.919	79,692.957	31,033.228
வருட ஆரம்பத்திலான காசும் ரூ காசுச் சமானங்களும்		59,092.185	27,501.266	62,534.206	31,500.978
வருட இறுதியிலான காசும் ரூ காசுச் சமானங்களும்	15	**140,062.366**	**59,092.185**	**142,227.163**	**62,534.206**

*இங்கு காட்டிய சில தொகைகள் 2020 நிதிசார் கூற்றுகளுடன் தொடர்புபட்டிருக்கவில்லை என்பதுடன் குறிப்பு 26 இல் விளக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்ட சீர்ப்படுத்தல்களைப் பிரதிபலிக்கின்றன.

பக்கங்கள் 139 இலிருந்து 178 வரை காணப்படும் குறிப்புகள் நிதிசார் கூற்றுகளின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்குகின்றன.

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1.1 கூட்டான்மைத் தகவல்கள்

பொதுவானது

லங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க பெற்றோலியக் கூட்டுத்டாபனச் சட்டத்தின் கீழ் ஒரு அரச கூட்டுத்தாபனமாக கூட்டிணைக்கப்பட்டும் மற்றும் இலங்கையிலும் அமைந்துள்ளது. கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 609, கலாநிதி. டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

பிரதானமான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

நிறுவனம்	பிரதானமான நடவடிக்கை
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், மற்றும் விற்பனை செய்தல்
துணை நிறுவனம் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள்	பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்துதல் மற்றும் விநியோகம

மூல நிறுவனம் மற்றும் இறுக்கிக் கட்டுப்படுத்தும் தரப்பு

கூட்டுத்தாபனம் மின் சக்தி அமைச்சின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின் படி, கூட்டுத்தாபனத்தின் இறுதி மூலமான பொறுப்பேற்கும் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்பு, இலங்கை அரசாங்கமாகும்.

வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் டிசம்பர் 31, 2021 முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுகளை பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்திற்கமைய வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி பெப்ரவரி 19, 2022 ஆகும்.

இணக்கப்பாட்டு அறிக்கை

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் குழுமத்தின் நிதிசார் கூற்றுகள், முழுமையான வருமானக் கூற்று, நிதிசார் நிலைமையின் கூற்று, உரிமையாண்மை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் (SLFRSs/ LKASs) மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் அதற்கான பிந்திய திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக தயார் செய்யப்பட்டன.

1.2 தயார் செய்தலின் அடிப்படை

கூட்டுத்தாபனத்தின் நிதிசார் கூற்றுகள் மற்றும் குழுவின் ஒன்றிணைத்த நிதிசார் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர நிறுவகத்தால் வெளியிடப்பட்ட SLFRS மற்றும் LKAS I (இதன் பின்னகத்து "SLFRS" எனக் குறிப்பிடப்படும்) உள்ளடக்கி இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுக்கு அமைவாக தயார் செய்யப்பட்டன.

முதலீட்டு ஆதனங்கள், சில அலுவலக சொத்துகள் (ஆதனம், பொறி மற்றும் உபகரணம் எனவாக வகைப்படுத்தப்பட்டவை), நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டதும் மற்றும் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்ட வரையறுத்த பயன் கடப்பாடு நிதிசார் சொத்துகள் தவிர, நிதிசார் கூற்றுகள் அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்றுக் கிரிய அடிப்படையிலுமாகத் தயார் செய்யப்பட்டன.

கூற்றுகளின் சமர்ப்பணம் ரூ செயல்முறை நாணயம்

நிதிசார் கூற்றுக்கள், செயல்முறை நாணயமான, இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதுடன் அனைத்துப் பெறுமதிகளும், வேறுவகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, கிட்டிய மில்லியன் பெறுமதிக்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

பொருள்வகை மற்றும் ஒன்றுதிரட்டல்

ஒத்த தன்மையான ஒவ்வொரு பொருள்வகையின் உருப்படிகள் நிதிசார் கூற்றுகளில் தனியாக ஒன்றுபடுத்தப்பட்டுத் தரப்பட்டுள்ளன. அதே போன்று ஒவ்வாத் தன்மை அல்லது செயற்பாடு கொண்ட உருப்படிகள் அவை முக்கியமற்றவையாக இல்லதிருந்தாலன்றி தனியான வகையில் கூட்டாகத் தரப்பட்டுள்ளன.

ஒருங்கிணைத்தலின் அடிப்படை

டிசம்பர் 31, 2021 அன்றானதும் மற்றும் அவ்வருட இறுதிக்கானதுமான ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுகள் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணை நிறுவனம் (ஒன்றாக 'குழுமம்' எனக் குறிப்பிடப்படும்) என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

துணைநிறுவனங்கள் என்பவை குழுமத்தால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களாகும். குழுமம் வெளிப்படுத்தப்படுகையில், அல்லது முதலீடு செய்யப்பட்டவற்றுடனான அதன் ஈடுபடுதலிருந்து கிடைக்கும் வேறுபட்ட பதிலீடுகளுக்கு, உரிமைகளைக் கொண்டிருக்கும் போதும், அல்லது முதலீடு செய்யப்பட்டவற்றின் மீதான அதன் அதிகாரம் மூலமாக அந்த பதிலீடுகளைப் பாதிக்கும் ஆற்றல் கொண்டுள்ள போதும் கட்டுப்படுத்தல் அடையப்படுகிறது.

குறிப்பாக, குழுமம் ஒரு முதலீட்டைப் பெறும் நிறுவனத்தை, பின்வரும் நிலைமைகளில் மாத்திரம் கட்டுப்படுத்துகிறது:

- முதலீட்டைப் பெறும் நிறுவனத்தின் மீதான அதிகாரம் (அதாவது, குழுமத்திற்கு இருக்கும் உரிமைகள், முதலீடு பெறும் நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு அளிக்கும் தற்போதைய ஆற்றல்)

- முதலீடு பெறும் நிறுவனத்துடனான அதன் ஈடுபாட்டிலிருந்து பெறப்படும் வேறுபடும் பதில்-ீடுகளுக்கான வெளிப்படுத்தல், அல்லது உரிமைகள்

- அதன் பதிலீடுகளைப் பாதிப்பதற்கு முதலீடும் பெறும் நிறுவனத்தின் மீது அதன் அதிகாரத்தை உபயோகிக்கும் ஆற்றல்

பொதுவாக, ஒரு பெரும்பான்மை வாக்குரிமைப் பங்குகளைக் கொண்டிருத்தல் கட்டுப்பாட்டு உரிமையை ஏற்படுத்துமென்பது ஒரு கருதுகோளாகும். இ.பெ.கூ, வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியம் களஞ்சிய முனையங்கள் நிறுவனத்தின் (ஊீளுவுடு) 2.'.3 பங்குகளை உரிமை கொண்டுள்ளதுடன் இ.பெ.கூ ஊீளுவுடு ஐ அதன் துணைநிறுவனமாகக் கருதுகிறது.

கட்டுப்பாட்டின் மேற்சொன்ன மூன்று அம்சங்களில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றில் மாற்றங்கள் உள்ளன என்பதை சான்றுகள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறிப்பிடின் குழுமம் முதலீடு பெறும் நிறுவனத்தை அது கட்டுப்படுத்துகிறதா அல்லது இல்லையா என்பதற்கு குழுமம் மீள் மதிப்பீடு செய்யும். துணைநிறுவனத்தின் மீது குழுமம் கட்டுப்பாட்டை பெறும் பொழுது ஒரு துணைநிறுவனத்தின் ஒருங்கிணைத்தல் ஆரம்பமாகின்றதுடன் துணைநிறுவனம் மீது கட்டுப்பாட்டை இழக்கையில் ஒருங்கிணைத்தல் முடிவுறுகின்றது. வருடத்தின் போது துணைநிறுவனத்தின் பெறப்பட்ட அல்லது வெளியகற்றப்பட்ட சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் என்பன குழுமம் கட்டுப்பாட்டு அதிகாரத்தை பெற்றுக் கொண்ட திகதியிலிருந்தும் மற்றும் குழுமம் துணைநிறுவனத்தின் கட்டுப்பாட்டை இழக்கும் வரைக்குமாக ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

வேறுவகையில் குறிப்பிடப்பட்டாலன்றியும் மற்றும் டிசம்பர் 31 உடன் முடிவடையும் ஒரு பொதுவான நிதியாண்டை அவர்கள் கொண்டிருக்கும் போதும், துணைநிறுவனத்தின் நிதிசார் கூற்றுகள் குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கும் வகையில் தயார் செய்யப்படுகின்றன.

ஒருங்கிணைத்த நிதிசார் கூற்றுகளைத் தயாரிக்கையில் குழுமத்தின் நிறுவனங்களிற்கிடைப்பட்ட அனைத்து நிலுவைகள் மற்றும் பரிவர்தனை நடவடிக்கைகள், வருமானம் மற்றும் செலவுகள் என்பன நீக்கப்படுகின்றன.

கட்டுப்படுத்தா நலன்கள்

துணைநிறுவனத்தின் இலாபம அல்லது நட்டம் மற்றும் ஏனைய முழு வருமானத்தின் (OCI) ஒவ்வொரு பகுதியும் குழுமத்தின் மூல உரிமையாளரின் பங்கு வைத்திருப்பவர்கள் மற்றும் சிறுபான்மைப் பங்குதாரர்களிற்கு அவை ஒரு பற்றாக்குறை நிலுவையை ஏற்படுத்துகிறதாயினும் கூட உரித்தானவையாகும்.

1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள்

வேறுவகையில் குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய வருடங்களில் உபயோகிக்கப்பட்டவற்றுடன் இணக்கமானவையாக இருந்தன.

ஒப்பீட்டுத் தகவல்

சிறந்த சமர்ப்பணத்திற்காக பொருந்துமிடத்தும் மற்றும் தற்போதைய வருடத்துடன் அவற்றை ஒப்பிடக் கூடியதாக இருப்பதற்கும், முன்னைய வருடங்களின் நிதிசார் கூற்றுகளின் சமர்ப்பணம் மற்றும் வகைப்படுத்தல் என்பன திருத்தப்பட்டன.

தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு

இந்த நிதிசார் கூற்றுகள் இ.பெ.கூ மற்றும் அதன் குழுமமும் ஒரு நிறுவனத் தொடர்ச்சி கொண்டவை, அதாவது காணக்கூடியதான எதிர்காலம் வரைக்கும் செயற்பாடுகளைத் தொடர்கின்றவை என்ற அனுமானத்தில் தயார் செய்யப்பட்டவையாகும். ஆகையால், கூட்டுத்தாபனம் மற்றும் குழுமம் என்பன டிசம்பர் 31, 2021 முடிவடைந்த வருடத்திற்காக தயார் செய்யப்பட்ட நிதிசார் கூற்றுகளின் படி, முறையே ஓர் எதிர்மறையான ஷரூ. 357,537 மில்லியன் மற்றும் 333,853 மில்லியன் உரிமையாண்மை நிலையைக் கொண்டிருந்த போதிலும் கூட இ.பெ.கூ அதன் செயற்பாட்டின் அளவை ஒடுக்குதல் அல்லது பொருள்ரீதியாகக் குறைப்பதற்கான நோக்கத்தை அன்றேல் அவசியத்தைக் கொண்டிருக்கவில்லை.

முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், கணிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களின் சாராம்சம்

இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் நிதிசார் கூற்றுகளைத் தயார்செய்தல் சில முக்கியமான கணக்கீட்டுக் கணிப்பீடுகள் மற்றும் கருத்துகோள்களின் பாவித்தலைத் தேவைப்படுத்துகின்றது. அத்தோடு, கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செய்முறையில் அதன் தீர்மானத்தை அப்பியாசிப்பதற்கு அது முகாமைத்துவத்தையும் தேவைப்படுத்துகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக இருப்பதற்கு நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட, வரலாற்று அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளையும் தீர்மானங்கள் மற்றும் கணிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அதனால், உண்மையான அனுபவம் மற்றும் பெறுபேறுகள் இந்த தீர்மானங்கள் மற்றும் எதிர்ப்பார்ப்புகளிலிருந்து மாறுபடலாம். கணிப்பீடுகள் மற்றும் அடிப்படையாகவுள்ள கருதுகோள்கள் என்பன ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மீளாராயப்பட்டு மற்றும் கணக்கீட்டுக் கணிப்பீடுகளுக்கான திருத்தங்கள் வாய்ப்புக் கொண்டவையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஓர் உயர் மட்டத் தீர்மானம் அல்லது சிக்கற்பாடு அல்லது நிதிசார் கூற்றுக்களுக்கு கணிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் முக்கியமானவை எனும் பகுதிகள் பொருத்தமான குறிப்புகளில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில், கூட்டுத்தாபனம், மக்கள் வங்கியால் வெளியிடப்பட்ட மாற்று விகிதத்தில் இருந்து, 01.01.2021 முதல் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்பட்டது.

- வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் – பணிக்கொடை: குறிப்பு இலக்கம் 1.4.12

- நிதிச் சொத்துகளின் பெறுமதி வீழ்ச்சி, குறிப்பு இலக்கம் 1.4.14

- ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பாவனைக் காலங்கள், குறிப்பு இலக்கம் 1.4.6

- ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு, குறிப்பு இலக்கம் 1.4.2

1.4 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

1.4.1 வருமானத்தை அடையாளாங் காணுதல்

கொடுப்பனவு எப்போது கிடைக்கப் பெறுகின்றதென்பதை பொருட்படுத்தாது, வருமானம் மற்றும் ஏற்பட்ட அதனுடன் இணைந்த செலவு அல்லது ஏற்பட்டுள்ள செலவு என்பன நம்பிக்கையான விதத்தில் அளவிடப்பட முடியுமாக இருக்கையில் கூட்டுத்தாபனத்திற்கு உள்வரும் பொருளாதார நன்மைகளின் சாத்தியமானளவிற்கு வருமானம் அடையாளப்படுத்தப்படுகிறது. கொடுப்பனவு மற்றும் நிகர விற்பனை வரிகளின் ஒப்பந்த ரீதியாக வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையை கவனத்தில் கொண்டு, பெற்ற அல்லது பெறப்படவுள்ள பயன்களின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகிறது. பிரதான கடப்பாடுற்றவராக அது உள்ளதினாலும் மற்றும் கையிருப்பு மற்றும் கடன் இடரேதுநிலைகளுக்கு வெளிப்படுத்தப்படுவதாலும் அனைத்து வருமான ஏற்பாடுகளிலும் அதுவே முதன்மையானது என குழுமம் முடிவுசெய்தது.

SLFRS 15 இன் நோக்கமான வருமானத்தை அடையாளம் காண்பதற்கு பின்வரும் குறித்த தன்மைகளும் திருப்தி செய்யப்படல் வேண்டும்.

பொருட்களின் விற்பனை

முக்கியமான இடரேதுநிலைகள் மற்றும் பொருட்களின் உடைமையுரிமையின் பயன்கள் வாங்கியவருக்கு மாற்றப்பட்ட பின், பயன்களின் பெறுகைச் சாத்தியமான திருப்புதல் ஏற்புடையதான விதத்தில் கணிக்கப்பட முடிந்து, பொருட்கள் மற்றும் வருமானத்தின் தொகை ஏற்புடைய வகையில் அளவிடப்படும், மற்றும் முகாமைத்துவ சம்பந்தப்படுதல் தொடராத சந்தர்ப்பத்தில் பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது அல்லது அடையாளம் காணப்படுகிறது.

பொருட்கள் அனுப்பப்படும்போது பொருட்களின் விற்பனையிலிருந்து வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது அல்லது வாடிக்கையாளருக்கு பொருட்களை வழங்கும்போது, வாடிக்கையாளருக்கு பொருட்களை வழங்கிய பின்னரே சட்டபூர்வ உரிமை மாற்றப்படும்.

இதுபோன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும், விநியோகஸ்தர்கள்.் வாடிக்கையாளர்களால் பொருட்கள் அனுப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் போது வருவாய் குழுவால் அங்கீகரிக்கப்படுகிறது, மேலும் இது SLFRS 15 இன் படி வருவாய் அங்கீகாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது.

வட்டி வருமானம் மற்றும் செலவுகள்

கடன்தீர்ப்புக் கிரயத்தில் அளவிடப்பட்ட அனைத்து நிதிசார் சாதனங்கள், வட்டிச் செலவு மற்றும் வருமானம் என்பன பயனுறுதியான வட்டி வீதத்தைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டன. பயனுறுதியான வட்டி வீதமென்பது, நிதிசார் சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலம் அல்லது ஒரு குறைவான காலம், பொருத்தமானவிடத்து, நிதிசார் சொத்து அல்லது பொறுப்பின் நிகரத் தொகை மூலமாக கணிக்கப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது பெறுகைகளை துல்லியமாக கழிக்கும் வீதமாகும்.

வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளுதல் சந்தேகமாக இருந்தாலன்றி அட்டுறு வட்டி, வட்டி வருமானமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வட்டி வருமானம் நிதிசார் வருமானத்தின் கீழும் வட்டிச் செலவு நிதிசார் செலவின் கீழும் வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

பங்கிலாபங்கள்

கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை ஸ்தாபிக்கப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

வாடகை வருமானம்

வாடகை வருமானம் குத்தகை நிபந்தனை மீதான ஒரு நேர் கோட்டு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றதுடன் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆதனம், பொறி ரூ உபகரணம் என்பவற்றின் விற்பனையிலிருந்தான இலாபம் /(நட்டம்)

ஆதனம், பொறி ரூ உபகரணம் என்பவற்றின் விற்பனையிலிருந்து பெறப்படும் இலாபம் /(நட்டம்) விற்பனை நடைபெற்ற மாதத்தில் அங்கீகரிக்கப்பட்டு மற்றும் ஏனைய வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதலீட்டுப் பிணைகளிலிருந்து எழும் இலாபங்கள் அல்லது நட்டங்கள்

பங்குகள் மற்றும் நிதிசார் சாதனங்களின் விற்பனையிலிருந்து எழுகின்ற இலாபங்கள் அல்லது நட்டங்கள் அப்பரிவர்த்தனை நடவடிக்கைகள் இடம்பெற்ற திகதியன்று கணக்கிடப்பட்டன.

ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஓர் அட்டுறு கணக்கீட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

1.4.2 செலவினங்களின் அடையாளப்படுத்தல்

வணிகத்தை கொண்டு நடத்துவதில் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றை ஒரு வினைத்திறனான நிலைமையில் பராமரிப்பதுடனும் தொடர்புபட்ட அனைத்து செலவினங்களும் வருடத்தின் வருமானக் கூற்றுக்கு எதிராக கழிக்கப்பட்டன.

வரிவிதித்தல்

இக் காலத்திற்கான வரிச் செலவுகள் தற்போதைய மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளைக் கொண்டுள்ளது.

(I) தற்போதைய வரி

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்பட்டு மற்றும் நிதிசார் கூற்றுகளில் குறிப்பிட்டவாறு வருமானம் மற்றும் செலவின அம்சங்களின் அடிப்படையில், வரிவிதிக்கும் அதிகாரங்களுக்கு செலுத்தப்பட்ட அல்லது மீளப்பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில், தற்போதைய மற்றும் முன்னைய காலங்களுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான வருமான வரி அளவிடப்படுகிறது.

உரிமையாண்மைகளில் நேரடியாக இனங் காணப்பட்ட உருப்படிகள் அல்லது உரிமையாண்மைகளில் இனங் காணப்பட்ட ஏனைய முழுமையான வருமானம் தொடர்பான தற்போதைய வருமானவரி பங்கு அல்லது ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகிறதேயன்றி வருமானக் கூற்றில் அல்ல.

(II) ஒத்திவைக்கப்பட்ட வரிவிதிப்பு

ஒத்திவைக்கப்பட்ட வரி, பொறுப்புகள் முறையை உபயோகித்து, அறிக்கைத் திகதியன்று, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகள் மற்றும் நிதிசார் அறிக்கையிடல் தேவைகளுக்காக அவற்றின் முன்கொணரற் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான தற்காலிக வேறுபாடுகள் மீது அளிக்கப்படுகிறது.

ஒரு வணிக கூட்டல்லாத ஒரு பரிவர்த்தனை நடவடிக்கையில் ஒரு சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகரித்தலிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்பு எழுகின்றவிடம் தவிர்த்தும் மற்றும், பரிவர்த்தனை நடவடிக்கை சமயத்தில், கணக்கீட்டு இலாபத்தையோ அன்றேல் வரிவிதிப்பு இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத போது அனைத்து வரிவிதிப்பு தற்காலிக வேறுபாடுகளுக்காக ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்புகள் அங்கீகரிக்கப்பட்டுகின்றன.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள், உபயோகிக்காத வரிச் சொத்துகள் மற்றும் உபயோகிக்காத வரி நட்டங்களின் முன்கொணர்தல் பெறுமதி, கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிப்பு இலாபம் இருக்க முடியும் எனும் சாத்தியம் உள்ள அளவிற்கு, அனைத்து கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்காக அங்கீகரிக்கப்படுகின்றதுடன் முன்கொணர்ந்த உபயோகிக்காத வரிச் சொத்துகள் மற்றும் உபயோகிக்காத வரி நட்டங்கள் ஒரு வணிகக் கூட்டல்லாத ஒரு பரிவர்த்தனை நடவடிக்கையில் ஒரு சொத்து அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து எழுகின்ற கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட வருமானவரி சொத்து தொடர்புபடுமிடம் தவிர்த்தும், மற்றும் பரிவர்த்தனை சமயத்தில், கணக்கீட்டு இலாபத்தையோ அன்றேல் வரிவிதிப்பு இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத போதும் உபயோகிக்கப்பட முடியும்.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி சொத்துக்களின் முன்கொணரற் பெறுமதி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் மீளாய்வு செய்யப்படுகின்றதுடன் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து முழுமையாக அல்லது பகுதியாக உபயோகிக்கப்படுவதை அனுமதிப்பதற்கு போதுமான வரிவிதிக்ககூடிய இலாபம் இருப்பது இனியும் சாத்தியமில்லை எனும் அளவுக்கு குறைக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் மீள்மதிப்பிடப்படுகின்றதுடன் மற்றும் எதிர்கால வரிவிதிப்பு இலாபங்கள் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து மீளப் பெறப்படுவதை அனுமதிக்கும் என்பது சாத்தியமாக வந்துள்ள அளவிற்கு அங்கீகரிக்கின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள், அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருண்மைச் சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் (மற்றும் வரிச் சட்டங்கள்) மீதான் அடிப்படையில், சொத்து பயனுறப்படும் பொழுது அல்லது பொறுப்பு தீர்க்கப்படும் வருடத்திற்கு பிரயோகமாவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது. உரிமையாண்மைகளில் அங்கீகரிக்கப்படுகின்றதேயன்றி வருமானாக் கூற்றில்லை.

(III) விற்பனை வரி

சொத்துகள் அல்லது சேவையின் ஒரு கொள்வனவில் ஏற்பட்ட விற்பனை வரி, வரிவிதிப்பு அதிகாரங்களிடமிருந்து மீளப் பெறமுடியாதவிடம் தவிர்ந்த சந்தர்ப்பத்தில், அதாவது விற்பனை வரி பொருத்தமானவாறு, சொத்தினது கிரயத்தின் ஒரு பகுதியாக அல்லது செலவின் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுகையில் வருமானங்கள், செலவு மற்றும் சொத்துகள் நிகர விற்பனை வரித் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விற்பனை வரித் தொகையுடன் வருமதிகள் மற்றும் சென்மதிகள் குறிப்பிடப்பட்டு அது பெற வேண்டிய விற்பனை வரி வருமதி அல்லது செலுத்த வேண்டிய சென்மதி என்பவற்றின் நிகர தொகையை உள்ளடக்கிய போது, வரிவிதிப்பு அதிகாரம் அதனை நிதிசார் நிலைக் கூற்றின் வருமதிகள் மற்றும் சென்மதிகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கியது.

கடன்படல் செலவுகள்

உத்தேசிக்கப்பட்ட பாவனை அல்லது விற்பனைக்கு தயாராகுவதற்கு ஒரு கணிசமான கால அவகாசத்தை அவசியம் எடுத்துக் கொள்ளும் சொத்துகளான தகுதி பெறும் சொத்தின் கைக்கொள்ளல், நிர்வாணம் அல்லது உற்பத்தி என்பவற்றுக்கு பொதுவான மற்றும் குறித்தான கடன்படுத்தல் செலவுகள் நேரடியான பங்கை அளிப்பதுடன், அந்த சொத்துக்களின் கிரயங்களுக்கு சேர்க்கப்படுகின்றன. ஏனைய அனைத்து கடன்படல் செலவுகளும் அவை மேற்கொள்ளப்பட்ட காலத்திற்கு செலவில் கணக்கெடுக்கப்படுகின்றன.

1.4.3 வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைகளும் நிலுவை மிகுதிகளும்

கூட்டுத்தாபனத்தின் செயல்முறை ரீதியானதும் மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமான இலங்கை ஷரூபாய்களிலேயே நிதிசார் கூற்றுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயத்திலான பரிவர்த்தனைகள் முதலில் பரிவர்த்தனைத் திகதியன்று நடைமுறையிலிருந்த செயல்முறை நாணய வீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் குறிக்கப்பட்ட நாணயச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கையிடும் திகதியன்று பிரயோகமாகும் செயல்முறை நாணயமாற்று வீதத்தில் மீள்மாற்றம் செய்யப்படுகின்றன. அனைத்து வேறுபாடுகளும் வருமானாக் கூற்றுக்கு எடுக்கப்படுகின்றன. வரலாற்றுக் கிரய அடிப்படையில் ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அளவிடப்பட்ட நாணயச் சொத்துக்களல்லாத உருப்படிகள் ஆரம்பப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் நடைபெற்ற திகதியன்றான நாணயமாற்று வீதத்தை உபயோகித்து நாணயப் பெறுமதி மாற்றம் செய்யப்படுகின்றன.

நாணயச் சொத்துகளல்லாத உருப்படிகள் வெளிநாட்டு நாணயத்தில் நியாயப் பெறுமதி அடிப்படையில் அளவிடப்பட்டவை நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியிலான நாணயமாற்று வீதத்தை உபயோகித்து மாற்றம் செய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயச் சொத்துகள்ல்லாத உருப்படிகளின் பெறுமதி மாற்றம் மூலமாக எழும் இலாபம் அல்லது நட்டம் உருப்படியின் நியாயப் பெறுமதியிலான மாற்றம் மூலமான இலாபம அல்லது நட்டத்தின் அங்கீகரித்தலுடன் இணைந்ததாக கையாளப்படுகிறது (அதாவது, உருப்படிகளின் நியாயப் பெறுமதி அடிப்படையிலான பெறுமதி மாற்ற வேறுபாடுகளின் இலாபம் அல்லது நட்டம் ஏனைய முழுமையான வருமானத்தில் (ழுஊஐ) அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது).

1.4.4 நடப்பு எதிர் நடப்பல்லாத வகைப்படுத்தல்

நிதிசார் நிலைமையின் கூற்றில் குழுமம் சொத்துகள் மற்றும் பொறுப்புகளை நடப்பு.'. நடப்பல்லாத வகைப்படுத்தலின் அடிப்படையில் சமர்ப்பிக்கின்றது. ஒரு சொத்து, அது பின்வரும் தன்மைகளை உடையதாக இருக்கும் போது நடப்பு ரீதியானதென வகைப்படுத்தப்படுகிறது.

சாதாரண செயற்பாட்டுச் சுழற்சி வட்டத்தில் பயனுறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது அல்லது விற்கப்படுவதற்கு அல்லது நுகரப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டது.

பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுவது

அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின் பன்னிரெண்டு மாதங்களினுள் பயனுறுவதற்கு எதிர்பார்க்கப்படுவது

அல்லது

அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின் குறைந்தது பன்னிரெண்டு மாதங்களில் ஒரு பொறுப்பைத் தீர்ப்பதற்கு பறிமாற்றுதல் அல்லது உபயோகிக்கப்படுவதிலிருந்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலன்றி காசு அல்லது காசுக்கு சமனானது

ஏனைய அனைத்து சொத்துக்களும் நடப்பல்லாத சொத்துகளாக வகைப்படுத்தப்படும்.

ஒரு பொறுப்பு பின்வருமாறு உள்ள போது நடப்பு ரீதியானது எனப்படும்:

வழமையான செயற்படும் சுழற்சி வட்டத்தில் தீர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகையில்

பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படுகையில்

அறிக்கைப்படுத்தல் காலத்தின் பின் பன்னிரெண்டு மாதங்களினுள் தீர்க்கப்படுவதற்கு உறியதானது

அல்லது

அறிக்கைப்படுத்தும் காலத்தின் பின் குறைந்தது பன்னிரெண்டு மாதங்களில் பொறுப்பின் தீர்த்தலை ஒத்திவைப்பதற்கு நிபந்தனையற்ற உரிமை இல்லை எனப்படுகையில்

ஏனைய அனைத்து பொறுப்புகளையும் குழுமம் நடப்பல்லாதவையாக வகைப்படுத்தப்படுகிறது.

ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புகள் நடப்பல்லாத பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1.4.5 நியாயப் பெறுமதி அளவீடு

உரிமையாண்மைப் பங்குகளிலான முதலீடுகள் போன்ற நிதிசார் சாதனங்கள் மற்றும் நிலம் போன்ற நிதிசாரா சொத்துகளை, ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் நியாயப் பெறுமதியில் அளவிடுகின்றது. நிதிசார் சாதனங்கள் மற்றும் நியாயப் பெறுமதியில் அளவிடப்படும் நிதிசாரா சொத்துக்களுக்கான நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் அல்லது நியாயப் பெறுமதிகள் வெளிப்படுத்தப்பட்டவை பின்வரும் குறிப்புகளில் சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன.

- ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (குறிப்பு 8)
- முதலீட்டு ஆதனம் (குறிப்பு 8.3)
- நிதிசார் சாதனங்கள் (கடந்தீர்ப்புக் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டவை உட்பட) (குறிப்பு 12.1)

அளவிடுதல் திகதியில் சந்தைப் பங்குபற்றுனர்களுக்கிடையில் ஒரு முறையான பரிவர்த்தனை நடவடிக்கையில் ஒரு சொத்தை விற்பனை செய்வதற்கு பெறப்படும் அல்லது ஒரு பொறுப்பை மாற்றுவதற்கு கொடுப்பனவு செய்யப்படும் விலையே நியாயப் பெறுமதியாகும். நியாயப் பெறுமதி அளவிடுதல் சொத்தை விற்பனை செய்வதற்கு அல்லது பொறுப்பை மாற்றுவதற்கான பரிவர்த்தனை நடவடிக்கை நடைபெறுகிறது என்ற ஊகத்தின் அடிப்படையிலானது.

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தையில்

அல்லது

- முதன்மைச் சந்தையொன்று இல்லாத நிலையில், சொத்து அல்லது பொறுப்புக்கான மிகவும் அனுகூலமான சந்தையில்.

முதன்மை அல்லது மிகவும் அனுகூலமான சந்தை, குழுமத்தினால் அணுகும்படியான வழிவகையைக் கொண்டிருத்தல் வேண்டும். சந்தைப் பங்குபற்றுனர்கள் தங்களது சிறந்த பொருளாதார நலன்களைக் கருதி, சொத்து அல்லது பொறுப்பை விலையிடும் போது அவர்கள் தங்களது ஊகக் கருத்தினை உபயோகிப்பார்கள் என்பதைப் பயன்படுத்தி ஒரு சொத்து அல்லது பொறுப்பின் நியாயப் பெறுமதி அளவிடப்பட்டது.

ஒரு நிதிசார் சொத்தின் ஒரு நியாயப் பெறுமதி அளவீடு, ஒரு சந்தைப் பங்குபற்றுனர், சொத்தை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பாவனைக்கு உபயோகித்தல் அல்லது சொத்தை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பாவனைக்கு உபயோகிக்கும் மற்றொரு சந்தைப் பங்குபற்றுனருக்கு விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார் நலன்களை உருவாக்கும் ஆற்றலைக் கணக்கில் கொள்கின்றது.

குழுமம் சூழ்நிலைகளுக்குப் பொறுத்தமான விலைமதிப்புத் தொழில்நுட்பங்களை உபயோகிக்கின்றதுடன், அதற்கு நியாயப் பெறுமதியை அளவிடுவதற்கு போதுமான தரவுகள் கிடைக்கின்றமை, பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளை உபயோகிப்பதை அதிகப்படுத்துகிறதுடன், அவதானிக்கவியலாத உள்ளீடுகளை உபயோகிப்பதைக் குறைக்கின்றது. நிலம் மற்றும் முதலீட்டு ஆதனங்கள் போன்ற முக்கியமான சொத்துகள் மற்றும் ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடுகள் போன்ற முக்கியமான பொறுப்புகள் என்பவற்றின் விலைமதிப்பிடலுக்காக வெளிவாரி விலைமதிப்பீட்டாளர்கள் சம்பந்தப்படுவார்கள்.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்களின் தேவைக்காக, சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் இயற்றன்மை, குணாதிசயங்கள் மற்றும் இடரேதுநிலைகள் என்பவற்றின் அடிப்படையில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல்களை குழுமம் தீர்மானித்துள்ளது.

1.4.6 ஆதனம், பொறி ரு உபகரணம்

காணி தவிர்த்து ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன, நாளாந்த சேவையாற்றல் செலவுகள் விலக்கி, பெறுமதியில் திரட்டிய தேய்மானம் மற்றும் திரட்டிய சேத இழப்பு என்பவற்றைக் கழித்து செலவீனப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அளவீடு

ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படுவதற்காக தகுதி பெறும் ஒரு ஆதனம், பொறி ரூ உபகரணம் உருப்படி முதலில் சொத்தின் கைப்பெறுதலுக்காக நேரடியாகப் பங்களித்த அதன் கொள்வனவு அல்லது நிர்மாணத்துடன் இணைந்தான அதற்கான ஏதேனும் தற்செயலான செலவுகளுடனான அதன் செலவின் அடிப்படையில் ஆரம்பத்தில் அளவிடப்படுகிறது.

சுய நிர்மாணிக்கப்பட்ட சொத்துகள், அதன் உத்தேசிக்கப்பட்ட உபயோகத்திற்காக சொத்தினை ஓர் இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்குப் பங்களித்த பொருட்கள் மற்றும் நேரடி உழைப்பு அல்லது நேரடிப் பங்களித்த வேறு ஏதேனும் செலவுகள் மற்றும் சொத்து அமைந்துள்ள இடத்திலிருந்து அதனைக் கழட்டி , அகற்றி மற்றும் அவ்விடத்தை மீட்டெடுத்த செலவுகள் மற்றும் தகுதிவாய்ந்த சொத்துக்களின் கடன்பெறல் செலவுகள் என்பவற்றை உள்ளடங்குகின்றன. அத்தகைய செலவு, சொத்து, பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் பாகத்தை மீள்மாற்றுவதற்கான செலவு, அதன் அங்கீகரித்தல் தகைமை திருப்தி செய்யப்பட்டு, செலவு மேற்கொள்ளப்படும் போது உள்ளடக்கப்படுகிறது.

செலவின மாதிரி

காணி தவிர, ஆதனம், பொறி & உபகரணத்திற்கு கிரய மாதிரி-யை குழுமம் பிரயோகிக்கின்றதுடன், கொள்வனவு அல்லது நிர்மாணித்தலுக்கான செலவில் அதனூடான ஏதேனும் தற்செயலான செலவு இணைத்தும், மற்றும் திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரட்டிய சேதார இழப்புகளைக் கழித்தும் பதிவு செய்கிறது.

மீள்விலை மதிப்பிடல் மாதிரி

காணிகள், அவற்றின் மீள்விலை மதிப்பிடுதலின் பின்னர் இனங் காணப்பட்ட சேத இழப்புகளைக் கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகிறது. மீள்விலை மதிப்பிட்ட ஒரு சொத்தின் நியாயப் பெறுமதி அது கொண்டுள்ள பெறுமதித் தொகையிலிருந்து பொருண்மை ரீதியாக வேறுபடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு, விலை மதிப்பிடுதல் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. மீள்மதிப்பீட்டின் ஏதேனும் மிகைத்தொகை, அது வருமானக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் ஒரு மீள்மதிப்பீட்டுக் குறைவை எதிர்தீர்க்கும் அளவுக்கான ஒரு சந்தர்ப்பம் தவிர்த்து, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு ஒப்புரவான வகையில் வரவு வைக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் மீள்மதிப்பீட்டிலான அதிகரிப்பு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை, அது சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தில் இருக்கும் ஒரு மிகைதொகையை ஈடுசெய்கின்ற அளவிலான ஒரு சந்தர்ப்பம் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விற்பனை செய்யப்பட்ட குறித்த சொத்து தொடர்பான ஏதேனும் மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கம், சொத்து அகற்றலின் பின், வைத்திருப்பு வருமானத்திற்கு மாற்றப்படும்.

பின்னிட்ட செலவு

ஆதனம், பொறி & உபகரணம் ஆகியவற்றின் ஒரு உருப்படியின் பாகத்தை மாற்றீடு செய்யும் செலவு அப்பாகத்துடன் இணைந்ததான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் குழுமத்திற்குள் வந்து சேரும் மற்றும் அதன் கிரயம் உறுதியாக அளவிடப்பட முடியும் எனும் சாத்தியம் கொண்டதாக இருக்கும் பட்சத்தில் அது உருப்படியின் பெறுமதியில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மீட்டமைத்தல் செலவுகள்

எதிர்கால பொருளாதார நன்மைகளை மீட்டமைத்தல் அல்லது பேணும் முகமாக ஆதனம், பொறி & உபகரணத்தின் திருத்தியமைத்தல்கள் மற்றும் பராமரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அவைவ மேற்கொள்ளப்பட்டவாறு வருமானக் கூற்றில் அறவிடப்படுகிறது.

அங்கீகார நீக்கம்

ஆதனம், பொறி & உபகரண உருப்படியொன்றின் கொண்டு செல்லும் தொகை, அவ்வுருப்படியின் அகற்றல் அல்லது அதன் பாவனையிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படவில்லை எனும் போது அங்கீகாரத்தை இழக்கிறது. ஆதனம், பொறி & உபகரண உருப்படியொன்றின் அங்கீகார நீக்கத்திலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டம் உருப்படியின் அங்கீகாரம் நீக்கப்படும் போது வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

பெறுமதித் தேய்மானம்

காணி ஒரு முடிவிலி ஆயுட்காலத்தைக் கொண்டுள்ளதினால் அது பெறுமதித் தேய்மானம் அடைவதில்லை. வேறுபட்ட வகைச் சொத்துகளுக்கு அவை உபயோகத்திற்கும் கிடைக்கும் திகதியிலிருந்து அவற்றின் கணிக்கப்பட்ட பயன்தரும் ஆயுளின் பொருத்தமான காலங்கள் மீதாக நேர்கோட்டு அடிப்படையில் அவற்றிக்கு பெறுமதித் தேய்மானத்தை குழுமம் அளிக்கின்றது. சொத்து அங்கீகார நீக்கப்படும் திகதியன்று பெறுமதித் தேய்மானம் முடிவுறுகிறது.

கணிக்கப்பட்ட பயனுள்ள ஆயுள், ஈற்றுப் பெறுமதி மற்றும் வணிகத் திட்டம் மற்றும் மூலோபாயங்கள், எதிர்பார்க்கப்பட்ட உபயோக மட்டம் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்தை உபயோகித்து எதிர்கால அபிவிருத்திகள் போன்ற காரணிகள் அடிப்படையில் ஆதனம், பொறி & உபகரணத்தின் பெறுமதித் தேய்மான முறை என்பவற்றை குழுமம் வருடாந்தம் மீளாய்வு செய்கிறது.

சொத்துகளின் கணிக்கப்பட்ட பயனுள்ள ஆயுள் பின்வருமாறு:

சொத்துகள்	சொத்துகள்	வருடங்கள்
கட்டிடங்கள்		35-50 வருடங்கள்
தாங்கிகள்		20-40- வருடங்கள்
குழாய்த் தொகுதி		5-40 வருடங்கள்
பொறி & உபகரணம்		5-10 வருடங்கள்
கான்றிகள் & பம்பிகள்		10-15 வருடங்கள்
வாகனங்கள்		4-5 வருடங்கள்
தளபாடம், இணைப்புகள் & அலுவலக உபகரணம்		3-10 வருடங்கள்
மிதவை		10 வருடங்கள்
SPM வசதி- தாங்கிக் குதம்		40 வருடங்கள்
விமான எரிபொருள் வசதி மத்தள- எரிபொருள் குழாய்முனை		40 வருடங்கள்
	எரிபொருள் குழாய்முனை முறைமை	40 வருடங்கள்
	உள்ளக வீதி வலையமைப்பு & வேலிகள்	20 வருடங்கள்
	மானிப்படுத்துதல் & மின்னிணைப்பு முறைமை	10 வருடங்கள்
	தீ அணைப்பு முறைமை	10 வருடங்கள்
	ஏனைய சொத்துகள்	8 வருடங்கள்
முத்துராஜவெல PLEM		10 வருடங்கள்

குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், சொத்தின் ஈற்றுப் பெறுமதிகள், பயனுள்ள ஆயுள் மற்றும் பெறுமதித் தேய்மான முறை என்பன மீளாயப்பட்டு, பொருத்தமாயின் சீர்செய்யப்படுகின்றன.

நடைமுறையிலுள்ள வேலை மூலதனம்

நடைமுறையிலுள்ள வேலை மூலதனம் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுகிறது. இவை மூலதனப்படுத்தலுக்கு காத்திருக்கும் கட்டிடங்களின் நிர்மாணம், முக்கிய பொறி மற்றும் இயந்திரம் மற்றும் முறைமை அபிவிருத்தி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட நேரடி மூலதனத் தன்மையுடனான செலவுகளாகும்.

நிதிசாரா சொத்துகளின் சேத இழப்பு

சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் சொத்துகளின் முன்கொணரற் பெறுமதி மீளப்பெறத்தக்கவையாக இல்லாதிருக்கலாம் என சுட்டிக்காட்டும் போதெல்லாம் சொத்துகள் சேத இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்தின் முன்கொணரற் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை மிஞ்சும் தொகையினால் ஒரு சேத இழப்பு நட்டம் அடையாளம் காணப்படுகிறது. மீளப்பெறத்தக்க தொகை சொத்தொன்றின் நியாயப் பெறுமதியில் விற்பனைக்கான செலவு மற்றும் பாவனையிலுள்ள பெறுமதியை கழித்துப் பெறுவதாகும்.

சேத இழப்பை கணிக்கும் நோக்கத்துக்காக, சொத்துகள் அவற்றின் மிகவும் தாழ்ந்த மட்டங்களில் குழநிலைப்படுத்தப்பட்டுள்ளன, அதற்காக தனியான இனங் காணப்படக்கூடிய காசுப்பாய்சல்கள் அங்கே உள்ளன (காசு பிறப்பாக்க அலகுகள்). சேத இழப்புக்கு உள்ளாகும் நிதிசாரா சொத்துகள் ஒவ்வொரு அறிக்கைத் திகதியில் சாத்தியமான சேத இழப்பின் தள்ளுபடிக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

1.4.7 முதலீட்டு ஆதனங்கள்

அங்கீகரித்தலின் அடிப்படை

முதலீட்டு ஆதனம் என்பது வாடகைகள் ஈட்டுவதற்கு அல்லது மூலதன பெறுமதியேற்றத்திற்காக அல்லது இந்த இரண்டுக்குமாக ஆனால் வணிகத்தின் சாதாரண நடைமுறைத்தன்மையில் விற்பனைக்கல்லாது வைத்திருக்கப்படும் சொத்தாகும்.

அளவீடு

நிதிசார்கூற்றுகளில் முதலீட்டு ஆதனம் கீழ்க் கிரய முறைமை-யின் கீழ் கணக்கிடப்படுகின்றது. அதற்கமைய சொத்தொன்று அங்கீகரிக்கப்பட்ட பின், அச்சொத்து அதன் கிரயத்திலிருந்து திரட்டிய தேய்மானம் மற்றும் சேத இழப்பு நட்டங்களை கழித்த பெறுமதியை முன் கொண்டு செல்கிறது.

பெறுமதித் தேய்மானம்

கொள்வனவு செய்த திகதியிலிருந்து அது அகற்றப்படும் திகதி வரை சொத்து வகுப்பின் கணிப்பிட்ட ஆயுள் முழவதற்கும் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதித் தேய்மானம் கணிக்கப்படுகிறது.

அங்கீகார நீக்கம்

எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாததின் காரணத்தால் முதலீட்டு ஆதனங்கள் அவை தீர்த்து வைக்கப்பட்ட பின் அல்லது நிரந்தரமாக உபயோகத்திலிருந்து மீளப்பெறப்பட்ட பின் அவை அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன. சொத்தின் தீர்த்து வைத்தல் மூலமான நிகர தொகை மற்றும் அதன் முன்கொணரற் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு அங்கீகார நீக்க காலத்தின் இலாப அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. முதலீட்டு ஆதனத்தின் அங்கீகார நீக்கத்திலிருந்து எழும் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்குவதற்கு கருதப்பட வேண்டிய தொகை SLFRS 15 இன் பரிவர்த்தனை விலை தீர்மானிப்பதற்கான தேவைப்பாடுகளுக்கு அடைவாகத் தீர்மானிக்கப்படுகிறது.

முதலீட்டு ஆதனங்களிற்கும் மற்றும் அங்கிருந்துமான இடமாற்றங்கள் உபயோகத்தில் மாற்றம் இருந்தால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றன.

1.4.8 அருவச் சொத்துகள்

அங்கீகரித்தலின் அடிப்படை

சொத்துக்கு உரியதான எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்கு உள்வரும் சாத்தியம் உடையதாகவும் மற்றும் சொத்தின் கிரயம் 'அருவச் சொத்துகள்' தொடர்பாக LKAS 38 - இலங்கை கணக்கீட்டுத் தராதரங்களுடன் அமைவாக, உறுதியாக அளவிடப்பட முடியுமாகவும் இருப்பின், ஓர் அருவச் சொத்து அங்கீகரிக்கப்படுகிறது. ஆரம்ப அங்கீகரித்தலின் பின், கிரயத்திலிருந்து ஏதேனும் திரட்டிய கடன்தீர்ப்பு மற்றும் ஏதேனும் திரட்டிய சேத ,ழப்பு நட்டங்களைக் கழித்த பின், உள்ள ஏதேனும் முன்கொணரற் பெறுமதி ,ருப்பின், அதனை அருவச் சொத்துகள் கொண்டிருக்கும்.

ஓர் அருவச் சொத்து, எதிர்கால பொருளாதார நன்மைகள் அதன் உபயோகம் அல்லது தீர்த்து வைத்தலில் இருந்து எதிர்பார்க்கப்படாத போது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன. சொத்தின் அங்கீகார நீக்கத்திலான ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் தீர்த்து வைத்தல் மூலமான நிகர தொகை மற்றும் அதன் முன்கொணரற் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டது) இலாப அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

1.4.9 துணைநிறுவனங்களில் முதலீடு

துணைநிறுவனங்களில் முதலீடு, ஏதேனும் சேத ,ழப்பு நட்டங்கள் ,ருப்பின் அவற்றைக் கழித்து வரும் செலவீனத்தில் குறிக்கப்படுகிறது.

1.4.10 கையிருப்புகள்

பாவனையில் ,ல்லாதவை மற்றும் மந்தகதியில் நகரும் உருப்படிகளுக்கான உரிய தள்ளுபடிக்கு ஏற்பாடளித்த பின், கையிருப்புகள் கிரயத்தின் குறைவான மற்றும் நிகர பயனுறுப் பெறுமதியிலும் மதிப்பிடப்படுகின்றன. நிகர பயனுறுதல் பெறுமதி (NRV) என்பது, சாதாரண வணிக ஏற்பாடுகளின் கீழ் கையிருப்புகள் விற்பனை செய்யப்படக் கூடியதான கணிப்பிடப்பட்ட விற்பனை விலையில் விற்பனையை மேற்கொள்வதற்கு கணிப்பிடப்பட்ட கிரயப் பூர்த்தி மற்றும் கணிப்பிடப்பட்ட கிரய அவசியம் என்பவற்றைக் கழித்து கணிப்பிடப்படுகிறது. நிகர பயனுறுதல் பெறுமதி (NRV) சந்தை நிலைமைகள் மற்றும் அறிக்கைத் திகதியிலுள்ள விலைகள் மற்றும் சமீபத்தைய சந்தைப் பரிவர்த்தனைகள்

மூலப் பொருட்கள்	முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் கொள்வனவுக் கிரயம்
முடிவுப் பொருட்கள்	
அ) சுத்திகரிப்புப் பொருட்கள்	கடன்பெறல் செலவுகள் நீங்கலாக, நேரடிப் பொருட்கள், நேரடி தொழில் என்பவற்றின் செலவுகள் மற்றும் சாதாரண தொழிற்பாட்டுச் செயற்றிறன் அடிப்படையில் உற்பத்தி மேற்செலவுகளின் ஒரு பொருத்தமான விகிதாசாரம்.
ஆ) இறக்குமதிகள்	முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் கொள்வனவுக் கிரயம்
நடைமுறையில் உள்ள வேலைகள்	
அ) சுத்திகரிப்புப் பொருட்கள	கடன்பெறல் செலவுகள் நீங்கலாக, நேரடிப் பொருட்கள், நேரடி தொழில் என்பவற்றின் செலவுகள் மற்றும் சாதாரண தொழிற்பாட்டுச் செயற்றிறன் அடிப்படையில் உற்பத்தி மேற்செலவுகளின் ஒரு பொருத்தமான விகிதாசாரம்.
ஆ) இறக்குமதிகள்	முதல் வந்தது முதல் வெளியே அடிப்படையில் கொள்வனவுக் கிரயம்
ஏனைய முடிவுப் பொருட்கள்	நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படை மீதான கொள்வனவுக் கிரயத்தில்
நுகரக்கூடியவைகள் மற்றும் உதிரிகள்	நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படை மீதான கொள்வனவுக் கிரயத்தில்

போக்கு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி மதிப்பிடப்படுகிறது.

தற்போதைய இடம் மற்றும் நிலைமைகளுக்கு கையிருப்புகளைக் கொண்டு வருவதில் மேற்கொள்ளப்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரத்தை உபயோகித்து கணக்கிடப்படுகிறது.

1.4.11 காசு மற்றும் காசுச் சமானங்கள்

காசு மற்றும் காசுச் சமானங்கள் என்பவை, கையிலுள்ள பணம், கோரிக்கை வைப்புகள் மற்றும் குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள், காசின் அறிந்த தொகைகளுக்கு உடன் மாற்றக்கூடியவை மற்றும் பெறுமதியில் மாற்றங்களுக்கு முக்கியமில்லாத இடரேதுநிலை கொண்டவை என்பவையாகும். காசுப் பாய்ச்சல் நோக்கத்துக்காக, காசு மற்றும் காசுச் சமானங்கள் கையிலுள்ள பணம் மற்றும் வங்கியிலுள்ள மேலதிக பற்று நிலுவைகள் நீக்கிய வங்கியிலுள்ள நிகர பண வைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. குறுகிய முதிர்ச்சிக் காலம் உடைய முதலீடுகள், அதாவது பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது குறைந்த காலம் கொண்டவையும் காசுச் சமானங்களாகக் கருதப்படுகின்றன.

1.4.12 ஏற்பாடளித்தல்கள் மற்றும் பொறுப்புகள்

ஏற்பாடளித்தல்கள்

ஒரு கடந்த கால நிகழ்வின் விளைவான ஒரு தற்போதைய கடப்பாட்டை (சட்ட ரீதியிலானது அல்லது படிப்படியானது) குழுமம் கொண்டிருக்கும் போது, அங்கு கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளைக் கருதும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவது சாத்தியமாகுகின்ற போதும் மற்றும் கடப்பாட்டுத் தொகையின் ஒரு நம்பகமான கணிப்பீடு மேற்கொள்ளப்பட முடியும் எனும் போதும் ஏற்பாடளித்தல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடளித்தலின் சில அல்லது அனைத்துத் தொகைகளுமே மீள ஈடுசெய்யப்படுவதை குழுமம் எதிர்பார்க்கும் போது, இந்த மீளீடுசெய்தல் ஒரு தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறது, ஆனால் அது மீளீடுசெய்தல் உண்மையில் நிச்சயமானதாக ஆகும் போது மட்டுமேயாகும். ஏதேனும் ஏற்பாடளித்தல் தொடர்பான செலவு ஏதேனும் மீளீடு செய்தலின் நிகரப் பெறுமானமாக வருமானக் கூற்றில் காண்பிக்கப்படுகிறது. பணத்தின் காலப் பெறுமதியின் தாக்கம் பொருட்படுத்தப்படக் கூடியதாயின், பணத்தின் காலப்பெறுமதியின் நடப்புச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு வரிக்கு முந்திய வீதத்திலும், மற்றும், பொருத்தமானவிடத்து, பொறுப்புக்கு குறிப்பானதான ,டரேது நிலைகளைக் கவனத்தில் கொண்டும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களை தள்ளுபடி செய்வதன் மூலமாக ஏற்பாடளித்தல்கள் தீர்மானிக்கப்படுகின்றன. தள்ளுபடி பாவிக்கப்படுமிடத்து, கால அவகாசம் காரணமாக ஏற்பாடளித்தலில் ஏற்படும் அதிகரிப்பு ஒரு வட்டிச் செலவாக அடையாளம் காணப்படுகிறது.

வரையறுத்த நன்மைக் கடப்பாடுகள் - பணிக்கொடை

பணிக்கொடை தொடர்பாக நிதிசார் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பாகக் கொள்ளப்படுவது உத்தேசிக்கப்பட்ட அலகுக் கடன் முறையை உபயோகித்து அறிக்கைக் காலத்தின் முடிவிலுள்ள கடப்பாட்டின் தற்போதைய பெறுமானமாகும். வரையறுத்த நன்மைக் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி பல அனுமானங்களை உபயோகித்து ஒரு காப்பீட்டுக் கணிப்பிடல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. பணிக்கொடைக்கான கிரயத்தை தீர்மானிப்பதில் உபயோகித்த இந்த அனுமானங்கள் தள்ளுபடி வீதம், எதிர்பார்க்கப்பட்ட ஊழியர் புரள்வு மற்றும் சம்பள அதிகரிப்பு வீதம் என்பவற்றை உள்ளடக்குகிறது. இந்த அனுமானங்களிலான ஏதேனும் மாற்றம் பணிக்கொடை கடப்பாட்டின் முன்கொணரற் பெறுமதியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வருட இறுதியிலும் பொருத்தமான தள்ளுபடி வீதத்தை முகாமைத்துவம் தீர்மானிக்கின்றது. இந்த வட்டி வீதமே, வரையறுத்த நன்மைக் கடப்பாட்டை தீர்ப்பதற்குத் தேவைப்படுமென எதிர்பார்க்கப்படும் கணிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்படுதல் வேண்டும். தள்ளுபடி வீதத்தைத் தீர்மானிப்பதில், இலங்கையில் கூட்டாண்மை முறிகளுக்காக ஓர் ஆழமான சந்தை இல்லாமையின் காரணத்தால் அரசாங்க முறிகளின் வட்டி வீதங்களை முகாமைத்துவம் கவனத்தில் கொள்கிறது. வரையறுத்த நன்மைக் கடப்பாடுகளுக்கான ஏனைய முக்கிய அனுமானங்கள் நடப்புச் சந்தை நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

LKAS 19- ஊழியர் நன்மைகளுக்கு உடன் இணங்கும் வகையில், அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் சேவையின் ஆரம்பத்திலிருந்து ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடளித்தல் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஓர் ஊழியருக்கான பொறுப்பானது அவரின் தொடர்ச்சியான 5 வருட சேவைகளின் பூர்த்தியில் மட்டுமே எழுகிறது.

இது வெயிவாரியாக நிதியளிக்கப்படும் ஒரு வரையறுத்த நன்மைத் திட்டமல்ல.

காப்பீட்டு கணித்தல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை எழும் காலத்தில் ஏனைய முழுமையான வருமானத்தில் அறவிடப்படுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

சம்பந்தப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணைந்த வகையில் ஊழியர் சேமலாப நிதியப் பங்களித்தல்கள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களித்தல்கள் என்பவற்றிற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். கூட்டுத்தாபனம் ஊழியர்களின் மொத்த ஊதியத்தின் 15% மற்றும் 3% என்பவற்றை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு முறையே பங்களிப்புச்செய்வதுடன் ஊழியர்கள் சேவை அளித்த காலங்களின் போது அவற்றை ஒரு செலவினமாக வருமானக் கூற்றில் பதிவுசெய்கின்றன.

1.4.13 மூலதன ஒதுக்கம்

அரசாங்க திரட்டு நிதியத்திலிருந்து பெறப்பட்ட குறித்த தொகைகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான பின்னுரிமையாளரின் வெளியிடப்பட்ட மூலதனத்தை இறுதியில் உருவாக்குகின்ற விற்பனை வருமானத்தின் மறுசீரமைக்கப்பட்ட நிகரப்பெறுமதி என்பன மூலதன ஒதுக்கத்துக்கு வரவு வைக்கப்படுகின்றன.

1.4.14 நிதிசார் சாதனங்கள்

1) நிதிசார் சொத்துக்கள்

ஆரம்பநிலை அங்கீகரித்தல் மற்றும் அளவீடுகள்

ஆரம்பநிலை அங்கீகரித்தலில் நிதிசார் சொத்துக்களின் வகைப்படுத்தலானது அவற்றின் ஒப்பந்த ரீதியிலான காசுப்பாய்ச்சல் இயல்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக மாதிரியிலும் தங்கியிருக்கின்றன.

ஒரு கணிசமான நிதிசார் அம்சத்தைக் கொண்டிராத வர்த்தக வருமதிகள் அல்லது அதற்கு குழுமம் ஒரு நடைமுறை முறைமையைப் பிரயோகித்துள்ளவை தவிர, கூட்டுத்தாபனம் நிதிசார் சொத்தை அதன் நியாயப் பெறுமதியிலும் மற்றும் நியாயப் பெறுமதியில் இல்லாத ஒரு நிதிசார் சொத்தாக இருக்கையில், இலாபம் அல்லது நட்டம் ஊடாக, பரிவர்த்தனை நடவடிக்கைக் கிரயத்திலும் ஆரம்பத்தில் அளவிடுகின்றது. ஒரு கணிசமான நிதிசார் அம்சத்தைக் கொண்டிராத வர்த்தக வருமதிகள் அல்லது அதற்கு குழுமம் ஒரு நடைமுறை முறைமையைப் பிரயோகித்துள்ளவை பரிவர்த்தனை நடவடிக்கை விலையில் அளவிடப்படுகின்றன.

நிதிசார் சொத்துக்களானது கடன் தீர்ப்புக் கிரயம், ஏனைய முழுமையான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி (OCI) மற்றும் இலாபம் மற்றும் நட்டத்தினூடான நியாயப் பெறுமதி என்பவற்றின் பின்னராக அளவிடப்படுகின்றன.

நிதிசார் சொத்துக்கள் கடன் தீர்ப்பு கிரயம் அல்லது ஏனைய முழுமையான வருமானம் மூலமாக நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதற்கும் மற்றும் அளவிடப்படுவதற்கும், அது நிலுவையாக உள்ள முதல் தொகை மீதான 'முதல் மற்றும் வட்டியின் தனிக் கொடுப்பனவுகளான (SPPI)' காசுப்பாய்ச்சலுக்கு அதிகரிப்பை கொடுத்தல் வேண்டும். இம் மதிப்பீடு SPPI சோதனை எனக் குறிப்பிடப்படுவதுடன் ஓர் ஆவண மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிசார் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான குழுமத்தின் வணிக மாதிரியானது காசுப்பாய்ச்சலை உருவாக்கும் பொருட்டு அது அதனுடைய நிதிசார் சொத்துக்களை எவ்வாறு முகாமைத்துவம் செய்கின்றது என்பதை குறிப்பிடுகின்றது. வணிக மாதிரியானது ஒப்பந்த காசுப்பாய்ச்சலை திரட்டுவதிலா, அல்லது நிதிசார் சொத்துக்களை விற்பனை செய்வதிலா, அல்லது இவையிரண்டின் மூலமாகவா ஏற்படுத்தப்படும் என்பதைத் தீர்மானிக்கின்றது.

சந்தையில் (வழக்கமான வாணிப முறை) விதிமுறை அல்லது உடன்பாடு மூலமாக நிறுவப்பட்ட குறித்த ஒரு காலப்பகுதிக்குள் சொத்துக்களினுடைய விநியோகத்திற்குத் தேவையான நிதிசார் சொத்துக்களின் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளானது வர்த்தக திகதியில் அதாவது அக் குழுமம் சொத்தை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஒப்புக்கொண்ட திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

குழுமமானது நிதிசார் சாதனங்களை பின்வருமாறு வகைப்படுத்துகின்றது:

அ. கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் சொத்துக்கள்

பின்வரும் இரு நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்படுமாயின் குழுமமானது கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் சொத்துக்களை அளவிடுகின்றது.

- ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களைத் திரட்டும் முகமாக நிதிசார் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கத்துடன் ஒரு வணிக மாதிரியினுள் நிதிசார் சொத்துக்கள் வைத்திருக்கப்படல். மற்றும்
- நிதிசார் சொத்தின் ஒப்பந்தக் காலங்கள் குறிப்பிட்ட திகதிகளில் நிலுவையாகவுள்ள முதல் தொகை மீது முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளான காசுப்பாய்ச்சல்களுக்கு அதிகரிப்பைக் கொடுக்கும் போது

கடன்தீர்ப்புக் கிரயத்திலான நிதிசார் சொத்துக்கள் பின்னர் பயனுறுதியான வட்டி வீத (EIR) முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் சேத இழப்பிற்கும் உட்படுகின்றன. சொத்துக்கள் அங்கீகாரம் நீக்கப்படுகையில், மாற்றமடைகையில் அல்லது குறைக்கப்படுகையில் வருமானக்கூற்றில் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கடன்தீர்ப்பு கிரயத்திலுள்ள குழுமத்தின் நிதிசார் சொத்துக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள், ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் திறைசேரி முறிகள், உண்டியல்கள் மற்றம் நிலையான வைப்புகள் என்பவற்றிலான முதலீடு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

ஆ. OCI ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிசார் சொத்துக்கள்

ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, IAS 32 நிதிசார் நி-றுவனங்களின் கீழ் உரிமையாண்மை வரைவிலக்கணத்தை அவை திருப்திப்படுத்தும் போது OCI ஊடாக நியாயப் பெறுமதியிலுள்ள உரிமையாண்மை முதலீட்டை உர-ிமையாண்மை சாதனங்களாக மாற்றவியலாத விதத்தில் வகைப்படுத்துவதற்கு குழுமம் தெரிவுசெய்ய முடியும்: வர்த்தகத்திற்காக சமர்ப்பணம் செய்யப்படவில்லை. வகைப்படுத்தல் ஒரு சாதனத்திற்கு சாதனம் எனும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

இந் நிதிசார் சொத்துக்கள் மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வருமானக் கூற்றாக ஒருபோதும் மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. பங்கு இலாபங்கள் கொடுப்பனவுக்கான உரிமை ஸ்தாபிக்கப்படும் போது வருமானக்கூற்றில் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்ற அதேவேளை குழுமம் நிதிசார் சொத்தினுடைய கிரயத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வருமானத்திலிருந்து நன்மையடைகையில், அத்தகைய இலாபம் OCI இல் பதிவுசெய்யப்படுகிறது.

இவ் வகைப்பாட்டின் கீழ் இக் குழுமமானது அதனுடைய விலை குறிக்கப்பட்ட மற்றும் பட்டியற்படுத்தப்படாத சமபங்கு முதல-ீடுகளை வகைப்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்டது.

அங்கீகார நீக்கம்

ஒரு நிதிசார் சொத்து (அல்லது, பொருத்தமானவிடத்து, நிதிசார் சொத்தின் உரு பகுதி அல்லது ஒத்த நிதிசார் சொத்துக்களினுடைய ஒரு தொகுதியின் பகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது அடிப்படையில் அங்கீகார நீக்கம் பெறுகிறது (அதாவது, குழுமத்தின் ஒன்றிணைந்த நிதிசார் நிலைமைக் கூற்றிலிருந்து நீக்கப்படுதல்):

- சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான உரிமை காலாவதியாகையில், அல்லது
- சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் உரிமைகளை குழுமம் உரிமை மாற்றம் செய்திருத்தல் அல்லது ஒரு 'ஊடு கடத்தல்' ஏற்பாட்டின் கீழ் பெற்றுக் கொண்ட காசுப்பாய்ச்சல்களை முழுமையாக ஒரு மூன்றாம் தரப்புக்கு பொருண்மைத் தாமதமின்றி கொடுப்பனவு செய்வதற்கான ஒரு கடப்பாட்டை ஏற்றமை மற்றும் (அ) குழுமம் சொத்தின் அனைத்து இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளைப் பெருமளவிற்கு உரிமை மாற்றியுள்ளமை, அல்லது (ஆ) குழுமம் சொத்தின் அனைத்து இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளைப் பெருமளவிற்கு உரிமை மாற்றவோ வைத்திருக்கவோ இல்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டை உரிமை மாற்றியுள்ளமை, கிய இரண்டிலொரு நிலை.

குழுமம் ஒரு சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றி அல்லது ஓர் ஊடு கடத்தல் ஏற்பாட்டை மேற்கொண்டோ இருக்கும் போது, அது உரிமையுடைமையின் இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருப்பின் எந்தளவிற்கு வைத்திருக்கிறது என்பதை குழுமம் மதிப்பீடு செய்கிறது.

அது சொத்தின் அனைத்து இடரேதுநிலைகள் மற்றும் வெகுமதிகளை கணிசமானளவிற்கு மாற்றாமலோ அல்லது தக்கவைக்காமலோ இருக்கும்போது, அல்லது சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்திருக்காத போதும், குழுமம் அதன் தொடர்ச்சியான ஈடுபாடுகளால் மாற்றப்பட்ட சொத்தை அங்கீகரித்து வருகின்றது. அச்சந்தர்ப்பத்தில், குழுமம் சொத்துடன் இணைந்தவொரு பொறுப்பையும் கூட அங்கீகரிக்கின்றது. மாற்றப்பட்ட சொத்து மற்றும் இணைந்த பொறுப்பு என்பன குழுமம் தக்கவைத்துக்கொண்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலிக்கும் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

நிதிசார் சொத்துக்களின் சேதஇழப்பு

குழுமமானது, ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் தொகுதி சேத இழப்பிற்கு உட்படுகின்றதா இல்லையா என்பதற்கான ஏதாவது சான்று உள்ளதா என்பதை மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப அங்கீகரித்தலின் (ஏற்பட்ட ஓர் 'இழப்பு நிகழ்வு') பின்னர் நடைபெற்ற ஒன்றோ அல்லது மேற்பட்ட நிகழ்வுகளின் ஒரு விளைவாக சேத இழப்பிற்கான சான்று அங்கு இருப்பின், மற்றும் அந்த இழப்பு சம்பவம் உறுதியான வகையில் கணிப்பிடக்கூடிய நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் தொகுதி கணிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தைக் கொண்டிருந்தால் மட்டும், ஒரு நிதிசார் சொத்து அல்லது நிதிசார் சொத்துக்களின் தொகுதி சேத இழப்பிற்கு உட்பட்டிருக்கின்றன எனக் கருதப்படுகின்றது. ஏதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் (ECL) ஒப்பந்தத்திற்கு ஏற்ப ஒப்பந்த காசுப்பாய்ச்சல்கள் மற்றும் மூலப் பயனுறுதி வட்டி வீதத்தின் அண்ணளவானளவில் தள்ளுபடி செய்யப்பட்டு குழுமம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் அனைத்து காசுப்பாய்ச்சல்களுக்கும் இடையிலான வேறுபாட்டில் தங்கியுள்ளது. ஏதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல்கள் கொண்டுள்ள பிணையுறுதிகளின் விற்பனை அல்லது ஒப்பந்த நிபந்தனைகளுக்கு ஒருங்கிணைந்ததான ஏனைய கடன் அதி-கரித்தல்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

ஏதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் இரண்டு நிலைமைகளில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஒன்று, ஆரம்ப அங்கீகரித்தல் தொடக்கம் கடன் இடரேது நிலையில் ஒரு குறிப்பிடத்தக்கதான அதிகரிப்பைக் கொண்டிருக்காத கடன் வெளிப்படுத்தல்களுக்காக, அடுத்த 12 மாதங்களினுள் சாத்தியமாகும் மீள்செலுத்தல் கொடாநிலைகளிலிருந்து ஏற்படும் கடன் இழப்பிற்காக ECL வழங்கப்படுகின்றது (12 மாத ECL). மற்றயது, ஆரம்ப அங்கீகரித்தலில் இருந்து கடன் இடரேது நிலையில் ஒர கணிசமான அதிகரிப்புக் கொண்ட கடன் வெளிப்படுத்தல்களுக்காக, காலத் தவறுதல்களைக் கவனத்தில் கொள்ளாது, வெளிப்படுத்தலின் எஞ்சிய ஆயுள் முழுவதுமாக எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகளுக்குத் தேவையான ஒரு நட்ட சலுகைத் தொகை (ஆயுட்கால ECL).

வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகளுக்காக, சேத இழப்புச் சான்றானது கடனாளிகள் அல்லது கடனாளிகளின் ஒரு குழு குறிப்பிடத்தக்கதான நிதி நெருக்கடிகளை அனுபவித்தல், வட்டி அல்லது முதல் கொடுப்பனவுகளில் கொடாநிலை அல்லது தவறுதல், வங்குரோத்து அல்லது ஏனைய நிதிசார் மீள்ஸ்தாபித்தல்களுக்கு அவர்கள் உட்படும் சாத்தியம், மற்றும் அங்கே எச்சத்தொகைகள் அல்லது கொடாநிலைகளுடன் ஒத்திணையும் பொருளாதார நிலைமைகள் போன்ற கணிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் ஒரு அளவிடத்தக்கதான குறைவைச் சுட்டிக்காட்டும்

அவதானிக்கத்தக்கதான தரவுகள் என்பவற்றை உள்ளடக்கலாம். குழுமம் அதன் வரலாற்று ரீதியான கடன் இழப்பு அனுபவங்கள் மீதான அடிப்படையில் கடனாளிகளுக்கு குறிப்பானதாக முன்னோக்கிப் பார்க்கும் காரணிகளுக்காக சீரமைத்துக் கொண்ட ஓர் ஏற்பாடளித்தல் அமைவுருவை ஸ்தாபித்ததுள்ளது.

ஒப்பந்த ரீதியாக கொடுப்பனவுகள் அரிதானவையாகும் போது, ஒரு நிதிசார் சொத்து கொடாநிலையில் உள்ளது எனக் குழுமம் கருதுகிறது. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில், குழுமத்தினால் வைத்திருக்கப்படும் ஏதாவது கடன் மேம்படுத்தல்களை கவனத்தில் கொள்ளவதற்கு முன் நிலுவையாகவுள்ள ஒப்பந்தப்படுத்தப்பட்ட தொகைகளை குழுமம் முழுமையாக பெறுவது சாத்தியமன்று என உள்ளக மற்றும் வெளியகத் தகவல்கள் சுட்டிக்காட்டும் போது ஒரு நிதிசார் சொத்து கொடாநிலையில் உள்ளதென குழுமம் கருதலாம். ஒப்பந்தப்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல்களை மீள்பெறுதலுக்கான நியாயமான எதிர்பார்ப்பு அங்கே இல்லை எனும் போது ஒரு நிதிசார் சொத்து குழுமத்தின் பதிவுகளிலிருந்து நீக்கப்படுகின்றது. சேத இழப்பு நட்டங்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் முக்கியமான வர்த்தக வருமதிகளை குழுமம் தனித்தனியாக மீளாய்கிறது. இவ்வாறு வர்த்தக வருமதிகளை குழுமம் தனித்தனியாக மதிப்பிடுவதிலிருந்து மேலதிக சேத இழப்பு எதுவும் ஏற்படவில்லை எனக் கண்டது.

(ii) நிதிசார் பொறுப்புக்கள்

ஆரம்பநிலை அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல்

நிதிசார் பொறுப்புக்களானது வர்த்தக மற்றும் பொருத்தமான ஏனைய சென்மதிகள் உட்பட இலாபம் மற்றும் நட்டம், கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள் ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிசார் பொறுப்புக்களாக, ஆரம்பநிலை அங்கீகரித்தலில் வகைப்படுத்தப்படுகின்றன.

அனைத்து நிதிசார் பொறுப்புக்களும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டுவருவதுடன், கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள் மற்றும் சென்மதிகளைக் பொறுத்தவரை, நிகர நேரடிப் பரிவர்த்தனை நடவடிக்கைக் கிரயம் உபயோகிக்கப்படக்கூடியது.

குழுமமானது வர்த்தகம் மற்றும் ஏனைய சென்மதிகள், வங்கி மேலதிகப் பற்றுகள் உட்பட கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

பின்னிட்ட அளவிடல்

கடன் தீர்ப்புக் கிரயத்தில் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள் மற்றும் வர்த்தகம் மற்றும் ஏனைய சென்மதிகள்

ஆரம்பநிலை அங்கீகரித்தலைத் தொடர்ந்து, வட்டி அறவிடும் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்களானது பின்னர் EIR முறையினை உபயோகித்து கடன் தீர்ப்புக் கிரயத்தில் அறவிடப்படுகிறது. பொறுப்புக்கள் அங்கீகார நீக்கம் செய்யப்படும் போதும் அதேபோன்று EIR கடன் தீர்ப்புச் செய்முறை ஊடாகவும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

கடன்தீர்ப்புக் கிரயம் கைப்படுத்தலின் மீதான ஏதேனும் தள்ளுபடி அல்லது முனைமம் மற்றும் EIR இனுடைய ஒரு முக்கியமான பகுதியான கட்டணங்கள் அல்லது கிரயங்கள் என்பவற்றை கருத்தில்கொண்டு கணிப்பிடப்படுகிறது. EIR கடன்தீர்ப்பானது வருமானக் கூற்றில் நிதிசார் செலவுகளாக உள்ளடக்கப்படுகிறது.

அங்கீகார நீக்கம்

பொறுப்பின் கீழான கடப்பாடு தீர்க்கப்பட்டு அல்லது இரத்துசெய்யப்பட்டு அல்லது காலாவதியாகும் போது ஒரு நிதிசார் பொறுப்பின் அங்கீகாரம் நீக்கப்படுகிறது. முற்கூட்டி இருக்கின்ற நிதிசார் பொறுப்பானது அதே கடனளிப்பவரிடமிருந்தான மற்றொன்றால் கணிசமாக வேறுபட்ட நிபந்தனைகளாக மாற்றப்படும் போது, அல்லது முற்கூட்டி இருக்கின்ற பொறுப்பானது கணிசமானளவு மாற்றியமைக்கப்படும் போது, அப் பரிமாற்றம் அல்லது மாற்றியமைத்தல் முலப் பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்படுவதுடன் புதியதொரு பொறுப்பின் அங்கீகாரமாகவும் கருதப்படுகிறது. சம்பந்தப்பட்ட தொகைகளுக்கிடையிலான வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது.

(iii) நிதிசார் சாதனங்களை எதிர்தீர்த்தல் செய்தல்

அங்கீகரிக்கப்பட்ட தொகைகளின் எதிர்தீர்த்தலுக்கு தற்போது வலியுறுத்தத் தகுந்த சட்ட உரிமை அங்கிருப்பின், மற்றும் நிதிசார் சொத்துக்களை பயனுற்றும் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை ஒரே சமயத்தில் தீர்த்தும், ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பதற்கான ஒரு நோக்கம் அங்கிருப்பின், நிதிசார் சொத்துக்களும் மற்றும் நிதிசார் பொறுப்புக்களும் எதிர்தீர்த்தல் செய்யப்பட்டு, நிகரதொகை நிதிசார் நிலைமையின் திரட்டிய கூற்றில் குறிக்கப்படுகின்றது.

நியாயப் பெறுமதியைத் தீர்மானித்தல்

அறிக்கைத் திகதியில் வினைத்திறனான சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் நிதிசார் சாதனங்களுக்கான நியாயப் பெறுமதியானது பரிவர்த்தனை கிரயத்திற்கு எவ்வித தள்ளுபடிகளுமின்றி அவற்றின் குறிக்கப்பட்ட சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு வினைத்திறனான சந்தையில் வர்த்தகம் செய்யப்படாத ஏனைய அனைத்து நிதிசார் சாதனங்களுக்கான நியாயப் பெறுமதி பொருத்தமான விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்களை உபயோகித்து தீர்மானிக்கப்படுகின்றது. விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் முறை, ஒத்த சாதனங்களுக்காக அவதானிக்கக்கூடிய சந்தை விலைகளுடனான ஒப்பிடுதல் மற்றும் ஏனைய தொடர்புபட்ட விலைமதிப்பிடல் மாதிரிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

சில நிதிசார் சாதனங்கள் நடப்புச் சந்தை பரிவர்த்தனைகள் அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளைக் கொண்டிராத விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்களை உபயோகித்து நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன. அவற்றின் நியாயப் பெறுமதியானது குழுமத்தினுடைய மிகப் பொருத்தமான மாதிரி கருதுகோளினுடைய சிறந்த மதிப்பீட்டுடன் விலைமதிப்பீட்டு மாதிரிகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது.

நிதிசார் சாதனங்களினுடைய நியாயப் பெறுமதியின் ஒரு பகுப்பாய்வு மற்றும் அவை எவ்வாறு அளவிடப்படுகின்றது என்பது தொடர்பான மேலதிக தகவல்கள் என்பன குறிப்பு 12.1. இல் தரப்பட்டுள்ளன.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் நிதிசார் சாதனங்களைப் பிரதிபலிக்கும் SLFRS 09 நிதிசார் சாதனங்களை வெளியிட்டதுடன் LKAS 39 நிதிசார் சாதனம், அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதலை மாற்றீடு செய்கிறது. இத் தராதரங்கள் சேத இழப்பினுடைய வகைப்படுத்தல் மற்றும் அளவீடு மற்றும் ஹெட்ஜ் கணக்கீடு என்பவற்றிற்கான புதிய தேவைகள் அறிமுகம் செய்கிறது.

1.4.15 குத்தகைக்கான கணக்கீடு

ஒப்பந்தம் ஒன்றின் ஆரம்பத்தில் அவ் ஒப்பந்தமானது குத்தகை ஒன்றைக் கொண்டுள்ளதா என குழு மதிப்பிடுகின்றது. அதாவது, கரிசனைக்கு ஈடாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கின்றது.

(a) சொத்துக்களின் உரிமைப் பயன்பாடு

குத்தகையின் தொடக்கத் திகதியில் (அதாவது, அடிப்படைச் சொத்து பயன்படுத்தப்படும் திகதியில்) சொத்துக்களின் பயன்பாட்டு உரிமையை குழு அங்கீகரிக்கிறது. சொத்துக்களின் உரிமைப் பயன்பாடானது செலவு, சேகரிக்கப்பட்ட ஏதேனும் குறைவான தேய்மானம் மற்றும் குத்தகைப் பொறுப்பின் ஏதேனும் மீள் அளவீட்டுக்கான சரிக்கட்டலில் அளவிடப்படுகின்றது. சொத்துக்களின் உரிமைப் பயன்பாட்டுக் கிரயமானது அடையாளப்படுத்தப்பட்ட குத்தகைப் பொறுப்பின் அளவு, ஏற்பட்ட ஆரம்ப நேரடிக் கிரயம் மற்றும் ஏதேனும் குத்தகை நிவாரணம் பெறப்படாவிட்டால் ஆரம்பத் திகதின் போது அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குத்தகைக் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. ஒரு நேர் கோட்டு அடிப்படையில் குறுகிய குத்தகைக் காலத்திலும் மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையிலும் பயன்பாட்டு உரிமை சொத்துக்கள் தேய்மானமடைகின்றன.

குத்தகைக் காலத்தின் முடிவில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் உரிமையானது நிறுவனத்திற்கு மாற்றப்பட்டால் அல்லது விலையானது கொள்வனவுத் தெரிவின் செயற்பாட்டைப் பிரதிபலிக்கிறது என்றால், சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளைப் பயன்படுத்தி தேய்மானம் கணக்கிடப்படுகிறது. பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

(b) குத்தகைப் பொறுப்புகள்

குத்தகையின் தொடக்கத் திதியில், குத்தகைக் காலத்தில் செய்யப்படும் குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பில் அளவிடப்படும் குத்தகை பொறுப்புகளை குழு அங்கீகரிக்கிறது. குத்தகைக் கொடுப்பனவானது நிலையான கொடுப்பனவுகள்,(பொருளில் நிலையான கொடுப்பனவுகள் உள்ளிட்ட), பெறத்தக்க குத்தகை ஊக்கத்தொகைகள், ஒரு குறியீட்டு அல்லது விகிதத்தைப் பொறுத்து மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் எஞ்சிய மதிப்பு உத்தரவாதங்களின் கீழ் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகைக் கொடுப்பனவுகளில், நிறுவனத்தால் நியாயமாகப் பயன்படுத்தப்படும் ஒரு கொள்வனவுத் தெரிவின் நடைமுறை விலை மற்றும் குத்தகைக் காலமானது நிறுவனம் நிறுத்துவதற்கான விருப்பத்தைப் பிரதிபலிக்கும் பட்சத்தில், குத்தகையை நிறுத்துவதற்கான அபராதங்களை செலுத்துகிறது.

விபரமான வெளிப்படத்தல்கள் குறிப்பு 8.6 இன் கீழ் தரப்பட்டுள்ளன.

1.4.16 நிகழ்சாத்தியப் பொறுப்புக்கள், வழக்காடல் மற்றும் பற்றுறுதிகள்

நிகழ்சாத்திய பொறுப்புக்கள் சாத்தியம் கொண்ட கடப்பாடுகள், அவற்றின் இருப்பை நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்கால கடப்பாடுகளால் மட்டுமே உறுதிசெய்யப்படுவதுடன் அங்கு பொருளாதார நன்மைகள் மாற்றப்படுவது சாத்தியமில்லை அல்லது அளவிடப்படமுடியாது. நிகழ்சாத்திய பொறுப்புக்கள் நிதிசார் நிலைமைகளின் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுவதில்லை, ஆயினும் அவை அரிதானவையாக இருந்தாலன்றி, நிதிசார் கூற்றில் வெளிப்படுத்தப்படும்.

1.5 இன்னும் நடைமுறைப்படுத்தப்படாத வெளியிடப்பட்ட கணக்கீட்டு தராதரங்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் பின்வரும; SLFRS வெளியிடப்பட்டு அவை எதிர்வரும் காலத்தில் ஒரு நடைமுறைத் திகதியைக் கொண்டிருப்பதுடன் இந்த நிதிசார் கூற்றுக்களை தயார் செய்வதில் பிரயோகிக்கப்படவில்லை. கூட்டுத்தாபனமானது இவை நடைமுறைக்கு வரும் போது இத் தராதரங்களை ஏற்றுக்கொள்ளும்.

விபரமான மீளாய்வின் பூர்த்திசெய்யப்படாமல் இருத்தல் இந் நிதிசார் கூற்றுக்களின் பிரசுரித்தல் திகதியன்று நிதிசார் தாக்கம் நியாயமான வகையில் கணிப்பிடத்தக்கதாக இல்லை. பின்வரும் தராதரங்கள், திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் குழுமத்தின் நிதிசார் கூற்றுக்கள் மீது ஒரு குறிப்பிடத்தக்கதான தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

SLFRS 17 – காப்புறுதி ஒப்பந்தங்கள்

இத் தராதரங்கள் ஜனவரி 01, 2023 அன்று அல்லது அதற்கு பிந்திய திகதியிலிருந்து ஆரம்பிக்கும் வருட காலங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

2. வருமானம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மில	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி
உள்நாட்டு விற்பனை	539,767.041	500,866.416	539,767.041	500,866.416
ஏற்றுமதி	47,452.519	30,406.336	47,452.520	30,406.336
Bunkering	6,613.489	-	6,613.489	-
முனையக்கட்டணங்கள் மற்றும் ஏனையவை	-	-	264.825	222.173
மொத்த விற்பனை	593,833.049	531,272.752	594,097.875	531,494.925
கழி: கலால் தீர்வை மற்றும் தே.க.வ.	(9,078.626)	(8,739.920)	(9,078.626)	(8,739.920)
நிகர வருமானம்	**584,754.423**	**522,532.832**	**585,019.248**	**522,755.005**

3. ஏனைய செயற்பாட்டு வருமானம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
முதலீட்டு சொத்து மீதான வருமானம்	42.461	41.898	42.461	41.898
ஊழியர் கடன் வட்டி	227.615	194.673	685.038	623.136
வாடகை வருமானம்	10.498	9.889	15.074	13.879
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் விற்பனை மீதான இலாபம்/ (நட்டம்)	3.489	1.707	3.420	1.274
நிரப்பு நிலைய உபகரண விற்பனை மீதான இலாபம்	20.906	21.350	20.906	21.350
பங்குலாப வருமானம்	-	240.122	-	0.122
பல்வகை வருமானம்	815.562	309.031	960.672	443.957
	1,120.531	**818.670**	**1,727.572**	**1,145.615**

4. தொழிற்பாட்டு இலாபம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி
பின்வரும் செலவினங்கள் அறவிடப்பட்ட பின்னர் தொழிற்பாட்டு இலாபங்கள் குறிப்பிடப்பட்டன				
பணிப்பாளர் ஊதியங்கள்	10.568	5.547	20.616	10.082
கணக்காய்வாளர் ஊதியம்	23.075	4.000	24.995	5.696
தேய்மானம் (குறிப்பு 8)	701.146	715.664	1,594.290	1,742.887
விளம்பரச் செலவு	17.779	18.800	17.779	18.800
சட்டக் கட்டணம் மற்றும் ஏனைய தொழிசார் கட்டணம்	125.688	188.193	125.688	188.193
அனுமதிக்கப்படாத பெறுமதி சேர் வரி (VAT)	1,191.975	1,141.755	1,191.975	1,141.755
பொதுத் திறைசேரிக்கான விசேட கட்டணம்	1,000.000	1,000.000	1,000.000	1,000.000

5. நிதிசார் வருமானம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் கோரிக்கை வைப்புக்கள் மீதான வட்டி வருமானம்	7,726.756	2,574.185	7,928.328	2,883.468
கடன் பட்டியல் மற்றும் நாட்பட்ட வர்த்தகக் கடன்கள் மீதான வட்டி வருமானம்	14.717	13.117	14.717	13.117
இ.மி.ச/IPP/விமான எரிபொருள் கடனாளிகள் மீதான வட்டி வருமானம்	10,584.379	6,285.950	10,584.379	6,285.950
திறைசேரி முறிகள் மீதான வட்டி வருமானம்	32.745	2,313.080	32.745	2,313.080
வ.வெ.நா (RFC) கணக்கு மற்றும் ஏனையவைகள் மீதான வட்டி வருமானம்	10.482	1.558	10.482	1.558
	18,369.081	**11,187.890**	**18,570.652**	**11,497.173**

6. நிதிசார் செலவுகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
நீண்ட காலக் கடன்கள் மீதான வட்டி	-	7.976	-	7.976
வெளிநாட்டு நாணய வங்கி கடன்கள் மீதான வட்டி	25,630.751	20,874.180	25,630.751	20,874.180
ஏனைய நிதிசார் செலவு	12.155	29.171	12.155	29.171
	25,642.906	**20,911.327**	**25,642.906**	**20,911.327**

7. வரிச் செலவுகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி
நடைமுறை வரி:				
நடைமுறை வருமான வரி	-	-	541.045	682.567
முன்னைய வருடங்களின் குறை/(மிகை) ஏற்பாடு	-	-	(2.831)	(36.441)
ஒத்திவைக்கப்பட்ட வரி:			-	
தற்காலிக வேறுபாடுகளின் ஆரம்ப மற்றும் மறுதிருப்பல் - வருமானம்	-	-	13.262	(489.365)
வருமான வரிச் செலவு – வருமானக் கூற்று	**-**	**-**	**551.476**	**156.761**
வருமான வரிச் செலவு – ஏனைய முழு வருமானம்	**(1.205)**	**(415.689)**	**101.660**	**(451.926)**
மொத்த வரிவருமான வரிச் செலவு	**(1.205)**	**(415.689)**	**653.137**	**(295.165)**

நடைமுறை வரி அறவீடு மற்றும் இலாபத்திற்கு முந்திய வரி என்பவற்றிற்கிடையிலான ஒரு இணக்கக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

வரிக்கு முந்திய கணக்கீட்டு இலாபம்/(நட்டம்)	**(82,225.782)**	**2,356.377**	**(80,564.785)**	**4,248.092**
சேர்: அனுமதிக்கவியலாச் செலவுகள்	41,230.429	36,235.962	42,900.116	38,288.516
கழி: அனுமதிக்கவியலும் செலவுகள் மற்றும் வருமானம் தவிர்த்து	(1,289.942)	(1,285.978)	(2,366.270)	(2,386.214)
சீராக்கிய வர்த்தக இலாபம்	**(42,285.295)**	**37,306.361**	**(40,030.939)**	**40,150.394**
கழி: வரி இழப்புக்களின் உபயோகித்தல்	-	(37,306.361)	-	(37,306.368)
Add: Tax losses for the year	42,285.295		42,285.295	
வரி விதிப்பு வருமானம்	**-**	**-**	**2,254.356**	**2,844.026**
அறவிடப்பட்ட வருமான வரி				
2020-24%(2019-28%)	-	-	541.045	682.567
முந்திய வருடங்களின் குறை/(மிகை) ஏற்பாடு	-	-	(2.831)	(36.441)
வருமானக்கூற்றுக்கு ஒத்திவைக்கப்பட்ட வரி அறவீடு	-	-	13.262	(489.365)
தற்காலிக வேறுபாடுகளின் ஆரம்பம் மற்றும் மறுதிருப்புதல் OCI	**(1.205)**	(415.689)	101.660	(451.926)
வருமான வரிச் செலவு	**(1.205)**	**(415.689)**	**653.137**	**(295.165)**

வரிவிதிப்பு வருடங்கள் 1997/98, 2002/03, 2013/14, 2014/2015 2014/2015, 2015/16 மற்றும் 2016/17 இற்கான மதிப்பீடுகள் ரூ.25 மதிப்பீடுகள் ரூ.918 மதிப்பீடுகள் ரூ.99.94 மில்லியன் ரூ. 723 மில்லியன் மற்றும் ரூ. 54.67 மில்லியனிற்கு மதிப்பீடுகள் ரூ.6735.94 முறையே விடுக்கப்பட்டுள்ளதுடன் இ.பெ.கூ அந்த மதிப்பீடுகளுக்கு எதிராக பயனுதியான மேன்முறையீடுகளை மேற்கொண்டுள்ளது. 1997/98 மற்றும் 2002/2003 ஆகிய மதிப்பீட்டு வருடங்களுக்கான வருமான வரிப் பொறுப்புக்களானவை நிதிக் கூற்றுக்களில் அடையாளங்காணப்பட்டுள்ளன.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2013/14 வருடத்திற்கான தீர்மானத்தை வழங்கியுள்ளதுடன் 2013/14 வருடத்திற்கான வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் மேன்முறையீடும் செய்யப்பட்டுள்ளது.

8. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - இ.பெ.கூ

	காணி மற்றும் கட்டிடங்கள் ரூ. மிலி	உடைமையாக்கிய ஆதனம் ரூ. மிலி	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் ரூ. மிலி	SPM வசதி ரூ. மிலி	மோட்டார் வாகனங்கள் ரூ. மிலி	தளபாடங்கள்/ இணைப்புக்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் ரூ. மிலி	மூலதன நடைமுறை வேலை ரூ. மிலி	மொத்தம் ரூ. மிலி
8.1.செலவீனம்								
01/01/2021 அன்றான நிலுவை	16,622.643	1.016	29,422.630	2,835.841	1,370.915	2,419.024	5,092.189	57,764.257
சேர்மதிகள் /மாற்றங்கள்	30.169	-	379.042	-	11.627	54.097	2,050.020	2,524.956
மாற்றங்கள்	-	-	43.334	-	-	(43.334)	-	-
மீள் மதிப்பீடு	-	-	-	-	-	-	-	-
அகற்றல்கள்	(5.025)	-	(42.471)	-	-	-	-	(47.496)
31/12/2021 அன்றான நிலுவை	**16,647.787**	**1.016**	**29,802.536**	**2,835.841**	**1,382.542**	**2,429.787**	**7,142.209**	**60,241.718**
8.2 தேய்மானம்								
01/01/2021 அன்றான நிலுவை	1,141.413	0.397	8,640.890	1,464.930	1,099.837	1,875.253	-	14,222.720
வருடத்திற்கான கட்டணம்	144.887	-	2,276.746	106.374	73.704	80.273	-	2,681.985
மாற்றங்கள்	-	-	(43.334)	-	-	43.334		-
அகற்றல்கள்	-	-	(42.471)	-	-	-	-	(42.471)
31/12/2021 அன்றான நிலுவை	1,286.300	0.397	10,831.831	1,571.304	1,173.541	1,998.860	-	16,862.234
31.12.2021 அன்றான புத்தகப் பெறுமதி(NBV)	**15,361.487**	**0.619**	**18,970.705**	**1,264.537**	**209.001**	**430.926**	**7,142.209**	**43,379.484**
31.12.2020 அன்றான கிரயம்	16,622.643	1.016	29,422.630	2,835.841	1,370.915	2,419.024	5,092.189	57,764.257
31.12.2020 அன்றான திரட்டிய தேய்மானம்	1,141.413	0.397	8,640.890	1,464.930	1,099.837	1,875.253	-	14,222.720
31.12.2020 அன்றான புத்தகப் பெறுமதி(NBV)	**15,481.230**	**0.619**	**20,781.740**	**1,370.911**	**271.078**	**543.771**	**5,092.189**	**43,541.537**

2021.12.31 ஆம் திகதியன்று முழுமையாகத் தேய்மானம் அடைந்த ஆதனம் பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் மொத்தத் தொகையானது ரூபா 2,779.186 மில்லியன் ஆகும். (2020- ரூபா 2,526.381 Mn).

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - குழுமம்

	காணி மற்றும் கட்டிடங்கள் ரூ. மிலி	உடைமையாக்கிய ஆதனம் ரூ. மிலி	பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் ரூ. மிலி	SPM வசதி ரூ. மிலி	மோட்டார் வாகனங்கள் ரூ. மிலி	தளபாடங்கள்/ இணைப்புக்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் ரூ. மிலி	மூலதன நடைமுறை வேலை ரூ. மிலி	மொத்தம் ரூ. மிலி
8.1.செலவீனம்								
01/01/2021 அன்றான நிலுவை	23,220.368	1.016	39,484.949	5,818.468	3,241.274	11,559.622	5,902.257	89,227.954
சேர்மதிகள் /மாற்றங்கள்	33.891	-	379.275	42.822	11.627	102.630	3,293.302	3,863.547
மாற்றங்கள்	-	-	43.334	-	-	(43.334)	-	-
மீள் மதிப்பீடு	-	-	-	-	-	-	-	-
அகற்றல்கள்	(5.025)	-	(42.471)	-	-	(0.184)	-	(47.680)
31/12/2021 அன்றான நிலுவை	**23,249.235**	**1.016**	**39,865.087**	**5,861.290**	**3,252.901**	**11,618.734**	**9,195.559**	**93,043.821**
8.2 தேய்மானம்								
01/01/2021 அன்றான ிலுவை	1,871.829	0.397	14,451.278	4,149.920	2,685.470	6,455.906	-	29,614.799
வருடத்திற்கான கட்டணம்	197.858	-	2,773.120	182.426	228.663	193.062	-	3,575.129
மாற்றங்கள்	-	-	(43.334)	-	-	43.334	-	-
அகற்றல்கள்	-	-	(42.471)	-	-	(0.115)	-	(42.586)
31/12/2021 அன்றான நிலுவை	2,069.687	0.397	17,138.593	4,332.346	2,914.133	6,692.187	-	33,147.341
31.12.2021 அன்றான புத்தகப் பெறுமதி(NBV)	**21,179.547**	**0.619**	**22,726.494**	**1,528.944**	**338.768**	**4,926.547**	**9,195.559**	**59,896.481**
31.12.2020 அன்றான ரயம்	23,220.368	1.016	39,484.949	5,818.468	3,241.274	11,559.622	5,902.257	89,227.954
31.12.2020 அன்றான திரட்டிய தேய்மானம்	1,871.829	0.397	14,451.278	4,149.920	2,685.470	6,455.906	-	29,614.799
31.12.2020 அன்றான றுமதி(NBV)	**21,348.539**	**0.619**	**25,033.671**	**1,668.548**	**555.804**	**5,103.716**	**5,902.257**	**59,613.156**

2021.12.31 ஆம் திகதியன்று முழுமையாகத் தேய்மானம் அடைந்த ஆதனம் பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் மொத்தத் தொகையானது ரூபா 10654.464 மில்லியன் ஆகும். (2020- ரூபா 10254.024 Mn).

8.3 முதலீட்டு ஆதனம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
கிரயம்				
வருட ஆரம்பத்திலான மிகுதி	76.518	75.118	76.518	75.118
சேர்:சேர்தல்கள்/ மாற்றல்கள்	-	1.400	-	1.400
வருட இறுதியிலான மிகுதி	76.518	76.518	76.518	76.518
தேய்மானம்				
வருட ஆரம்பத்திலான மிகுதி	22.815	20.939	22.815	20.939
சேர்: வருடத்திற்கான அறவிடல்	1.911	1.876	1.911	1.876
வருட இறுதியிலான மிகுதி	24.726	22.815	24.726	22.815
தேறிய புத்தகப் பெறுமதி	**51.792**	**53.703**	**51.792**	**53.703**

முதலீட்டு ஆதனங்கள் தேர்ஸ்டன் வீதி, பிளவர் வீதி என்பவற்றில் அமைந்துள்ள ஆதனங்கள் மற்றும் வாடகைக்கு கொடுத்துள்ள எரி-பொருள் நிரப்பு நிலையங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளன.

விபரணம்	நியாயப் பெறுமதி ரூ. மிலி
இல.80, பிளவர் வீதி, கொழும்பு 07 இல.22/1, தேர்ஸ்டன் வீதி , கொழும்பு 03	40.000
எரிபொருள் நிரப்பு நிலையங்கள்	35.510

முதலீட்டு ஆதனங்களின் நியாயப் பெறுமதி, விலைமதிப்பிடல் திணைக்களத்தினால் 2012 மற்றும் 2016 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட விலைமதிப்பிடல்களை அடிப்படையாகக் கொண்டது. திணைக்களத்தின் விலை மதிப்பீட்டாளர்கள் சுயாதீனமானவர்கள், கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபடவில்லை.

8.4 அருவச் சொத்துக்கள்

	இ.பெ.கூ	குழுமம்			
	ERP முறைமை ரூ.மிலி	ERP முறைமை ரூ.மிலி	SAP அனுமதி ரூ.மிலி	தன்னியக்கமயமாக்குதல் ரூ.மிலி	மொத்தம் ரூ.மிலி
கிரயம்/முன்கொணரற் பெறுமதி					
வருட ஆரம்பத்தில்	-	542.039	9.380	37.794	589.213
சேர்க்கைகள்/ மாற்றல்கள்	0.683	20.019	-	-	20.019
வருட இறுதியில்	**0.683**	**562.058**	**9.380**	**37.794**	**609.232**
கடன் தீர்த்தல்					
வருட ஆரம்பத்தில்	-	466.514	9.380	37.794	513.688
வருடத்திற்கான அறவிடல்	0.027	28.213	-	-	28.213
வருட இறுதியில்	0.027	494.727	9.380	37.794	541.901
கொணரற் பெறுமதி					
31.12.2021 அன்றானவாறு	**0.656**	**67.331**	**-**	**-**	**67.331**
31.12.2020 அன்றானவாறு	**-**	**75.525**	**-**	**-**	**75.525**

குறித்த வருடத்தில் குழுவானது ரூபா 3,883.566 மில்லியன் பெறுமதியான PPE தொகையை ஈட்டியதோடு இக் குழுவானது ரூபா 2,925.380 மில்லியனில் செலுத்தியது.

8.5 கடன்பெறல் செலவின் மூலதனமாக்கல்

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் புதிய நுழைவாயில் - E இல் இ.பெ.கூ இன் விமான எரிபொருள் மீள்நிரப்பல் முனையம் மற்றும் இருக்கும் எரிபொருள் குழாய்முனை முறைமை மற்றும் ஒரு எரிபொருள் குழாய்முனை முறைமையைப் பொருத்துதல் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் தரமுயர்த்துதலின் நிர்மாணப்பணிகளை குழுமம் ஜனவரி 2018 இல் ஆரம்பித்தது. இந்த செயற்திட்டம் இரண்டு வெளிமூல வசதிகளால் நிதியளிக்கப்படுகின்றன (15% மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட வர்த்தகக் கடன் மற்றும் மிகுதி 85% ஒப்பந்தக்காரரினால் சுயநிதியிடல் அடிப்படையிலானது).

2021 ஆம் ஆண்டின் போது மூலதனப்படத்தப்பட்ட கடன்பெறல் செலவுத் தொகை ரூ. 236.942 மில்லியனாகும் (2020- ரூ. 208.042 மில்லியன்). கடன்பெறல் செலவின் மூலதனப்படுத்தலைத் தீர்மானிப்பதற்கான வீதம் 4.20%ஆகும்.

8.6 குத்தகைச் சொத்துக்கள்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இலங்கை புகையிரதத் திணைக்களம், மஹவலி அதிகார சபை, மாநகர சபை ஆகிய அரச நிறுவனங்களிடமிருந்து காணிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது மற்றும் தற்பொழுது உரிய தரப்புடனான பேச்சுவார்த்தைகளின் படி குத்தகைக் கட்டணங்களையும் செலுத்துகின்றது. முறையான குத்தகை ஏற்பாடுகளைக் கைச்சாத்திட உரிய தரப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டிற்கான குத்தகை வாடகை ரூ. 44.19 மில்லியனாகும்(2020- ரூ. 24.16 மில்லியன்) மற்றும் குறித்த வருடத்தில் நிலுவையில் உள்ள தொகை உள்ளிட்ட வாடகையாக் செலுத்தியது.

9. துணை நிறுவனத்தில் முதலீடு

	இ.பெ.கூ				குழுமம்	
	2021 வைத்திருப்பு %	2020 வைத்திருப்பு %	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள்	66.67%	66.67%	5,000.000	5,000.000	-	-
			5,000.000	**5,000.000**	**-**	**-**

9.1. துணை நிறுவனத்தின் நிதித் தகவல்களின் சாராம்சம்

Statement of Financial Position	2021 Rs. Mn	2020 Restated Rs. Mn
நடைமுறையல்லாத சொத்துக்கள்	18,144.516	17,781.376
நடைமுறைச் சொத்துக்கள்	15,895.529	14,795.412
மொத்த சொத்துக்கள்	**34,040.045**	**32,576.788**
மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்	28,689.602	27,255.530
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	3,219.135	3,612.193
நடைமுறைப் பொறுப்புக்கள்	2,131.308	1,709.065
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்பு	**34,040.045**	**32,576.788**
நிதி நிலைக் கூற்றுக்கள்	**2021 ரூ.மில்லி**	**2020 மீள்குறிப்பிட்டது ரூ.மில்லி**
வருவாய்	14,276.189	13,567.876
செலவுகள்	(13,431.360)	(12,312.241)
ஏனைய வருமானம்	814.978	882.601
வரிக்கு முந்தைய இலாபம்	1,659.807	2,138.236
வருமான வரிச் செலவுகள்	(551.476)	(156.761)
வருடத்திற்கான இலாபம்	1,108.331	1,981.475
ஏனைய முழுமையான வருமானம்	325.740	(114.752)
வருடத்திற்கான ஒட்டமொத்த வருமானம்	1,434.071	1,866.723
கட்டுப்படுத்தப்படாத வட்டிக்காகச் செலுத்தப்பட்ட பங்கிலாபம்	-	120.000

10. நடைமுறையிலில்லா நிதிசார் சொத்துக்கள்

	குறிப்பு	இ.பெ.கூ		குழுமம்	
		2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள்	10.1	12.500	12.500	12.500	12.500
விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள்	10.2	0.540	0.540	0.540	0.540
உரிமையாண்மையிலா முதலீடுகள்	10.3	231.012	226.942	231.012	226.942
		244.052	**239.981**	**244.052**	**239.981**

10.1. விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
வரையறுக்கப்பட்ட லங்கா சீமெந்து				
ஒவ்வொன்றும் ரூ.10/= முழுமையாகக் கொடுப்பனவு செய்த 5,000,000 சாதாரண பங்குகள்	12.500	12.500	12.500	12.500
நியாயப் பெறுமதி மாற்றங்களுக்கான சீராக்கல்	-		-	-
	12.500	**12.500**	**12.500**	**12.500**

10.2. விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
வரையறக்கப்பட்ட இலங்கை அசோசியேட்ஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனம்				
ஒவ்வொன்றும் ரூ.10/= மதிப்பான 61,206 சாதாரணப் பங்குகள்	0.539	0.539	0.539	0.539
வரையறுக்கப்பட்ட லங்கா லேலாண்ட் நிறுவனம்				
ஒவ்வொன்றும் ரூ.10/= மதிப்பான 100 சாதாரணப் பங்குகள்	0.001	0.001	0.001	0.001
சர்வதேச கூட்டுறவு பெற்றோலிய சங்கம்				
ஒவ்வொன்றும் US$100/= பெறுமதியான 5,499 பங்குகள்				
ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் கூட்டிணைக்கப்பட்டது.	5.086	5.086	5.086	5.086
கழி: சேத இழப்புக்கான ஏற்பாடு	(5.086)	(5.086)	(5.086)	(5.086)
	0.540	**0.540**	**0.540**	**0.540**

OCI ஊடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடாத முதலீடுகள் நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டன, முதலீடுகள் கிரய விலையில் முன்கொணரப்பட்டன.

அறிக்கைத் திகதியில் கடன் இடரேது நிலைக்கான அதிகபட்ச வெளிப்படுத்தல் OCI மூலமாக நியாயப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட ஒப்புரவு பங்குகளின் முன்கொணரற் பெறுமதியாகும்.

ஒரு சேத இழப்பு ஏற்பாடளிக்கப்பட்ட, சர்வதேச பெற்றோலிய கூட்டுறவுச் சங்கம் (International Cooperative Petroleum Association) தவிர்ந்த விலைக்குறிப்பிடா உரிமையாண்மைப் பங்கு முதலீடுகள் எவையும் நாட்கடந்தவையோ அல்லது சேத இழப்புக் கொண்டவையோ அல்ல.

10.3.விலைக்கூறிடா முதலீடுகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
திறைசேரி முறிகளிலான முதலீடுகள்	231.012	226.942	231.012	226.942
	231.012	**226.942**	**231.012**	**226.942**

11. வர்த்தக மற்றும் ஏனைய வருமதி

	இ.பெ.கூ			
	2021		2020 மீள்குறிப்பிட்டது	
	நடைமுறை ரூ.மிலி	நடைமுறையல்லாதது ரூ.மிலி	நடைமுறை ரூ.மிலி	நடைமுறையல்லாதது ரூ.மிலி
வர்த்தக வருமதிகள்	161,022.727	-	140,767.094	287.599
வருமதிகள்-உள்நாட்டு இறைவரி மற்றும் சுங்கத் திணைக்களம்	168.338	-	1,741.578	-
ஏனைய வருமதிகள்	11,200.806	2,250.607	7,567.401	3,250.607
வைப்புக்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள்	535.273	940.443	367.422	51.534
முற்பணம்	7,168.360	-	1,437.156	-
ஊழியர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள்	40.269	4,273.486	50.086	3,929.778
மொத்தம்	**180,135.773**	**7,464.536**	**151,930.737**	**7,519.518**

டிசம்பர் 31 அன்றானவாறு, வர்த்தக வருமதிகளின் வயது முதிர்ச்சியடிப்படையிலான பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது,

	இ.பெ.கூ	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
30 நாட்களுக்கு குறைவானவை	23,802.202	15,267.481
30-90 நாட்கள்	10,269.046	8,262.726
91-180 நாட்கள்	11,103.936	11,543.035
181-365 நாட்கள்	26,407.638	26,401.446
365 நாட்களுக்கு மேற்பட்டவை	89,496.942	79,629.784
மொத்தம்	**161,079.764**	**141,104.471**
சேத இழப்புக்கான ஏற்பாடளித்தல்	(57.037)	(49.778)
	161,022.727	**141,054.693**

வர்த்தக வருமதிகளின் சேத இழப்புக்கான ஏற்பாடளித்தல்களிலான நகர்தல் பின்வருமாறு:

	இ.பெ.கூ	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
ஜனவரி 1, இலானவாறான மிகுதி	49.778	49.405
கழி: வசூலித்த தொகை	(0.396)	(0.998)
கழி: பதிவழிக்கப்பட்ட தொகை	-	(9.123)
சேர்: வருடத்திற்கான ஏற்பாடளித்தல்	7.655	10.494
டிசம்பர் 31, இலானவாறான மிகுதி	**57.037**	**49.778**

	குழுமம்			
	2021		2020 மீள்குறிப்பிட்டது	
	நடைமுறை ரூ.மிலி	நடைமுறை-யல்லாதது ரூ.மிலி	நடைமுறை ரூ.மிலி	நடைமுறை-யல்லாதது ரூ.மிலி
வர்த்தக வருமதிகள்	162,829.243	-	143,424.984	287.599
வருமதிகள்-உள்நாட்டு இறைவரி மற்றும் சுங்கத் திணைக்களம்	168.338		1,741.578	-
ஏனைய வருமதிகள்	11,281.846	2,250.607	7,000.561	3,250.607
வைப்புக்கள் மற்றும் முன்கொடுப்பனவுகள்	2,225.901	940.443	1,445.086	51.534
முற்பணம்	7,168.360	-	1,451.734	-
ஊழியர்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள்	1,797.648	5,834.330	1,549.324	5,564.010
	185,471.336	**9,025.380**	**156,613.267**	**9,153.749**

வர்த்தக வருமதிகளின் முன்கொணர்ந்த பெறுமதிகள் பின்வரும் நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி
இலங்கை ரூபாய்கள்	97,704.952	87,959.967	99,511.468	90,617.857
அமெரிக்க டொலர்கள்	63,317.775	53,094.726	63,317.775	53,094.726
	161,022.727	**141,054.693**	**162,829.243**	**143,712.583**

11.1 மண்ணெண்ணெய் மானியம்

கழகம் மண்ணெண்ணையை அரசு முடிவு விலைக்கு விற்கிறது, மேலும் மண்ணெண்ணெய் விலை குறைப்பினால் ஏற்பட்ட நஷ்டத்தை பொது கருவூல செயலாளரால் வழங்கப்பட்ட கடிதங்கள் மூலம் ஈடுகட்ட அரசு ஒப்புக்கொண்டுள்ளது. மானியத் தொகையை திருப்பித் தருமாறு மாநகராட்சி கோரிக்கை விடுத்தாலும், அரசு ரூ. 2015 ஆம் ஆண்டிற்கான 4,459.28. மண்ணெண்ணெய் மானிய உறுப்புக்கான பொது கருவூலத்துடன் மாநகராட்சி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. 44,103 மில்லியன் மற்றும் ரூ. 5,097.72 மில்லியன் நிதிநிலை அறிக்கைகளில் 2017 வரை அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் பொது கருவூலத்திலிருந்து ரசீது/உறுதிப்படுத்தப்படும் வரை நிதிநிலை அறிக்கைகளில் இருப்பு அங்கீகரிக்கப்படவில்லை. ஆண்டுக்கான மண்ணெண்ணெய் மானியம் ரூ. 8,974 மில்லியன்

12 நிதிசார் சாதனைகள்

வகை ரீதியான அடிப்படையில் நிதிசார் சொத்துக்கள்	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி
கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் சொத்துக்கள்				
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்	187,431.971	157,708.677	194,328.378	164,025.438
திறைசேரி முறிகளிலான முதலீடுகள்	231.012	314.532	231.012	314.532
வங்கிகளில் இடப்பட்டுள்ளவை	-	5.000	-	5.000
வங்கியிலுள்ள காசுக் கையிருப்பு	141,607.205	64,563.572	143,772.001	68,005.593
OCI ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிசார் சொத்துக்கள்				
விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள்	0.540	0.540	0.540	0.540
விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள்	12.500	12.500	12.500	12.500
மொத்தம்	**329,283.228**	**222,604.820**	**338,344.431**	**232,363.602**

வகை ரீதியில் நிதிசார் பொறுப்புகள்	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 மீள்குறிப்பிட்டது ரூ.மிலி
கடன்தீர்ப்புக் கிரயத்தில் நிதிசார் பொறுப்புக்கள்				
கடன்பெறல்கள்	516,162.326	395,816.472	516,162.326	395,816.471
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	244,225.382	185,897.892	238,688.293	181,587.532
மொத்தம்	**760,387.708**	**581,714.365**	**754,850.619**	**577,404.003**

12.1. நிதிசார் சாதனங்களின் நியாயப் பெறுமதி

நிதிசார் கூற்றுக்களில் நிதிசார் சாதனங்களாக வகைப்படுத்தப்பட்ட குழுமத்தின் நிதிசார் சாதனங்களின் முன்கொணர்ந்த பெறுமதி மற்றும் நியாயப் பெறுமதிகளின் தன்மை அடிப்படையிலான ஓர் ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

டிசம்பர் 31, அன்றானவாறு	Note	முன்கொணர்ந்த பெறுமதி		நியாயப் பெறுமதி	
		2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
நிதிசார் சொத்துக்கள்					
நடைமுறையிலில்லா நிதிசார் சொத்துக்கள்					
விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதல்-டுகள்	12.1.1	12.500	12.500	12.500	12.500
விலைக்கூறிடா உரிமையாண்மை முதல்-டுகள்	12.1.2	0.540	0.540	0.540	0.540
நிலையான வைப்புகளிலான முதலீடுகள்	12.1.1	231.012	226.942	231.012	226.942
திறைசேரி முறிகளிலான முதலீடுகள்	12.1.4	187,489.183	157,758.629	187,431.971	157,708.677
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்					
குறுகிய கால முதலீடுகள்	12.1.3	-	5.000	-	5.000
வங்கி வைப்புக்கள்	12.1.1	-	87.590	-	87.590
அரசாங்க முறிகள்	12.1.4	141,607.205	64,563.572	141,607.205	64,563.572
காசும் காசுச் சமானங்களும்		**329,340.440**	**222,654.773**	**329,283.228**	**222,604.820**
மொத்தம்					
நிதிசார் பொறுப்புக்கள்					
கடன்கள் மற்றும் கடன்பெறல்கள்	12.1.3	5,893.393	5,066.324	5,893.393	5,066.324
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	12.1.4	244,225.382	185,897.892	244,225.382	185,897.892
குறுகிய கால கடன்பெறல்கள்	12.1.4	510,268.933	390,750.148	510,268.933	390,750.148
		760,387.708	**581,714.364**	**760,387.708**	**581,714.364**

12.2.நியாயப் பெறுமதியைத் தீர்மானித்தல் மதிப்பிடுதல் மாதிரி

வெளிவாரியாக விலைகள் குறிப்பிடுதல் அல்லது மாதிரிகளுக்கு அவதானிக்கக்கூடிய விலை உள்ளிடுதல்கள் என்பவற்றைக் குறித்துரைப்பதன் மூலம் நியாயப் பெறுமதிகள் தீர்மானிக்கப்படும் அனைத்து நிதிசார் சாதனங்களுக்காக, சுயாதீனமான விலைத் தீர்மானித்தல் அல்லது விலை மதிப்பிடல் பெறப்படுகின்றது. ஒரு வினைத்திறனான சந்தையில், ஒரு விற்பனை செய்யப்பட்ட விலையின் நேரடி அவதானித்தல் சாத்தியமல்லாததாக இருக்கலாம். இந்த சந்தர்ப்பங்களில், மாற்றுச் சந்தை பற்றிய தகவல்களையும் மற்றும் மிகவும் பொருத்தமானதும் மற்றும் நம்பக்கூடியதுமாக கருதப்படக்கூடிய தகவல்களுக்கு கூடுதல் முக்கியத்துவத்துடன், நிதிசார் சாதனத்தின் நியாயப் பெறுமதியை செல்லுபடியாக்குவதற்கு தள்ளுபடி செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல்களை குழுமம் பாவிக்கின்றது.

12.2.1 விலை குறிக்கப்பட்ட உரிமையாண்மை மற்றும் திறைசேரி முறிகளிலுள்ள முதலீடுகளின் நியாயப் பெறுமதி, அறிக்கைத் திகதியில் சந்தையில் குறிப்பிடப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டவை.

12.2.2 கிரயப் பெறுமதியை முன்கொணரும் விலை குறிப்பிடப்படாத உரிமையாண்மை முதலீடுகள் முதலீட்டின் பொருண்மையைக் கவனத்தில் கொண்டு இதன் நியாயப் பெறுமதியை சமன் செய்வதற்கு அனுமானிக்கப்படுகிறது.

12.2.3 வைப்புக்களிலுள்ள முதலீடுகள் மற்றும் கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் வட்டி வீதங்கள், வங்கியின் நம்பகத்தன்மை, மற்றும் சாதனத்தின் இடரேதுநிலைத் தன்மைகள் போன்ற வரம்பெல்லைகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. டிசம்பர் 31, 2021 அன்று, வைப்புக்கள், கடன்கள் மற்றும் கடன்பெறுதல்கள் என்பவற்றின் முன்கொணரற் பெறுமதிகள் அவற்றின் நியாயப் பெறுமதிகளிலிருந்து பெரிதும் வேறுபடவில்லை.

12.2.4 காசு மற்றும் காசுச் சமானங்கள், வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் குறுகிய கால கடன்பெறுதல்கள் என்பன இந்தச் சாதனங்களின் குறுகிய கால முதிர்ச்சி காரணமாக அண்ணளவாக அவற்றின் முன்கொணரற் பெறுமதியையே பெரிதும் கொண்டுள்ளன.

12.3 நியாயப் பெறுமதிப் படிநிலையொழுங்கு

விலைமதிப்பிடல் தொழில்நுட்பங்கள் மூலமாக நிதிசார் சாதனங்களின் நியாயப் பெறுமதியை தீர்மானித்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்காக குழுமம் பின்வரும் படிநிலையொழுங்கை உபயோகிக்கிறது:

மட்டம் 1: ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புகளுக்காக வினைத்திறனான சந்தைகளில் குறிப்பிடப்பட்ட விலைகள் (சரிசெய்வதற்கு முடியாதது)

மட்டம் 2: நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பதிவு செய்யப்பட்ட அவதானிக்கப்படக்கூடிய நியாயப் பெறுமதி மீது ஒரு கணிசமான தாக்கத்தைக் கொண்ட அனைத்து உள்ளிடுதல்களுக்கான ஏனைய தொழில்நுட்பங்கள்

மட்டம் 3: அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிராத பதிவு செய்யப்பட்ட நியாயப் பெறுமதி மீது ஒரு கணிசமான தாக்கத்தைக் கொண்ட உள்ளிடுதல்களை உபயோகிக்கும் தொழில்நுட்பங்கள்.

பின்வரும் அட்டவணையானது நியாயப் பெறுமதி படிநிலையைக் கொண்டு நியாயப்பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட நிதிசார் சாதனங்களினுடைய பகுப்பாய்வைக் காண்பிக்கின்றது.

	இ.பெ.கூ - 2021			
	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி
	மட்டம் 1	மட்டம் 2	மட்டம் 3	மொத்தம்
OCI ஊடாக நியாயப் பெறுமதியில் நிதிசார் சொத்துக்கள்				
விலைக்கூறிட்ட உரிமையாண்மை முதலீடுகள்	12.500	-	-	12.500
விலைக்கூறிடா உரிமையாண்மை முதலீடுகள்	-	-	0.540	0.540
	12.500	-	0.540	13.040

13. கையிருப்புகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
கச்சா எண்ணெய்	8,883.409	11,346.036	8,883.409	11,346.036
ஏனைய மூலப்பொருட்கள்	1,125.992	580.440	1,125.992	580.440
முடிவு உற்பத்திகள்	27,919.023	37,374.897	27,963.889	37,405.335
இடைநிலை உற்பத்திகள்	1,120.112	436.767	1,120.112	436.767
ஏனைய பொருட்கள் மற்றும் வழங்கல்கள்	3,228.329	3,130.932	3,921.423	3,815.683
கழி: மெதுவாக நகரும் உருப்படிகளுக்கான ஏற்பாடளித்தல்	(361.232)	(361.232)	(377.982)	(377.352)
	41,915.633	**52,507.840**	**42,636.842**	**53,206.909**

14. குறுகிய கால முதலீடுகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
வங்கி வைப்புக்கள்	-	5.000	-	5.000
திறைசேரி முறிகளிலான முதலீடு	-	87.590	-	87.590
	-	**92.590**	-	**92.590**

15. காசும் காசுச் சமானங்களும்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
காசும் காசுச் சமானங்களின் பகுதிகள்				
வங்கியிலுள்ள காசு	141,607.205	64,563.572	143,772.001	68,005.593

31.12.2021 இன் வங்கி வைப்புத் தொகை ரூ. பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வங்கிகள் வழங்கிய கடன் கடிதத்திற்கு எதிராக 52,143 மில்லியன் ரூபாய்கள் மார்ஜினாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசுச் சமானங்களும் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
காசும் காசுச் சமானங்களும்	141,607.205	64,563.572	143,772.001	68,005.593
வங்கி மேலதிகப் பற்றுக்கள் (குறிப்பு 22)	(537.991)	(787.658)	(537.991)	(787.658)
	141,069.214	**63,775.914**	**143,234.010**	**67,217.935**
சேர்/கழி: வெளிநாட்டு நாணய மாற்றத்திற்கான சீர்படுத்தல்	(1,006.847)	(4,683.729)	(1,006.847)	(4,683.729)
	140,062.366	59,092.185	142,227.163	62,534.206

16. பங்களப்பு மூலதனம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
டிசம்பர் 31, அன்றானவாறு மிகுதி	**28,487.125**	**28,487.125**	**28,487.125**	**28,487.125**

அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படவில்லை.

17. ஒதுக்கம்

17.1. மூலதன ஒதுக்கம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
டிசம்பர் 31, அன்றானவாறு மிகுதி	**4,992.686**	**4,992.686**	**4,992.686**	**4,992.686**

2003இல், CPSTL இன் சொத்துக்களின் மாற்றல்கள் புத்தகப் பெறுமதியில் மேற்கொள்ளப்பட்டன. பின்னதாக, அதன் தனியார்மயப்படுத்தல் செய்முறையின் போது மேற்குறிப்பிட்ட பரிவர்த்தனை நடவடிக்கையை இணங்கிக் கொண்ட பெறுமதிகளின் அடிப்படையில் பதிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் தாக்கம் மூலதன ஒதுக்கத்தின் கீழ் சீராக்கல் செய்யப்பட்டது.

17.2. மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி
ஜனவரி 1, அன்றானவாறு மிகுதி	28,068.124	10,392.218	28,068.124	10,392.218
Disposals	(5.023)	-	(5.023)	-
மீள்மதிப்பீட்டிலிருந்தான மிகை (குறிப்பு 8)	-	17,675.906	-	17,675.906
டிசம்பர் 31, அன்றானவாறு மிகுதி	28,063.101	28,068.124	28,063.101	28,068.124

மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் காணியின் நியாயப் பெறுமதியிலான அதிகரிப்பு மற்றும் முன்னம் உரிமையாண்மையில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீதான ஒரு அதிகரிப்புக்கு தொடர்புபட்ட வகையிலான குறைதல்களின் அளவுக்கான குறைதல்களை பதிவதற்கு உபயோகிக்கப்படுகிறது.

18. ஓய்வுபெறல் நன்மைக் கடப்பாடு

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி
ஜனவரி 1, அன்றானவாறு மிகுதி	1,692.410	1,676.122	3,708.054	3,382.221
கழி: காலத்தின் போது விலகியவர்களுக்காக கொடுக்கப்பட வேண்டியது	(8.808)	(6.615)	(8.808)	(6.615)
-வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	(190.171)	(137.855)	(410.643)	(269.182)
	1,493.431	1,531.653	3,288.603	3,106.423
சேர்: தற்போதைய சேவைக் கிரயம்	101.874	93.558	183.381	272.187
-வட்டிக் கிரயம்	167.549	166.772	328.800	278.028
-காப்பீட்டுக் கணித்தல்(இலாபம்)/ நட்டம்	88.929	(99.573)	(339.677)	51.415
	1,851.783	1,692.410	3,461.107	3,708.053
சேர்: சீனன் குடா /LLL/NYLON/CPSTL ஊழியர்கள் நன்மை	10.025	10.025	10.025	10.025
டிசம்பர் 31, அன்றானவாறு மிகுதி	**1,861.808**	**1,702.435**	**3,471.132**	**3,718.078**
இளைப்பாறல் நன்மைக் கடப்பாடு தொடர்பான செலவுகள்				
வருமானக்கூற்று				
தற்போதைய சேவைக் கிரயம்	101.874	93.558	183.381	272.187
வட்டிக் கிரயம்	167.549	166.772	328.800	278.028
	269.422	**260.331**	**512.181**	**550.214**
ஏனைய முழு வருமானம்				
காப்பீட்டுக் கணித்தல் (இலாபம்)/ நட்டம்	88.929	(99.573)	(339.677)	51.416
	88.929	**(99.573)**	**(339.677)**	**51.416**

LKAS 19 –ஊழியர் நன்மைகள் என்பதனால் பரிந்துரைக்கப்பட்டவாறு 'உத்தேசிக்கப்பட்ட அலகுக் கடன் முறைமையை' உபயோகித்து காப்பீட்டு கணிப்பிடலில் பட்டயக் கணிப்பீடு மற்றும் தொழிசார் தகைமை கொண்ட ஒரு நிறுவனமான, தயானந்த சமரவிக்ரம & கோ. இனால் டிசம்பர் 31, 2021 அன்றானவாறாக இளைப்பாறுதல் நன்மைக் கடப்பாட்டின் காப்பீட்டுக் கணித்தல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

காப்பீட்டுக் கணித்தலில் உபயோகிக்கப்பட்ட முதன்மைக் கருதுகோள் பின்வருமாறு:

	2021	2020
எதிர்பார்க்கப்பட்ட சம்பள அதிகரிப்பு	3 வருடங்களுக்கு ஒருமுறை 25%	3 வருடங்களுக்கு ஒருமுறை 30%
எதிர்பார்க்கப்பட்ட ஊழியர் புரள்வு	5.00%	3.90%
வட்டி/ தள்ளுபடி வீதம்	11.00%	9.9%
இளைப்பாறல் வயது	60 years	60 years
ஊழியர்களின் எண்ணிக்கை	2,303	2,334
இறப்பு விகிதம்	A 67/70 Mortality Table	A 67/70 Mortality Table

2022 ஆம் ஆண்டு முதல் அரசு ஓய்வூதிய வயதை உயர்த்தியுள்ளதால், 2022 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளில், கழகத்தின் ஊழியர் ஓய்வுபெறும் வயது மாற்றத்தை அமல்படுத்தியவுடன், ஓய்வுபெறும் வயது மாற்றத்தின் தாக்கம் சரிசெய்யப்படும்.

18.1 பயன்படுத்தப்பட்ட நடைமுறை அனுமானங்களின் உணர்திறன்

டிசம்பர் 31, 2021 அன்றானவாறு இளைப்பாறல் நன்மைக் கடப்பாட்டில் ஏனைய அனைத்து மாறிகளும் நிலையானவையாக வைத்திருக்கப்படுகையில் பிரயோகிக்கப்பட்ட முக்கியமான கருதுகோள்களில் ஏற்படும் ஒரு சாத்தியமான மாற்றத்திற்கான கூருணர்வை பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது. தள்ளுபடி வீதம் மற்றும் இலாபம் அல்லது நட்டம் மீது சம்பள அதிகரிப்பு மற்றும் வருடத்திற்கான இளைப்பாறல் நன்மைக் கடப்பாடு ஆகியவற்றில் அனுமானிக்கப்பட்ட மாற்றங்களின் தாக்கமே நிதிசார் நிலைமை மற்றும் முழு வருமானத்திற்கான கூற்றுக்களின் கூருணர்வுத்தன்மையாகும்.

	இ.பெ.கூ		
கருதுகோல்	அனுமானத்திலான மாற்றம்	வருமானக் கூற்று மீதான கூருணர்வுத் தாக்கம்	இளைப்பாறல் நன்மை மீதான கூருணர்வுத் தாக்கம்
		2021 ரூ.மிலி	2021 ரூ.மிலி
தள்ளுபடி வீதம் @9.9%	I1% புள்ளியால் அதிகரிக்கப்பட்டது	104.321	(104.321)
	1% புள்ளியால் குறைக்கப்பட்டது	(116.451)	116.451
சம்பள உயர்வு	I1% புள்ளியால் அதிகரிக்கப்பட்டது	(160.119)	160.119
	1% புள்ளியால் குறைக்கப்பட்டது	140.535	(140.535)

19. ஒத்திவைக்கப்பட்ட வரி - இ.பெ.கூ

CPC ரூ. 298,103 மில்லியன் (2020 ரூ.255,193 மில்லியன்) எதிர்கால வரி லாபத்திற்கு எதிராக செட்-ஆ:ப் கிடைக்கும். இந்த இழப்புகளில் கணக்கிடப்படாத ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் ரூ. 71,545 மில்லியன் (2020 ரூ. 61,246 மில்லியன்).

சொத்துக்களை பெறுவதன் மூலம் கிடைக்கும் ஆதாயங்கள் தனித்தனியாக வரிக்கு உட்படுத்தப்படுவதால், நிலங்களை உணர்ந்து கொள்வதில் ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

19.1. ஒத்திவைக்கப்பட்ட வரி - இ.பெ.கூ

	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
தவணை ஆரம்பத்தின் போதான மீதி	2,494.132	2,909.821
தற்காலிக வேறுபாட்டின் தோற்றம் மற்றும் மாற்றியமைத்தல் - வருமானக் கூற்று	-	-
- ஏனைய முழுமையான வருமானம்	(1.205)	(415.689)
தவணை இறுதியின் போதான மீதி	**2,492.927**	**2,494.132**
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	-	-
ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	2,492.927	2,494.132
நிகர ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	**2,492.927**	**2,494.132**

19.2 அடையாளங் காணப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

	2021 ரூ.மில்லி		2020 ரூ.மில்லி	
	தற்காலிக வேறுபாடு	ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு/ (சொத்து)	தற்காலிக வேறுபாடு	ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு/ (சொத்து)
ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு				
குாணி	(1.205)	2,492.927	(415.689)	2,494.132
	(1.205)	**2,492.927**	**(415.689)**	**2,494.132**

ஒத்திவைக்கப்பட்ட வரியானது பயனுள்ள வரி விகிதமான @ 24% ஐப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது. ஒற்றை வரி விகிதங்கள் வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் வெவ்வேறு நிலைகளைப் பயன்படுத்துகின்றன, இதன் விளைவாக ரூ. 31 டிசம்பர் 2021 நிலவரப்படி ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பில் 1.205 மில்லியன் குறைவு.

19.1. ஒத்திவைக்கப்பட்ட வரி – குழு

	2021 ரூ.மில்லி	2020 ரூ.மில்லி
தவணை ஆரம்பத்தின் போதான மீதி	4,090.682	4,995.736
தற்காலிக வேறுபாட்டின் தோற்றம் மற்றும் மாற்றியமைத்தல் - வருமானக் கூற்று	(89.604)	(453.128)
- ஏனைய முழுமையான வருமானம்	101.660	(451.927)
தவணை இறுதியின் போதான மீதி	**4,102.738**	**4,090.682**
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	(400.202)	(489.494)
ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	4,502.940	4,580.175
நிகர ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	**4,102.738**	**4,090.682**

19.2 அடையாளங் காணப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

	2021 ரூ.மில்லி		2020 ரூ.மில்லி	
	தற்காலிக வேறுபாடு	ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு/ (சொத்து)	தற்காலிக வேறுபாடு	ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு/ (சொத்து)
ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு				
ஆதனம், பொறி, உபகரணங்கள் மற்றும் அருவச் சாத்துக்கள்	(79.614)	2,010.013	(484.298)	2,086.043
காணி	2.380	2,492.927	(415.689)	2,494.132
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்				
கையிருப்புக்கள்	(0.151)	(4.020)	0.729	(3.869)
ஏற்பாடுகள்	(8.073)	(9.944)	0.251	(1.871)
தொழிலாளர் நலத் திட்டம்	97.516	(386.239)	30.190	(483.755)
வுரி இழப்பு	-	-		-
	12.058	**4,102.738**	**(868.817)**	**4,090.682**

ஒத்திவைக்கப்பட்ட வரியானது பயனுள்ள வரி விகிதமான @ 24% ஐப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டது. ஒற்றை வரி விகிதங்கள் வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் வெவ்வேறு நிலைகளைப் பயன்படுத்துகின்றன, இதன் விளைவாக ரூ. 31 டிசம்பர் 2021 இல் ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பில் 12.057 மில்லியன் அதிகரிப்பு.

20. கடன்களும் கடன்பெறல்களும்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
மக்கள் வங்கி	1,332.942	1,402.518	1,332.942	1,402.518
சுய நிதி வசதி (CNCEC-14)-BIA திட்டம்	3,940.093	3,374.409	3,940.093	3,374.409
	5,273.035	**4,776.927**	**5,273.035**	**4,776.927**

20.1 கடன்கள் மற்றும் கடன்பெறுதல்களின் தற்போதைய பகுதி

திறைசேரி (ஆ.அ.வ.) கடன்	-	37.980	-	37.980
மக்கள் வங்கி - BIA திட்டம்	156.817	73.817	156.817	73.817
சுய நிதி வசதி (CNCEC-14)-BIA திட்டம்	463.541	177.600	463.541	177.601
	620.358	**289.397**	**620.358**	**289.397**

1. இ.பெ.கூ சார்பாக மக்கள் வங்கிக்கு வழங்கப்பட்ட US$7.725 மில்லியனிற்கான ஒரு திறைசேரி உத்தரவாதத்தினால் மக்கள் வங்கிக் கடன் உத்தரவாதமளிக்கப்பட்டது.

2. MS China National Chemical Engineering No.14 Construction Co.Ltd (CNCEC) உடன் இணைந்த செயற்திட்ட கட்டுமானத்திலிருந்து BIA செயற்திட்டத்திற்காக சுய நிதி கடன் வசதி பெறப்பட்டதுடன் இ.பெ.கூ சார்பாக CNCEC க்கு வழங்கப்பட்ட US$43.775 மில்லியனிற்கான ஒரு பணிநீக்க உத்தரவாதத்தினால் இக் கடனானது உத்தரவாதமளிக்கப்பட்டது. இக் கடனுடாக எவ்வித காசுப்பாய்ச்சல்களும் இல்லை அத்துடன் செயற்திட்ட கடன் தொகையானது கடன் வசதி ஒப்பந்தத்திற்கு அமைவான சேவை முன்னேற்றத்தின் அடிப்படையில் நிதிசார் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டது.

20.2. டிசம்பர் 31 இலிருந்து 5 வருடங்களினுள் மீள்செலுத்தவேண்டிய கடன்கள் பின்வருமாறு:

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
2 வருடங்களிற்குள் செலுத்த வேண்டிய தொகை	1,240.710	792.231	1,240.710	792.231
3-5 வருடங்களிற்குள் செலுத்த வேண்டிய தொகை	1,861.070	1,508.503	1,861.071	1,508.503
5 வருடங்களின் பின் செலுத்த வேண்டிய தொகை	2,791.613	2,765.590	2,791.614	2,765.590
	5,893.393	**5,066.324**	**5,893.394**	**5,066.324**

கடன்பெறுதல்களின் முன்கொணரற் பெறுமதிகள் நியாயப் பெறுமதியாகக் கருதப்படுகின்றன.

(1) மக்கள் வங்கி அமெரிக்க டொலர்கள் 7,725,000 கடன் - (வட்டி 6 மாதங்கள் LIBOR + 5% ஆண்டொன்றுக்கு) ஜூன் 30,2022 இலிருந்து ஆரம்பித்து வருடத்திற்கு இரு முறைத் தவணைகளில் மீள்செலுத்தப்படவேண்டியது.

(2) சுய நிதி வசதி அமெரிக்க டொலர்கள் 43.775 கடன் - (வட்டி 6 மாதங்கள் LIBOR + 3.55% ஆண்டொன்றுக்கு) ஜூலை 19,2021 இலிருந்து ஆரம்பித்து வருடத்திற்கு இரு முறைத் தவணைகளில் மீள்செலுத்தப்படவேண்டியது.

21. வர்த்தகம் மற்றும் ஏனைய சென்மதிகள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
வெளிநாட்டு உண்டியல்கள் சென்மதி	224,686.870	175,564.683	224,686.870	175,564.683
ஏனைய கடன் தந்தோர்கள்			-	-
உள்நாட்டு இறைவரி மற்றும் சுங்கத் திணைக்களங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை	12,593.356	14,761.711	12,633.938	14,816.097
அட்டுறுச் செலவுகள்	10,718.810	8,640.426	3,971.762	2,493.504
மீள் கொடுக்க வேண்டிய வைப்புக்கள் மற்றும் ஏனையவை	8,819.702	1,692.783	9,989.079	3,529.346
	256,818.738	**200,659.603**	**251,281.648**	**196,403.628**

2012 ஆம் ஆண்டில் ஈரானின் நேஷனல் ஈரானிய கார்ப்பரேஷனுக்கு இரண்டு ஏற்றுமதி கச்சா எண்ணெய்களை வாங்கியதில் 250.925 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ. 50,937.608 மில்லியன்) செலுத்த வேண்டிய வர்த்தகம் அடங்கும். ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள். கார்ப்பரேஷன் ரூ. பரிமாற்ற மாறுபாடு இழப்பை அங்கீகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கு 2,989.923 மில்லியன் மற்றும் ரூ. 2012 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் 18,182.970 மில்லியன். நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கு வேறு வழிமுறைகள் மூலம் தீர்வு போன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், அந்த ஆண்டில் எந்தத் தீர்வும் செய்யப்படவில்லை.

உள்நாட்டு இறைவரி மற்றும் சுங்கத் திணைக்களங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை கலால் தீர்வை, தே.க.வ. (NBT) மற்றும் வருமான வரிச் சென்மதிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மீளளிக்கப்படவேண்டிய பெ.சே.வ. (VAT) ஏனைய வருமதிகள் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

22. குறுகிய காலக் கடன் பெறல்கள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
வங்கி மற்றும் ஏனைய கடன்கள்				
-ஒரு வருடத்திற்குள் முழுமையாக மீள்செலுத்த வேண்டியது	509,730.942	389,962.490	509,730.942	389,962.490
-வங்கி மேலதிகப்பற்றுக்கள்	537.991	787.658	537.991	787.658
	510,268.933	**390,750.148**	**510,268.933**	**390,750.148**

இ.பெ.கூ இன் சார்பாக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு US$ 3,300 மில்லியன்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு நட்ட உத்தரவாதத்தினால் வங்கிக் கடன்கள் உத்தரவாதமளிக்கப்பட்டது.

வழங்குனர்களுக்கான இறக்குமதி உண்டியல்களின் சென்மதிக்கு நிதியளிப்பதற்கு குறுகிய காலக் கடன்கள் பெறப்பட்டன.

23. ஊழியர்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
23.1 ஊழியர் செலவு				
சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள்	6,029.236	4,944.554	12,344.136	10,715.059
வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்	591.951	514.347	1,185.442	1,015.774
வரையறுக்கப்பட்ட நன்மைக் கடப்பாடு (குறிப்பு 18)	269.422	260.331	512.181	550.214
	6,890.609	**5,719.232**	**14,041.760**	**12,281.048**

24. செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்

	இ.பெ.கூ		குழுமம்	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)	**(82,225.782)**	**2,356.377**	**(80,564.785)**	**4,248.092**
சீராக்கல்				
தேய்மானம்	2,683.923	2,669.773	3,577.067	3,696.996
கடன் தீர்த்தல்	379.246	390.810	407.432	416.718
எதிர்பார்க்கப்படாத பண்டமாற்று மீதி மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை	11,903.959	6,967.224	11,903.959	6,967.224
பங்கிலாப வருமானம்	-	(0.122)	-	(0.122)
வட்டி வருமானம்	(18,369.081)	(11,187.890)	(18,570.653)	(11,497.174)
ீசழஎளைழைெ கழச டீயன யனெ னழரடிவகரட னநடிவள	1,709.626	15.969	1,743.897	15.882
வட்டிச் செலவுகள்	25,642.906	20,911.327	25,642.906	20,911.327
இளைப்பாறுதல் கடப்பாட்டிற்கான ஏற்பாடளித்தல	269.422	260.331	512.181	550.214
ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனையிலான (இலாபம்)/நட்டம்	(3.489)	(1.707)	(3.420)	(1.274)
விசேட வசூலித்தலுக்கான கடன் தீர்த்தல்	1,000.000	1,000.000	1,000.000	1,000.000
நடைமுறை மூலதன மாற்றங்களுக்கு முன்னதான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்)	**(57,009.270)**	**23,382.092**	**(54,351.416)**	**26,307.883**
நடைமுறை மூலதனத்திலான மாற்றங்கள்				
கையிருப்புகளில் (அதிகரித்தல்)/குறைவடைதல்	10,592.206	13,249.376	10,569.436	13,226.218
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரித்தல்)/ குறைவடைதல்	(19,838.013)	16,118.087	(22,439.422)	14,479.040
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளில் அதிகரித்தல்/ (குறைவடைதல்)	51,530.371	(106,728.977)	52,246.504	(106,314.088)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கிய/ (உபயோகித்த) பணம்	**(14,724.706)**	**(53,979.424)**	**(13,974.896)**	**(52,300.946)**

25. செயற்பாட்டுப் பிரிவு

	போக்குவரத்து ரூ.மில்லி	சக்திவலு உருவாக்கம் ரூ.மில்லி	விமான எரி-பொருள் ரூ.மில்லி	கைத்தொழில் ரூ.மில்லி	களஞ்சியம் மற்றும் போக்குவரத்து ரூ.மில்லி	ஏனையவை ரூ.மில்லி	நீக்கல்கள்/ சீராக்கல்கள் ரூ.மில்லி	மொத்தம் ரூ.மில்லி
வருவாய்								
வெளி வாடிக்கையாளர்கள்	455,477.944	47,322.787	30,784.061	16,249.055	264.825	34,920.576	-	**585,019.248**
இடைப் பிரிவு					14,011.364		(14,011.364)	-
மொத்த வருவாய்	**455,477.944**	**47,322.787**	**30,784.061**	**16,249.055**	**14,276.189**	**34,920.576**	**(14,011.364)**	**585,019.248**
முடிவுகள்								
செயல்பாட்டு லாபம்	(25,573.310)	(12,355.861)	2,333.682	973.771	1,458.236	(7,110.157)	1.190	**(40,272.450)**
மாற்று விகித மாறுபாடு	(27,399.167)	(3,602.294)	-	(765.872)	-	(1,452.748)	-	**(33,220.081)**
நிகர நிதி செலவு	(5,532.562)	(727.391)	(339.857)	(154.648)	-	(317.796)		**(7,072.254)**
வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)	**(58,505.040)**	**(16,685.546)**	**1,993.825**	**53.251**	**1,458.236**	**(8,880.701)**	**1.190**	**(80,564.785)**
வருமான வரிச் செலவு					(551.476)		-	**(551.476)**
வருடத்திற்கான இலாபம்/ (நட்டம்)	**(58,505.040)**	**(16,685.546)**	**1,993.825**	**53.251**	**906.760**	**(8,880.701)**	**1.190**	**(81,116.261)**

26. நிதிசார் கூற்றுக்களின் மறுசீரமைப்பு

1. துணை நிறுவனமானது CPSTL குழாய் கட்டணங்களாக 2010 – 2019 வரை மேலதிகமாக 03 சதங்களை அறவிட்டது. CPSTL ஆனது அதனை மீதியாக எழுதியிருந்த போதிலும், கூட்டுத்தாபனமானது இதனை முன்னைய காலங்களுக்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 97.893 மில்லியன் பெறுமதியான செலவினத் தள்ளுபடியாக சரிசெய்திருந்தது. மேலும், கூட்டுத்தாபனமானது 2016 – 2017 வரையான நிதிக் கூற்றுக்களில் வட்டி வீதக் கூறினை அடையாளங்கண்டதோடு அது 2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. எவ்வாறிருப்பினும், துணை நிறுவனத்துடன் ஒப்புக் கொண்டதன் படி வலுசக்தி அமைச்சரினால் வழங்கப்பட்ட அறிவுத்தலின் படி ரூபா 637.043 மில்லியன் பெறுமதியான கடன் வட்டி வீதமானது முன்னைய காலங்களுக்கான நிதிக் கூற்றுக்களில் அடையாளங்காணப்பட்டது.

2. துணை நிறுவனத்தின் மீள் குறிப்பீடு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் திரட்டு நிதிக் கூற்றுக்களுக்கு இடையிலான வேறுபாட்டின் தாக்கமானது கடந்த வருடத்திற்கான திரட்டு நிதிக் கூற்றுக்கு சரி செய்யப்பட்டது.

3. கூட்டுத்தாபனமானது 2013 – 2018 வரையான காலப் பகுதிக்குத் தாமதமான ஒப்படைப்புக்கள் குறுகிய ஏற்றுதல்கள் மற்றும் ஏனைய அபராத செலவுக் குறிப்புக்களை அறவிட்டதோடு இப் பரிவர்த்தனைகள் உரிய காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்படவில்லை. எனவே, கூட்டுத்தாபனமானது எரிபொருள் வழங்குனர்களிடமிருந்தான ரூபா 891.709 மில்லியன் பெறுமதியான தண்டப் பணத்தை உரிய காலப் பகுதிக்கான வருமானமாக அடையாளங்கண்டது.

4. கூட்டுத்தாபனமானது நிதிக் கூற்றுக்களில் நிகர வருவாயை வெளிப்படுத்தியதோடு(நிகர தள்ளுபடிகள் விநியோகஸ்தர் இழப்பீடுகள்) தள்ளுபடிகள் மற்றும் இழப்பீடுகளைக் கழிக்காமல் மொத்த இலாபத்திற்கு மாற்றப்பட்டது. வெளிப்படுத்தல் மாற்றத்தின் உரிய வரித் தாக்கமும் சரி செய்யப்பட்டது.

பின்வரும் அட்டவணையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் துணை நிறுவனத்தின் தாக்கத்தை சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது.

26.1 நிதிசார் நிலைமையின் கூற்று

1 ஜனவரி 2020	இ.பெ.கூ			குழுமம்		
	முன்னர் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	சீராக்கல்கள் ரூ.மிலி	மீள் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	முன்னர் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	சீராக்கல்கள் ரூ.மிலி	மீள் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி
வர்த்தக ரூ ஏனைய சென்மதிகள்	164,152.545	891.709	165,044.254	170,080.427	207.983	170,288.410
பிற சொத்துக்கள்	164,129.524	-	164,129.524	181,561.203		181,561.203
மொத்த சொத்துகள	**328,282.069**	**891.709**	**329,173.778**	**351,641.630**	**207.983**	**351,849.613**
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	305,869.933	539.149	306,409.082	304,228.902	315.426	304,544.328
மற்றவைகள்	318,535.405	-	318,535.405	322,327.418	-	322,327.418
மொத்த பொறுப்புகள்	**624,405.338**	**539.149**	**624,944.487**	**626,556.320**	**315.426**	**626,871.746**
வைத்திருப்பு ஈட்டல்கள்	(339,957.298)	352.560	(339,604.738)	(327,484.989)	45.891	(327,439.099)
மூலதனம் மற்றும் பிற இருப்புக்கள்	43,834.029		43,834.029	52,570.299	(153.335)	52,416.964
மொத்த உரிமையாண்மை	**(296,123.269)**	**352.560**	**(295,770.709)**	**(274,914.690)**	**(107.444)**	**(275,022.134)**

31 டிசம்பர் 2020	இ.பெ.கூ			குழுமம்		
	முன்னர் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	சீராக்கல்கள் ரூ.மிலி	மீள் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	முன்னர் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	சீராக்கல்கள் ரூ.மிலி	மீள் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி
ஆதனம், பொறி ரூ உபகரணம்	43,541.537	-	43,541.537	59,586.486	26.67	59,613.156
வர்த்தக ரூ ஏனைய சென்மதிகள்	151,053.605	877.131	151,930.737	156,721.988	(108.721)	156,613.267
பிற சொத்துக்கள்	129,977.204	-	129,977.204	130,828.050		130,828.050
மொத்த சொத்துகள	**324,572.346**	**877.131**	**325,449.478**	**347,136.524**	**(82.051)**	**347,054.473**
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	200,120.453	539.149	200,659.603	196,155.660	247.969	196,403.629
மற்றவைகள்	400,013.039	-	400,013.039	403,625.232	-	403,625.232
மொத்த பொறுப்புகள்	**600,133.492**	**539.149**	**600,672.642**	**599,780.892**	**247.969**	**600,028.861**
வைத்திருப்பு ஈட்டல்கள்	(337,071.081)	337.982	(336,733.099)	(323,462.147)	(107.352)	(323,569.498)
கட்டுப்பாடற்ற வட்டி	-	-	-	9,307.844	(222.667)	9,085.177
மூலதனம் மற்றும் பிற இருப்புக்கள்	61,509.935		61,509.935	61,509.935		61,509.934
மொத்த உரிமையாண்மை	**(275,561.146)**	**337.982**	**(275,223.164)**	**(252,644.368)**	**(330.019)**	**(252,974.387)**

26.2 முழுமையான வருமானக் கூற்று

டிசம்பர் 31, 2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கு	இ.பெ.கூ			குழுமம்		
	முன்னர் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	சீராக்கல்கள் ரூ.மிலி	மீள் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	முன்னர் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி	சீராக்கல்கள் ரூ.மிலி	மீள் குறிப்பிடப்பட்ட வாறு ரூ.மிலி
வருமானம்	510,131.005	12,401.827	522,532.832	510,353.178	12,401.83	522,755.005
விற்பனைச் செலவு	(454,880.140)	-	(454,880.140)	(462,019.238)	-	(462,019.238)
ஏனைய செயற்பாட்டு வருமானம்	818.670	-	818.670	1,145.615	-	1,145.615
S&D மற்றும் நிர்வாகச் செலவுகள்	(22,134.384)	(12,416.405)	(34,550.789)	(13,746.760)	(12,631.617)	(26,378.377)
மற்றவைகள்	(31,564.196)	-	(31,564.196)	(31,254.914)	-	(31,254.914)
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)	2,370.955	(14.578)	2,356.377	4,477.882	(229.789)	4,248.092
வருமான வரிச் செலவு	-	-	-	(208.809)	52.048	(156.761)
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)	2,370.955	(14.578)	2,356.377	4,269.073	(177.741)	4,091.331
ஏனைய முழு வருமானம்	18,191.168	-	18,191.168	18,076.417	-	18,076.417
வருடத்திற்கான வரி நிகர	**20,562.123**	**(14.578)**	**20,547.545**	**22,345.490**	**(177.741)**	**22,167.748**

27. நிகழ்சாத்தியப் பொறுப்புகள், பற்றுறுதிகள் மற்றும் வழக்காடல்கள்

நிகழ்சாத்தியப் பொறுப்புகள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது கூட்டுத்தாபனத்திற்கு எதிராக பின்வரும் வரிவிதிப்புக்களை முன்வைத்ததோடு இவ் வரிவிதிப்புக்களை கூட்டுத்தாபனமானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் முன்னிலையில் மேன் முறையீடகளைச் செய்தது.

1509, 1512, 1610, 1630, 1640, மற்றும் 1710 ஆகிய காலப் பகுதிக்காக (அபராதங்கள் உள்ளிட்ட) முறையே ரூபா 77.04 மில்லியன் றெமதியான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்ளிட்ட வரிவிதிப்புக்கள் 4092, 4093, 6123, 7031, 12090, 13090, 14030, 15030, 15060, 1590, 1610, 1630, 1620 மற்றும் 1810 ஆகிய காலப் பகுதிக்காக முறையே ரூபா 136.73மி, 79.23மி, 530.40.மி, 54.86.மி, 44.90மி, 4.94.மி, ரூ.3.48, ரூ.71.78மி ரூ.29.02மி, ரூ.12.06மி,ரூ.102.17மி, ரூ.48.71மி ரூ.7.84மி மற்றும் ரூ.60.90 மில்லியன் றெமதியான பெறுமதி சேர் வரி மீது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட வரிவிதிப்புக்கள் 9697, 0203, 0708 மற்றும் 2021 ஆகிய காலப் பகுதிக்காக (அபராதங்கள் உள்ளிட்ட) மொத்தப் புரள்வு மற்றும் உழைக்கும் போது செலுத்தும் வரி மீதான வரிவிதிப்புக்கள் முறையே ரூபா 31.92மி, ரூ.14.25, ரூ.0.30மி மற்றும் ரூ.0.08.மி ஆகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது ரூபா 102.7 மில்லியன் பெறுமதியான வரிகளுடன் 2015 ஆம் ஆண்டில் 3 ஆம் மற்றும் 4 ஆம் காலாண்டுக்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீதான தீர்மானங்களை வழங்கியது. கூட்டுத்தாபனமானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் முறையீடு செய்யதது. வருமான வரியின் கீழ் விதிக்கப்பட்ட வரிவிதிப்புக்கள் குறிப்பு 07 இல் உள்ள வரிச் செலவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நிதி நிலைமை பற்றிய கூற்றின் போது ஏனைய பொருண்மைசார் நிகழ்சாத்தியப் பொறுப்புகள் ஏதும் இருக்கவில்லை.

பற்றுறுதிகள்

2021 டிசம்பர் 31 இன் போதான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொருண்மைசார் பற்றுறுதிகள் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றன.

வங்கிகளுக்கான பற்றுறுதிகள்

குறித்த வருடத்தில் கூட்டுத்தாபனமானது கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி தொடர்பாக வருட இறுதியின் போது மேற்கொள்ளப்படும் பெறுகை தொடர்பாக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் முறையே ரூபா. 50,732 மில்லியன்(2020 இல் ரூ.32,039) மற்றும் ரூபா. 83,232(2020 இல் ரூ.33,766) மில்லியன் பெறுமதியான நாணயக் கடிதங்களை வெளியிட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ரூபா 47.65 மில்லியன் பெறுமதியான வங்கி மற்றும் கப்பல் வாணிப பிணைகளைப் பெற்றுக்கொண்டதோடு ரூபா 4.72 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியல் சேகரிப்புத் தொகையையும் நிறுவியது.

அறிக்கைத் திகதியில் நிலுவையாகவுள்ள வழக்காடல்கள்

31 டிசம்பர் 2021 நிலவரப்படி 172 (2020-197) தீர்க்கப்படாத சட்ட வழக்குகள் உள்ளன மற்றும் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

சட்ட வழக்குகளின் வகை	வழக்குகளின் எண்ணிக்கை			
	2021		2020	
	இ.பெ.கூ	குழுமம்	இ.பெ.கூ	குழுமம்
தொழில் நியாயசபை வழக்குகள்	05	11	08	13
நீதவான் நீதிமன்ற வழக்குகள்	04	19	03	04
மாவட்ட நீதிமன்ற வழக்குகள்	19	26	20	28
மேல் நீதிமன்ற வழக்குகள்	04	04	08	08
மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்	14	17	05	06
உயர் நீதிமன்ற வழக்குகள்	22	26	27	46
மனித உரிமைகள் ஆணைக்குழு	22	35	34	44
தொழில் திணைக்களம்	27	34	39	48
	117	**172**	**144**	**197**

மேலுள்ள வழக்குகளினுள் பின்வரும் வழக்கு இ.பெ.கூ இற்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது:

கோமர்ஷியல் வங்கியானது கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தில், இ.பெ.கூ இற்கு எதிராக ஹெட்ஜிங் பரிவர்த்தனை நடவடிக்கைக்காக வட்டி மற்றும் ஏனைய செலவுகளுடன் 8.5 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையைக் கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்தது.

மேற்குறிப்பிட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் இன்னமும் தீர்க்கப்படாது நிலுவையாக உள்ளதனால் அது தொடர்பான ஏற்பாடளித்தல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

28. அறிக்கைத் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

"சிலோன் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ("சிபிசி"), லங்கா ஐஓசி பிஎல்சி ("எல்ஐஓசி") மற்றும் டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட் ("ஜேவிசி) ஆகியவற்றின் "சீனா பே ஆயில் டேங்க் ஃபார்மை உடைமை, மேம்பாடு மற்றும் பயன்பாட்டிற்கான வழிமுறைகள்" உடன்படிக்கையின்படி "), தேதியிட்ட 06.01.2022, கூட்டு முயற்சி நிறுவனமான டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தில் கார்ப்பரேஷன் முதலீடு செய்தது மற்றும் கார்ப்பரேஷன் வெளியிடப்பட்ட பங்குகளில் 51% வைத்துள்ளது. கூட்டு முயற்சி நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 609, கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09 ஆகும்.

அறிக்கையிடும் தேதிக்குப் பிறகு மற்ற அனைத்து முக்கிய நிகழ்வுகள், ஏதேனும் இருந்தால் மற்றும் தேவைப்பட்டால், நிதிநிலை அறிக்கைகளில் பொருத்தமான மாற்றங்கள்/ வெளிப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

29. கொவிட் - 19 இன் தாக்கம்

வருவாய் குறைப்பு, மாற்று விகித மாறுபாடு மற்றும் பணப்புழக்க நிலை ஆகியவற்றால் COVID-19 எங்கள் வணிகத்தை பாதித்தது. நோயின் நிச்சயமற்ற தன்மை காரணமாக, CPC ஆனது எங்கள் வணிகத்தில் COVID-19 இன் எதிர்கால தாக்கத்தை அதிக

நம்பிக்கையுடன் கணிக்கும் நிலையில் இல்லை.

30. நிதிசார் இடரேதுநிலை முகாமைத்துவம்

குழுமத்தின் நடவடிக்கைகள் சந்தை இடரேதுநிலை (நாணய இடரேதுநிலை, வட்டி இடரேதுநிலை உட்பட), கடன் இடரேதுநிலை, திரவத்தன்மை இடரேதுநிலை மற்றும் விலை இடரேதுநிலை போன்ற பல்வேறு வகையான நிதிசார் இடரேதுநிலைகளை வெளிப்படுத்துகிறது. இடரேதுநிலை முகாமைத்துவம் பணிப்பாளர்கள் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்படுகிறது. முகாமைத்துவம் குழுமத்தின் செயற்பாடுகளுடன் தொடர்பான நிதிசார் இடரேதுநிலைகளை இனங்கண்டு மதிப்பீடு செய்கிறது. குழுமத்தின் ஒட்டுமொத்த இடரேதுநிலை முகாமைத்துவத் திட்டங்கள் குழுமத்தின் நிதிசார் செயலாற்றுகைகள் மீதான பிரதிகூலமான பாதிப்புகளின் சாத்தியப்பாட்டைக் குறைப்பதற்கு முயல்கின்றன.

குழுமத்தின் முதன்மை நிதிச் சாதனங்களானது நிலையான வைப்புகள், அரசாங்கப் பிணையங்கள், அமெரிக்க டொலர் நாணய வைப்புகள் மற்றும் பணம் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இந்த நிதிசார் சாதனங்களின் முக்கியமான நோக்கம் குழுமத்தின் திரவத்தன்மையை மேம்படுத்துவதும் பேணுவதுமாகும் என்பதுடன் முதலீடு செய்த நிதிகள் மீதான நிதிசார் வருவாயை அதிகரிப்பதுமாகும். அதன் வணிக நடவடிக்கைகளிலிருந்து நேரடியாக எழுகின்ற வர்த்தக வருமதிகள் மற்றும் வர்த்தக சென்மதிகளை போன்ற பல்வேறு பிற நிதிசார் சாதனங்களையும் குழு கொண்டுள்ளது.

(a) சந்தை இடர்

(i) அந்நியச் செலவாணி இடரேதுநிலை

கூட்டுத்தாபனம் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்யும்போது அது நாணய வெளிப்படுத்தல்களிலிருந்து எழும் அந்நியச் செலவாணி இடரேதுநிலைகளை குறிப்பாக அமெரிக்க டொலர்கள் தொடர்பான இடரேதுநிலைகளை வெளிப்படுத்துகின்றது. குழுமத்தின் தொழிற்படு நாணயம் இலங்கை ரூபாய் நாணயமாகும். இத்தொழிற்படு நாணயத்திலேயே கூட்டுத்தாபனத்தின் அநேகமான உள்நாட்டு பரிவர்த்தனை நடவடிக்கைகள் குறிக்கப்படுகின்றன என்பதுடன் ஏனைய அனைத்து நாணயங்களும் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயங்களாக கருதப்படுகின்றன. சில வங்கி நிலுவைகள், வர்த்தக வருமதிகள் மற்றும் வர்த்தகச் சென்மதிகள் என்பவை வெளிநாட்டு நாணயங்களில் குறிக்கப்படுகின்றன.

	2020 டிசம்பர் 31 அன்றான பெறுமதி USD. மிலி	வருட இறுதி நாணயமாற்று வீதம் ரூ./USD	நாணயமாற்று வீதத்திலான மாற்றம்	வரிக்கு முந்திய இலாபம் மீதான தாக்கம் ரூ. மிலி
கடன் மற்றும் கடன் பெறுதல்கள் (அ.டொ)	2,540.031	202.9992	1% increase	(5,156)
வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள்	1,115.173	202.9992	1% increase	(2,264)
வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்	316.344	198.5008	1% increase	628
வங்கி நிலுவை	7.723	198.5008	1% increase	15
மொத்தம்				**(6,777)**

* வரிக்கு முந்திய இலாபத்தின் மீதான தாக்கம் அமெரிக்க டொலர்களில் குறிப்பிடப்பட்ட பொறுப்புகள் தொடர்பான நியாயப் பெறுமதியில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தின் விளைவாகும், இங்கே தொழிற்படு நாணயம் இலங்கை ரூபாய்களாகும்.

இலங்கை ரூபாய் நாணயத்தில் சமர்ப்பிக்கப்படும் குழுமத்தின் நிதிசார் கூற்றுகள், மாற்ற இடரேதுநிலை மற்றும் பரிவர்த்தனை இடரேதுநிலை ஆகிய இரண்டின் ஊடான அந்நியச் செலவாணி ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களின் மாற்றங்கள் வெளிநாட்டு நாணயங்களின் பல்வேறு தரப்புகளிலிருந்தும் பெறப்பட்ட மூலப் பொருட்களின் கிரயங்கள், கொள்வனவுகள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பாதிக்கின்றது.குறிப்பாக, அமெரிக்க டொலர்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாய் நாணயத்தின் தொடர்ச்சியான மதிப்பிறக்கம் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் ஏனைய கொள்வனவுகளின் கிரயம் மீதான அதன் தாக்கத்தினூடாக செயற்பாட்டு மற்றும் நிதிசார் பெறுபேறுகளில் நேரடியான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

(ii) வட்டி வீத இடரேதுநிலை

குழுமத்தின் வட்டி வீத இடரேதுநிலை, அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகள் போன்ற வடிவங்களிலான கடன்பெறுதல்கள் மற்றும் முதலீடுகளிலிருந்தே பிரதானமாக எழுகின்றது. வழங்குனர் கடனைப் பொறுத்த வரை, வட்டி வீதம் நடப்பிலிருக்கும் சந்தை வீதங்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. இரண்டு அரச வர்த்தக வங்கிகள் ஊடாகப் பெற்ற வெளிநாட்டு நாணயக் கடன்கள் வட்டிகளின் வீதங்களிலேயே பேரம் பேசப்பட்டன. குழுமம் வட்டி மீதான வெளிப்படுத்தல்களை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் பகுப்பாய்வதுடன் லண்டன் வங்கிக்கிழை கொடுத்தல் வீதம் (LIBOR) மற்றும் பணச் சந்தை வீதங்களையும் கண்காணிக்கிறது.

(b) கடன் இடரேதுநிலை

கடன் இடரேதுநிலை என்பது, வாடிக்கையாளரொருவர் ஒப்பந்தக் கடப்பாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கு தவறும் பட்சத்தில், குழுமத்திற்கான நிதிசார் இழப்பின் இடரேதுநிலையாகும். குழுமத்தின் அநேகமான வாடிக்கையாளர்களும் சுயாதீனமான வகையில் தரப்படுத்தப்படவில்லை, அதனால் வாடிக்கையாளர்களின் தரம் அவர்களின் நிதிசார் நிலைமை, கடந்தகால அனுபவம் மற்றும் ஏனைய பண்புசார் காரணிகளினால் கருத்தில் கொள்ளப்படுகிறது. கூட்டுத்தாபனம் ஒரு கடன் கொள்கையை ஸ்தாபித்துள்ளதுடன் அதன் கீழ் ஒவ்வொரு புதிய வாடிக்கையாளரும் கடன் வரம்பு அளிக்கப்படுவதற்கு முன், அவர்களின் கடன் நம்பகத்தன்மைக்கு தனிப்பட்ட ரீதியாக பகுப்பாரயப்படுகின்றனர். கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கையைத் திருப்திப்படுத்துவதற்கு தவறும் வாடிக்கையாளர்கள் கூட்டுத்தாபனத்துடன் பண அடிப்படையில் மாத்திரமே வணிகத்தை மேற்கொள்ளலாம்.

காலம்	இ.பெ.கூ	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
30 நாட்களுக்கு குறைவு	23,802.202	15,267.481
30 – 90 நாட்கள்	10,269.046	8,262.726
91 – 180 நாட்கள்	11,103.936	11,543.035
181 – 365 நாட்கள்	26,407.638	26,401.446
365 நாட்களுக்கு மேல்	89,496.942	79,629.784
மொத்தம்	**161,079.764**	**141,104.471**

கடன் இடரேதுநிலைகளானது நிலுவையாகவுள்ள வருமதிகள் மற்றும் பற்றுறுதியளிக்கப்பட்ட பரிவர்த்தனை நடவடிக்கைகள் உட்பட, காசும் மற்றும் காசுச் சமானங்கள் மற்றும் வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களுடனான வைப்புகள், அதே போன்று வாடிக்கையாளர்களுக்கான கடன் வெளிப்படுதல்கள் என்பவற்றிலிருந்தும் எழுகின்றது.

(c) திரவத்தன்மை இடரேதுநிலை

பணப்புழக்கத் திட்டமிடல் மற்றும் முன்கணிப்பு ஆகியவை கார்ப்பரேஷனின் நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. நிதிப் பிரிவு அதன் பல்வேறு நிதிப் பொறுப்புகள் மற்றும் சிறந்த விளைச்சலுக்காக அதிகப்படியான குறுகிய கால நிதி ஆதாரங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதற்கான நிதிகளை தொடர்ந்து கண்காணிக்கிறது.

பணி மூலதன நிர்வாகத்திற்கு தேவையான இருப்புக்கு மேல் மற்றும் அதற்கு மேல் வைத்திருக்கும் உபரி ரொக்கம் ரெபோக்கள், கருவூலப் பத்திர முதலீடுகள், அழைப்பு வைப்புக்கள் போன்ற வட்டி தரும் நிதிக் கருவிகளில் முதலீடு செய்யப்படுகிறது. அறிக்கையிடல் தேதியில், மாநகராட்சி ரொக்கம் மற்றும் பணத்திற்கு சமமான ரூ. 141,607.205 மில்லியன் பணப்புழக்க அபாயத்தை நிர்வகிப்பதற்கான பண வரவுகளை உடனடியாக உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கீழுள்ள அட்டவணை, அறிக்கைத் திகதியில் ஒப்பந்த முதிர்ச்சித் திகதிக்கு எஞ்சியுள்ள காலத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் வழிவராப் பொறுப்புகளை பொருத்தமான முதிர்ச்சியுடன் ஒன்றிணைத்தலைக் காட்டுகிறது.

December 2021 (Rs. million)

	3 மாதங்களிற்கும் குறைவானவை	3-12 மாதங்கள் வரையானவை	1-2 வருடங்கள் வரையானவை	3-5 வருடங்கள் வரையானவை	5 வருடங்களிற்கு மேலானவை
வங்கிக் கடன்பெறல்கள்	510,269	-	-	-	-
நீண்ட காலக் கடன்	232	389	620	1,861	2,792
மொத்தம்	**510,501**	**389**	**620**	**1,861**	**2,792**

(d) விலை இடரேதுநிலை

பெற்றோலிய உற்பத்திகள் (கச்சா மற்றும் முடிவுப் பொருட்கள் ஆகிய இரண்டும்) மற்றும் வெளி நாடுகளிலிருந்து அமெரிக்க டொலர்கள் மற்றும் பிற நாணயங்களில் இறக்குமதி செய்யப்படும் ஏனைய மூலப்பொருட்கள் என்பவற்றின் பொருள் விலைக்கான இடரேதுநிலைகளை கூட்டுத்தாபனம் வெளிப்படுத்தப்படுகிறது. சர்வதேச எண்ணெய் விலை நகர்வுகளுடன் இணைந்ததாக பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு சில்லறை விற்பனை விலைகளை தீர்மானிப்பதில் கிரயப் பிரதிபலிப்பு விலைப் பொறிமுறை உபயோகத்தில் இல்லை. கூட்டுத்தாபனம் கிரமமாக வாராந்த கையிருப்பு மீளாய்வுக் கூட்டங்களைக் கூட்டுவதுடன் அதில் எதிர்கால பெற்றோலிய உற்பத்திகளின் தேவைப்பாடுகள் கலந்துரையாடப்பட்டு எதிர்கால இறக்குமதிக்கு தேவையானவை திட்டமிடப்படுகின்றன. அதே சமயம், பொருத்தமான சமயத்திலான முகாமைத்துவத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பெற்றோலிய உற்பத்திகளின் நிதிசார் தகவல்களை அளிப்பதன் மூலம் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக பொதுத் திறைசேரியுடன் இடைவினையாற்றுகிறது.

31. ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புபட்ட தரப்பு பரிவர்த்தனைகளில் பணிப்பாளர்களின் நலன்

பணிப்பாளர்கள் சபையானது முக்கியமான ஆளணியினராகக் கருதப்படுகின்றனர். பின்வருபவை தவிர்ந்த இ.பெ.கூ மற்றும் CPSTL உடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளரெவரும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை அல்லது ஆர்வங்களைக் கொண்டிருக்கமாட்டார்கள்:

திரு. புத்திக மடிஹஹேவா CPC இன் முகாமைத்துவப் பணிப்பாளராக உள்ளார், மேலும் அவர் CPSTL இன் பணிப்பாளராகவும் பணியாற்றுகிறார்.

முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீடு

	இ.பெ.கூ	
	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
குறுகிய கால நன்மைகள்	10.568	5.547

இவ் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமதிகளானது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடன் தொடர்புபட்ட அறிக்கையிடல் காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட செலவாகும்.

சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பின்வரும் பரிவர்த்தனை ககள் மேற்கொள்ளப்பட்டன.

	2021 ரூ.மிலி	2020 ரூ.மிலி
சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அளிக்கப்பட்ட விற்பனைகள் மற்றும் சேவைகள்		
துணை நிறுவனம்		
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய னயங்கள்	352.298	429.283
ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புகள்		
பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு	26.708	24.176
	379.006	453.459
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து பெற்றுக் கொண்ட சேவைகள		
துணை நிறுவனம்		
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள்	13,665.432	12,922.794
	13,665.432	12,922.794
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து பெற்றுக் கொண்ட பங்கிலாபம்		
துணை நிறுவனம்		
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள்	-	240.000
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகை		
துணை நிறுவனம்		
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள்	662.447	600.747
ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புகள்		
பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு	4.167	14.075
	666.614	614.822
சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து வரவேண்டிய தொகை		
துணை நிறுவனம்		
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள்	8,330.844	7,104.934

* தொகைகள் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளாகவும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளாகவும் முறையே வகைப்படுத்தப்பட்டன.

சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் தொடர்புபட்ட பரிவர்த்தனைகளின் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பான விற்பனை மற்றும் கொள்வனவுகள் சுயாதீனமானவையாகவும் அவர்களின் செல்வாக்கு தாக்கம் செலுத்தாத வகைக்கு ஒத்ததான விதத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. வருட இறுதியிலான நிலுவைகள் பிணையுறுதியற்றவை மற்றும் வட்டியற்றவை. எந்தவொரு சம்பந்தப்பட்ட தரப்பு வருமதிகள் அல்லது சென்மதிகளுக்காக உத்தரவாதங்கள் வழங்கப்படவோ அல்லது பெறப்படவோ இல்லை.

இலங்கை அரசாங்கம் நேரடியாக இ.பெ.கூ ஐக் கட்டுப்படுத்துவதால், அரசுரிமை நிறுவனங்கள் மற்றும் கட்டுப்பாடு கொண்ட ஏனைய அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் என்பன, "சம்பந்தப்பட்ட தரப்பு வெளிப்படுத்தல்கள்' LKAS 24 இற்கமைவாக, சம்பந்தப்பட்ட தரப்புகளாக, இலங்கை அரசாங்கத்தால் கூட்டாக கட்டுப்படுத்தப்பட்டு அல்லது கணிசமான வகையில் செல்வாக்கு செலுத்தப்படுகிறது என இ.பெ.கூ கருதியது.

32. மூலதன முகாமைத்துவம்

முக்கிய பங்குதாரர்களினுடைய நலன்களைப் பாதுகாத்தலும் அதேவேளையில் ஓர் உகந்த மூலதனக் கட்டமைப்பையும் மற்றும் தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாடு நிலையையும் பேணுவதே மூலதன முகாமைத்துவத்தின் பிரதான குறிக்கோளாகும். எவ்வாறாயினும், கடந்த மற்றும் நடப்பு நிதியாண்டிலுமாக திரட்டிய நட்டங்கள் காரணமாக 2021 டிசம்பர் 31 அன்றானவாறு, இ.பெ.கூ மேலும் ரூ. 357,537 மில்லியனை ஓர் எதிர்மறை நிகர சொத்து நிலைமையாகக் கொண்டிருந்தது. வெளியகக் கணக்காய்வாளர்கள் தங்களது கணக்காய்வு அறிக்கையில், இலங்கை அரசாங்கத்திடமிருந்தான நிதிசார் உதவியின்றி தொடர்ந்தியங்கும் தாபனக் கோட்பாட்டைத் தொடரும் கூட்டுத்தானத்தின் ஆற்றல் சந்தேகத்திற்கிடமானது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அரசாங்கத்தால் சில்லறை விலை தீர்மானிக்கப்பட்டு அதிகளவிற்கு மானியப்படுத்தப்பட்ட வீதங்களில் பெற்றோலிய உற்பத்திகள் விற்பனை செய்யப்படுவதன் காரணமாகவே கூட்டுத்தாபனத்தால் பாரிய நட்டங்கள் எதிர்நோக்கப்பட்டன. இந்த நட்ட நிலை மாற்றப்படவேண்டமாயின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 17 இன்படி, கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடமிருந்து மானியத்தைப் பெறுவதற்கு உரித்துடையது. இந்த மானியங்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுமாயின், அதன் எதிர்மறை நிகர சொத்து நிலைமையை வெற்றிகொள்ள முடியும்.

ஒரு பார்வையில் தசாப்தம்

	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020 Restated	2021
உள்நாட்டு விலைகள்	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**	**ரூ.**
பெற்றோல்	159	162	150	117	117	117	125	137	137	177
ஆட்டோ டீசல்	115	121	111	95	95	95	101	104	104	121
சுப்பர் டீசல்	142	145	133	110	110	110	121	132	132	159
மண்ணெண்ணெய்	106	106	81	49	44	44	70	70	70	87
உலை எண்ணெய் 800”	92.2	92.2	92.2	80	80	80	92	96	96	110
உலை எண்ணெய 1500”	65	90	90	80	80	80	96	96	96	110
நிதிசார் செயற்திட்டங்கள்	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி
வருமானம்	512,910	490,381	525,182	376,734	423,061	445,950	575,492	630,860	522,533	584,754
விற்பனைச் செலவு	-540,439	-464,374	-499,956	-337,119	-326,441	-418,962	-579,617	-626,599	-454,880	-588,822
மொத்த விடுமிகை	-27,529	26,007	25,226	39,615	96,620	26,988	-4,124	4,261	67,653	-4,068
நிகர செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் வட்டி	-62,041	-33,897	-24,532	-55,637	-27,067	-24,173	-102,016	-16,096	-65,297	-78,158
வரிக்கு முந்திய இலாபம்/ (நட்டம்)	-97,182	-7,890	694	-19,886	69,553	2,815	-106,140	-11,836	2,356	-82,226
நிதி நிலைமை	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி	ரூ.மிலி
மூலதனம்	3,500	3,500	3,500	28,487	28,487	28,487	28,487	28,487	28,487	28,487
ஒதுக்கம்	-232,045	-239,967	-236,791	-257,472	-214,334	-205,479	-309,949	-324,610	-303,710	-386,024
நீ/கா பொறுப்புக்கள்	1,998	1,351	703	342	266	190	1,539	6,838	7,271	7,766
பணிக்கொடை ஏற்பாடளித்தல்	547	538	664	861	754	1,708	1,681	1,686	1,702	1,862
மொத்தம்	**-226,000**	**-234,578**	**-231,924**	**-227,782**	**-184,827**	**-175,094**	**-278,242**	**-287,599**	**-266,250**	**-347,909**
இலாபத்திறன் விகிதங்கள்										
மொத்த இலாப விகிதம்	-5.40%	5.30%	4.80%	10.50%	22.80%	6.05%	-0.72%	0.68%	12.95%	-0.70%
நிகர இலாப விகிதம்	-18.90%	-1.60%	0.00%	-5.30%	16.40%	0.24%	-18.45%	-1.88%	0.44%	-13.85%
செயற்பாட்டு விகிதங்கள்										
கையிருப்பு புரள்வு விகிதம்	10.89	7.3	7.77	6.44	8.53	9.48	9.51	9.53	8.66	14.05
வட்டிக் காப்பு	-3.88	0.57	1.05	-0.32	7.1	1.32	-2.1	-1.3	1.62	-1.63
திரவத்தன்மை விகிதங்கள்										
நடப்புச் சொத்து விகிதம்	0.43	0.39	0.34	0.31	0.34	0.38	0.44	0.47	0.45	0.47
விரைவு விகிதம்	0.28	0.24	0.19	0.21	0.24	0.27	0.34	0.36	0.36	0.42

நிறுவன தகவல்

நிறுவனத்தின் பெயர் :	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
சட்ட ரீதியான வடிவம் :	1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் கூட்டமைக்கப்பட்ட ஒரு பொது நிறுவனம்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:	609, டாக்டர் டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09.
தொலைபேச :	+94 11 5455455
தொலைநகல :	+94 11 5455400
மின்னஞ்சல :	secratariat@ceypetco.gov.lk
இணையதளம :	www.ceypetco.gov.lk
நிதி ஆண்டு :	ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை
பணிப்பாளர் சபை :	திரு. மொஹமட் உவைஸ் மொஹமட (தலைவர்) திரு.எல்.ஈ சுசந்த சில்வா (முகாமைத்துவப் பணிப்பாளர்) திருமதி.ஆர்.எம்.டீ.கே.ரத்னாயக்க திரு.டப்ளியு.டப்ளியு.டீ.சுமித் விஜேசிங்க கலாநிதி. பிரபாத் சமரசிங்ஹ
துணை நிறுவனம :	சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட், எண்ணெய்த் தாங்கிகள், கொலன்னாவ
கணக்காய்வாளர்கள் :	கணக்காய்வாளர் தலைமை அதிபதி
வங்கியாளர்கள :	மக்கள் வங்கி, கொமர்ஷியல் வங்கி, இலங்கை வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
609, கலாநிதி. டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 09.
+94 11 54 55 455
secratariat@ceypetco.gov.lk
www.ceypetco.gov.lk